


# மீளும் இராகங்கள்

## மலரன்னை

# மீளும் இராகங்கள்

மலரன்னை

மீளும் இராகங்கள் (நாவல்)/ மலரன்னை/ முதற்பதிப்பு: வைகாசி 2023/ ©மலரன்னை/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 128/ விலை:500.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Mana Oonjal (Novel) / Malaranai/ First Edition: May 2023/ ©Malaranai/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 128/Price: 500.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN:

ஜீவநதி வெளியீடு - 267

# என்னுரை

வாசக நேயர்களுக்கு வணக்கம்

மீண்டும் உங்கள் கரங்களில் ஒரு நாவல் “மீளும் இராகங்கள்“ இது ஒன்றும் புனையப்பட்ட கதை அல்ல. நிஜமான வாழ்வியல் சம்பவங்களை மையப்படுத்தி, நிதர்சனமாக உங்கள் முன் காட்சிப்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்ட நாவல்.

இந்த மானுட வாழ்கையின் வாயிலாக நாம் அனுபவிக்கும் பல்வேறு வகையான உணர்வுகளும் பதினாறு இராகங்களுக்குள்த்தான் அடங்கிக் கிடக்கிறது. அப்படியான ஒரு தனி மனித வாழ்க்கையில் இசைக்கப்பட்ட இராகங்களை மீட்டெடுத்து அசை போட வைத்த இறைவனைப் பிரார்த்தித்து நன்றியுடன் தலை வணங்க வேண்டியது எனது கடமையாகும்.

இந்தப் பூவுலகில் வாழும் அனைவருக்கும் தாம் வாழ்ந்த வாழ்க்கையின் பக்கங்கள் ஒருமுறைதான் புரளும். ஆனால்... எனக்கு அந்தப் பக்கங்களை மீண்டும் ஒரு தரம் புரட்டிப் பார்ப்பதற்கு சந்தரப்பத்தை ஏற்படுத்தித் தந்த இறை யருளை எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருகிறேன். இந்த இராகங்களை நான் மீட்டிப்பார்க்க விழைந்த போது பலவிதமான உணர்வலைகளுக்குள் சிக்கித் தவித்திருக்கிறேன். அதை வெறும் வார்த்தைகளால் வடித்து விட முடியாது. எனினும் இந் நாவலை உங்கள் முன் சமர்ப்பிக்கையில் எனக்குக் கிடைக்கும் ஆத்மதிருப்தியோ அளப்பரியது. என் மனத்துயரமெல்லாம் சருகாக மாறி காற்றில் பறப்பது போன்றதோர் உணர்வில் நான் திளைத்துப் போகிறேன்.

வாசகர்களே! இந்த உண்மையான மூழ்கியெழும் என்ற நம்பிக்கை யுடன், உங்களது விமர்சனங்களை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். தனது தொடர்பணிகளுக்கு மத்தியிலும் இந்நாவலை குறுகிய காலத்திற்குள் அச்சமைத்துத் தந்ததுடன் அட்டைப்படத்தையும் வடிவமைத்த மைந்தன் பரணீதரனுக்கு எனது மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் அருள் மிகு அன்னையாகிய அம்பாளின் கோபுர வாசலை நேர்த்தியாக நிழற்படமெடுத்து தந்துதவிய மகன் குலசிங்கத்துக்கும் எனது அன்பு கலந்த நன்றி உரித்தாகட்டும்.

நன்றி

மலரன்னை

அற்புதராணி காசிலிங்கம்

# மீளும் இராகங்கள்

வானுயர்ந்து காட்சியளித்த நயினை நாகபூஷணி அம்மனின் கோபுர வாசலின் முன் ஒரு சிறிய உருவம் கண்களை மூடியவாறு கரம் கூப்பி வரம் கேட்டு நிற்கிறது.

“அம்மாளாச்சி தாயே! அம்மாவும் அப்பாவும் என்னை பள்ளிக்குப்போய் படி என்று கரைச்சல் கொடுக்கினம். எனக்கென்றால் படிக்கவே விருப்பமில்லை. என்ரை சுட்டியன் வெள்ளையன் மற்ற ஆட்டுக்குட்டியளோட உந்த வளவெல்லாம் ஓடித்திரிய வேணுமென்று தான் ஆசை. எனக்கு என்ன செய்யிறதென்றே தெரியேல்ல. நீ தான் ஒரு வழி சொல்ல வேணும்.

சட்டென அவனது தோளை யாரோ தொட்டு உலுப்புவது போலிருந்தது.

“பள்ளிக்கூடம் போய் படிக்க வேண்டிய வயசில இஞ்சை நின்று என்ன செய்யிறாய்?“

கண்களைத் திறந்து பார்த்தான். எவரையும் காணவில்லை. சுற்று முற்றும் ஒரு தரம் பார்வையைச் சுழற்றினான். எவருமேயில்லை. அந்தப் பிஞ்சு மனத்தில் ஒரு எண்ணம் உதித்தது.

“இது அம்மாளாச்சியின் அருள் வாக்குதான்.”

தன்னையறியாமலே சிரத்தின் மேல் இருகரங்களையும் கூப்பி அம்பாளை வேண்டிக் கொண்டான்.

“நாளையிலையிருந்த நான் பள்ளிக்கூடம் போவன்.”

மனம் திடமான முடிவு எடுத்துக்கொண்டது.

“லிங்கா! லிங்கா!!”

அப்பாவின் அழைப்புக் குரல் கேட்டு அவன் கோயிலின் தெற்குப்புற வாசல் நோக்கி ஓடினான். மகன் ஓடி வருவதைக் கண்ணுற்ற அப்பா அவன் மீது சீறினார்.

“நான் தண்ணி குடுத்திட்டு வாறதுக்கிடையில எங்கை போன நீ. தம்பிக்கு போற இடமெல்லாம் விளையாட்டு மெத்திப் போச்சுது. படிப்பு கிடையாது.”

அப்பாவின் பேச்சு எட்டு வயதுப் பையனுக்கு தலையில் கொட்டி விட்டது போல் கோபத்தைத் தூண்டி விட்டது.

“நான் வரயில்ல. நீங்க போங்க”

தலையைச் சாய்த்து பிகு பண்ணியவனை சட்டை செய்யாமல் அப்பா மாடுகளைத் தட்டி விட்டார். குண்டும் குழியுமான மணந்தரையில் கடகடவென சில்லுகள் ஓசை எழுப்ப மாடுகள் ஓடத் தொடங்கின.

கடற்கரையில் அம்பாளின் கோயில் அமைந்திருப்பதால் அந்தச் சூழலில் உள்ள கிணநற்று நீரெல்லாம் உவரப்பாகவே இருக்கும். அன்றாடம் ஆயிரமாயிரம் பக்தர்கள் அம்பாளைத் தரிசிக்க வருவார்கள். அங்ஙனம் அம்பாளின் அருள் பெற வரும் பக்தர்களுக்கு தாகசாந்தி செய்ய வேண்டி கோயில் நிர்வாகம் தீவின் மையப் பகுதிகளிலிருந்து நன்னீரைத் தருவிப்பது வழக்கம். அந்தப் பொறுப்பினை லிங்காவின் அப்பாவே ஏற்றிருந்தார். அவரிடம் பீப்பா பொருத்திய வண்டில்கள் இரண்டு சோடி ஓரணை நாம்பன்கள் என வசதிகள் இருந்ததால் அவரால் தொடர்ந்து அந்த சேவையை செய்ய முடிந்தது.

அவரது வண்டி வீட்டுவாசலை அண்மித்ததும் மாடுகள் தாாகவே நடையைத் தளர்த்த ஏதோ சிந்தனையிலிருந்த அப்பாவும் வண்டிலை விட்டு இறங்க எத்தனித்தவர். அதிசயித்தார். அங்கே... லிங்கா வாசற் படலையைத் திறந்து கொண்டிருந்தது தான காரணம், மனதுக்குள் மகனுடன் சல்லாபித்தார்.

“கள்ளப் பயலே! நீ எனக்குத் தெரியாம வண்டிலில தொத்திக் கொண்டு வந்திருக்கிறாய்!“

ஓரக் கண்ணால் அப்பாவைப் பார்த்தவாறே லிங்கா அம்மாவை அழைத்தான்.

“அம்மா! கோயிலடியில இருந்து நடந்து வந்து களைச்சுப் போனன். கெதியாய் சாப்பாட்டத் தாங்கோ”

“கள்ள ராஸ்கல் கதையா விடுற”

அப்பா கையை ஓங்கினார். லிங்கா மெதுவாக அவரிடமிருந்து நநுழுவிக்கொண்டு வீட்டுக்குள் ஓடினான். ஏனைக்குள் துயின்று கொண்டிருந்த குழந்தை வீல்! என்று அலறிய சத்தம் கேட்டு அம்மா பதறியடித்துக் கொண்டு ஓடினாள். அங்கே நின்றிருந்த லிங்காக எதுவித பதட்டமுமில்லாமல் சொன்னான்.

“அம்மா! நான் ஒன்றுமே செய்யேல்ல. ஏணையை ஒருக்கா ஆட்டிவிட்டன். அது சுவரில போய் அடிச்சிட்டுது”

அவசர அவசரமாக அம்மா, குழந்தையை ஏணையிலிருந்து வெளியே எடுத்தாள். அம்மாவின் முகத்தைப் பார்த்ததும் அது அழுகையை நிறுத்திவிட்டு பசியாறத் துடித்தது. என்ன நடந்தது என்று அறிவதற்காக அப்பா வீட்டிற்குள் வந்ததும் லிங்கா மெதுவாக புறவாசலால் நழுவி விட்டான்.

“இவனை என்னெண செய்யிறது. வயதும் எட்டாய் பேபாச்சுது. பள்ளிக்கூடப் பக்கம் எட்டிப் பாக்கிறானுமில்ல. வீட்டில இவனின்ற அட்டகாசம் தாங்க முடியுதில்ல. பெரியவனுகள் ரெண்டு பேரும் சொன்ன சொல் தட்டுறதில்லை. இந்த வாண்டுக்குயாரின்ற குணம். இப்பிடிப்போட்டு பாடாய்ப் படுத்துது”

மனைவியிடம் சொல்லி அங்கலாய்த்தார். அவளும் விடவில்லை.

“நீங்கள் தானே சொல்லுறநீங்கள் அவன் சரியாய் உங்கட அப்புவைப் போல எண்டு. முரட்டுப் பிடிவாதமும் மூர்க்க குணமும் அவரைப் போலவே இவனுக்கும் இருக்குதென்று அவருடைய பெயரையும் சேர்த்துத்தானே இவனுக்கு பெயர் வைச்ச நீங்கள்”

தன்னுடைய தந்தையைப் போலவே மகனும் இருக்கிறான் என்ற வார்த்தையைக் கேட்க அவரது மனதுக்கு இதமாக இருந்தது. திடீரென லிங்கா வந்து அவர்கள் முன் நின்றான்.

“நாளைக்கு நான் பள்ளிக்கூடம் போகப் போறன்”

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் காதில் தேன் பாய்ந்தது போலிருந்தது. அப்பா, அவனை இழுத்து தனது மடியில் இருத்திக் கொண்டார்.

“எனக்குத் தெரியும் என்ரை பிள்ளை படிக்கப் போவனெண்டு. நீ நல்லாய்ப் படிச்சியெண்டா ... நான் உன்னை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி பெரிய பள்ளிக்கூடங்களில் படிக்க வைப்பன். என்ன!...”

தலையைத் தடவிக்கொண்டே சொன்னார், அப்பா. மயிலிருந்தவாறு தலையை அசைத்து ஆமோதித்தான், மகன். அவர்களைப் பார்த்து அம்மாவின் மனம் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தது.

பள்ளிக்கூடம் போவதென்று முடிவெடுத்தாகிவிட்டது. இனி யாரோடு போவது என்றொரு கேள்வி லிங்காவின் மனதைக் குடையத் தொடங்கியது. அவர்களது வீட்டுக்கு அருகில் இருக்கும் அக்கா பாடசாலைக்குப் போறவதான். அவவோடு போகலாம். ஆனால் யாராவது அவனோடு சேட்டைக்கு வந்தால் அவ பயந்து அழத்துவங்கி விடுவா... அதை விட அவனது பெரியம்மாவின் மகள் சாந்தி அக்காவோடு போறது தான் நல்லது என மனம் தீர்மானித்துக் கொண்டது.

உடனேயே பெரியம்மா வீட்டிற்குப் போய் சாந்தி அக்காவிடம் விசயத்தைச் சொன்னான். அவளும் அவனை உஷார்ப்படுத்தி விட்டான்.

“நீ வா லிங்கா. நான் உன்னை கூட்டிக் கொண்டு போறன்.”

சாந்தி அக்காவின் வார்த்தைகள் அவனுக்கு ஆறுதலைத் தர, நிம்மதியாக இரவு உறக்கத்துக்குப் போனான், லிங்கா.

***

காலை நேரம். நயினை நாகபூஷணி மகா வித்தியாலயத்தில் பாடசாலை ஆர்பிப்பதற்கான மணி ஒலித்து ஓய்ந்தது. மாணவர்கள் அனைவரும் தத்தமது வகுப்பறைக்குள் நுழைந்து இருப்பிடங்களில் அமர்ந்து கொண்டனர்.

அது மூன்றாம் ஆண்டுக்கான வகுப்பறை. ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைகிறார். மாணவர்கள் அனைவரும் எழுந்து அவருக்கு வணக்கம் தெரிவிக்கின்றனர். கைச் சைகையால் அவர்களை அமரச் சொன்ன ஆசிரியர், ஒரு தரம் கண்களைச் சுழற்றி வகுப்பறையை ஆராய்கிறார். திடீரென அவரது பார்வை ஒரு இடத்தில் நிலைகுத்தி நின்று விடுகிறது.

தன்னையே வைத்த கண் வாங்காது உற்றும் பார்த்துக் கொண்டிருக்கும் ஆசிரியரைக் கண்டதும் லிங்காவின் நெஞ்சு படபடக்கிறது. கூனிக் குறுகியவன் தலை குனிந்து கொண்டான். சாந்தி நிலையை சமாளித்தாள். அருகிலிருந்த லிங்காவின் தொடையைக் கிள்ளி விட்டு, "தம்பி! எழும்படா" என்று சொன்னாள்.

இருவரும் எழுந்து நின்றனர். ஆசிரியர் சாந்தியிடம் வினவினார்.

"யார் இது புதுப்பையன்?"

"சேர்! இது க.பொ. வுடைய மூன்றாவது மகன்: இன்றைக்குத் தான் புதுசாக பள்ளிக்கூடம் வந்திருக்கிறான்."

க.பொ. என்பது லிங்காவின் அப்பாவினது சுருக்கமான பெயர். அந்தப் பெயரைச் சொன்னால் ஊருக்குள் யாருக்குமே தெரியாமலிருக்காது.

"என்ன! புதுசாய் பள்ளிக்கூடம் வந்திருக்கிறான் என்று சொல்லுறாய்? ஆளைப் பார்த்தால் பெரிய பெடியனாய்த் தெரியுது."

ஆசிரியர் சொல்லி முடிப்பதற்குள் "கொல்" என்ற சிரிப்பொலியில் வகுப்பறையே அதிர்ந்தது. லிங்காவுக்கு ஆத்திரத்தில் ஒரு கணம் உடல் பதறியது. மறுகணம் வகுப்பிலுள்ளவர்களைத் திரும்பிப் பார்த்து ஒரு முறை முறைத்ததும் சிரிப்பொலி தன்னாலே அடங்கிப் போனது.

ஆசிரியர் தன் பங்குக்கு மேசையில் கையால் தட்டி ஒலியெழுப்பினார். சாந்தியைப் பார்த்து மீண்டும் கேள்வி யெழுப்பினார்.

"புதுசா பள்ளிக்கு வந்த பையனைக் கொண்டு போய் பாலர் வகுப்பில விடாமல் இஞ்சை ஏன் கூட்டி வந்து வைச்சிருக்கிறாய்?"

இப்போது சாந்தி வாய்திறக்க முன் லிங்காவே சொன்னான்.

"அங்கை இருக்கிற சின்னப்பிள்ளையளோட இருந்து நான் படிக்க மாட்டன்"

"பட்"டென்று சொன்னவனைப் பார்த்து வாயடைத்து நின்றார், ஆசிரியர் நிலைமையை சாந்தி ஒருவாறு சமாளித்தாள்.

"சேர்! இரண்டு மூன்று நாளைக்கு அவன் இஞ்சையே இருக்கட்டும். பிறகு நானே அவனைக் கூட்டிப் போய் பாலர் வகுப்பில விட்டுவிடுறன்"

அவள் சொல்லி வாய்மூடுமுன் அவளது காலில் விழுந்தது ஒரு மிதி. வாயைத்திறந்து அலறவும் வழியின்றி வேதனையை அடக்கிக் கொண்டாள், சாந்தி.

ஆசிரியருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அதிபரிடம் முறையிட்டார். அதிபர் வந்து அதட்டியும் லிங்கா மசியவில்லை. தினமும் அவன் பாடசாலைக்கு வந்து போனான். சாந்தி அக்காவிடம் அவன் எழுத்துக்களைக் கேட்டு படிக்கத் தொடங்கினான். முறையாக அகர வரிசையிலிருந்து எழுத்துக் களை எழுதிப் படிக்காததனால் எழுதுவது அவனுக்கு பாரிய சிரமத்தைக் கொடுத்தது. ஆனால்... வாசிப்பது அவனுக்கு இலகுவாகத் தோன்றியது. வயதிற்கேற்ற முதிர்ச்சி தான் காரணமாய் அமைந்ததோ என்னவோ கணிதம்

அவனுக்கு கை வந்த பாடமாயிற்று. மொத்தத்தில் அவனது ஆர்வமும் முயற்சியும் அவனை மூன்றாம் வகுப்பில் இருந்தே கல்வி கற்க வைத்துவிட்டது. ஆண்டிறுதிப் பரீட்சையில் அவன் தேதி நான்காம் வகுப்பை எட்டியது உண்மையிலேயே ஒரு அதிசயம் தான்.

நான்காம் வகுப்பிலேயே ஒரு ஆளுமை மிக்க மாணவனாக அவன் திகழ்ந்தான். ஆசிரியர்களுக்கும் அவன் மீது ஒரு நல்லபிப்பிராயம் ஏற்பட்டது. எதற்கெடுத்தாலும் லிங்காவைத் தான் அழைத்து அபிப்பிராயம் கேட்பார்கள். அன்றும் அப்படித்தான். தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் "பிள்ளைகளே! இன்றைக்கு நான் உங்களுக்கு சொல்வதெழுதல் வைக்கப்போகிறேன். எல்லாரும் தொப்பிகளை எடுத்து தயாராகுங்கள்" என்று சொன்ன போது லிங்காவின் முகம் சுருங்கிப் போவதை அவர் அவதானித்து விட்டார்.

லிங்கா அவரிடம் நேராகவே சரணடைந்து விட்டான்.

"சேர்! எனக்கு எழுத்து சரியாவே வருகுதில்லை. எப்பிடி எழுதினாலும் எழுத்துப்பிழை வந்து கொண்டே இருக்குது"

பிடரியைச் சொறிந்தவனுக்கு அவர் அறிவுரை வழங்கினார். தினமும் பாடப்புத்தகத்திலிருந்து ஒரு பந்தியைப் பார்த்து கொப்பியில் எழுதி வந்து எனக்கு காட்ட வேண்டும் என்று கட்டளையும் இட்டார். அதைப் பின்பற்றிய பின் எழுத்தில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது.

இப்பொழுதெல்லாம் லிங்காவுக்கு நண்பர்கள் பலர் உருவாகி யிருந்தனர். அவர்களுள் பலர் மேல் வகுப்பு மாணவர்கள். அவர்களுக்கு கணித பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களை தீர்த்து வைப்பது லிங்காதான்.

"உனக்கு உந்தப் பெரிய மண்டை நிறைய மூளைதான் இருக்குதடா"

நண்பர்களின் பாராட்டை அவன் சட்டை செய்வதில்லை.

ஒரு நாள் பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம், நண்பர்கள் நால்வரும் ஒரே வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் தான். அவர்களுள் ஒருவன் அருகிலிருந்த வளவொன்றினுள் சுமாரான உயரத்தில் இருந்த தென்னை ஒன்றில் இளநீர் குலையைக் கண்டு விட்டான்.

"லிங்கா! அங்கை பாராடா நல்ல பதமான இளநி கிடக்குது"

"அதுக்கென்ன இப்ப. நீ மரத்தில ஏறி பிடுங்குவியோ. சும்மா விசர்க் கதையை விடு"

லிங்கா அதில் ஆர்வம் காட்டவில்லை.

"டேய் சாந்தன்! நீ ஏறமாட்டியோ?"

மாற்றொருவன் சாந்தனைத் தூண்டிவிட்டான்.

"நான் ஏறுவதன் தான், எண்டாலும் வளவுக்காரர் வந்திட்டால்... பயமாய்க்கிடக்கு"

பயத்தினால் சாந்தன் பின்னடித்தான். இப்போது லிங்காவுக்கு உசார் வந்து விட்டது.

“சாந்தன்! நீ ஏறடா. வளவுக்காரர் வந்தால் நான் பார்த்துக் கொள்ளுறன்”

நண்பர்களின் தூண்டுதல் தந்த உத்வேகத்தில் சாந்தன் மரத்தில் ஏறி இளநீர்களைப் பறித்துப்போட, கீழே நின்றிருந்தவர்கள் மூவரும் இளநீர்களை கூரியதடி ஒன்றினால் குத்தி வயிறு புடைக்க குடித்து முடித்தனர். மரத்திலிருந்து கீழே இறங்கி வந்த சாந்தனுக்கு இளநீர் எதுவும் இருக்கவில்லை. ஆத்திரமடைந்த சாந்தன், அவர்களைத் திட்டினான்.

“பொறு. இப்ப நான் போய் கா.பொ. ஐயாவிட்ட எல்லாத்தையும் சொல்லுறன்” என்று சொல்லிவிட்டு, ஓடத் தொடங்கினான்.

லிங்காவுக்கு அப்போது தான் மனதில் உறைத்தது.

“அப்பா மானமே பெரிதென்று நடப்பவர். அவருக்கு உப்பிடியான செயல் ஒன்றும் பிடிக்கவே பிடிக்காது. இன்றைக்கு நான் நன்றாகவே மாட்டிக் கொண்டுவிட்டேன். அவரிடமிருந்து தப்பவே முடியாது”

சிந்தித்த மூளை குறுக்கு வழியில் செயற்பட்டது. “சாந்தன் நேர்ப் பாதையில் போய் வீட்டுக்கு சேர முன் நான் வளவுகளைக் கடந்து போய் வீட்டின் முன் நின்று அவனை மறித்து விடலாம்”

சிந்தனை செயலாக மாற, வளவொன்றைக் கடந்த போது அதில் வேலியாக அடிக்கப்பட்டிருந்த முட்கம்பியொன்று அவனது கன்னத்தை பதம் பார்த்து விட்டது. அவனுக்கிருந்த பதற்றத்தில் வலி எதுவும் தெரியவில்லை. கன்னத்தில் வழிந்தோடிய இரத்தத்தைக் கண்டதும் அவன் துணுக்குற்றான்.

“எல்லர் எல்லை மீறிப் போய் விட்டது. இனி நான் வீட்டுக்குப் போவதில் பயனில்லை. பேசாமல் நான் தாத்தா வீட்டிற்கு போய் விடலாம்.”

இரத்தம் பாய்ந்ததால் உடல் சோர்ந்து போனது. மெதுவாக நடந்து போய் தாத்தாவிடம் விடயத்தைச் சொல்லி சரணடைந்து விட்டான். கன்னத்தில் வழிந்தோடிய இரத்தத்தை பழந்துணியினால் ஒற்றியெடுத்த தாத்தா, மூலிகையை அரைத்து காயத்தின் மேல் அப்பிவிட்டார். லிங்காவுக்கோ தாத்தாவின் மடியில் தலை வைத்து படுத்திருப்பது இதமாயிருந்தது. பாட்டி ஒரு குவளை நிறையநுரை பொங்கிய ஆட்டுப்பாலைக் கொண்ட வந்து கொடுத்தாள்.

“இந்தா மேனே எழும்பி இதைக்குடி. நல்லாய் இரத்தம் போய் களைச்சுப் போனாய்”

தாத்தா குவளையைக் கையில் வாங்கி, அவனை எழுப்பி சிறிது சிறிதாக பருக்கிவிட்டார். உண்மையிலேயே லிங்காவுக்கு புதுத்தென்பு பிறந்தது போலிருந்தது.

“வீட்டை போனால் அப்பா அடிப்பார் தாத்தா. நான் இங்கையே இருக்கிறன்”

பாட்டி அவனது கூற்றை மறுதலித்தாள்.

“சாய்ச்சாய்!... உது பிழையான காரியம் கண்டியோ. காயப்பட்ட பிள்ளையை பெத்தவையிட்ட கூட்டிக்கொண்டு போய் விடாமல் பாத்துக்

கொண்டிருக்கக் கூடாது”

தாத்தாவும் அதனை ஆதரித்தார்.

பாட்டி அவனை பின் கடவையால் வீட்டுக்கு அழைத்து வந்தாள். பதுங்கிப் பதுங்கி வந்த லிங்காவை அம்மா ஓடிவந்து கட்டியணைத்துக் கொண்டாள். அப்பா அவனைத் தனது பார்வையாலேயே மன்னித்து அணைத்துக்கொண்டார். வெளிப்படையாக எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

மறுநாள் கன்னத்தில் காயத்தோடு வந்த லிங்காவை அனைவரும் அதிசமாகப் பார்த்தனர். சாந்தன் அவனருகில் வந்த, “என்னால தானே உனக்கு காயம் வந்தது” என்று சொல்லி வருத்தப்பட்டான். மற்றைய இருவரும், “நாங்கள் எல்லாரும் தான் பொறுப்பு” என்று அங்கலாய்க்க, லிங்கா ஒரு புன்முறுவலுடன் சொன்னான்.

“விட்டுத்தள்ளு. காயம் தானே. அது மாறினாப் போச்சு”

காயம் ஆறினாலும் அந்த மறு அவனது முகத்தில் வாழ்நாளெல்லாம் நிலைக்கப்போகிறது என்பதனை அவன் அறிந்தானில்லை.

இடைவேளை நேரம் வழமையாக அவர்களது முன்பள்ளிக்கு முத்தர் அம்மான் தான் உணவு தயாரித்துக் கொண்டு வந்து கொடுப்பார். கோதுமை மாவில் சுட்ட அந்தத் தோசையென்றால் லிங்காவுக்கு மிகவும் பிடித்தமான உணவு. அவர்களுடைய வீட்டில் அரிசிமா, தானிய வகைகள் தான் புழங்குவார்கள். அவர்கள் தான் கை தேர்ந்த விவசாயிகளாயிற்றே.

உணவு பரிமாறப்பட்டதும் சாந்தன் கேட்டான்.

“லிங்கா! கன்னத்தில இவ்வளவு பெரிய காயம் இருக்குதே. உன்னால வாயாட்டி சாப்பிட முடியுமாடா?

லிங்கா மெதுவாகச் சிரித்தான். அவனது சிரிப்பில் வலி தெரிந்தது.

“சாப்பிடுறது கஸ்டம் தான். இருந்தாலும் முத்தம்மானின்ரை தோசை சாப்பிடால் விட முடியாது. மெதுவாக சாப்பிட்டுப் பாப்பம்”

அவன் சிறு சிறு துண்டுகளாக எடுத்து மெதுவாக வாயைத்திறந்த உமிழ்ந்து சாப்பிடுவதைப் பார்க்க நண்பர்களுக்கு வேதனையாக இருந்தது.

வீட்டில் அம்மா அவனுக்கு நீராகாரங்கள், கஞ்சி, உழுத்தங்களி போன்ற உணவு வகைகளைச் செய்து கொடுத்தாள். ஒருவாறு அவனது காயமும் மாறியது. ஆனால் தளும்பு மட்டும் நிலைத்து விட்டது.

***

லிங்கா இப்பொழுது ஏழாம் வகுப்புவரை முன்னேறி விட்டான். தோற்றத்திலும் அவன் கட்டிளம் காளையாக உருமாறத் தொடங்கியிருந்தான். அதிகாலையில் பாடசாலைக்கு போகுமுன் அண்ணன்மார் இருவரும் தோட்டங்களுக்கு தண்ணீர் இறைக்கப் போவார்கள். தானும் அவர்களுக்கு உதவியாக போக வேண்டும் என்ற கடமையுணர்வு அவனை உந்தித் தள்ளும். எனவே, அவனும் அவர்களுடன் புறப்படுவான். மனவிருப்பம் இல்லாமலே அம்மா

அவனை அனுப்பி வைப்பாள்.

"பள்ளிக்கு நேரம் போயிடும். நேரத்தோட வந்திடு லிங்கா"

லிங்காவும் அம்மாவுக்கு தலையசைத்து விட்டுப் போவான்.

அங்கே... தோட்டத்தில் பெரியண்ணன் பாத்திகளுக்கு தண்ணீரைப் பாய்ச்சி அணை கட்டிக் கொண்டிருப்பான். சின்னண்ணன் கிணற்றிலிருந்து நீரை பட்டையால் மொண்டு இறைத்துக் கொண்டிருக்க, லிங்கா அவனுக்கு உதவியாக துலாவை மிதித்துக் கொண்டிருப்பான். இப்படியாக சகோதரர்கள் மூவரும் ஒன்றிணைந்து சொற்ப நேரத்தில் வேலையை முடித்து விடுவார்கள். சில சமயங்களில் சற்று தாமதம் ஏற்படும். லிங்கா, தனக்கு பாடசாலைக்கு நேரமாகி விட்டது என்று சின்னண்ணனிடம் சொல்லிக் கொண்டிருப்பான். அவன் தம்பியின் பேச்சை கணக்கெடுக்காமல் வேலையில் மும்முரமாய் இருந்து விட்டால் போதும். லிங்காவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்துவிடும். சட்டென்று துலாவிலிருந்து ஆடுகாலுக்கு விலகி சடாரென்று நிலத்தில் குதித்து விடுவான்.

திடீரென்று நிலைகுலைந்து திடுக்கிட்டவனாய் சின்னண்ணன் லிங்கா வைத்தேட அவனோ வீட்டில் அம்மா தந்த உணவை இரண்டு வாயில் திணித்து விட்டு பாடசாலை நோக்கி ஓட்டம் பிடிப்பான். போகும் போது அவனது பெரிய தங்கை கையில் சீப்புடன் அ்மாவைத் தேடி வா,

"உனக்கு தலைவாரத் தெரியாதே. அதுக்கும் அம்மா தான் வரவேணுமோ?"

சொல்லிக் கொண்டே உச்சந்தலையில் "நறுக்"கென ஒரு கொட்டு வைக்க, அவளோ வலியினால் அலற... அந்த அலறல் சத்தம் கேட்டு ஏணைக்குள் துயின்று கொண்டிருக்கும் அவனது குட்டித்தங்கை வீரிட்டுக் கதற... வீடே அல்லோல கல்லோலப்படும். இளையவர்களைத் தாக்குவதில் லிங்காவுக்கு ஒரு தனி சுகம் இருந்திருக்க வேண்டும். எந்த ஒரு இளசைக் கண்டாலும் ஏதாவது சாக்கு வைத்து கொட்டி விட்டுத்தான் போவான். அவனது போக்கே அப்படித்தான்.

ஒருவாறு லிங்கா ஏழாம் வகுப்பு பரீட்சையில் தேறிவிட்டான். அவனுடன் கூடப்படித்த வசதியபடைத்த மாணவர்கள் சிலர் யாழ்ப்பாண நகரப் பாடசாலைகளில் போய் கல்வியைத் தொடர வேண்டும் என்ற ஆசை மனதில் துளிர் விட்டது. அப்பாவிடம் நேரிடையாகக் கேட்ட அவனது மன் இடமளிக்க வில்லை. எனவே மெதுவாக அம்மாவை அணுகினான்.

"அம்மா! எங்கட வகுப்புப் பெடியங்களெல்லாம் யாழ்ப்பாணத்தில் போய் படிக்கப்போறாங்களாம். நானும் அங்கை போய் படிக்கட்டுமே?"

அம்மாவுக்கு மகனது ஆசை நியாயமானதாகப்பட்டது. எனினும் தகப்பன் ஒப்புக்கொள்ள வேணுமே என்ற ஆதங்கமும் அவளைச் சிந்திக்க வைத்தது. அன்றைய இரவு கணவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்த போது மெதுவாக பேச்சைத் தொடங்கினாள்.

"உங்களிட்டை ஒன்று கேட்பன். மறுப்புச் சொல்லக்கூடாது."

பீடிகையுடன் ஆரம்பித்தாள், அம்மா.

சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தார். பார்வையில் கேள்விக்குறி.

"இல்ல... எங்கட மூத்தவன்கள் இரண்டு பேரும் படிப்பிலை அவ்வளவு அக்கறை காட்டுறாங்கள் இல்லை. லிங்காவுக்குத் தான் படிப்பிலை நாட்டத் இருக்குது."

"அது எனக்குத் தெரிஞ்சதுதானே"

அப்பாவின் குதர்க்கமான பேச்சு அம்மாவுக்கு எரிச்சலைத் தந்தது.

"அவனோட படிக்கிற பெடியளில சிலபேர் யாழ்ப்பாணத்துக்குப் போய் படிக்கப் போறாங்களாம். லிங்கா அங்கைகை போய் படிக்க வேணுமென்று ஆசைப்படுறான்"

"ஓஹோ... இதுக்குத்தானே இப்பிடி சுத்தி வளைச்சு கதைவிட்ட நீ"

அம்மாவுக்கு சப்பென்று போய்விட்டது. சட்டென்று தொனியை மாற்றி கதைக்கத் தொடங்கினாள்.

"படிக்கக்கூடிய பிள்ளையை நாங்கள் படிக்க வைக்கத்தானே வேணும். அவன் படிச்சு நல்லாய் வந்தால்... உழைச்சுத் தருவான் தானே"

அப்பா பெட்டிப்பாம்பாக அடங்கிப் போனார். அவரது உறவுக்காரனான கந்தப்பு வாத்தியார் தன்னுடைய மகனை யாழ்.மத்திய கல்லூரியில் சேர்த்து விடப் போவதாகக் கூறினார். அவருடன் லிங்காவையும் அழைத்துப் போய் அப்பா மத்திய கல்லூரியில் சேர்த்து விட்டு வந்தார். கல்லூரி விடுதி தான் லிங்காவுக்கு தங்குமிடமாயிற்று.

ஊரில் பரந்து திரிந்து எதுவித கட்டுப்பாடுமில்லால் வாழ்ந்த லிங்காவுக்கு, சிறைக்கூட்டில் அடைபட்டது போல் விடுதி வாழ்க்கை கசந்து நாளடைவில் நண்பர்களது கூட்டமும் பெருகப் பெருக அதுவே இனிமையாயிற்று. அம்மாவின் சாப்பாடு அவனுக்கு அடிக்கடி நினைவில் வந்து போகும். அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்தி படிப்பில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினான்.

நகரத்து மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தில் நல்ல தேர்ச்சி இருந்தது. மற்றைய பாடங்கள்ள அவனுக்கு சிரமத்தைத் தரவில்லை. எப்போதுமே லிங்கா கணக்குப் பாடதத்தில் புலி தான். எவரும் அவனை மிஞ்ச முடியாது. லிங்கா ஆங்கிலப் பாடத்தில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினான். புது நண்பர்களிடம் விளங்காத பயிற்சிகளைக் கேட்டுப் படித்தான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் வாசிகசாலைக்குப் போய் புத்தகங்களைத் தேடி வாசித்தான். வாசிப்பு ஒரு கலையாகவே அவனது வாழ்க்கையில் அமைந்து விட்டடது.

தவணை ஒன்று முடிந்தது. லிங்காவுக்கு தமிழ்மொழியைத் தவிர ஏனைய பாடங்களில் அதிக புள்ளிகள் கிடைத்திருந்தன. ஆங்கிலத்தில் நல்ல முன்னேற்ற் காணப்பட்டது. தவணை விடுமுறைக்கு ஊருக்கு வந்து சேர்ந்தான்.

அம்மா, சகோதரர்களைக் கண்டதும் அவனது மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. குட்டித் தங்கையைத் தூக்கி கொஞ்சினான். பெரிய தங்கைக்கு கால்சட்டைப் பையிலிருந்து இனிப்பு எடுத்தக் கொடுத்தான்.

"தங்கச்சிக்கு குடுத்திடாதை. இனிப்பு தொண்டைக்குள்ள போய் அடைச்சிடும். அவளுக்கு நான் பிஸ்கட் கொண்டு வந்திருக்கிறன். அம்மாட்டக் குடுக்கிறன். அவ தீத்தி விட்டுக்கும்"

அண்ணாவின் கரிசனை பெரிய தங்கச்சிக்கு நெகிழ்ச்சியைக் கொடுத்தது. அம்மா, சுடச்சுட ஆட்டுப்பால் கலந்த தேநீரைக் கொண்டு வந்து கொடுத்தாள். லிங்கா அதை ஆவலுடன் வாங்கி ரசித்து ருசித்து குடிக்கத் தொடங்கினான். இதற்கிடையில் பெரிய தங்கச்சி எதையோ உருண்டையாகக் கொண்டு வந்து கையில் திணித்தான்.

"ஆ!... எள்ளுருண்டை. எனக்கு விருப்பமான சாப்பாடு"

லிங்கா அதனை சுசவைக்கத் தொடங்கினான்.

"அம்மா போன கிழமை செய்தவ. நான் உனக்கெண்டு எடுத்து வைச்சநான்"

சகோதர பாசத்தைக் கண்ணுற்ற அம்மாவின் கண்களை நீர் மறைத்தது.

தண்ணீர் வண்டில் படலையடியில் வரும் சத்தம் கேட்டதும் லிங்கா ஓடோடிப்போய் படலையைத் திறந்து விட்டான். மகனைக் கண்டதும் அப்பாவின் முகம் மலர்ந்தது.

"எட... லிங்காவே... எப்படா மேனே வந்த நீ?"

"இப்பதான் அப்பா நாலுமணி லோஞ்சில வந்த நான்"

அவ்வளவு தான் அப்பாவின் குசல விசாரிப்பு. லிங்காவுக்கு அண்ணன்மார் இருவரையும் காணவில்லையே என்ற மனத்தவிப்பு.

"அம்மா! அண்ணன்மார் எங்கை?"

சுந்தர் வளவுக்கை பாத்தி கிண்டுற வேலை நடக்குது. அது தான் கிழங்கை ஏத்திக் கொண்டு வர வண்டில் கொண்டு போயிருக்கினம்"

லிங்கா அப்போது தான் கவனித்தான். வழமையாக வடக்கன் நாம்மன்களை கட்டியிருக்கும் இடத்தில் காணவில்லை. அதுகளைத்தான் பெரிய வண்டில் பூட்டிக் கொண்டு போயிருக்கினம் போல் என மனதில் நினைத்துக் கொண்டவன் புறப்பட்டு விட்டான்.

"அம்மா! நானும் அவையடிக்கு ஒருக்கா போட்டு வாறன்"

***

இரண்டாந்தவணை ஆரம்பமாகி, விடுதிக்கு வந்து சேர்ந்த லிங்காவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒரே வீட்டைப் பற்றிய சிந்தனை தான். பழைய நண்பர்களோடு ஊரெல்லாம் சுற்றி வந்து சல்லாபித்தவனுக்கு இங்கு வந்து ஒரு கட்டுக் கோப்பினுள் வாழ்வதென்றால்... அது விரக்தியைத் தானே ஏற்படுத்தும். எனினும் லிங்கா தன் மனதை ஒரு நிலைப்படுத்தி கல்வியில் கவனத்தை

செலுத்தத் தொடங்கி விட்டான். மனத்தை அலைபாய விடால் கட்டுப்படுத்தி செயற்படும் திறன்... அது லிங்காவுக்கே உரிய சிறப்பு அம்சமாகும்.

மாலை வேளைகளில் லிங்காவும் நண்பர்களும் கிரிக்கட் விளையாடுவார்கள். கிரிக்கட் அவனுக்கு பிடித்தமான விளையாட்டு. அவனுடன் பயிலும் மாணவர்கள் சிலர் சைக்கிளில் தினமும் பாடசாலைக்கு வந்து போவார்கள். இடையிடையே லிங்கா அவர்களிடம் சைக்கிளை இரவலாக வாங்கி கோண்டாவில் சந்தியிலுள்ள ஒரு தேநீர்க்கடைக்கு போய் வருவான். அந்தக் கடையில் சுண்டல் மலிவாகக் கிடைக்குமாம். அங்கு போய் சுண்டலும் சாப்பிட்டு ஒரு பிளேன் ரீயும் குடிப்பது அவனுக்கு விருப்பமான பொழுதுபோக்கு.

காலம் தன் கடமையை செவ்வனே செய்து கொண்டிருந்தது. லிங்கா, வடமாகாண ஆசிரியர் சங்கம் நடத்திய பரீட்சையில் சித்தியடைந்து விட்டான். அடுத்து அவன் விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்கு அனுமதிக்கப்பட்ட போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. எப்பாடு பட்டாவது தான் ஒரு மருத்துவராக வர வேண்டும். மக்களுக்கு தன்னாலான சேவை செய்ய வேண்டுமென்பதே அவனது கொள்கையாகும்.

பௌதீகவியல் அவனுக்கு அத்துப்படியான பாடமாக அமைந்ததற்கு காரணம் அவனுக்கு கனித்ததில் அமைந்த திறமைதான். இரசாயனவியலும் கற்பதற்கு இலகுவாக இருந்தது. எனினும் இலகுவாகக் கற்கக்கூடிய தாவரவியல், விலங்கியல் பாடங்கள் இதமாக மனதில் பதிந்த போதிலும் அதில் ஒரு பின்னடைவு இருக்கத்தான் செய்தது. விளக்கப்படங்களை ஒழுங்காகக் கீறினால்த்தான் அதன் கீழ் விவரணக் குறிப்புக்களை எழுதி விவரிக்கலாம். லிங்காவினால்த்தான் ஒரு நேர்கோட்டைக்கூட கோணலின்றி வரைய முடியாதே.

ஒருவாறு லிங்கா சிரேஷ்ட தராதரப்பத்திரத்துக்கான பரீட்சையை எழுதி முடித்தான். மற்றெல்லாப் பாடங்களுக்கும் திறமைச் சித்தியும் தமிழ்பாடத்திற்கு மட்டும் நூன சித்தியும் பெறுபேறாக வந்திருந்தது. அடுத்த ஆவணியில் மீண்டும் தமிழ் பாடத்தை மட்டும் எழுதி சாதாரண சித்தியை ஒருவாறு அவனால் பெற முடிந்தது. உயர்தர வகுப்பில் கல்வியைத் தொடர்ந்தான்.

இப்பொழுதெல்லாம் அவன் அடிக்கடி ஊருக்கு வருவதில்லை. தவணை விடுமுறை விட்டால்த்தான் அவனை ஊரில் காணலாம். ஊருக்குள் வந்து இறங்கியதுமே முதல் வேலையாக அம்மாளாச்சியை மனமுருகி தரிசித்து விட்டுத்தான் வீட்டுக்குப் போவான். நாகபூஷணி அம்மனின் கருணாகடாட்சம் தான் தன்னை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது அவனது அசைக்க முடியாத நம்பிக்கை.

முன்னர் போல் அவன் விளையாட்டு கேளிக்கைகளில் பொழுதைக் கழிப்பதில்லை. ஊரில் உள்ள அவனது உடன் பிறவா தம்பிகள் மற்றும் இளமட்டத்தினரை அழைத்து அவர்களுக்கு பாடம் புகட்டுவது தான் அவளது பொழுதுபோக்கு. எல்லோரும் படிக்க வேண்டும். படித்து முன் நிலைக்கு வர

வேண்டுமென அவர்களுக்கு அறிவுரை வழங்குவான். படிக்கும் போது தவறு விட்டால் அவ்வளவு தான். பளாரென கன்னத்தில் அறைந்து விடுவான்.

"டேய் லிங்கண்ணன் வந்திருகிறானாம். அவன்ர கண்ணில பட்டால் அவ்வளவு தான்" என்று சொல்லி இளசுகள் ஓடி ஒளிந்து கொள்ளுவார்கள். அந்தளவுக்கு அவன் ஒரு முரட்டுக்காளையாக ஊரில் வலம் வந்தான். வீட்டில் அண்ணன்மாருக்கு நல்ல மரியாதை. தங்கைமாருக்கு எதையாவது சாக்கு வதைத்து அடிக்கடி கொட்டு விழும்.

தவணை விடுமுறை கழியும் வரை ஊருக்குள் இளசுகளின் புழக்கம் குறைவாகத்தான் இருக்கும். எனினும் சில பெற்றோர்கள் அவனிடம் தங்கள் பிள்ளைகளைக் கொண்டுவந்து ஒப்படைத்து விடுவார்கள்.

"தம்பி! இவன் படிக்கிறானில்லை. உங்கினை பெடியளோட சேர்ந்து கடற்கரைக்குப் போறதும் கும்மாளம் அடிக்கிறதும் தான் வேலை. கொஞ்சம் பாத்து படிப்பு சொல்லிக்குடு ராசா"

ஊர்ச்சனங்கள் மத்தியில் அவனுக்கு ஒருவிதமான மரியாதை இருக்கத்தான் செய்தது.

விடுமுறை நாட்களில் ஒரு கண்டிப்பான ஆசிரியராய் உலாவந்த லிங்கா இப்போது கல்லூரி ஆரம்பித்ததால் விடுதிக்கு வந்து சேர்ந்தான். அங்கே அவனுக்கு ஒரு புதுக்குழப்பம் காத்திருந்தது. அவனுடைய ஆப்த நண்பனான புவனசுந்தரம் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

"டேய் மச்சான்! நான் இந்தியாவுக்கு போய் படிக்கப்போறன். அப்பா பர்மிஷன் தந்திட்டார்."

லிங்காவுக்கு அதைக்கேட்டதும் தூக்கி வாரிப்போட்டது. அவனுடைய கலகலப்பை பார்க்கும் போது விஷயம் உண்மையாகத்தான் இருக்கும் என்று எண்ணத் தோன்றியது.

"டேய் புவனா! பகிடியை விட்டிட்டு உண்மையைச் சொல்லடா"

"புரொமிஸ்ஸாத்தான் சொல்லுறன். அப்பா தன்னுடைய பிரண்ட் ஒருத்தரிட்டை சொல்லி கொலிஜில இடமெடுக்கச் சொல்லிப்போட்டார்."

புவன சுந்தரம் ஆர்வத்துடன் சொல்லச் சொல்ல லிங்காவின் முகம் குழப்பத்தினால் சிறுத்துப்போனது. அவனுடன் இணையாகக் கல்வியில் போட்டி போட்டுப் பயிலும் நண்பனைப் பிரிவதென்றால்... அவனால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. அவனுடைய அப்பா ஒரு சட்டத்தரணி. தனியாகப் போயிருந்து நீண்ட நேரமாகச் சிந்தித்தவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

அப்பா, புகையிலை அறுவடை செய்து கொழும்பு வியாபாரி ஒருவருக்கு தரகர் மூலம் விற்றிருந்தார். போன கிழமை அவன் ஊரிலிருந்த போது தான் அந்தப் பணம் அப்பாவின் கைக்கு வந்து சேர்ந்ததை அவன் அவதானித்திருந்தான். எப்படியாவது அம்மாவிடம் கெஞ்சிக் கேட்டு அப்பாவை சம்மதிக்க வைத்துவிட்டால் போதும். அந்தப் பணத்தை மூலதனமாக வைத்து

அவனும் இந்தியாவிற்குப் போய் படித்து ஒரு விவசாய விஞ்ஞான பட்டதாரியாக வந்து விடலாம். கற்பனையில் மிதந்ததால் இறுகிப் போயிருந்த அவனது மனம் இலேசாகி இதமான சுகத்தைத் தந்தது.

மறுநாள் அவன் வகுப்பில் சக மாணவர்களைச் சந்தித்த போது அவர்களுள் மேலும் நால்வர் இந்தியாவில் கல்வியைத் தொடரும் கற்பனையுடன் மட்டும் நின்றுவிடவில்லை. செயற்பாட்டிலும் இறங்கி விட்டிருந்தனர். இவற்றைக் கண்ணுற்ற லிங்காவின் மனத்துடிப்பு அதிகரித்தது. அதன் விளைவாக அன்று கல்லூரி முடிவடைந்ததும் லிங்கா விடுதிப் பொறுப்பாளரிடம் விசேட அனுமதி பெற்றுக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டுவிட்டான்.

திடீரென்று வீட்டுக்கு வந்து நின்ற லிங்காவைக் கண்டதும் அம்மா திடுக்கிட்டாள். “என்ன லிங்கா ஏதும் சுகமில்லையா?” ஆதங்கத்துடன் அவனது நெற்றியைத் தொட்டுப்பார்த்தாள்.

“இல்லையம்மா. இது வேறொரு முக்கியமான விசயம்”

பீடிகை போட்டான் மைந்தன். அம்மாவோ பேந்தப் பேந்த விழித்தாள்.

“என்ன ராசா. என்னவெண்டு தான் சொல்லன்”

லிங்காவும் மெது மெதுவாக விசயத்தை அவிட்டு விட்டான். அம்மாவுக்கும் மகனை கடல் கடந்து அனுப்ப அவ்வளவாக இஷ்டமில்லா விட்டாலும் மகனது ஆசைக்கு குறுக்கே நிற்க அவள் விரும்பவில்லை.

சரி அப்பாவிட்ட கேட்டுப் பாப்பம். இப்ப நீ போய் முகம் கழுவி விட்டு வா. சாப்பிடலாம்”

லிங்காவும் தனது மனப்பாரத்தை அம்மாவிடம் இறக்கி விட்ட நிம்மதியுடன் கிணற்றடியை நோக்கிப் போனான்.

***

இரவு உணவை முடித்துக் கொண்டு லிங்காவின் அப்பா கட்டிலில் வந்து அமர்ந்திருந்தார். அம்மா, வெற்றிலைத் தட்டத்தை எடுத்து வந்து அவரிடம் கொடுத்து விட்டு அருகில் தரையில் அமர்ந்து கொண்டாள். பாக்கு வெட்டியால் பாக்கொன்றை எடுத்து நறுக்கியவர், தனக்கு அளவானதை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். அம்மா, வெற்றிலை ஒன்றை எடுத்து காம்பை நுள்ளிவிட்டு அதில் சிறிது சுண்ணாம்பைத் தடவியவள், அதை அவரிடம் நீட்ட, அவரும் வெற்றிலையை வாங்கி மடித்துச் சுருட்டி வாய்க்குள் திணித்துக் கொண்டார். அவர் மெல்லுவதை சிறிது நேரம் அவதானித்துவிட்டு அம்மா வாய் திறந்தாள்.

“இஞ்சாருங்கோவன்... இவன் லிங்கா வந்து நிற்கிறான்”

லிங்காவும் சுவருக்குப் பின்னாலிருந்து காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான்.

“ம்... ம்...” என்று இழுத்தார் அப்பா. வாய்க்குள் தேங்கிக்கிடந்த உமிழ்நீர் அவரை வாய் திறக்க முடியாதவாறு தடுத்தது.

லிங்காவோட படிக்கிற பெடியளில் கொஞ்சப்பேர் இந்தியாவுக்கு

படிக்கப் போகினமாம். அங்கையெண்டால் மூண்டு வருசத்தில படிப்பு முடிஞ்சிடுமாம். இஞ்சை படிப்பு முடிய ஆறேழு வருசம் செல்லுமாம். படிப்பு முஞ்சுதெண்டால் அவனும் உழைக்கத் தொடங்கி விடுவான்"

எழுந்து போய் வாயிலிருந்த உமிழ்நீரை வெளியில் துப்பிவிட்டு வந்த அப்பா சொன்னார்.

"இஞ்சை ஆருக்கு வேணும் அவன்ரை உழைப்பு. ஏதோ அவன் படிச்சு நல்லாய் வந்தால் போதுமென்று நினைக்கிறன்"

"அதுக்குத்தான் அவனும் இந்தியாவுக்கு போய் படிக்க வேணுமென்று ஆசைப்படுறான்"

"என்ன கண்டறியாத ஆசை. அதுக்கெல்லாம் செலவழிக்க என்னட்ட காசில்லை."

அம்மாவுக்கோ பிள்ளையின் விருப்பத்தை வீணடிக்க மனமில்லை.

"ஏன் போன கிழமை செல்லையா அண்ணை கொண்டு வந்து தந்த புகையிலைக்காசு இருக்குத்தானே. அதைச் செலவழிச்சு படிப்பீச்சு விட்டால் அவன் உழைச்சுத் தரமாட்டானே"

அப்பாவுக்கு வந்ததே கோபம்.

"அதெல்லாம் எனக்கு ஆரும் சொல்லித்தர தேவையில்லை. என்ரை அலுவல் பார்க்க எனக்குத் தெரியும் நான் ஒரு காணி விலைக்கு தீர்த்துப் போட்டன். நாளைக்கு அது எழுத வேணும்."

அம்மாவின் மன் உடைந்து போனது. கண்களில் துளிர்ந்த நீரை சேலைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டாள்.

சுவருக்குப் பின்னால் நின்றிருந்த லிங்காவின் மனமும் நொருங்குண்டு போனது.

மறுநாள். அப்பாவின் பெயரில் காணி எழுதப்பட்டு விட்டது. லிங்கா, அம்மாவிடம் மட்டும் சொல்லிக் கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டான். மனம் போன போக்கிலே அவன் கொழும்பை வந்தடைந்தான். அவனது ஒன்று விட்ட சித்தப்பா ஒருவரின் கடை அவனுக்கு தஞ்சமளித்தது. தனக்கு உதவியாக இருந்து லிங்கா கடையைக் கவனிப்பான் என்ற நோக்கத்தோடு சித்தப்பாவும் அவனை அரவணைத்துக் கொண்டார்.

காலம் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. லிங்காவுக்கு தங்குமிட வசதியும், உணவும் இலவசமாகக் கிடைத்தது. லிங்காவும் விசுவாசத்துடன் செயற்பட்டான். சித்தப்பாவிற்கும் இப்போது கடையை விட்டு வெளியே போய் வருவது சுலபமாக இருந்தது. லிங்கா, கடையில் என்ன வேலையாயிருந்தாலும் பொறுப்பாகச் செய்வதோடு, கணக்கு வழக்குகளையும் பார்த்துக் கொண்டான். ஆக இருவரும் ஒருவருக்கொருவர் அனுசரனையாக இருந்து கடையை நடத்திக் கொண்டிருந்தனர்.

சில சமயங்களில் துறைமுகத்திற்கே போய் பொருட்களை லொறிகளில்

ஏற்றிக்கொண்டு வரவேண்டியிருக்கும். அவ்வேளைகளில் லிங்கா தானே முன்நின்று செயற்படுவான். அங்கு வாழ்ந்த காலத்திலும் லிங்காவுக்கு சில நண்பர்களின் அறிமுகம் கிடைத்தது. அவர்களும் அவனைப் போலவே அரச சேவைக்குள் உட்புக எத்தனித்துக் கொண்டிருப்பவர்கள் தான். அவர்கள் அரச வர்த்தமானியில் பிரசுரமாகியிருக்கும் அறிவித்தல்களைப் பற்றி அவனுக்கு எடுத்துக் கூறுவார்கள். லிங்காவும் கடையை விட்டு வெளியே போகும் சமயங்களில் அவற்றுக்கான விண்ணப்படிவங்களைப் பெற்று, நிரப்பி அனுப்பி வைத்து விடுவான்.

ஒரு நாள் அவனது பெயருக்கு கடை முகவரிக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதனைப் பிரித்துப் பார்த்தவனுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. அரசாங்க சேவைக்குள் உதவி வைத்தியர்களை சேர்த்துக் கொள்ளுவதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைதான் அது. மெதுவாக சித்தப்பாவை அணுகினான்.

“சித்தப்பா! சனிக்கிழமை எனக்கு அரைநாள் லீவு வேணும்”

“சித்தப்பா, தலையைப் பதித்து மூக்குக் கண்ணாடிக்கு மேலால் அவனை உற்றுப் பார்த்தார். ஏன் என்ற கேள்வி அங்கு மறைந்திருந்தது.

“வந்து… நான் அப்போதிக்கரி கோஸ் செய்யிறதுக்கு அப்பிளிகேசன் போட்டநான், அதுக்கு சோதினைக்கு அட்மிசன் கார்ட் வந்திருக்குது. சன்கிழமை சோதினை. அது தான்…”

“ம்!...” என்ற எழுத்தோடு அவர் நிறுத்திக் கொண்டார்.

சனிக்கிழமை ஒருவாறு கடையில் செய்ய வேண்டிய வேலைகளையும் முடித்து, பஸ் பிடித்து பரீட்சை நிலையத்துக்கு வந்து சேர போதும் போதுமென்றாகி விட்டது. அங்கு அவனைச் சந்தித்த நண்பர்கள் ஏதேதோ கேள்விகள் எல்லாம் வரும் என்று சொன்னார்கள். அவை எதையும் கிரகிக்கும் நிலையில் லிங்காவின் மனம் இருக்கவில்லை. ஒரு தரம் கண்களை இறுக மூடி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

இப்போது அவனது மனதில் வெறுமையே நிறைந்திருந்தது. நடுங்கும் கரங்களால் கேள்வித்தாளை வாங்கிப் பார்த்தவனுக்கு மனதில் உற்சாகம் பிறந்தது. எல்லாமே பதில் எழுதக் கூடிய கேள்விகளாகவே அமைந்திருந்தன. மளமளவென்று பதில் எழுதத் தொடங்கினான். அதுவே அவனது வாழ்க்கையை நிர்ணயிக்கப்போகிறது என்பதை அவன் அறிந்தானில்லை.

மாதம் ஒன்று கடந்தது. பரீட்சைப் பெறுபேறும் வந்தது. இப்போது லிங்காவுக்கு ஒரு குழப்பம். அவன் மருந்தாளருக்கான உள்ளகப் பயிற்சிக்குரிய தேர்வும் எழுதியிருந்தான். இரு தேர்வுகளிலும் அவன் தேர்ச்சி பெற்றிருந்ததனால் எந்த நெறியை மேற்கொள்வது என்பதில் தடுமாற்றம் ஏற்பட்டது. தொழில் ரீதியாக மருந்தாளரை விட உதவி மருத்துவமே சிறந்ததென்பது அவனது அபிப்பிராயம். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கு

சேவை செய்வதில் கிடைக்கப் போகும் மனத்திருப்தி வேறெதிலும் கிடைக்கப் போவதில்லை. செய்யும் தொழிலுக்கு ஊதியம் மட்டும் கிடைத்துவிட்டால் போதுமா? அதில் மனநிறைவு கிடைத்து விடுமா? அவனது மனப்போராட்டத்துக்கு தீர்வையும் அவனே தேர்ந்தெடுத்தான்.

அதன் விளைவாக மருத்துவக் கல்லூரியில் அவனது கல்வி தொடர்ந்தது. சித்தப்பாவின் கடையின் பின்புறமிருந்த ஒரு சிறிய அறை அவனுக்கு தங்குமிடமாகியது. விரிவுரைகளுக்குப் போய்வரும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் அவன் கடை வேலைகளைக் கவனித்துக் கொள்ளுவான். தவிர, கணக்கு வழக்குகளைப் பார்ப்பது அவனது பிரத்தியேக வேலை. சித்தப்பாவிற்கும் அவனுக்குமிடையில் இருந்த புரிந்துணர்வு சுமுகமாக காலத்தை நகர்த்திச் சென்றது.

அது அவனுக்கு மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு. லிங்காவுக்கு நிறையப்படிக்க வேண்டியிருந்தது. அன்று சனிக்கிழமை மாலை ஐந்து மணி யிருக்கும். லிங்கா தனது அறைக்குள்ளிருந்து பாடங்களில் மூழ்கிப் போயிருந் தான். திடீரென அவர்களது கைடையில் வேலை செய்யும் வேலு ஓடிவந்தான்.

“அண்ணை! அண்ணை! பெரிய கூட்டம் ஒன்று தெருத்திருப்பத்தில் சத்தம் போட்டுக்கொண்டு கலாட்டா பண்ணுறாங்கள். இங்கையும் வந்திடு வாங்கள் போல கிடக்கு. கடையை இழுத்துப் பூட்டுவமே?”

திடுக்கிட்டு நிமிர்ந்த லிங்காவுக்கு நிலைமையைப் புரிந்து கொள்ள சிறிது நேரமெடுத்தது. ஒரே கணத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவன் ஓடோடி வந்து தெருவை எட்டிப் பார்த்தான். வேலு கூறியது உண்மைதான். அங்கே... காடையர்கள் கும்பலாகத் திரண்டு கெட்ட வார்த்தைகளில் துவேச மான குரல்கள் எழுப்பியவாறு கைகளில் பொல்லுகள் தடிகளுடன் அடாவடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். வேலு அவசரப்பட்டான்.

“அண்ணை! இஞ்சையும் வந்திடப் போறாங்கள். வாங்க நாங்கள் கடையைப் பூட்டிப்போட்டு பின்னால போய் ஒளிச்சிருப்பம்”

லிங்கா அவனிடம் விசாரித்தான்.

“ஐயா எங்கை?”

“அவர் எங்கையோ வெளியில போயிட்டார்”

“அப்ப நான்தான் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள வேணும்“

மனதில் ஒருமின்னல். அவனது மேனி ஒருதரம் சிலிர்த்துக் கொண்டது.

“இவன் துரைச்டசரியும் சாந்தனும் எங்கையடா?”

“அவங்கள் உள்ளுக்குப் போய் மூடையளுக்குப் பின்னால ஒளிச் சிட்டாங்கள்”

லிங்கா உரக்கக் குரல் கொடுத்தான்.

“வேலு! கடைக்கதவை முற்றாக இழுத்துப் பூட்டாத ஒற்றைக் கதவில் விடு. டேய் துரைசாமி! சாந்தன்! எல்லாரும் வாங்கோ. உள்ளுக்கு அடுக்கி

யிருக்கிற சோடாப் போத்தல்களை பெட்டியோடு தூக்கிக் கொண்டு வா. முன்னுக்கு வை”

உத்தரவு கடுமையாக இருந்தது. அதே சமயம் மேமசையை இழுத்து வாசற்கதவின் முன் வைத்தவன், சோடாப் போத்தல்கள் அடங்கிய பெட்டிகளை அதில் வரிசையாக அடுக்கினான். தான் அதன் முன் நின்று கொண்டான்.

தெருவெங்கும் துவேசமான கோஷங்களும், அடிதடி சத்தங்களும் காகதுகளில் மோதிக் கொண்டிருந்தன. இடையிடையே அவலக்குரல்கள் வேறு. கோஷங்கள் அவர்களது கடையை அண்மித்துக் கேட்கத் தொடங்கியது. லிங்கா உஷாராகினான். அவனது கைகளிரண்டிலும் ஒவ்வொரு சோடாப் போத்தல் கடைப் பையன்களுக்கோ உதறலெடுத்தது. லிங்கா அவர்களை ஊக்கப் படுத்திய வாறிருந்தான்.

வாசலுக்கு முன் பெரிய பொல்லுகளைக் கையில் ஏந்தியவாறு இருவர் தலைகாட்டியது தான் தாமதம். சலீர்! சலீர்!! என சோடாப் போத்தல்கள் அவர்கள் மீது மோதி நொறுங்கத் தொடங்கின.

“மகே அம்மே!”

அவலக்குரல்கள் எதிர்ப்பக்கம் கேட்கத் தொடங்கின. இங்கே லிங்காவின் கை ஓயாமல் வேலை செய்து கொண்டிருந்தது. கூடவே பையன்கள் மூவரும் உஷாரடைந்தவர்களாய் சோடாப் போத்தல்களை நகர்த்திக் கொண்டி ருந்தனர். தெருவும் கடைவாசலும் போத்தல் ஓடுகளால் நிரம்பியிருந்தன. தாக்குப் பிடிக்க முடியாத காடையர் கூட்டம் பின் வாங்கத் தொடங்கியது.

கிட்டதத்தட்ட இரண்டு மணித்தியாலங்களின் பின் பூட்ஸ் கால்களின் சத்தம் தெருவில் கேட்கத் தொடங்கியது. காயப்பட்டவர்கள், குற்றுயிராய்க் கிடந்தவர்கள், சடலங்கள் என அனைவரையும் ட்ரக் வண்டிகளில் ஏற்றிச் சென்றனர். அதே சமயம் கடைகளில் உள்ள பொருட்களை ஒரு சிலர் கொள்ளை யடித்துச் சென்றனர். காவல்துறையினர் இதனைக் கண்டும் காணாததுபோல் பாராமுகமாயுமிருந்தனர்.

லிங்காவும் மற்றும் பையன்களும் கடைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தனர். லிங்காவின் கைகள் இரண்டும் இரத்தத்தில் தோய்ந்து கிடப்பதை அப்போது தான் வேலு அவதானித்தான்.

“அண்ணை! கையெல்லாம் இரத்தமாய்க் கிடக்கு”

ஆதங்கத்துடன் சொன்னவனை லிங்கா சமாளித்தான்.

“சே!.... உதெல்லாம் ஒரு காயமே?”

வேலு ஒரு துணியை எடுத்து வந்து இரண்டாகக் கிழித்து இரு கைகளிலும் சுற்றி விட்டான். பிரச்சினைகளை முனும் நின்று எதிர்கொள்வது என்பது லிங்காவுக்கு கை வந்த கலை. அதே சமயம் பின் வாங்குதல் சாத்தியமற்ற விடயமாகும்.

ஒருவாறு இரவு ஒன்பது மணிபோல் கடையின் முன் பகுதியில் ஆளரவம்

கேட்டது. லிங்கா எட்டிப் பார்த்தான்.

“அடோ! இங்க என்ன செய்யுறது?”அவனது கேள்விக்கு லிங்கா அவர்களது மொழிலேயே பதில் சொன்னான்.

“சேர்! எங்களை சிலர் கத்தி, பொல்லோட அடித்துக் கொல்லுறதுக்காக கலைச்சுகொண்டு வந்தவை. நாங்கள் உயிருக்குப் பயந்து இலங்கை ஒளிச்சிருக்கிற்”

பதிலைக் கேட்டவன், உதட்டுக்குள் சிரித்தவாறு அவர்கள் நால்வரைய்ு அழைத்துப்போய் வண்டியில் ஏற்றினான். வண்டிக்குள் வேறும் சிலர் இருப்பதை அப்போது தான் லிங்கா கவனித்தான். அவனையுறியாமலே அவனது கண்கள் அவர்ககளுக்குள் சித்தப்பாவைத் தேட முற்பட்டன.

நீண்ட தூர பயணத்தின் பின் அவர்களது வாகனம் ஒரு பாடசாலை வளவிற்குள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. அந்தப் பாடசாலை மண்டபத்திற்குள் ஏற்கெனவே தஞ்சடைந்திருந்த நூற்றுக் கணக்கானோருடன் இவர்களும் இணைந்து கொண்டனர். அங்கே திரும்புமிடமெல்லாம கூக்குரலும் குழந்தைகளின் அழுகைச் சதச்தமுாக அவலம் நிறைந்திருந்தது.

லிங்காவின் மனததில் சித்தப்பா பற்றிய கவலை தலை தூக்கியது. இந்தக் கூட்டத்துக்குள் அவரை நான் எங்கே போய்த்தேடுவது. ஒருவேளை அவர் வேறிடமொன்றில் தங்க வைக்கப்பட்டிருப்பாரோ அல்லது... அவரது உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ... பதகளித்த னதத்தை ஒருநிலைப்படுத்த முடியாமல் கிடந்து தவித்தான், லிங்கா.

மூச்செறிந்தவாறு அவன்முன் ஓடிவந்து நின்றான், வேலு.

“அண்ணை! ஐயாவும் இங்கை தான் இருக்கிறார்”

நீண்ட நிம்மதிப்பெருமூச்சொன்றை விட்ட லிங்கா, உடனேயே அவரைப் போய் சந்நதிப்பதற்காக வேலுவுடன் புறப்பட்டு விட்டான்.

***

எங்கும் வியாபிதத்திருந்த நீல வான்பரப்பு லிங்காவின் கண்களுக்கு சோபையைத் தரவில்லை. மாறாக அதில் பவனி வந்து கொண்டிருந்த சூரியனின் வெப்பக் கரங்கள் அவனை மட்டுல்ல. அவனுடன் பயணித்துக் கொண்டிருந்த அனைவரையுமே சுட்டெரித்துக் கொண்டிருந்தது. ஆம் கப்பலின் மேல்தளத்தில் இருந்தவாறே அவன் கீழ்ப்பரப்பை வெறித்துப் பார்த்துகும் கொண்டிருந்தான். ஆர்ப்பரிக்கும் கடலலைகள் போல் அவனது மனமும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. இலங்கை ஒரு சிறு தீவு. இந்தத் தீவிற்குள்ளேயே நாம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணிக்க நீண்ட தலைவழிப் பாதைகள் வியாபித்திருக்க, நாங்கள் கடல் வழியே பயணிக்க வேண்டி அவசியம் தான் என்ன... இந்த வினாவிற்கான விடையை அவனது மனம் தேடிக் கொண்டிருந்தது. சுட்டெரிக்கும் வெய்யில் அவனது மேனியைத் தீண்டவில்லை. மனதைத்தான் அரித்துக் கொண்டிருந்தது. தொடர்ந்து பகல் வேளையில் வெய்யிலில் காய்ந்து,

இரவுப் பொழுதினில் பனியில் நனைந்து பயணித்த அந்த ஜீவன்களுக்கு கண்களில் கரை தென்பட்டபோது கையில் பிடித்து வைத்திருந்த உயிர் மீண்டு வந்தது போல் ஒரு பிரமை தென்பட்டது.

துறைமுகம் சனத்திரளால் நிரம்பியிருந்தது. எங்கு பார்த்தாலும் குய்யோ றையோ என்ற கூக்குரலும் ஆரவாரமும் தான். அவர்கள் அனைவருமே தத்தமது சொந்த பந்தங்களை வரவேற்று வீட்டிற்கு அழைத்துப் போவதற்காக வந்தவர்கள்தான்.

கப்பல் தரை தட்டியதுமே அதில் பயணித்தவர்கள் பொறுமை இழந்தவர்களாய் முண்டியடித்து இறங்க முற்பட்டனர். “இத்தனை காலமும் பொறுத்திருந்தவர்களுக்கு ஏனிந்த அவசரம்” லிங்காவின் மனத்தில் எழுந்த கேள்வி இது.

படகுகள் வந்துத கரை ஒதுங்கத் தொடங்கின. லிங்கா பொறுத்திருந்து கடைசியாக வந்த படகிலிருந்து இறங்கினான்.

“மேனே லிங்கா!”

தன்னைக் கட்டியணைத்தவரைக் கண்ணுற்ற லிங்கா ஒரு தரம் உணர்ச்சிவசப்பட்டுப் பேனான். தன்னை மறந்தவனாய் “அப்பா!” என அவரை இறுக கட்டிக் கொண்டான். இருவரது கண்களிலும் கண்ணீர். அப்பாவின் மீது அவன் கொண்டிருந்த கோபம் இப்போது துகளாகி காற்றில் பறந்தது.

வரவேற்பதற்கு சில பிரமுகர்கள், நிறுவனங்கள், உறவுகள் என பலதரப்பட்டவர்களும் வந்திருபதை லிங்காவின் கண்கள் பார்வையைச் சுழற்றி அவதானித்துக் கொண்டது. வரவேற்க வந்திருந்த உறவினர்களில் பலர் தமது சொந்தங்களைச் சந்தித்து விட்ட மகிழ்ச்சியில் ஆரவாரிக்க, சிலரோ... அவர்கள் தேடிவந்த உறவுகள் வந்து சேராததால் சோர்வுடன் கண்களைக் கசக்கிக் கொண்டு திரும்மினார்கள். அவர்களைப் பார்த்து லிங்காவின் மனமும் வெதும்பியது.

அனைவருக்கும் பிஸ்கட்டும் தேநீரும் வழங்கப்பட்டது. உண்மை யிலேயே காய்ந்து, வறண்டு போயிருந்த குடலுக்கு அது இதமாக இருந்தது. அப்பா, லிங்காவை அழைத்துக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டார். சித்தப்பாவின் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் இருந்ததனால் அவர், தனது வீட்டிற்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

ஊருக்குப் போய் லோஞ்ச்சிலிருந்து இறங்கியது தான் தாமதம், பெரியண்ணனும் சின்னண்ணனும் ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டார்கள். பாசத்தின் மகிமையை முதன்முறையாக உணர்ந்து கொண்டான், லிங்கா. சின்னண்ணன் வண்டில் கொண்டு வந்திருந்தான். லிங்காவைக் கண்டதும் சிவலை நாம்பனும் கறுப்பனும் தங்களது தலையை அசைத்து அவனை வரவேற்க, லிங்கா அவற்றினது தலையையும் முதகையும் தடவிக் கொடுத்தான். எல்லோரும் வண்டிலில் தொற்றிக் கொள்ள சின்னண்ணன் மாடுகளை விரட்டத்

தொடங்கினான்.

“ணங்! ணங்!!” என்று ஒலி எழுப்பியவாறு மாடுகள் வீட்டை நோக்கி நகரத்தொடங்கின. அப்பா சொன்னார்.

“நாலைஞ்சு நாளாய் கொம்மா ஒரே அழுகை தான். சமையலுக்கு கூட வாறதில்ல. அண்ணி சமைச்சு வைச்சாலும் சாப்பிடுறதில்லை. கப்பல் வருதாம் என்று கேள்விப்பட்ட உடன என்னை இருக்க விடமாட்டனெண்டிட்டுது மனுஷி”

“விடுங்கோப்பா. அவ எப்பவும் இப்படித்தான். சும்மா... தொட்டதுக் கெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டு சாப்பிடாமல் கிடப்பா”

அப்பாவைச் சமாளிப்பதற்காகச் சொன்னாலும் மனது சங்கடப்படத் தான் செய்தது.

“பிள்ளை என்ன கோலத்தில வாறானோ... எதுக்கும் பாலத்தடிக்கு வண்டியைக் கட்டிக் கொண்டு போ. பிள்ளை அன்ன் தண்ணி இல்லாம காய்ஞ்சு போய் வருவான். இவ்வளவு தூரம் அவனால நடந்து வர முடியுமோ” என்று சொல்லி அம்மா என்னை விரட்டத் துவங்கீட்டா”

சின்னண்ணன் சொன்னான்.

வீடு வந்து சேர்ந்ததும் அம்மாவும் தங்கைமாருமாக எல்லோரும் வந்து லிங்காவைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர். பெரியணணி மட்டும் சற்று எட்டவாக நின்று கொண்டார். பிரிந்தவர்... அதுவும் ஆபத்திலிருந்து மீண்டு வந்தவருடன் கூடினால் பேசவும் வேண்டுமா... என்ன...

லிங்கா தனது சாகசங்களைப் பற்றி கதை கதையாக அளந்தான். எல்லோரும் திறந்த வாய் மூடாமல் கேட்டு ஆச்சரியத்தை வெளிப்படுத்ததிக் கொண்டிருந்தனர். அவர்கள் வீட்டு அடுப்பு ஓயாமல் எரிந்து கொண்டிருந்தது. அம்மாவும் அண்ணியும் சமையலில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களது செவிப்புலன் மட்டும் லிங்காவின் வாய் வார்த்தைகளை கிரகித்துக் கொண்டிருந்தது.

லிங்கா வந்து சேர்ந்த செய்தி ஊருக்குள் பரவிய போது, உறவினர் ஊரவர் என அனைவரும் அவர்களது வீட்டுக்கு வந்து குசலம் விசாரித்துப் போயினர். சில இளசுகள் மட்டும் மனக்கிலேசத்துடன் உலா வரத் தொங்கினர். எங்கே லிங்கண்ணன் தங்களை அழைத்து பாடங்கேட்கப் போகிறானோ என்ற நெஞ்சுப் பயம் தான் காரணம்.

***

காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. அது தன் போக்கில் நகர்ந்து கொண்டேயிருக்கு். இது இயற்கையின் நியதி. நாட்டிலும் நிலைமை ஓரளவு சீராகி மெதுமெதுவாக தமிழர், தென்பகுதியை நோக்கி நகர்ந்து வந்து நிலை கொள்ளத் தொடங்கினர். லிங்காவுக்கு அரைகுறையில் நின்றுவிட்ட தனது கல்வியைத் தொடர வேண்டிய அவசியமிருந்தது. தளம்பிக்கிடந்த தனது மனத்தை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு கொழும்புக்கு கிளம்பினான். ஒரு மருத்துவனாக வெளியேறி ஏழை மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற இலட்சியத்தை

நிறைவேற்ற வேண்டாமா... என்ன....

அதீத ஊக்கத்துடன் விட்ட கல்வியைத் தொடர முற்பட்டவனுக்கு காலம் கனிந்து வந்தது. ஆம் லிங்கா இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து மருத்துவக் கல்லூரியை விட்டு வெளியேறும் போது டாக்டர் லிங்காவாக உதவி மருத்துவர் என்ற பட்டத்தையும் சுமந்து வந்தார்.

காலத்தை வீணடிக்காது நாளிதழ்களில் வெளியாகும் பதவி வெற்றிடங் களைப் பார்த்து விண்ணப்பங்களை அனுப்பி வைத்தார். அவர் அனப்பிய முதலாவது விண்ணப்பமே ஏற்றுக் கொள்ளப்பட்டு நேரர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டார். அதிலும் அவருக்கு வெற்றியே காத்திருந்தது. உடனேயே பதவியேற்க அவர் எட்டியாந்தோட்டை வந்து சேர்ந்தார்.

மருத்துவசாலையை நிர்வகிப்பது மட்டுமல்ல. பிற களவேலைகளும் செய்ய வேண்டியிருந்தது. மலைப்பகுதிகளில் ஏறி இறங்குவது முதலில் சிரமமா யிருந்தாலும் நாளடைவில் கால்கள் பழக்கப்பட்டு விட்டன. இருந்த போதிலும் தூர இடங்களுக்கு உந்துரளியில் போய்வர வேண்டியிருந்தது. அதற்காக நிர்வாகம் அவருக்கு உந்துரளி ஒன்றையும் கொடுத்திருந்தது. ஆனால் அவருக்கதும் தான் உந்துரளியை இயக்கத் தெரியாதே. ஆயினும் உந்துரளியைச் செலுத்திப் பழகுவது மடட்டுமல்ல. அதை ஓட்டுவதற்குரிய அனுமதிப்பத்திரமும் எடுக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது. அவர் சளைக்கவில்லை. மனத் திடத்தை ஏற்படுத்திக் கொண்டு மலைப்பாதைகளில் உந்துரளியை செலுத்திப் பழகத் தொடங்கினார். சில சமயங்களில் பள்ளமான சரிவுகளில் விழுந்தெழவும் செய்தார். முழங்கால், கைகளில் உரசல் காயங்களும் ஏற்படுவதுண்டு. இருந்தும் மனம் சளைக்கால் பயிற்சியில் ஈடுபட்டு வெகு விரைவிலேயே சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார்.

அவர் தங்குவதற்கு சகல வசதிகளுடன் கூடிய பங்களா தரப்பட்டது. ஆயினும் அவருக்கு சமையல் தெரியா. எனவே வெளியில் சாப்பாட்டுக்க ஒழுங்கு செய்து கொண்டார். இருந்தாலும் அந்த வாழ்க்கைக்கு தன்னை பழக்கப்படுத்திக் கொள்ள பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டிருந்தது. திடீரென அவரது மூளையில் மின்னல் பளிச்சிட்டது போல் ஒரு யோசனை தோன்றியது. அவருடைய சித்தப்பாவின் மகன் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டு தொழில் ஒன்றைத் தேடுவதற்காகக் காத்திருக்கிறான். அவனை இங்கு அழைத்து என்னுடன் வைத்துக் கொண்டால் என்ன... எனக்கும் அவன் துணையாயிருப்பான். அவனுக்கும் ஒரு தொழிலைத்தேடி கொடுப்பதற்குமக் அது ஏதுவாக இருக்கும்.

எண்ணத்தை உடனடியாக செயற்படுத்த முனைந்தார். அஞ்சல் அட்டை ஒன்று ஊருக்குப் பறந்தது. மூன்றாவது நாளே தம்பி வந்து எட்டியாந்தோட்டையில் இறங்க, அவர் தனது மோட்டார் சைக்கிளில் போய் ஏற்றிக் கொண்டு தனது இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்.

“அண்ணை ஏத்தத்தில போக பயமாய்க்கிடக்குது” சொல்லிக் கொண்டே அவரது தோள்களை இறுகப் பற்றிக் கொண்டான், தம்பி. அவன் வந்தபின் வீடுகளை கட்டி இருப்தாக அவர் உணர்ந்தார். அதே சமயம் தம்பி குலத்திற்கு ஓரளவாவது சமைக்கத் தெரிந்திருந்தது. இருவருமாகச் சேர்ந்து சமைத்துச் சாப்பிடலாம் என முடிவெடுத்தனர்.

லிங்கா வெளியில் போய்வரும் போது நானாவித பொருட்களையும் வாங்கி வந்து போடுவார். தம்பி குலம் அவற்றை சமைத்துப் பார்க்க ஆர்வமுடன் ஈடுபடுவார். தினமும் காலையில் உப்புமா தான் ஆகாரம். லிங்கா ரவையை ஏழு இறாத்தல் குட்டியாக வாங்கி வந்து போட, தம்பி அதில் இலகுவாக உப்புமா தாயர் பண்ணி விடுவான். இருவரும் வயிற்றை நிரப்பிக் கொள்வார்கள்.

லிங்கா, தன்னுடைய வாழ்வு சுமுகமாகப் போகிறதே என நினைத்து சும்மா இருந்து விடவில்லை. தம்பியை ஒரு நல்ல வேலையில் அமர்த்தி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டுக் கொண்டிருந்தார். டவுணுக்குப் போகும் போது தபாற்கந்தோரில் போய் வர்த்தமானியை எடுத்துப் பார்பார். ஏதாவது வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கிறதா என ஆராய்வார். அதே சயயம் போட்டிப் பரீட்சைகளுக்கான பயிற்சிப்புத்தகங்கள் வாங்கி வந்து அவற்றைப் படிக்குமாறு தம்பியைப் பணிப்பார்.

“தம்பி! சும்மா இந்த கல்கி குமுதங்களை மட்டும் வாசிச்சு பொழுதைப் போக்கமால், இந்தப் பயிற்சிப் புத்தகங்களையும் படி. ஏதும் போட்டிப் பரீட்சைகள் நடந்தால் அதுக்கு உதவும்” என்று அறிவுறுத்துவார். இப்படியாக பொதுகள் கழிந்து கொண்டிருந்தன.

லிங்காவுக்கு காலையில் களவேலை. மாலையில் நோயாளர்களைப் பார்வையிடுவது என இருவிதமான பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தது. காலை யில் தொழிலாளர்கள் குடியிருக்கும் லயன்களுக்குச் சென்று அவையெல்லாம் சுத்தமாக இருக்கிறதா என்று பார்வையிட வேண்டும். போகும் வழியில் தொழிலாளர் றப்பர் மரங்களில் காய்ந்து கிடக்கும் ஒட்டுப்பாலை நீக்கி விட்டு, புதிதாகச் சுரண்டி விட, அதில் ஊறி வரும் பால் வடிந்து சிரட்டைகளில் நிரம்புவதைப் பார்த்து ரசித்தவாறே அவர் நடப்பார். சில சயங்களில் அவர்களிடம் பேச்சுக் கொடுப்பார்.

“என்ன! பால் நல்லாய் வடியுதா?”

“ஆமாங்கய்யா. நீங்க மேட்டு லயயத்துக்குத்தானே போறீஞ்க”

“ஆமா. அதையேன் கேக்கிறாய்?”

“அங்கிட்டுத்தானுங்க. வாசக்கூட்டி லயத்துக்கு முன்னாடி இருக்கிற காணை கூட்டிறதில்லைங்க. நாம என்ன சொல்லுறது. நீங்களே போய்ப் பாருங்க”

காதில் கேட்டது பாதி கேட்காதது பாதியாயக அவர் போய்க் கொண்டேயிருப்பார். அங்கே வாசல் கூட்டுபவன் கண்ணில் தென்பட்டால் காணும். அவனைப் பிடித்து வேலை வாங்கி விடுவார். அதனி பிறகு அவனும்

தனது வேலையில் கறாராய் இருந்து கொள்ளுவான்.

லயன்களில் சில சிறுவர்கள் பாடசாலைக்குப் போக விரும்பாமல் கள்ளமடித்துக் கொண்டு நின்று விளையாடுவார்கள். அவர்களில் யாராவது ஒருவர் அவரது கண்ணில் பட்டுவிட்டால் அவ்வளவு தான்.

“ஏய்! ஏன் பள்ளிக்கூடம் போகயில்லை?”

கர்ஜிக்கும் குரல் கேட்டதும் பையனோ நடுநடுங்கிப் போவான். தளதளக்கும் குரலில் சொல்லுவான்.

“எங்க ஆத்தாதான் வேலைக்காட்டுக்கு தேத்தண்ணி கொண்டாரச் சொல்லிச்சுது”

“எட... நல்லாயிருக்குது உன்ரை கதை. நாளையில இருந்து நீ பள்ளிக்கூடத்துக்குப் போயிட வேணும். இனிமேல்பட்டு உன்னை நான் இஞ்சை லயத்தில் பாத்தனெண்டா தெரியும்”

சொல்லி விட்டு அவர் போய்விடுவார். அடுத்த நாள் பையன் பாடசாலையில் இருப்பான். அவரையறியாமலே அவரது மனம் தன்னை அந்தப் பையனோடு ஒப்பிட்டுக் கொள்ளும்.

காலச் சூழற்சியில் தம்பி குலம் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையெழுதி, அதில் சித்தியடைந்து தொழில் வாய்ப்பும் கிடைக்கப் பெற்று கொழும்பிற்குப் போய்விட்டான். லிங்காவுக்கு மீண்டும் தனிமைநிலை ஏற்பட்டது. ஊரிலிருந்த மற்றுமொரு தம்பியை அழைத்து தன்னுடன் வைத்துக் கொண்டார்.

***

லிங்காவுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் அறிமுக மானார். பொழுது போவதற்காக சில வேளைகளில் லிங்கா அவரது வீட்டிற்குப் போவார். அங்கு அவரை நன்கு உபசரிப்பார்கள். ஒருநாள் அவர் அவர்களது வீட்டிற்குப் போனபோது நண்பர் தனது மகள் ஊரிலிருந்து விடுமுறைக்கு வந்திருப்பதாகச் சொன்னார். சாதாரணமாக அதை எடுத்துக் கொண்ட லிங்காவும் அவளை அழைத்து விசாரித்தார். அது தான் லிங்கா அமுதவாணியின் முதற் சந்திப்பு. அது தனது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையை ஏற்றபடுத்தும் என அவர் எள்ளளவும் நினைத்திருக்கவில்லை.

“எஸ்.எஸ்.ஸிக்கு என்ன பாட் எடுத்த நீங்கள்?”

லிங்காவின் முதற் கேள்வி இதுதான்.

“சயன்ஸ்”

அமுதவாணி அடக்கமாக பதிலளித்தாள்.

“எக்ஸாம் எல்லாம் எப்பிடி?”

“ஓரளவு செய்திருக்கிறன்”

லிங்காவின் மனத்திலோ அமுதவாணியின் மனத்திலோ எதுவித சலனமும் இருக்கவில்லை. சகோதரர்களுடன் விளையாடி பொழுதைப் போக்கினாள்.

லிங்கா வேலைக்குப் போகும் போதும் திரும்பி வரும்போதும் அழுதவாணி வீட்டு வாசலைக் கடந்துதான் போய் வருவார். தற்சமய் அவளைக் கண்டால் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டுப் போவார். சில வேளை வீட்டிற்கு வந்தால் அம்மா கொடுத்துவிடும் சிற்றுண்டி தேநீரை அவருக்கு பரிமாறுவாள். புன்சிரிப்புடன் அவர் அவள் பரிமாறுவதை பெற்றுக் கொள்ளுவார்.

எதிர்பாராத விதாக திடீரென்று ஒருநாள் அமுதவாணி லிங்காவின் கனவில் வந்தாள் திடுக்கிட்டு விழித்த லிங்காவும் “ஏன் எனக்கு இப்பிடியெல்லாம் கனவு வருகுது“ என அலுத்துக் கொண்டார். ஆனால்… மறுநாளும் அதே கனவு வந்தபோது அவரது மனத்தில் சிறிது தடுமாற்றம் தோன்றத்தான் செய்தது. அது பூர்வஜன்ம பந்தத்தின் விளைவாகவும் இருந்திருக்கலாம். ஏனோ அவருக்கு அழுதவாணியை ஒருமுறை சந்திக்க வேண்டும் போல் இருந்தது. அன்று மாலை அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தார். அங்கு அவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகு முன்னரே கல்லூரியில் உயர்தர வகுப்பைத் தொடங்கி விட்டார்களாம். எனவே தான் அவளை அழைத்துப்போய் விடுதியியல் சேர்த்துவிட்டு வந்ததாக நண்பர் கூறினார்.

“எல்லாம் நன்மைக்கே“ எனக்கருதிய லிங்கா தனது கடமையில் கவனம் செலுத்தினார். அன்று ஞாயிற்றுக்கிழமை. ஓய்வு நாளாதலால் அன்றைய தினசரியில் வயித்திருந்தார் லிங்கா. திடீரென ஒரு விளம்பரம் அவரது கண்ணில் தட்டியது. அழ்ந்து படித்துப் பார்த்தார். அது தனக்குப் பொருத்தமான ஒரு வேலை யாகப்பட்டது. தான் பார்க்கும் இதே வேலை ஆனால் சம்பளமும் சலுகைகளும் அதிகமாக இருந்தது. உடனேயே ஒரு விண்ணப்பத்தை எழுதினார். தனக்கு அனுபவம் போதாதபடியால் அந்த வேலை தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கவில்லை. இருந்தாலும் முயற்சித்துப்பார் என மனம் தூண்டியது. எழுதிய விண்ணப்பத்தை தபாலில் சேர்த்து விட்டார்.

என்ன அதிசயம். அடுத்த வாரமே அவரை நேர்கத் தேர்வுக்கு குறித்த ஆவணங்களுடன் வருமாறு பதில் வந்திருந்தது. அவரது மன் ஒரு தரம் துள்ளிக்குதித்தது. எப்படியாவது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஓர்மமே மேலோங்கியிருந்தது. வேலைக்கு ஒரு நாள் லீவு போட்டுவிட்டு றங்கல என்ற இடத்தை நோக்கி புறப்பட்டார்.

அது ஒரு மலைகள் நிறைந்த பிரதேசம். எங்கு திரும்பினாலும் பச்சைப் பசேலென்று தேயிலைச் செடிகளால் சூழப்பட்ட மலைகள். அது பார்பதற்கு கண்கொள்ளாக் காட்சிதான். ஆனால்… வெள்ளை வெளேரென பனிப்புகாரினால் மூடப்பட்டிருக்கும் கூற்றாடல் வெடவெடக்கும் குளிரைத் தரக்கூடியது. லிங்காவுக்கு பல் கிட்டியது. இருந்த போதிலும் அவர்கள் நேர்முகத்தேர்வில் கேட்ட கேள்விகளுக்கு பட்டென பதிலளித்தார். அவர்கள் கடித மூலம் அறிவிப்பதாகச் சொன்னதும் லிங்கா குளிரிலிருந்து தப்பினோம் பிழைத்தோம் என்று புறப்பட்டார்.

லிங்காவுக்கு எல்லாமே பிடித்திருந்தது. ஆனால்... கடும் குளிரை எப்படிச் சமாளிப்பது என்ற கேள்வி தான் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. வேலை கிடைத்தால்த்தானே அதைப் பற்றி யோசிக்க வேண்டும் என தனக்குத்தானே சொல்லி சமாளித்துக் கொண்டார்.

அந்த சமயத்தில்த்தான் அவருடன் கூட இருந்த தம்பிக்கு அவனுடைய தராதரத்துக்கு ஏற்றாற்போல் ஒரு வேலை கிடைத்தது. அவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து அவனை அனுப்பி வைத்தவருக்கு மீண்டும் தனிமை ஏற்பட்டபோது ஒரு கிழமை லீவை எடுத்துக் கொண்டு அவர் ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்.

சொந்த ஊரில் வீசிய காற்று அவரது சுவாசத்துக்கு இதமாக இருந்தது. மணந்தரையில் கால்கள் புதையப் புதைய நடப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியே அலாதியானது தான். வீட்டில் அம்மா அவனை கட்டியணைத்து முத்தமிட்டு வரவேற் றாள். பெரியண்ணி பிரசவத்துக்காக தாய்வீடு போயிருந்தாள். தங்கை மார் இருவரும் அண்ணனைச்சுற்றி வந்தனர். அண்ணனும் அவர்களுக்கென வாங்கி வந்த பரிசுப் பொருட்களையும் இனிப்பு வகைகளையும் எடுத்துக் கொடுத்த போது அவர்களது கண்கள் ஆச்சரியத்தால் அகல விரித்தன.

கோயிலடியிலிருந்து வந்த அப்பா மகன் வந்திருப்பதை அறிந்ததும் அடுப்படியிலிருந்த மனைவியை எட்டிப் பார்த்து “பிள்ளை பசி ஆறிட்டானே ஏதும் கறிபுளி அம்பிட்டதா?” என வினவினார்.

“அதெல்லாம் வழமைபோல சின்னவன் காலையிலேயே வாங்கித் தந்திட்டுத் தான் போகவன் “சின்னண்ணன் தான் அம்மா மீது அதிக பிரியம் காட்டுவான். அவனுக்கு சொந்தத்திலேயே திருமணம் நிச்சயமாகியிருந்தது. ஊருக்குள் கட்டிடங்களை ஒப்பந்த ரீதியில் பொறுப்பெடுத்து கட்டுவிப்பது அவனது வேலை. அதற்கிடையில் கிணற்றடியில் நின்ற வந்த லிங்கா, அப்பாவை குசலம் விசாரிக்க முற்பட்டார்.

“அப்பா! எங்கை இந்த கொதிக்கும் வெய்யிலுக்கை போட்டு வாறியள். இப்பவும் இரவில மட்டு இழுக்கிறதோ? நான் தந்த குளுசையளை ஒழுங்காப் போடுறியளோ?”

“ஓடா மேனே. நீ தந்த குளசைக்கு இப்ப முட்டு இழுக்கிறது கொஞ்சம் குறைஞ்சிருக்கு. அந்த அம்மாளாச்சி என்னை லேசில கைவிடமாட்டா.”

கைகளை கூப்பிக் கொண்டார், அவர்.

“அம்மாவுக்கு இப்ப எப்பிடி? முட்டு குறைஞ்சிருக்குதோ?”

“அதையேன் மேனே கேக்கிறாய். அவ இந்த வெக்கைக்குள்ள அடுப்படியில இருந்து சமைச்சுப்போட்டு வியர்த்து விறுவிறுத்துத்தான் வெளியில வருவா. பேந்தென்ன... ஒரே முட்டும் மூச்சும் தான்.”

“நான் குடுத்த சத்துக் குளசையளை அவ போடுறாவோ... அரைவாசியும் அவவுக்கு பெலயீனம் தான் காரணம். தங்கச்சியவை அவவுக்கு

உதவி செய்தாலென்ன.”

இப்போது தங்கைமார் பக்கம் திரும்பியது கவனம்.

“நான் காலையில சட்டி பானை எல்லாம் கழுவி வைச்சிட்டுத்தான் பள்ளிக்குப் போறநான்” அவள் ஏ.எல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள்.

“அண்ணன்! நான் தான் விறகெல்லாம் கொண்டு வந்து அடுப்படியில போடுறநான்”

சிணுங்கினாள் சின்னத் தங்கை.

லிங்காவுக்கு சிரிப்புத்தான் வந்தது. எப்பொழுதும் ஏதாவதொரு புத்தகத்தையோ அல்லது கையில் கிடைக்கும் பத்திரிகைத் தாளையோ எடுத்து வாசித்துக் கொண்டிருப்பாள், சின்னத் தங்கை. அவளது அந்தப் பழக்கம் லிங்காவுக்கு மிகவும் பிடிக்கும்.

அம்மா எல்லோரையும் சாப்பிடவருமாறு அழைக்கவும் அனைவரும் கையலம்பிக் கொண்டு அடுப்படிக்குள் நுழைந்தனர்.

***

லீவு முடிந்து வேலைக்குத் திரும்பிய லிங்கா, தனியா வரவில்லை. தனது உறவுக்காரப்பையனான ரவியையும் தன்னுடன் அழைத்து வந்திருந்தார். ரவியும் தனது படிப்பை முடித்துக் கொண்டு வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவன் தான் ரவி தன்னால் இயன்றதைச் சமைத்து வைத்துவிட்டு, வீட்டிலிருக்கும் பத்திரிகை, சஞ்சிகைகளை வாசிதத்து பொழுதைப் போக்குவான்.

அன்றை தினம் லிங்காவுக்கு சம்பளம் வந்திருந்தது. சம்பள் கிடைத்ததுமே வீட்டிற்கு பணம் அனுப்பி வைப்பது அவரது வழமை. எனவே கள வேலையை முடித்துக் கொண்டு அவர் தனது மோட்டார் சைக்கிளில் எட்டியாந் தோட்டைக்கு புறப்பட்டு விட்டார். தபாற் கந்தோருக்குப் போனவர் வீட்டிற்கு அனுப்ப மணி ஓடர் எடுத்துக் கொண்டார். அத்துடன் அவரது நெருங்கிய உறவினர்களான இரு பிள்ளைகள் தாய் தந்தையை இழந்தவர்கள். அவர்களுக்கும் அவர் மாதா மாதம் கல்வித்தேவைக்காக ஒரு சிறு தொகையை அனுப்பி வைப்பார். அவர்களுக்கும் மணி ஓடரை எடுத்து கடிதங்களுடன் இணைத்து அனுப்பி விட்டுத் திரும்பிய போது தபாலதிபர் அவரை அழைத்தார்.

“நீங்கள் தானே மிஸ்டர் லிங்கா?”

ஆமெனப் பதிலளித்தவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

“உங்களுக்கு ஒரு பதிவுத்தபால் வந்திருக்கிறது. கையெழுத்தை வைத்து விட்டு எடுத்துக் கொண்டு போகலாம்.”

லிங்கா கையெழுத்தை வைத்துவிட்டு கவரை வாங்கிப் பிரித்தால்ல… அது நியமனக் கடிதம் லிங்காவுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. குழம்பிய மனத்துடன் வீடு வந்து சேர்ந்தார். தம்பி ரவியிடம் விடயத்தைக் கூறினார். ரவிக்கும் புது இடத்தைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது.

அதுக்கென்ன அண்ணை. நாங்கள் றங்கலைக்குப் போவம். நீங்கள்

பதவி விலகிற கடிதத்தை உடனேயே குடுத்து விடுங்கோ”

இத்தனை காலமும் தொழில் புரிந்த இடத்தை... பழகிய மனிதர்களை, தொழில் வாய்ப்பு தந்த நர்வாகத்தை விட்டு விலகுவதென்றால்... மனதுக்குள் கங்கடமாயிருந்தது. ஆற அமர்ந்து ஆறுதலாகச் சிந்தித்தார். இப்படியான சின்ன விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சிவசப்பட்டால், வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. மனம் துணிவு கொண்டது.

ஒருவாறு விலகல் கடிதத்தைக் கொடுத்து விட்டு அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார். அண்ணனும் தம்பியும் றங்கலைக்கு வந்து சேர்ந்தனர். வரும் போது கண்டியில் தங்களுக்குத் தேவையான குளிருக்குப் போடு அங்கிகள், போர்வைகள் என பலவற்றையும் வாங்கிக் கொண்டதனால் குளிர் அவர்களை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. சூழலுக் கேற்றவாறு வாழப்பழகிக் கொண்டனர்.

அங்கு வந்து பணியாற்றத் தொடங்கியது லிங்கா ஒரு இளம் கதாநாயகனாகவே மாறிவிட்டார். இதற்கு முன் அவர் வேறிடத்தில் பணியாற்றி அனுபவடைந்து விட்டதால் வருக்கு எந்தவித தயக்கமும் இல்லால் தன் போக்கிற்கு இயங்க முடிந்தது. இளமைத் துடிப்பும் சுறுசுறுப்பும் நிறைந்த இளைஞனை புதிய இடத்தில் பணியாற்றும் அனைவருக்கும் பிடித்துப் போயிற்று.

அவர் தங்குவதற்கு கொடுத்திருந்த பங்களாவுடன் மருத்துவசாலையும் அணைந்திருந்தது. எனவே அவருக்கு வேலை சுலபமாயிற்று. காலையில் எட்டு மணியிலிருந்து பத்து மணி வரையிலும் மாலை இரண்டு மணியிலிருந்து நான்கு மணி வரையிலும் வைத்தியாசலை திறந்திருக்கும். அதன் பின் அவர் விளையாட்டுத்திடலுக்குப் போய் வயது வேறுபாடின்றி பணியாளர்கள் அனைவரையும் இழுந்து வந்து விளையாட வைத்து விடுவார். வேடிக்கை பார்ப்பார். ஆரம்பத்தில் விளையாடுவதற்கு பிகு பண்ணிய பலரும் பின்நாளில் தாங்களாகவே முன் வந்து விளையாடத் தொடங்கினர்.

“றங்கல ஸ்போர்ட்ஸ் கிளப்” என்ற பெயரில் லிங்கா ஒரு விளையாட்டுக் கழகத்தை உருவாக்கி வைத்தார். அதில் பல்வேறு வயதினரும் பலதரப்பட்ட பணியாளர்களுஞ் அங்கம் வகித்தனர். அதில் இலங்கை கிரிக்கட் அணியில் விளையாடிக் கொண்டிருந்த ஒருவரும் அடங்குவர். இப்படி இதமாக பொழுதுகள் கழிந்து கொண்டிருந்த போதிலும் லிங்காவுக்கு அமுதவாணியின் நினைவும் இடையிடையே வந்து போகும்.

நிறை நோயாளிகள் அவரைத் தேடி வந்தனர். அவர்களுக்கு வைத்தியம் செய்வதில் அவருக்கு ஒரு பின்னடைவு இருந்தது. காரணம் அவருக்கு தகுந்த ஒரு மருந்தாளர் அமையாததுதான். தனது குறையை அவர் மேலிடத்துக்கு எடுத் துரைத்தார். அவர்களும் அவரையே ஒரு பொருத்தமானவரைத் தேர்ந்தெடுக்கு மாறு கூறி விட்டனர். லிங்காவின் மனத்தில் மின்னலென ஒரு பொறி தோன்றி மறைந்தது. சில காலங்களுக்கு முன் தான் சந்தித்த ஒரு பெரும்பான்மை இனத்து

இளைஞனைப் பற்றிய சிந்தனை வந்தது. நல்ல சுறுசுறுப்பும் புத்திக் கூர்மையுமுள்ள அவன் தொழில் வாய்ப்பின்றி அலைவதை அவர் கண்கூடாகக் கண்டிருந்தார். அச்சமயம் அவனுக்கு உதவவேண்டும் என மனம் ஏவிய போதிலும் சந்தர்ப்பம் அதற்கு சாதகமாக அமையவில்லை. தனக்குத் தெரிந்த ஒருவர் மூலம் அணுகி அவனை அழைத்து வந்து வேலைக்கு அமர்த்தினார். புத்தி சாதுரியமான அவனும் அக்கறையுடன் வேலையைக் கற்றுக் கொண்டு அவருக்கு உதவியாக இருந்து செயற்பட்டான்.

அவனது செயற்பாடுகளைக் கவனித்த லிங்காவுக்கு அவவை எப்படியும் ஒரு மருந்தாளனாக்கி மருத்துவசேவைக்குள் உள்வாங்க வைக்க வேண்டுமென்ற எண்ணம் துளிர்விட்டது. கற்பதற்கு இலகுவான ஆறு பாடங்களைப் போட்டு வெளிவாரியாக ஒ.எல். பரீட்சைக்ககு விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு அவனைப் பணித்தார். பாடங்களுக்கு ஏற்ற பயிற்சிப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து அவனைப் படிக்க வைத்தார். அவனும் சிரத்தையுடன் கற்று பரீட்சை எழுதினான். கணிதத்தைத் தவிர மற்றைய பாடங்களில் அவனால் சித்தியீட்ட முடிந்தது. அவர் தானே முன்நின்று கணிதத்தையும் பயிற்றுவித்து சித்தியெய்த வைத்தார். அதன் பின் அவன் மருந்தாளர் பரீட்சையும் எழுதி அதிலும் வெற்றி கண்டு மருந்தாளராக தொழில் புரிந்து இன்று ஓய்வும் பெற்று விட்டான். அவனது மனதில் லிங்கா இன்றும் ஒரு கண்கண்ட தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். நினைத்ததைச் செய்து முடிப்பவர்தான் லிங்கா.

லிங்காவைக் கண்டால் தொழிலாளர்கள் கையெடுத்துக் கும்பிடு வார்கள். அவருக்கு அது பிடிக்காது. “மாரியம்மன் கோயிலில சாமி இருக்குத். அதைப் போய்க் கும்பிடு” என்று சொல்லிவிட்டு அப்பால் நகர்வார். அவர்களோ அவரை மனமார வாழ்த்துவார்கள்.

“நம்பி டக்டரய்யா வந்தப்புறம் தான் புள்ள குட்டிங்கள்ளாம் நோய் நொடியில்லாம இருக்குதுங்க. தவறாம பூச்சிமருந்து குடுக்கிறாரு. மாசாமாசம் சத்து மாவெல்லாம் குடுக்கிறாரு. நம்ப சாமி புண்ணியத்துல ஐயா மகராசனா இருக்கோணும்”

அவரது முகத்தில் ஒரு புன்சிரிப்பு தோன்றி மறையும்.

தம்பி ரவிக்கும் கொழும்பில் ஒரு தொழில் வாய்ப்பு அமைந்து விடவே அவனும் அவரை விட்டுவிலக வேண்டியதாயிற்று. அச்சமயம் மருந்தாளராயிருந்த சுகு அவரது உணவுத் தேவைகளைக் கவனித்துக் கொண்டான். அவன் ஒரு கைதேர்ந்த சமையல்காரனும் கூட. அவன் வாய்க்கு ருசியாக சமைத்துப் போட லிங்காவும் மனமகிழ்ந்தார். வாரந்தோறும் அவர் வாங்கும் சஞ்சிகைகளான குமுதம், கல்கி கற்கண்டு என்பவற்றை முதலில் வாசித்து முடிப்பது சுகுதான். வேற்று மொழியினனான அவன் கதைப்பது சுத்த தமிழ். லிங்கா, அவனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டதற்கு இதுவே காரணம்.

திருமண வயதை நெருங்கிக் கொண்டிருந்த லிங்காவுக்கு சொந்தத்திலேயே பெண் பார்க்க பெற்றோர் முற்பட்டனர். லிங்காவோ பிடிவாதமாய் நின்று அமுதவாணியை மனைவியாக்கிக் கொண்டார். திருமணம் முடிந்து வாணி கணவன் வீட்டிற்கு வந்தவள், அதிசயப்பட்டாள். ஒரு வீட்டிற்குத் தேவையான அத்தனை தளபாடங்கள், சமையலறைக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தையும் லிங்கா வாங்கி வைத்திருந்தார். அவளுடைய பாவனைக்காக ஒரு தையல் மெசினையும் அவர் வாங்கி வைத்திருந்தது அவளுக்கு பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கணவனுடைய சமயோசித செயல்களை எண்ணி பெருமைப் படவும் செய்தாள். இல்லற வாழ்க்கை இனிதே நகரத் தொடங்கியது.

***

ஆரம்பத்தில் வாணி வெகுளியாகவே நடந்து கொண்டாள். எதற்கெடுத்தாலும் பயம். மறுநாட் காலை உணவை சுதவே தயாரித்திருந்தான். காலை உணவு முடிந்ததும் லிங்காவும், சுகுவும் கள வேலைகளுக்காக புறப்பட்டுப் போய் விட்டனர். வாணி தனித்து விடப்பட்டவள், என்ன செய்வதென்றறியாது சமையலறையை ஒரு சுற்று நோட்டம் விட்டாள். பின்னர் பின்புறத்துக் கதவைத்திறந்து பார்த்தபோது அங்கே மரக்கறித் தோட்டம் இருப்பதை அவதானித்தாள். பாத்திகளில் நிரை நிரையாக போஞ்சிக் கொடிகள். அவற்றில் கொத்துக் கொத்தாக காய்கள் தூங்கி வாணியின் கண்களைப் பறித்தன. அதைக் கடந்து சிறிது தூரத்தில் பச்சைப் பசேலென்ற இலைகளுடன் கறட் பாத்திகள்ள, அருகில் ஒரு நெடிய புளிச்சல் கத்தரி மரம் நிறையக் காய்களுடன் இலை பரப்பி நின்றது. வாணி மறுபுறம் திரும்பிப்பார்த்தாள். கோழிக் கூட்டிற்குள் ஒரு பத்துப் பதினைந்து கோழிகள் நின்றன. ஆச்சரியத் தினால் வாணி திறந்த வாய் மூட முடியாதவளாய் மலைத்து நின்றாள்.

“இத்தனை பொறுப்புமிக்க, ஒரு மனிதரை கணவராய் அடைய நான் நிறையவே கொடுத்து வைத்து இப்பிறவி எடுத்திருக்கிறேன்“

வாணியின் மனம் பெருிதம் கொண்டது.

லிங்கா ஒரு துரும்பைக் கூட கையால் எடுத்துப் போடமாட்டார். எல்லா் வேலையாட்களின் கைவளம் தான் என்பது வாணிக்குத் தெரிந்திருக்கவில்லை.

வாணி கைக்குள் கொள்ளக்கூடிய அளவு போஞ்சிக்காய்களை பறித்துக் கொண்டு சமையல் அறைக்கு வந்தாள். அங்கு ஆராய்நது பார்த்ததில் வேறு சில மரக்கறிகள் கூடைக்குள் கிடந்தன. வாணி மூன்று கறிகளுடன் சோறும் சமைத்து வைத்துவிட்டு வெளியே வந்தாள். ஹாலுக்குள் புத்தக அடுக்கினுள் கிடந்த குமுதம் ஒன்றைை எடுத்து பக்கங்களை புரட்டத் தொடங்கினாள்.

மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனவள் கராஜ் கதவைத் திறந்து விட லிங்கா மோட்டார் சைக்கிளை உள்ளே விட்டு கதவைப் பூட்டி விட்டு வந்தார். வாணியைப் பார்த்து வாஞ்சையுடன் கேட்டார்.

“எப்பிடி வீடு பிடிச்சிருகக்கா?”

“ம்!...”

“இம் மென்றெல்லாம் பதில் சொன்னால் எனக்குப் பிடிக்காது. வாயைத்திறந்து பதில் சொல்ல வேண்டும். தெரியுதா?”

வாணி வாய் திறந்தாள்.

“எல்லாமே நல்லாயிருக்குது”

லிங்கா உடைமாற்றி கால்கம் கழுவிவிட்டு வந்தார். வாணி மேசைக்கு சாப்பாடு எடுத்து வைத்தாள். இருவரும் அமர்ந்து சாப்பிட்டனர். வாணிக்கு மனதில் குறுகுறு என்றிருந்தது. ஒருவாறு வாய் திறந்து கேட்டே விட்டாள்.

“சமையல் எப்படியிருந்தது?”

லிங்காா உற்சாகமாகப் பதிலளித்தார்.

“சுப்பர்! மார்வலஸ்! இவ்வளவு றேஸ்ற்றாய் சமைப்பீர் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. ஹாஸ்டலில இருந்த நீர் எப்படி சமைக்கப் பழகினீர்?”

“அதுவா... அது வந்து நான் வீட்டில நிற்கிற நேரங்களில அம்மாவோட சேர்ந்து சமைப்பன்.”

“வாணி! நான் இன்னொன்று சொல்ல மறந்திட்டன். சுகு தன்னுடைய குவார்ட்டர்ஸ்க்கு போய் விட்டான். இனி நீரும் நானும் மட்டும் தான் இந்தப் பெரிய வீட்டில இருக்க போறம்”

உற்சாகத்துடன் சொன்னார், லிங்கா. புது இடத்தில் வாணியின் மனம் எதிலும் ஒட்ட மறுத்தது. தன்னை ஒருவாறு நிலைப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள்.

அன்று மாலை அவர்களைச் சந்திக்க லிங்காவின் நண்பர்கள் குடும்பத்துடன் வந்திருந்தனர். வாணி அவர்களுக்கு தங்களது திருமண வைபவத் திற்கு செய்த பலகாரங்களையும் தேநீரையும் கொடுத்து உபசரித்தாள். லிங்கா வுக்கு மனைவியின் இச் செய்கை பிடித்திருந்தது. அதற்காக அவர் அவனை வாய் வார்த்தைகளால் பாராட்டும் வழக்கம் கிடையாது ஓரக் கண்ணால் ஒரு பார்வையை வீசுவார். அவருடைய சுபாவம் அப்படி. வாணிக்கு இதைப் புரிந்து கொள்ள சில காலம் பிடித்தது.

மற்றுமொரு நண்பரின் மனைவி வீடெல்லாம் சுற்றிப் பார்த்தவள், அங்கிருந்த தையல் மெசினைக் கண்டு விட்டாள்.

“டொக்டர்! உங்கட மிஸிஸக்கு தைக்கத் தெரியுமோ?”

பதிலேதும் சொல்லாமல் லிங்காக வாணியைத் திரும்பிப் பார்த்தார்.

“ஓரளவுக்குத் தைப்பன்”

“அப்படியென்றால்... நான் அடுத்தமுறை வரும்போது எங்கட குட்டியைகூட்டிக்கொண்டு வாறன். அவவுக்கு இரண்டு சட்டைகள் தைச்சுதத் தரவேணும். என்ன!...”

வாணி தலையை ஆட்டினாள்.

மறு நாளே அந்தப் பெண் தனது மகள் சூட்டியுடனும் இரண்டு சட்டைத்துணிகளுடனும் வாணியைத் தேடி வந்து விட்டாள். கலகலப்பான சுபாவமுடை சூட்டி வாணியுடன் ஒட்டிக் கொண்டாள். வாணிக்கும் அவளுடன் பழகுவது உற்சாகத்தைத் தந்தது. காலையில் சமையல், மாலையில் தையல் என அவளுக்கு நேரம் போவதே தெரவதில்லை. இரண்டு சட்டைகளையும் அழகாக தைத்துக் கொடுத்தாள். அதைப் போட்டுப் பார்த்த சூட்டியின் முகம் மலர, அதைப் பார்த்து வாணியின் மனமும் குளிர்ந்து போனது.

இப்பொழுதெல்லாம் லிங்காவின் நண்பர்களது குடும்பங்கள் அடிக்கடி வாணியைத்தேடி வீட்டுக்கு வர ஆரம்பித்தனர். எல்லாம் தையல் விடயமாகத் தான். அதனால் வாணிக்கும் நிறையச் சிநேகிதிகள் உருவாகி விட்டனர். எவராவது வீட்டுக்கு அடிக்கடி வந்து போவது லிங்காவுக்கு ரொம்பப் பிடிக்கும். அப்போது தான் வீடு கலகலப்பாக இருக்கும் எனக் கருதுவார்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்களது விளையாட்டுக் கழகம் அயற்பிர தேசங்களிலுள்ள கழகங்களுடன் போட்டியாக கிரிக்கட் விளையாடுவர். லிங்கா தான் முன்நின்று கிரிக்கட் போட்டிகளை ஒழுங்கு செய்வார். தீடீரென்று அவருகு ஒரு எண்ணம் உதித்தது. எங்களுடைய கழகத்தினரை பிரதிநிதித்துவப்படும் வகையில் ஒரு தொப்பியை உருவமைத்தால் என்ன என மனம் கூறியது. உடனே களத்தில் இறங்கிவிட்டார். வாணியிடம் அபிப்பிராயம் கேட்க அவளும் அதை ஆமோதித்து அதற்கு வேண்டிய பொருட்களை வாங்கிவரச் சொன்னாள்.

லிங்கா தான் கற்ற கல்லூரியை நினைவு கூருமுகமாக நீலம், மண்நிறம் ஆகிய நிறங்களில் துணிகளை வாங்கி வந்தார். வாணியும் இரவு பகல் என்று பாராது ஓயாது செயற்பட்டு பதினொரு தொப்பிகளையும் அளவு பிசகாது உருவமைத்துக் கொடுத்தாள். தொப்பின் முன் பக்கத்தில் ஆர்.எஸ்.சி என அவர்களது விளையாட்டுக் கழகத்தின் பெயரை நிறநூலினால் பொறித்துக் கொடுத்தது தான் காமதம், லிங்கா ஒரு சிறு குழந்தையைப் போல் துள்ளி ஆர்ப்பரித்ததைப் பார்க்க வாணிக்கு சிரிப்பு சிரிப்பாய் வந்தது. அடுத்த ஞாயிறன்று கழகத்தினர் தொப்பிகளுடன் புறப்பட்டுப் போவதைப் பார்க் வாணிக்கு மிகுந்த மன நிறை ஏற்பட்டது. கணவனது மகிழ்ச்சியே தனது இலட்சியம் என அவள் கருதினாள். இப்போது தான் அவளுக்கு இல்லற வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டது.

***

லிங்கா வாணியின் வாழ்க்கையெனும் படகு சிறு தளம்பலுமில்லாது சீராக நகர்ந்து கொண்டிருந்தது. வாணி உண்டாகியிருப்பதை அறிந்த லிங்கா மிகவும் மகிழ்ச்சியடைந்தர். மனைவி மீது அதிக அக்கறை காட்டினார். வாணியின் நிலையோ தர்மசங்கடமாயிற்று. வாந்தி, ஓங்காளம் ' போன்ற வழமையான அவஸ்தை அவளை வாட்டியெடுத்தது. லிங்காவினால் அவளது உடல் நிலையை புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் காலை வேளை. வழமை போல் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார், லிங்கா. புறப்படும் போது சில வைற்றமின் வில்லைகளை எடுத்து வாணியிடம் அதைப் போட்டு விழுங்குமாறு கொடுத்தார்.

“இத்தனை குளுசையளையும் என்னெண்டு போடுறது”

சிணுங்கினாள், வாணி. லிங்காவுக்கு வந்ததே கோபம். பட்டெ அத்தனை குளிசைகளையும் நிலத்தில் வீசியெறிந்து விட்டு சட்டெனப் புறப்பட்டுப் போய் விட்டார்.

இதனைச் சற்றும் எதிர்பார்த்திருக்காத வாணி ஒரேயடியாக நிலை குலைந்து போனாள். கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகத் தொடங்கியது. அப்படியே இருந்து மனப்பார் குறையுமட்டும் அழுது தீர்த்தாள்.

“ஒரு மருத்துவராயிருந்தும் கூட அவருக்கு என் நிலை புரியவில்லையே“ என்ற ஆதங்கமே அவளை வாட்டி வதைத்தது. எத்தனை நேரம் தான் அப்படியே அமர்ந்திருந்தாளோ... வயிற்றில் பசியெடுப்பது போன்ற உணர்வு தோன்றி அவளை இவ்வுலகத்திற்கு இட்டு வந்தது. மெதுவாக எழுந்து போய் சமைக்கத் தொடங்கினாள். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்று சொல்லுவார்கள். அவர் வேலையிலிருந்து பசியோடு வரும்போது சமைத்துப் பரிமாற வேண்டியது மனைவியின் கடயையாயிற்றே.

இப்படியாக மனதில் பலவிதமான உறுத்தல்கள் தோன்றி மறைந்தன. ஒருவாறு சமையலை முடித்துவிட்டு வந்து கட்டிலில் படுத்துக் கொண்டாள். உடற்சோர்வும் மனச்சோர்வும் ஒருங்கிணைந்து அவளை ஆக்கிரமித்துச் கொண்டது.

மோட்டார் சைக்கிள் வரும் சத்தம் காதில் விழுந்தது. வாணி படுக்கையிலிருந்து எழுந்து பார்த்தாள். முடியவில்லை. அப்படியே சுரண்டு கிடந்தாள். வேலையிலிருந்து வந்த லிங்கா ஓடோடி வந்து அவளைத் தூக்கி இருந்தினார்.

“வாணி! என்ன செய்யுது”

ஆதரவுடன் கேட்ட குரல் அவளது பிடிவாதத்தை உடைத்தெறிந்தது.

“தலையைச் சுற்றுது”

ஈனக் குரலில் வந்த குரல் கேட்டு லிங்கா பதறிப்போனார். ஓடோடிப் போய் ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டு வந்தார். ஐந்து கரண்டி ஹார்லிக்ஸ் ஒரு கரண்டி சீனி போட்டு கரைத்து வந்த கலவை கூழ் போன்ற திரவமாக இருந்தது. அதை மெதுவாக அவளுக்கு பருக்கி விட்டார். வாாணிக்கு அது வயிற்றைப் புரட்டினாலும் கணவனது கையால் கிடைக்கும் பானமாயிற்றே. ஒருவாறு சகித்துக் கொண்டு குடித்து முடித்தாள். அத்துடன் இருவரது கோபமும் பறந்து போயிற்று. ஊடலும் கூடலும் இல்லற வாழ்க்கையின் இரு பக்கங்களாயிற்றே.

மாதம் ஒன்று கழிந்தது. வாணி மீண்டும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கி விட்டாள். கணவனுக்கு விதம் விதமாக சமைத்துப்போட வேண்டும்

என்பது அவளது விருப்பம். விதம் விதமாக சமைக்கத் தொடங்கினாள். தான் ஹாஸ்டலில் இருக்கும் போது மாலையில் தேநீருடன் தரும் சிற்றுண்டி வகைகளைச் செய்து பார்த்தாள். வெற்றியும் கண்டாள். லிங்கா அதைச் சாப்பிட்டு விட்டு வாயால் பாராட்டமாட்டார். ஆனால் அவரது கண்களில் தோன்றும் மலர்ச்சி அதைக் காட்டிக் கொடுத்துவிடும். மொத்தத்தில் வாணி சமையற்கலையில் நன்கு தேர்ச்சி பெற்றவளாகி விட்டாள்.

லிங்கா, தன்னைத் தேடி வரும் நண்பர்களுக்கு வாணி செய்து வைக்கும் சிற்றுண்டியைக் கொடுத்து உபசரிப்பார். அதில் அவருக்குக் கிடைக்கும் மனநிறைவை வாணி உணர்ந்திருக்கிறாள். சமையல் செய்யும் போது லிங்கா அவளுக்கு அறிவுரை கூறுவார்.

“வாணி! சமைக்கும் போது வீட்டிலிருப்பவர்களுக்கு அளவாய்ச் சமைக்கவேணும். மிதமிஞ்சி சமைச்சு வீணாய்க் கொட்டக்கூடாது. தெரியுதா?”

வாணி தலையை மட்டும் ஆட்டுவாள். ஆனால்... சாப்பாட்டு நேரத்தில் எவர் வந்தாலும் அவர்டகளுக்கு வயிறாற உணவு கொடுக்கால் அனுப்பமாட்டார். இதனால் வாணியின் நிலை தர்ம சங்கடமாகிவிடும். பின்நாளில் வாணி கணவனின் குணத்தை நன்கு புரிந்து கொண்டவளாய் நடக்கப் பழகிக் கொண்டாள். தேவைக்கு சற்று அதிகமாகவே சமைப்பாள். மிஞ்சுவதை குளிரூட்டியில் வைத்து விடுவாள்.

சில சமயங்களில் லிங்கா வாணியை அழைத்துக் கொண்டே சயைலறைக்கு வருவார். “சாப்பாடு எடுத்து வையும்“ என்று சொல்லிவிட்டு கைவிரல்களால் இரண்டு மூன்று என்று காட்டிவிட்டுப் போய் விடுவார். வாணியும் கணவனின் போக்குக்கு ஏற்றவாறு வாழ பழகிக் கொண்டு விட்டாள். அவரை எதிர்த்து ஒரு கேள்வியும் கேட்பதில்லை. கேட்டால் அவருக்கு “சுருக்“கென்று கோபம் வந்துவிடும் என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள்.

ஒரு நாள் இரவு அவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது ரெலிபோனட் மணி கிணுகிணுத்தது. லிங்கா எழுந்து போய் றிசீவரை எடுத்துக் கதைத்து விட்டு பதறியவாறு வந்தார்.

“எங்கட பழனி ரோலரில அம்பிட்டு அக்சிடென்ற்றாம்”

சொல்லிக் கொண்டே புறப்பட்டுப் போய்விட்டார்.

பழனி என்ற இளைஞன் தனது ஓய்வு நேரங்களில் வந்து அவர்களது மரக்கறித் தோட்டத்தைப் பராமரிப்பான். தவிர வாணிக்கு ஏதும் அவரசரத்தேவை இருந்தால், றங்கலடவுணுக்குப் போய் சாமான்கள் வாங்கி வந்து கொடுப்பான். அவனுக்கு தேயிலைத் தொழிற்சாலையில்த்தான் வேலை. பகல், இரவு என மாறி மாறி வேலை நேரம் அமையும். அவன் காயப்பட்டு விட்டானாம் என்ற செய்தி வாணியின் மனத்தையும் கலங்க வைத்தது.

பொழுது விடிந்தும் லிங்கா வீடு வந்து சேரவில்லை. வாணியின் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தபோது, சுகு வந்து வைத்தியாசாலையைத்

திறந்தான். வாணி அவளிடம் போய் விசாரித்தாள்.

“பழனிக்கு சீரியஸர். அவனை கண்டி ஹொஸ்பிற்றலுக்கு அனுப்பியிருக்ககாம். டொக்டரும் கூடப் போயிருக்கிறார் போல”

வாணியின் மனம் ஒரேடியாக உடைந்து போனது. மாலையில் லிங்கா வீட்டுக்கு வந்தார். அவரது முகத்தில் ஈயாடவில்லை.

“பழனி கண்ணாடிப் பெட்டிக்குள்ள தூங்குகிறான்“

பொல பொலவென அவரது கண்கள் நீரைச் சொரியத் தொடங்கின. வாணியின் கண்களிலும் கண்ணீர். கவலையைப் போக்கும் ஒரே மருந்து கண்ணீர்தானே.

***

வெளியிடங்களில் வசித்தாலும், ஊரவர்கள் தங்கள் குலதெய்வமாகிய நயினை நாகபூஷணி அம்பாளை திருவிழாக்காலங்களில் வந்து தரிசிக்கத் தவறுவதில்லை. லிங்கா மட்டும் அதற்கு விதிவிலக்கா... என்ன... கொடியேற்றத் திருவிழாவை கண்குளிரக்கண்டு அம்பாளின் அருளைப் பெற வேண்டுமென விருப்பம் கொண்டவராய் லீவுக்கு விண்ணப்பித்திருந்தார். அருகிலுள்ள மருத்துவசாலையிலுள்ள மருத்துவரும் லீவில் சென்றிருந்தபடியால் அவரது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நினைத்ததைச் சாதிப்பவர்தான் லிங்கா. அவர் சுகவை இரண்டு நாட்கள் மருத்துவசாலையைக் கவனித்துக் கொள்ளுமாறு விட்டுவிட்டு ஊருக்குப் புறப்பட்டு விட்டார். வாணியின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவளை அழைத்துச் செல்லவில்லை.

லிங்காவின் தாத்தாவினது வழி பேரப்பிள்ளைகள் அனைவருமாகச் சேர்ந்து தான் கொடியேற்றத் திருவிழா செய்வது வழக்கம். லிங்காவுக்கும் அதில் பங்கு உண்டு. ஊர் மண்ணில் கால் பதித்ததுமே அவரது மேனியில் ஒரு சிலிர்ப்பு. பெற்றோர், சகோதரர்கள், உற்றவர் அனைவரையும் சந்தித்ததோடு, அருள்மிகு அம்பாளின் தரிசனத்தால் மன் குளிர்ந்துபோன லிங்கா, மறுநாளே திரும்பி விட்டார்.

மூன்றாம் நாள் காலையில் வீட்டின் முன் பஸ் நின்றது. கணவனின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்த வாணி எட்டிப்பார்த்தாள். என்ன அதிசயம். அவளது கண்களையே நம்ப முடியவில்லை. லிங்காவுடன் அவளது குட்டித்தம்பி ராமும் பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்து வந்து கொண்டிருந்தான்.

அகல விரிநத கண்களுடன் ஆவென வாயைப் பிளந்தவாறு நின்றிருந்த வாணியைப் பார்த்து முறுவலித்த லிங்கா விளக்கமளித்தார்.

“என்ன பார்க்கிறீர். ராமை என்னோட வாறியோ என்று கேட்டன். வாறனெண்டான். கூட்டிக் கொண்டு வந்திட்டன்.”

வாணியின் முகம் மலர்ந்திருப்பதைப் பார்த்து லிங்காவின் மனமும் குதூகலித்தது. பிறகென்ன. ஐந்து வயதினனான ராம் அந்த வீட்டு செல்லப்பிள்ளையாக வலம் வந்தான். லிங்காவும் ராம் சேர்ந்து செய்யும்

அட்டகாசத்தை வாணியாலேயே பொறுக்க முடிவதில்லை. ராமை கட்டிலில் ஏற்றி விட்டு ஆடுமாறு பணிப்பார். ராம் ஆடுவான். சில சமயங்களில் எதையாவது காரணங்காட்டி ராடன் சீறுவார். வாணி அவர்களுக்கு விளக்கு பிடிக்க வேண்டி வரும்.

ஒரு நாள் லிங்கா, வாணியை மருத்துவசாலைக்கு ஊசி போட வருமாறு அழைத்திருந்தார். ராமும் கூடவே போயிருந்தான். ஊசி மருந்தை தயார்ப் படுத்திக் கொண்டவர், பஞ்சை ஸ்பிறிற்றில் நனைப்பதற்காக ஸ்பிறிற் போத்தலைக் கையில் எடுத்தார். வாணிக்குப் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராமைப் பார்த்தவுடன் அவருக்கு அவனை அழவைக்க வேண்டும் எனத் தோன்றியது.

டேய் மச்சான்! உனக்கு நான் ஸ்பிறிற் பருக்கிகொல்லப் போறன்"

கேட்டவுடன் ராமுக்கு பயம் ஏற்பட்டு விட்டது. உடனே சொன்னான்.

"ம்!... எனக்கென்ன... எனக்கு இப்பிறிற் பருக்கினால்ல நான் நின்று கொண்டே தான் சாவன். படுதத்து சாகமாட்டன்"

கெட்டுக் கொண்டிருந்த அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

மற்றொரு நாள் அப்படித்தான் வெளியில் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. லிங்கா ராமை அழைத்து வீட்டுக்குள்ளேயே கிரிக்கட் விளை யாட ஆரம்பித்தார். முதலில் ராம் பந்து வீச லிங்கா பந்தை அடித்துக் கொண்டிருந் தார். அவர் "அவுட்" ஆனதும் ராம் பந்தை அடிக்க, லிங்கா பந்து வீசிக் கொண்டிருந்தார்.

டமார்!... கிளிங்!!...

ராம் அடித்த பந்து கண்ணாடி அலமாரியில் பட்டு கண்ணாடி நொறுங்கிப் போய் விட்டது. இதனை சற்றும் எதிர்பார்த்திராத ராம் திடுக்கிட்டுப் போனவனாக அழுது கொண்டே ஓடி வந்து வாணியை கட்டிப் பிடித்துக் கொண்டான். வாணிக்கும் என்ன நடக்கப் போகிறதோ என்ற பயம் நெஞ்சை உறுத்த விறைத்துப் போய் நின்றாள். ஆனால்... சற்றும் எதிர்பாராத வகையில் லிங்கா ராமைக் கூப்பிட்டார்.

"நீ வாடா மச்சான். நீ என்ன வேணுமென்றே அடிச்ச நீ. அது போய்ப் பட்டதுக்கு நீ என்ன செய்வாய்"

தடவிக் கொடுத்த லிங்காவைப் பார்த்து வாணி ஆச்சரியப்பட்டாள். லிங்காவின் குணவியல்பை வாணியால் மட்டுமல்ல... எவராலும் புரிந்து கொள்ள முடிவதில்லை.

லிங்கா ராமின் கல்வியிலும் கவனம் செலுத்தத் தவறவில்லை. அவனை ஒரு ஆரம்பப் பாடசாலையில் சேர்த்துவிட்டார். அவனது பாடசாலை அவர்களது பங்களா இருக்கும் மலை அடிவாரத்தில் இருந்தது. குறுக்கு வழியால் நடந்து போவதற்கு படிக்கட்டுகள் இருந்தன். எனவே காலையில் போகும் போது ராம் நடந்து போவான். மதியம் பாடசாலை விடும் சேரம் லிங்கா அந்த வழியால்த்தான்

வேலையிலிருந்து திரும்புவார். வரும் போது ராம் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்திருந்து அவரது வயிற்றுப்புறத்தை இறுக கட்டிக் கொள்வான். இருவரும் ஒன்றாக வீடு வந்து சேருவார்கள். வந்ததும் இருவரும் ஒன்றாகவே போய் குளிப்பார்கள். எல்லோரும் அவர்களிடையேயான இறுக்கமான உறவைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். வாணியும் கூடத்தான்.

லிங்கா ஒரு முன்கோவக்காரன் என்பது அனைவருக்கும் தெரியும். யாராவது இசகு பிசகாய் வார்த்தையை விட்டால் போதும். முன்பின் சற்றும் யோசிக்காமல் சடாரென்று கன்னத்தில் அறைந்து விடுவார். எனினும் மனைவிமீது அவர் தன் கோபத்தை ஒருபோதும் காட்டியதில்லை. மாறாக அவளது மனதை தீண்டும் வகையில் ஏதாவது ஒரு சுடு சொல் சொல்லிவிட்டால் போதும் வாணி அழுதே கரைந்து விடுவாள். அழுவது அவருக்குப் பிடிக்காது தான். இருந்த போதிலும் வாணிக்கு வேறு மாற்று வழி தெரிவதில்லை.

அவர் சுமுகமாக சிரித்துப்பேசி மகிழ்ந்திருக்கும் வேளையில் வாணி மெதுவாக அவரிடம் முறையிடுவாள். “நீங்கள் அன்றைக்கு அப்படி என்னை திட்டி யிருக்கக்கூடாது. அதனால் என் மனம் பட்ட பாட்டை நீங்கள் அறியமாட்டீர்கள்“. லிங்கா சமயோசிதமாய் பேச்சை மாற்றி சமாளிப்பாரே தவிர தான் செய்தது தவறு என்று ஒப்புக் கொள்வது அவரது சரித்திரத்திலேயே இல்லாத ஒரு விடயம்.

அன்று இரவு எல்லோரும் வரவேற்பறையில் கூடியிருந்தார்கள். வழமைபோல் லிங்கா தனது மருத்துவப் புத்தகத்தில் மூழ்கியிருந்தார். வாணி, கல்கியில் வெளிவந்திருந்த தொடரை வலு ஆர்வத்துடன் படித்துக் கொண்டிருந் தாள். அவளுக்கு அருகில் இருந்து கொண்டு ராம் வாய்ப்பாடு பாடமாக்கிக் கொண்டிருந்தான்.

திடீடென புத்தகத்திலருந்து தனது பார்வையை விலத்தியவராய் லிங்கா, வாணியைத் திரும்பிப் பார்த்தார்.

“வாணி!”

குழையும் குரலில் அழைத்த கணவனை வாணியால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

“ம்!...”

அவளது கவனமெல்லாம் தான் வாசித்துக் கொண்டிருந்த தொடரின் மீது பதிந்திருந்தது. லிங்காவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

“என்ன! நான் கூப்பிடுறது கேட்கேல்லையே?”

கணவனது கடினமான குரல் அவளது கவனத்தை திசை திருப்ப, அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

“என்ன... தொடர்கதை அவ்வளவு இன்ரெஸ்ற்றாப் போகுதோ?”

“ஓ... கல்கியின்ர வசனங்கள் ஒவ்வொன்றும் நேரில நடக்கிறமாதிரியே இருக்கு” லிங்கா விசயத்துக்கு வந்தார்.

“நாளைக்கு பின்னேரம் நாங்கள் கார் பார்க்கப் போறம். நாலரை

மணிக்கு ரெடியாக இருக்க வேணும். என்ன!...”

“சரி” என்று வாணி சொல்லி வாய்மூட முன் ராம் அவளைச் சுரண்டினான். வழமையான ஓரக்கன் பார்வையால் லிங்கா அதனைக் கவனித்து விட்டார்.

“என்னடா மச்சான் கொக்காவுக்கு அலுப்புக்க குடுக்கிறாய். நீயும் தான் போறது.”

ராமின் முகம் மலர்ந்ததைப் பார்த்து இருவரும் புன்னகைத்துக் கொண்டனர். இப்போது சில நாட்களாவே லிங்காவுக்கு ஒரு கார் வாங்க வேண்டும் என மனதில் விருப்பம் இருந்தாலும், இந்த மலைச்சரிவான பாதைகளில் அவர் மோட்டார் சைக்கிளில் போய் வருவதையே அவளது மன் கிலி கொண்டு பார்க்கும். கார் ஓடுவதென்றால்... மனம் தவிப்புடன் அங்கலாய்த்தது.

***

மறுநாள் மாலை நான் மணிக்கெல்லாம் வாணி வேலைகளை முடித்து புறப்படுவதற்கு ஆயத்தமாகி விட்டாள். லிங்காவும் சுகுவும் வேலை முடிந்ததும் வந்து டிபனும் சாப்பிபபட்டு, டீயு குடித்து முடிக்கவும் வீட்டு வாசலில் வீரையாவின் கார்வந்து நிற்கவும் சரியாக இருந்து. சுகுவை முன்சீற்றில் ஏற்றி விட்டு லிங்கா பின்னால் மனைவியுடன் அமர்ந்து கொண்டார். ராம் வழமைபோல் அக்காவுடன் ஒட்டிக் கொண்டான். கார் புறப்பட்டு சிறிது போனதும் வீரையா கத்தினார்.

“சேர்! பாம்பு”

லிங்கா அவசரமாக பாதையை எட்டிப் பார்த்தார். சாரையொன்று தெருவைக் குறுக்கறுத்து போய்க் கொண்டிருந்தது. லிங்காவின் முகம் சுருங்கிப் போனது.

“வீரையா! இனி கார் பார்க்கப் போற விசயத்தைக் கான்சல் பண்ணுவம். சாரை குறுக்கப் போயிட்டுது. இனி இந்த விசயம் சரி வராது.”

“அப்ப... வீட்டுக்கு திருபுவங்களா சேர்.”

“வேணாம் வீரையா. நாங்கள் வெளிக்கிட்டிட்டமம். அம்மம்பிட்டிய டவுண் வரைக்கும் பேொயிட்டு வருவம்”

வாணிக்கு மனதில் ஒரே குழப்பமம். அம்மம்பிட்டிய வந்ததும் ஒரு புடைவைக்கடைக்கு ன் காரை நிறுத்தச் சொன்னவர், வாணியையும் அழைத்துக் கொண்டு கடைக்குள் போனார்.

“ஐயா! வாங்க. ஏய் ஐயாக்கு செயர் எடுத்துப்போடு”

அமோக வரவேற்பு அவருக்கு கிடைத்தது.

“வாணி! விருப்பான துணியை செலக்ற் பண்ணும்”

முதலில் தயங்கிய வாணிக்கு மனதில் வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு ஏதாவது வாங்க வேேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. குழந்தைக்ககேற்ற பேபி பிளனல் துணிகளை முதலில் காட்டினாள். லிங்கா விடவில்லை. “உமக்கு வீட்டுக்குப் போட சீத்தைத்துணி பாரும்” என்று கூறினார். வாணியும் இரண்டு

துணிகளைத் தெரிவு செய்தாள்.

"எல்லாத்திலையும் பத்து பத்து யார் வெட்டி விடுங்கோ முதலாளி"

லிங்கா கூற வாணி தடுக்க முயன்றாள்.

"ஏன் அவ்வளவு துணி"

லிங்கா கேட்டால்த்தானே. இறுதியாக ஒரு துணி மூட்டையுடன் வீடு வந்து சேந்தனரர். வாணியினால் லிங்காவின் மனதையோ, போக்கையோ புபரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு புரியாத புதிராகவே அவரது செயற்பாடு இருந்தது. அது மட்டுமல்ல. அன்றிலிருந்து அவர் தனக்கென ஒரு கார் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தையே தன் மனதிலிருந்து நீக்கி விட்டார்.

அடுத்தடுத்து வந்த நாட்களில் வாணிக்கு நிறையவே தையல் வேலைகள் காத்திருந்தன.

முதன் முதலில் வாணி, தனக்கு பிறக்ககப் போகு் குழந்தைக்கு ஏற்றதாக சின்னச்சட்டைகளை வெட்டி, தைக்கத் தொடங்கினாள். ஏற்கெனவே அயலவர்கள், பழகியவர்கள் என அவர்களது குழந்தைகளுக்கு சட்டை தைத்துக் கொடுத்த பரிச்சயம் அவளுக்கிருந்தது. அவள் தைத்த சட்டைகளை ராம் அழகு பார்த்து ரசித்து மடித்து வைத்தவன், வாணி ஏதோ சிந்தனையில் மூழ்கியிருப்பதை அவதானித்து விட்டு அவனிடம் கேட்டான்.

"என்னக்கா பேசால் ஏதோ யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்?"

"எல்லாம் அத்தானைப் பற்றித்தான்"

வாய் தடுமாறி வெளியே வார்த்தைகளை விட்டவளை ஒரேயடியாக ராம் பிடித்துக் கொண்டான்.

"அத்தானைப் பற்றி என்னக்கா யோசிக்கியள். எனக்கும் சொல்லுங்கோவன்"

"இல்லையடா ராம். நாங்கள் எதுவும் சாத்திரம் பார்த்தால்... சாத்திரமும் மண்ணாங்கட்டியும் என்று சொல்லி ஒரு வார்த்தையிலையே எங்களை மடக்கி விடுவார். அவர் மட்டும் சாரைப்பாம்பு குறுக்க போனது சகுனப்பிழை என்று சொல்லி கார் வாங்கிறதேயில்லை என்று முடிவெடுத்திட்டார். அப்ப... இது மட்டும் சாத்ததிரமில்லையோ?"

"பொறுங்கோக்கா. இண்டைக்கு அத்தான் வந்ததும் கேட்டுவிடுவம்"

"டேய் ரா்! நீ தேவையில்லாத வேலை பார்க்காம அம்மா இரு. சொல்லிப் போட்டன்"

அக்காவின் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்டதும் ராம் வாலைச் சுரட்டிக் கொண்டு மௌத்தைத் தழுவிக் கொண்டான். இருவரும் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்ததனால், மோட்டார் சைக்கிள் வ ந்த சத்தமோ, முன் கதவு திறபடும் சத்தமோ அவர்களது காதுகளுக்கு எட்டவில்லை.

"என்ன நடக்குது?"

லிங்கா கேட்டுக் கொண்டே அருகில் வந்து நின்றதும் தான் இருவரு்

திடுக்கிட்டு எழுந்து நின்றனர். லிங்கா, கண்களாலேயே நோட்டம் விட்டவராய் வாய்க்குள் சிரித்துக் கொண்டார். "நான் அப்பாவாகப் போகிறேன். வாணி அம்மாவாகப் போகிறாள்" நினைக்கும் போதே மேனி சிலிர்த்தது.

கணவனின் வரவைக் கண்டதும் வாணி அவருக்கு சூடாக ஒரு தேநீர் போட்டு வந்து கொடுப்பதற்காக சமையலறையை நோக்கிப் போனாள். லிங்கா, உடை மாற்றுவதற்காக தனது அறைக்குள் நுழைந்தார். ரர், தான் மடித்து அடுக்கி வைத்ததிருக்கும் சட்டைகளை எடுத்துப் போய் அத்தானிடம் காட்டலாமா என யோசித்துக் கொண்டிருந்தான்.

இப்படியாக அந்த வீட்டில் இருந்த மூவருமே ஒரு புத்தம்புது உறவின் வருகையை எதளிர்பார்த்து தத்தம் மனத்துக்குள்ளேயே கற்பனையை வளர்த்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் அதற்கான காலமும் கனிந்து வந்தது.

திடீரென வாணிக்கு பிரசவ வலி ஏற்பட்ட போது லிங்கா அவளை ஒரு தனியார் பிரசவ விடுதியில் சேர்த்து விட்டார். ஊருக்கு தகவலையு் தந்திமூலம் அனுப்பி வைத்தார். ஒரு நாள் முழுவதும் பிரசவ வேதனையால் துடித்த வாணி, ஆண் குழந்தையைப் பிரசவித்தாள், சோர்வு அவளை ஆட்கொள்ள கண்களை மூடி கிறக்கத்தில் கிடந்தவளின் தலையை ஆதரவாகக் கோதியவாறு "வாணி" என ஒரு குரல் அழைத்தது. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

லிங்கா, பூரிப்புடன் நின்றிருந்தார். வாணியால் நம்ப முடியவில்லை. ஆம். லிங்கா ஒரு மருத்துவர் என்ற காரணத்தினால் அவர் பிரசவ அறைக்குள் வர அனுமதிக்கப்பட்டிருந்தார்.

"வாணி! எங்கட குழந்தையைப் பார்க்கப் போறீரே?"

கேட்டதுடன் நிற்காமல் அறையின் மறுபக்கத்தில் தொட்டடிலுக்குள் புத்தம் புது மலராகப் பூத்திருந்த புத்திரச் செல்வத்தை தொட்டிலுடன் சேர்த்து இழுத்து வந்து வாணிக்கு அருகில் வைத்துக்காட்டினார். தான் ஈன்றெடுத்த மகவைப் பார்த்ததும் தாயின் பூரிப்புக்கு எல்லையே இல்லை. சேயை நன்றாக உற்றுப் பார்த்தாள். அப்பாவையே் உரித்து வைத்து தோற்றமளித்த பாலகனைப் பார்த்ததும் அவளது மனம் துள்ளிக் குதித்தது.

"நீங்கள் .... அப்பா"

அவ்வளவும் தான் வாணியால் சொல்ல முடிந்தது. உணர்ச்சிக் கொந்தளிப்பினால் வார்த்தைகள் வெளி வர மறுத்தன. அன்று தொட்டு வாணி, லிங்காவை அப்பா என்றே அழைக்கத் தொடங்கி விட்டாள்.

***

காலம் தன் கடமையை செவ்வனே செய்து கொண்டிருந்தது. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வரும் மைந்தனின் பொலிவு கண்டு புளகாங்கிதமடைந்தனர், பெற்றோர். அந்தக் காலகட்டத்தில் லிங்காவின் பெரியததங்கைக்கு ஒரு வரன் கூடி வந்திருந்தது. எனவே, லிங்கா தனது குடும்பத்தினருடன் ஊருக்குச் சென்று தங்கையின் திருமணத்தை சிறப்புற நடத்தி

வைத்து விட்டு வந்தார். ராமும் ஊரடன் வந்து பாடசாலையில் சேர்ந்து கல்வி பயின்று கொண்டிருந்தான்.

லிங்காவைப் பொறுத்தவரையில் குழந்தைமீது அதீத அக்கறை காட்டுவார். ஆனால்... குழந்தையைத் தூக்கி வைத்திருக்க மாட்டார். இது வாணிக்கு பெரிய மனக்குறை. அத்துடன் குழந்தை அழுவது அவருக்குப் பிடிக்காது. குழந்தையின் அழுகுரல் கேட்டால் போதும். உடனே வந்து வாணியைப் பார்த்து முறைத்துவிட்டுப் போவார். சில சமயங்களில் வாய் பேசவும் செய்யும்.

“பிள்ளையை அழவிடாமல் பார்க்க முடியாதா?”

இப்படியான சில புரிந்துணர்வுகளை அவரிடம் எதிர்ப்பார்க்க முடியாது என வாணிநாளடைவில் உணர்ந்து கொண்டு விட்டாள். குழந்தையோ படு சுட்டியாக இருந்தான். கதிரையில் ஏறுவது, மேசைக்குத்தாவுவது, கட்டிலில் ஏறி யன்னலைப் பிடிதத்துக் கொண்டு நிற்பது, கைதவறினால் விழுவது என அட்டகாசம் செய்வான். அவனது செய்கைகளைக் கண்காணிப்பதுத என்பது அவனைப் பார்ப்பவருக்கு கடுமையான தண்டனையாக அமையும். கணவனின் கர்ஜனைக்கும் மகனின் குறும்புகளுக்கும் நடுவே வாணி. எனினும் இரண்டையும் சமயோசிதாக சமாளித்து விடுவாள்.

காலப்போக்கில் வாணி இரண்டாவது ஆண் குழந்தைக்கும் தாயாகிவிட்டாள். அந்தக் காலகட்டத்தில் ஒரு புதுப்பிரச்சினை உருவாகி யிருந்தது. ககுடுமையான குளிர்ச்சூழல் குழந்தைகளின் ஆரோக்கியத்தை பாதித்தது. இரு குழந்தைகளுக்கும் மாறி மாறி நிமோனியாவின் தாக்கம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. லிங்கா யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். குழந்தைகளின் நலம் கருதி வாணியையும் குழந்தைகளையும் சண்டிலிப்பாயில் அமைந்துள்ள வாணியின் சீதன வீட்டில் வசக்குமாறு அனுப்பி வைத்தார். அருகிலேயே வாணியின் அம்மாவின் வீடு இருந்ததால் அவர்களது உதவியுடன் காலத்தைக் கழிக்கத் தொடங்கினர்.

மீண்டும் லிங்காவுடன் சுகுவும் வந்து சேர்ந்து கொண்டதால் சமையல் சாப்பாடு பிரச்சினையில்லாமல் போயிற்று. அடிக்கடி லிங்கா ஊருக்கு வந்து போவார். குழந்தைகளுக்கு வேண்டியதை குறைவில்லாமல் வாங்கிக் கொடுப்பார்.

ஒரு நாள் காலை திடீரென்று லிங்கா வந்திருந்தார். அவரது முகத்தில் பேயறைந்தது மாாதிரி ஒரு தோற்றம். என்ன ஏது என வாணி விசாரித்தவயள், திடுக்கிட்டாள். அம்மாவுக்கு திடீரென்று “ஸ்ரோக்“ மாதிரி வந்து அறிவு நினைவில்லாமல் யாழ்பேதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறாவாம். கணவனின் முகத்தில் அப்படியொரு சோகதத்தை வாணி என்றுமே அவதானித்ததில்லை.

லிங்காவும் வாணியும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மதியம்

பார்வையாளர்களை அனுமதிக்கும் ˙நேர் போயிருந்தனர். பதைபதைக்கும் இதயத்தோடு இருவரும் படியேறி மேல்மாடிக்கு அவரை வைத்திருக்கும் வாரட்டினுள் நுழைத்தனர். அங்கே... அம்மா பேச்சு மூச்சின்றி அமைதியாகப் படுத்திருந்தார். கண்கள் மட்டும் திறந்திருந்த போதிலும் அவரால் எவரையுமே அடையாளம் காண முடியவில்லை. தாயை அழைத்துப் பார்த்த லிங்காவின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகியது. இருவரது நிலையையும் கண்ணுற்ற வாணி சகிக்க முடியாத மன விருத்தத்தினால் நிலை குலைந்து போனாள்.

கொழும்பிற்கு கொண்டு போனால் சிகிச்சை பலனளிக்கும் என மருத்துவர்கள் கருதியதால் லிங்கா அம்மாவை கொழும்பிற்குத் கொண்டு போவதென முடிவெடுத்தார். அதற்கான ஆயத்தங்களில் அவர் ஈடுபடலானார். மதிய நேரம் பார்வையாளர்களை வார்ட்டினுள் போக அனுமதிப்பதற்காக மணி அடித்தது. லிங்காவும் உள்ளே போய் ஒரு தரம் அம்மாவின் நிலை பற்றி அறியலா என்ற நோக்கத்துடன் வந்தார். மாடிக்கு ஏறும் படிகளில் தத்தமது உறவுகளைப் பார்ப்பதற்காக பார்வையாளர்கள் வரிசையாக காத்து நின்றிருந்தனர். மணி அடித்ததும் அவர்கள் படிகளில் முண்டியடித்துக் கொண்டு ஏற முற்பட்டனர். அவர்களுள் ஒரு பெண் கைக்குழந்தையுடன் ஏற முயன்றாள். அப்போது மேல்படியில் நின்றிருந்த காவலாளி அவர்களைப் பிடித்துத் தள்ளினார். நல்ல வேளையாக அவர்கள் ஒருவரையொருவர் பிடித்திருந்தபடியால் விழாமல் தப்பித்துக் கொண்டர். இதனை நான்கவது படியில் நின்றிருந்த லிங்காவின் கண்கள் கணக்கெடுத்து விட்டன. அவர் தன்மையாக அந்தக் காவலாளியிடம் பேச்சுக் கொடுத்தார்.

"ஏன் அண்ணை இப்பிடி கைக்குழந்தையோட நிக்கிறதுகளை பிடிச்சுத்தள்ளுறியள். வாயால் சொன்னால் அவை கேட்பினம்தானே?"

"என்ன சொன்னாய். வாயால சொன்னால் கேட்பினமோ... இதுகளை நாயைமாதிரித் தான் நடத்த வேணும்"

காவலாளியின் பேச்சு லிங்காவின் உச்சக்கட்ட கோபத்தைத் தூண்டி விட, அவரையறியாமலே அவர் படிக்கட்டின் மேற்பகுதிக்கு ஏறிவிட்டார். காவலாளியின் நெஞ்சுச் சட்டையில் பிடித்து உலுப்பியவர் படாரென்று அவரது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார்.

சற்றும் எதிர்பாராததால்நிலை குலைந்து போன அந்தக் காவலாளி கன்னத்தை ஒரு கையால் பொத்தியவாறே ஓடிப்போய் வைத்தியசாலை வளாகத்தினுள் இருந்த காவல்த்துறையினரிடம் முறையிட்டார். அதன்ன விளைவாக அவ்விடத்துக்கு விரைந்த பொலிசார் அங்கு கூடியிருந்த மக்களிடம் விசாரித்தபோது... அவர்களில் ஒருவரும் வாய் திறக்கவுமில்லை. சாட்சி சொல்ல வும் முன்வரவில்லை. லிங்காவுக்கு அப்போது தான் உறைத்தது. இந்த சுயநல மிக்க சனங்களுக்காக நான் நியாயம் கேட்டது தவறு என்று. அவர்கள் அவரை

அழைத்துப்போய் தடுப்புக் காவலில் வைத்துவிட்டனர். லிங்காவின் மீது இரு குற்றங்கள் சுமத்தப்பட்டன. ஒன்று காவலாளியை அறைந்ததனால் அவரது கடைவாய்ப்பல்லில் ஒன்று கழன்று விட்டது. மற்றது காவலாளியின் கையிலிருந்த மணிக்கூட்டைக் காணவில்லை என்பதாகும்.

லிங்காவுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. மணிக்கூட்டைக் காணவில்லை என்பது தன்மீது திட்டமிட்டு சுமத்தப்பட்ட பழி, வழக்கை கனதிப்படுத்துவதற்கென எதிர்தரப்பினரால் சோடிக்கப்பட்ட சதி என புரிந்து கொண்ட போதிலும் எதுவம் செய்வதற்கில்லை. வழக்காடிப் பார்க்கலாம் என மனம் திடம் கொண்டது. அன்றை இரவுப்பொழுது ஒருவாறு காவல் நிலையத்திலேயே கழிந்தது.

பொழுது விடிந்ததும் லிங்காவினது உறவினர் கூட்டம் ஒன்று காவல் நிலைய வாயிலில் காத்திருப்பதைக் கண்டதும் அவருக்கு தென்பு வந்துவிட்டது.

"நீ ஒன்றுக்கு யோசிக்காத மச்சான். நாங்கள் கோர்ட் ஓடரோட வருவம்" என்று சொல்லிவிட்டு அவருடைய மச்சான் போனார். அவர் லிங்காவினுடைய அப்பாவினது தங்கையின் மகன். சற்று முரட்டு சுபாவடையவர். உறவினருக் கொன்றெல்லால் உயிரையும் கொடுக்க முன் வருவார்.

மமமதியம் போல் லிங்கா விடுக்கபப்ட்டபோது உறவினர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். உணர்ச்சி வசத்தால் கலங்கிய அவரது கண்கள் அந்தக் கூட்டத்தினுள் வாணியைத்தேடின. அவளைக் காணாததனால் மன் துணுக்குற்றது. முதலில் அம்மாவைப் போய் பார்க்கலாம் என நினைத்தவர், வார்ட்டுக்குள் நுழைந்தார். அங்கே... வாணி கண்களில் நீர் வழிய நின்று கொண்டிருந்தாள். நிலைமையை ஒருவாறு சாளித்தார், லிங்கா.

"வாணி! அழாதைய். வாரும் வீட்டுக்குப்போவம்"

மனைவியை அழைத்துக்கொண்டு வார்ட்டை விட்டு வெளியேறினார்.

"எங்கையப்பா போனநீங்கள். இரவு வீட்டுக்கு வருவியள் என்று பார்த்திருந்து தவிச்சுப்போனன். ஒருத்தரும் என்னட்ட ஒன்றுமே சொல்ல மாட்டனெண்டிட்டினம்."

சிணுங்கிய மனைவியை லிங்கா சமாதானப்படுத்தினார்.

"சீ... அழாதையும். எல்லாம் வீட்டைப்போய்க் கதைக்கலாம்."

காரைநகர் பஸ் ஒன்று புறப்படுவதற்கு தயாராக நின்றது. இருவரும் அதில் ஏறிக்கொண்டனர். கலைந்த தலையும், கசங்கிய உடுப்புமாய் நின்ற கணவனைப் பார்க்க வாணியின் மனது வெப்பியாரமடைந்தது.

***

மறுநாள் லிங்கா அம்மாவைக் கொண்டு கொழும்பிற்கு புறப்பட்டு விட்டார். அவருடன் கூட உதவியாக சாந்தி அக்காவும், வாணியின் அம்மாவும் போயிருந்தார்கள். அங்கும் அவர்கள் அளித்த சிகிக்சை பலிக்கவில்லை. நிலைமையில் எந்த முன்னேற்றம் தென்படவில்லை. லிங்கா மிகவும் மனமுடைந்து போனார்.

அங்கிருந்து மீண்டும் யாழ்.போதானா வைத்தியசாலைக்கு கொண்டு வந்த பின் எல்லோருமாகச் சேர்ந்து முடிவெடுத்து அம்மாவை ஊரிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர். சின்னத்தங்கை அம்மாவுடன் கூடவே இருந்து பார்த்துக் கொள்ள பெரிய தங்கை வீட்டிலுள்ள சமையற் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். அம்மாவுக்கு வெறும் நீராகாரம் தான். சத்துள்ள மா வகைகள், விற்றமின்கள் என திரவமாகவே போய்க்கொண்டிருந்தது. வாணியும் வீட்டில் தங்கியிருந்து அடிக்கடி போய் மாமியாரைப் பார்த்து வருவாள்.

லிங்கா, றங்கலைக்குப் போய் விட்டார். மாதம் ஒரு முறை வழக்குத் தவணைக்காக யாழ்ப்பாணம் வந்து போவார். வரும்போது அம்மாவையும் பார்த்துப்போவர். அம்மாவை வைத்தியசாலையிலிருந்து கொண்டு வந்து வீட்டிலேயே வைத்து பராமரிக்கலாமென முடிவு செய்தனர். எனவே வீட்டில் வைத்து வாணியும், சின்ன மைத்துனியும் அவரது நலன்களைக் கவனதித்துக் கொண்டனர். பெரிய மைத்துனியின் வீடும் அருகிலேயே இருந்ததால் அவரும் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ளுவார்.

திடீரென ஒருநாள் அம்மாவை ஆண்டவன் தன்னிடத்தே அழைத்துக் கொண்டார். கட்டிய கணவன், பாசத்தைக் கொட்டி வளர்த்த பிள்ளைகள், உற்றார், உறவினர் என அனைவரும் அழுது புரண்டாலும் மாண்டவர் திரும்பி வரப்போவதில்லை என்ற நிலை யதார்த்தமாயிற்று.

வாணி மூன்றாவது குழந்தையையும் ஆண் பிள்ளையாகவே பெற்றெடுத்தாள். லிங்காவுக்கு அதில் பரமதிருப்தி. ஆனால் வாணிக்கு ஒரு பெண் குழந்தை இல்லாதது பெரும் குறையாகவே தோன்றியது. லிங்கா இப்போது றங்கலையிலிருந்து புசல்லாவ என்ற இடத்துக்கு மாறியிருந்தார். அது றங்கலையைப் போன்று கடும் குளிர் பிரதேசமல்ல. குழந்தைகளுக்கு ஏற்ற சீதோஷ்ணமாக இருக்கும் என கருதியே லிங்கா அந்த இடத்தை தெரிவு செய்திருந்தார்.

வாணியும் பிள்ளைகளும் கணவனுடன் புசல்லாவைக்கு வந்து குடியேறினர். லிங்கா, மூத்த மைந்தனையும் இரண்டாவது மைந்தனையும் ஆரம்பப் பாடசாலை யொன்றில் சேர்த்துவிட்டார். சுகு றங்கலையில் மருந்தாளராக வேலை செய்து கொண்டிருந்ததால், இங்கு லிங்காவுக்கு மருந்தாளரின் வெற்றிடம் பெரும் குறையாக இருந்தது. உடனே அதற்கு ஒரு ஏற்பாட்டையும் செய்து கொண்டார்.

ராஜா என்றொரு இளைஞன் ஓ.எல் சித்தியடைந்து விட்டு வேலை யில்லால் இருந்தான். அவனை அழைத்து அவர் தன்னுடன் வைத்து மருந்துகள் பற்றிய விபரங்களை சொல்லிக் கொடுத்தார். அவனும் சிரத்தையுடன் அவற்றைக் கற்றுக் கொண்டான். லிங்காவின் வேலைப்பளு குறைந்தது. வேலை நேரங்கள் போக மிகுதி நேரங்களில் ராஜா பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பான். மாலை வேளைகளில் சேர்ந்து விளையாடுவார்கள். றங்கலயில் போல் இங்கு

விளையாட்டுக் கழகம் கிடையாது. எனவே புது நண்பர்களுடன் அரட்டை அடிப்பது தான் லிங்காவின் பொழுபோக்கு. அத்துடன் சற்றுத் தொலைவில் தியேட்டர் இருப்பதால் சில வேளைகளில் குடும்பத்தினருடன் சினிமாவுக்குப் போவார். எனினும் மருத்துவப் புத்தகங்களை வாசிப்பது தான் அவரது பிரதான செயற்பாடாய் இருந்தது.

காலத்தின் சுழற்சியினால் பிள்ளைகளின் வளர்ச்சியும் அதிகரித்தது. மூத்தவன் சுதன் இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். இரண்டாமகன் ஜெகன் முதலாம் வகுப்பிற்கு போய் வந்து கொண்டிருந்தான். லிங்காவின் பிடிவாத குணம் அவனிடம் அப்படியே குடி கொண்டிருந்தது. அண்ணா செய்வதெல்லாவற்றையும் தானும் செய்ய வேண்டுமென அடம் பிடிப்பான். சுதனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் போது பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டிருப்பான். அவனிடம் கேள்வி கேட்டால் தானே பதில் சொல்லுவான், பிள்ளைகளின் குறும்புத்தனங்களை சகிக்க முடியாமல் வாணி திண்டாடுவாள். ஆனால்... அப்பா வீட்டில் இருந்தால் போதும். பிள்ளைகள் வீட்டில் இருப்பதே தெரியாது. அவ்வளவு அமைதியாக நடந்து கொள்வார்கள்.

பிள்ளைகளின் அட்டகாசங்களை லிங்கா பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. தற்சமயம் அவரது கவனம் அவர்கள் மீது திரும்பி விட்டால் போதும் கையில் அகப்பட்டதை எடுத்து ஒரே விளாசல் தான். பிள்ளைகள் அடிவாங்கும் பொது வாணியின் மனது கிடந்து பதகளிக்கும். ஆனால்... அவள் போய் கணவனைத் தடுக்கமாட்டாள். தடுத்தால் அவரது கோபம் இன்னும் உக்கிரமாகும் என்பது அவளது கணிப்பு. அடிதடி எல்லாம் முடிந்து ஓய்ந்த பின் மெதுவாக பிள்ளைகளை அணுவாள். அவர்களது மேனியில் அடிபட்ட தழும்புகளுக்கு எண்ணெய் பூசி விடுவாள். அவளையறியாமலே கண்களில் நீர் துளிர்க்கும். வாய் வார்த்தைகளால் ஒத்தடம் கொடுக்கும்.

“எத்தினை தரம் சொன்னநான். அப்பா வீட்டில இருக்கேக்க அவதான மாய் நடந்து கொள்ளுங்கோ என்று நான் சொல்லுறது உங்கட காதில விழுந்தாத்தானே.”

மூத்தவன் சுதன் இரரகசியமாக அம்மாவிடம் கேட்பான்.

“அம்மா! அப்பா போட்டாரோ என்று பார்த்துச் சொல்லுங்கோ”

வாணியும் எடட்டிப் பார்த்து விட்டு வருவாள்.

“அப்பா இப்ப டிஸ்பென்சரிக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வரேக்க நீங்கள் ரெண்டு பேரும் புத்தகத்தை எடுத்து படிச்சுக் கொண்டிருங்கோ. சொல்லிப்போட்டன்.”

சுதன் அம்மா சொல்வதைக் கேட்டு நடப்பான். ஆனால் ஜெகனுக்கோ மனம் அமைதியடையாது.

“அப்பா அடிச்சுப்போட்டார்” என மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்ளுவான்.

லிங்காவும் வேலையால் வந்ததும் மக்களைக் கண்டும் காணாதது போல் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டு அப்பால் நகர்ந்து விடுவார். அவர்களை சமரசம் செய்வதற்காக வாணி பல யுத்திகளைக் கையாள வேண்டியிருக்கும்.

வேலைக்கு புறப்படுவதற்காக லிங்கா, கராஜிலிருந்து மோட்டார் சைக்கிளை வெளியே எடுத்துவர, வாணி சுதனைக் கூப்பிடுவாள்.

“சுதன்! இந்த தொப்பியைக் கொண்டுபொய் அப்பாட்டக் குடுத்திட்டுவா.”

அம்மாவிடமிருந்து தொப்பியை வாங்கிக் கொண்டு ஓடிப்போய் அப்பாவிடம் நீட்டும் போது,

“குட் போய். தாங்க் யூ”

என்று சொல்லி விட்டு அவர் புறப்பட்டுப்போவர். அத்துடன் சுதனுக்கு அப்பா அடித்த கோபம் மறந்து போய்விடும்.

ஜெகனுடைய மூர்க்கக் குணத்தை லிங்கா நன்கறிவார். மதியம் வேலையால் வரும்போது ஏதாவது பழங்கள் வாங்கி வருவார். வந்ததும் ஜெகனைக் கூப்பிடுவார். ஜெகனும் அவரது முகத்தைப் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தவாறு அவர் முன் நிற்பான்.

“இந்தா. இதில ரம்புட்டான் பழம் இருக்கு. அம்மாவிட்ட கொண்டு போய்க் குடுத்து அவ எடுத்துத் தாறதை வாங்கிச் சாப்பிடுங்கோ. என்ன!”

ஜெகன் அதை வாங்கிக் கொண்டு ஓட முற்படுவான். லிங்கா அவனைத் தடுப்பார்.

“என்ன! அப்பாவுக்கு தாங்க்ஸ் கிடையாதோ”

“தாங்க்ஸ் அப்பா” என்று தன்னை மறந்தவனாய் கூறிவிட்டு ஜெகன் ஓட்ட் பிடிப்பான். அத்துடன் வீட்டில் சமானதானநிலை ஏற்பட்டு விடும்.

அவர்களது மூன்றாவது மகன் பரதன் அப்போது கைக்குழந்தை அவனுக்கு அடிக்கடி நியூமோனியா ஜுரம் வந்து தாக்குவதனால் மெலிந்து காணப்பட்டான். லிங்காவும் அவனுக்கு சத்து நிறைந்த டானிக்குகளை வாங்கிக் கொடுத்த போதும் அவனது உடம்பு தேறவில்லை. வாணிக்கு பிள்ளைக் கவனிப்பதிலும், வீட்டு வேலைகளைச் செய்வதிலும் நேரம் போவதே தெரிவதில்லை. சிறிது நேரம் கிடைத்தால் தையலில் ஈடுபடுவாள்.

லிங்கா நிறைய சஞ்சிகைகளை வாங்கிப் போடுவார். வாணிதான் அக்கறையாக அவ்வளவையும் வாசித்து முடிப்பாள். அவர் தினசரியை மட்டும் வாசித்துவிட்டு மருத்துவப் புத்தங்களில் மூழ்கி விடுவார். முக்கியமான குறிப்புகளின் கீழ் கோடிட்டு அடையாளப்படுத்தி வைப்பார். அதில்த்தான் அவரது ஈடுபாடு.

***

ஒருநாள் லிங்கா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வை

யிட்டுக் கொண்டிருந்த போது ராஜா அவரது கையில் ஒரு கடிதத்தை கொண்டு வந்து கொடுதத்தான்.

“சேர்! போஸ்ற்றில வந்தது”

வேலை மும்முரத்தில் லிங்கா அதனை வாங்கி சட்டைப்பையில் வைத்துக் கொண்டார். வழமையாக சின்னத்தங்கைதான் ஊரிலிருந்து சுகம் விசாரித்து கடிதம் போடுவாள். அவளுடைய கடிதமாகத்தான் இருக்கும் என மனம் நினைத்துக் கொண்டதும். வேலை முடிந்து வீட்டிற்கு வந்தவருக்கு கடிதத்தின் நினைவு வரவே அதனை எடுத்து பிரித்துப் பார்த்தார்.

வழக்கத்திற்கு மாறாக அப்பா எழுதியிருந்தார். ஆர்வம் மேலிட அப்பாவின் கடிதத்தை வாசித்துப் பார்த்தவருக்கு மகிழ்ச்சி காத்திருந்தது. சின்னத் தங்கைக்கு ஒரு வரன் பொருந்தியிருப்பதால் அவரை உடனே வந்து நிச்சயதார்த்தத்தை முடித்துக் கொண்டு போகுமாறு அப்பா எழுதியிருந்தார். கடிதத்தை வாசித்து முடித்த லிங்கா, வாணியை அழைத்து விசயத்தைக் கூறினார்.

நிச்சயதார்த்தத்துக்கு லிங்கா மட்டும் போய் வருவது என தீர்மானிக்கப் பட்டது. திருமணத்துக்கு குடும்பத்தவர் அனைவரும் போகலானெ முடிவெடுத்துக் கொண்டார்கள்.

இளைய மகளுக்கு உறுதியெழுதிக் கொடுக்கும் போது அப்பா லிங்காவுக்கும் சில காணிகளை எழுதிக் கொடுத்தார். லிங்காவுக்கு ஊரில் சொத்து இருக்க வேண்டும் என்பது அவரது விருப்பம். அது மட்டுமல்ல. ஊருக்கு வந்து போகும் போது லிங்கா குடும்பத்தினர் தங்க ஒருவீட்டையும் கட்டிக் கொடுத்தார். தங்களது நலன் மீது அக்கறையிருக்கும் லிங்காவின் மீது அவருக்கு அப்படியொரு வாஞ்சை.

சின்னத் தங்கையின் திருமணம் சிறப்பாக நடந்தது. அம்மா இல்லாத போதிலும், அண்ணன்மார், அக்கா குடும்பத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து எதுவித குறையுமில்லாமல் திருமணத்தை நடத்தி வைத்தனர்.

திருமணத்திற்கு போய்விட்டு வந்தபின் லிங்காவின் மனதிலும் ஓர் அமைதி தோன்றியது. வழமையான தனது பொழுதுபோக்கில் ஈடுபாட்டார். அன்று காலையில் வந்த தினசரியை வாசிப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை. மாலையில் சற்று ஓய்வாய் இருக்கும் போது எடுத்து பார்வையைச் செலுத்தியவருக்கு அதிலிருந்த ஒரு செய்தி கண்களில் உறுத்தியது.

வித்தியோதய பல்கலைக்கழகம் அந்த விளம்பரத்தை பிரசுரித்திருந்தது.

DIPLOMA IN OPTOMETRY

அதாவது கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளை வழங்கும் சிகிச்சை நெறிக்கு மருத்துவத்துறை சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரியிருந்தனர்.

லிங்காவுக்கு அந்த பயிற்சிநெறியை மேற்கொள்ளவேண்டும் என்ற ஆவல் உந்தித்தள்ள உடனே வாணியை அழைத்து விசயத்தைச் சொன்னார்.

வாணியும் உடனே அவரது கூற்றை ஆதரித்தாள்.

"உங்களுக்குத் தான் பௌதிகவியல் விருப்பமான பாடாச்சே. அது உங்களுக்குப் பொருத்தமானது தான்"

வாணியும் உற்சாப்படுத்த அவரும் உடனே ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார். சொல்லி வைத்தாற் போல் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பு வந்தது. லிங்கா வேலைக்கு ஒரு நாள் லீவு போட்டு விட்டு கொழும்பிற்குப் போய் வந்தார். அவருக்கு கற்கைநெறிக்கு அனுமதியும் கிடைத்தது.

வார இறுதி நாட்களில் மட்டும் தான் வகுப்புகள் நடைபெறுவது அவருக்கு அனுகூலாயிருந்த போதிலும் மேலிடத்தில் அனுமதி பெற்றுத்தான் அவர் பயிலத் தொடங்கினார்.

வெள்ளிக்கிழமை மாலையில் புறப்பட்டுப் போவார். திங்கள் அதிகாலையில் வந்துவிடவார். எனவே வேலைக்கு பெரிய பாதிப்பு ஏற்பட வில்லை. ஆனால்... வீட்டில் வாணிக்குத்தான் பிள்ளைகளால் பாதிப்பு ஏற் பட்டது. அப்பா வீட்டில் இல்லாவிட்டால் அவர்களது அட்டகாசம் சொல்லும் தரத் தில் இல்லை. பெரும் பிரயத்தனப்பட்டு அவர்களை அடக்க வேண்டியிருந்தது.

ஒருவாறு லிங்கா இரண்டு வருட கற்கை நெறியையும் வெற்றிகரமாக முடித்துவிட்டார். வாணியும் நீண்ட நிம்மதிப் பெருமூச்சொன்றை விட்டாள்.

அந்தக் காலகட்டத்தில்த்தான் லிங்காவுக்கு பிள்ளைகளின் கல்வி பற்றி சிந்தனை உள்ளத்தில் துளிர்விட்டது. மூத்தவன் சுதன் அப்போது நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். பிள்ளைகளது கல்வியின் முக்கியத்தை உணர்ந்து கொண்டவராய் அவர், அவர்களை ஊரிலுள்ள பாடசாலையில் கொண்டு போயங்ச் சேர்த்து விடுவது என முடிவெடுத்தார். விளைவு.... வாணியையும் குழந்தைகள் மூவரையும் சண்டிலிப்பாயிலுள்ள அவர்களது வீட்டில் குடியமர்த்தினார். வாணியின் பெற்றோர், சகோதரர்கள் அருகில் இருந்ததால் அவளால் சமாளிக்க முடிந்தது.

சுதனையும், ஜெகனையும் வாணி நிகேதன் வித்தியாசாலையில் சேர்த்துவிட்டு, மூன்றாமவன் பரதனை முள்பள்ளிக்கு அனுப்பினாள், வாணி. அங்குபோல் இங்கு வசதியில்லாவிட்டாலும் எல்லாவற்றையும் சுமுகமாக சமாளிக்கப் பழகிக் கொண்டாள்.

மாதங்கள் சில உருண்டன. கருவுற்றிருந்த வாணி இந்தத் தடவையும் ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். உண்மையில் வாணிக்கு இது பெரும் ஏமாற்றமே. இருந்தாலும் அவள் மனம் தளரவில்லை. ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் நாங்கள் வளர்க்கும் வளர்ப்பில்த்தான் எல்லாமே தங்கியுள்ளது. நான் எனது பிள்ளைகளை அதற்கேற்றவாறு வளர்ப்பேன் என கங்கணம் கட்டிக்கொண்டாள். லிங்காவுக்கு ஆணு் குழந்தையாகப் பிறந்ததில் எதுவித சலனமும் இல்லை. ஆனால்... அவருக்குள் ஒரு மாற்றம் நிகழ்ந்தது என்னவோ உண்மைதான்.

இத்தனை காலமும் எடுத்ததெற்கெல்லாம் சீற்றத்தைக் காண்பிதத்து வந்த லிங்கா, இப்போது சாந்த சொரூபியாக மாறிவிட்டார். மூத்தவர்கள் மூவரையும் தூக்கியெடுத்து சீராட்டாதவர், குட்டிடித்தம்பியை மட்டும் அள்ளியெடுத்து மடியில் வைத்து மடியில் வைத்து பிரியமாய் கதைத கேட்பார். வார்த்தைக்கு வார்த்தை “குட்டிப்பாப்பா“ என்று அழைப்பதைக் கண்டு வாணி அதிசயப்பட்டாலும் உள்ளார மனம் மகிழுவாள். குட்டித்தம்பி பிறந்த பலன்தான் அப்பாவின் மனமாற்றத்துக்குக் காரணம் என குடும்பத்தவர் அனைவரும் நம்பினார்கள்.

***

ஒருவாறு லிங்காவும் தனது இருபது வருட சேவையை முடித்து விட்டார். சுகவைப் போலவே ராஜாவும் அரசாசங்கத்தில் மருந்தாளராக பதிவு செய்யப்பட்டு நிரந்தர நியமனம் பெற்று வேறிடத்துக்குப் போய்விட்டான். அவர்கள் இருவரையுமே முன்னேற்றி விட்ட திருப்தியினால், லிங்காவின் மனம் நிறைந்தது. தானும் ஒரு பதிவு செய்யப்பட்ட மருத்துவராக வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் செயற்படத் தொடங்கினார். மருத்துவ சபை அவவைர இரண்டு வருடங்கள் முல்லைத்தீவு அரசாங்க வைத்தியசாலையில் வேலை செய்யுமாறு பணித்தது. எனவே அவர் புசல்லாவவை விட்டு விலகி ஊருக்கு வந்து சேர்ந்தார்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் அவர் போய் பதவியேற்றார். அவருக்கு தங்குவதற்கு வைத்தியசாலை வளாகத்துக்குள்ளேயே விடுதி ஒன்றும் கொடுத்திருந்தார்கள். எனவே அவர் பிள்ளைகளையும் தன்னோடு அழைத்து வரலாமென திட்டமிட்டார். வாணியும் அவரது விருப்பத்தை ஆமோதித்தாள். இருந்தாலும் அவரது குட்டிப்பாப்பா அம்மம்மாவை விட்டு வரமாட்டேன் என பிடிவாதம் பிடித்தான். லிங்காவும் அவனை அங்கேயே இருந்து படிக்குமாறு விட்டுவிட்டு மற்றவர்களைத் தன்னுடன் அழைத்து வந்துவிட்டார்.

மூத்தவன் பத்தா் ஆண்டிலும், ஜெகன் ஒன்பதாம் மூன்றாமவன் பரதன் மூன்றாம் ஆண்டிலும் கல்வி பயின்று கொண்டிருந்தார்கள். அவர்களை முள்ளியவளையில் அைந்துள்ள வித்தியானந்தா கல்லூரியில் சேர்த்து விட்டார். தினமும் அவர்கள் முல்லைத்தீவிலிருந்து பஸ்ஸில் முள்ளியவளைக்குப் போய் கற்று வந்தார்கள். அப்போது தான் லிங்காவுக்கு மனதில் ஒரு யோசனை உருவாகியது. அதன் விளைவாக, தண்ணீரூற்றில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் போய் அவர்கள் குடியேறினர். லிங்கா, தனக்கென ஒரு புது மோட்டார் சைக்கிளை வாங்கி அதில் முல்லைத்தீவு வைத்தியசாலைக்குப் போய் வந்தார். பிள்ளைகள் பாடசாலைக்கு நடந்து போய் வந்தார்கள். லிங்காவின் இரண்டு வருட பணிக்காலமும் முடிவடைந்தது.

அவர் தன்னுடைய பதவிக் காலத்ததில் நிறைப்பேரை சந்தித்திருந்தார். முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு மீன்பிடிக் கிராமங்களாகிய கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு மற்றும் வட்டுவாகல், முள்ளியவளை,

தண்ணீரூற்று போன்ற கிராமங்களிலிருந்து நோயாளர் வந்து மருந்தெடுத்துக் கொண்டு போவார்கள். அவர்களுக்கு லிங்கா டாக்டர் மீது அதீத நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. நோயாளருடன் அவர்களது நோயைப்பற்றி மட்டும் விசாரிக்காமல் அவர்களது வாழ்க்கை வளங்கள் பற்றியும் அலசுவது அவரது சுபாவம். எனவே அவர்களது மனங்களில் அவருக்கென்று ஒரு தனி இடம் இருந்தது. அதுவே லிங்காவின் தொழிலுக்கும் சாதகமாக அமைந்து விட்டது.

லிங்காவின் பதவிக்காலம் முடிந்துவிட்டது. வருமானம் எதுவும் இல்லை. குடும்பம் எனும் வண்டியை இழுக்க வேண்டிய பொறுப்பு அவருடையதாயிற்று. ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி அவர் ஒரு தனியார் மருத்துவசாலையை “நாகபூசணி வைத்தியசாலை“ என நாமமிட்டு ஆரம்பித்தார். அவர் வணங்கும் குல தெய்வம் நாகபூசணி அம்பாள் அவரைக் கைவிடவில்லை. ஆரம்பித்த உடனேயே வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வந்து குவியத் தொடங்கின். அவரால் தனியே சமாளிக்க முடியாத வேளைகளில் வாணி முன் வந்து அவருக்கு உதவி செய்தாள்.

நாளடைவில் அவர் தனக்கென்று ஒரு உதவியாளை நியித்துக் கொண்டார். மிகவும் வறிய குடும்பத்தில் உள்ள ஒரு படித்த பெண்பிள்ளையைத் தெரிவு செய்தார். அந்தப் பிள்ளையும் மிகவும் பிரயாசையுடன் வேலையை கற்றுக் கொண்டுவிட்டாள். மாதம் முமடிய அவருக்குரிய சம்பத்தைக் கொடுத்து விடுவார். இதனால் அந்தக் குடும்பமும் பயனடைந்தது. தானும் பலளடைந்தார். பிறர்க்கு உதவி செய்வதும், மற்றவர்களுக்கு அனுகூலாக நடப்பதுமே அவரது கொள்கை தவிர நிறை பணத்தைத் தேடி ஆட்பரரமாக வாழவேண்டும் என்பது கிடையாது. செய்யும் தொழில் மனத்திருப்தி கிடைக்க வேண்டும என நினைப்பவர், லிங்கா.

நோயளர்களிடம் அதிக தொகை வசூலிக்க வேண்டும் என நினைக்க மாட்டார். மருத்துக்கான பணமும், தனது பங்களிப்புக்கென ஒரு சிறு தொகையும் அறவிடுவார். வந்தவர்கள் பரம ஏழைகள் எனக் கண்டால் மருந்துக்கான பணத்தை மட்டுமே எடுப்பார். அதே சமயம் அவர்களது நிலை கண்டு உணவும் சாப்பிடக் கொடுத்து அனுப்புவார். சிலரை அரசாங்க வைத்தியசாலைக்கு போகுமாறும் அறிவுறுத்தி விடுவார். ஆனால்... எவரும் கடன் சொல்லி மருந்து எடுக்க முடியாது. அதற்கு இடம் கொடுக்க மாட்டார்.

வெகு தொலைவிலிருந்தெல்லாம் நோயாளர்டகள் வரத் தொடங் கினார்கள். அவர்களுக்கெல்லாம் வைத்தியம் செய்வதில் அவருக்கு ஒரு மனநிறைவு கிடைக்கும். நோயாளர்களை வீட்டிற்கு முன்னால் பஸ்ஸை நிறுத்தி இறக்கி விடுமளவிற்கு நாகபூசணி வைத்தியசாலை பிரபலமாயிற்று. அவர் எதிர்பார்த்ததை விட தொழில் நன்றாக போய்க் கொண்டிருந்தது. ஆனால் அவரது வாழ்க்கையோ எளியையாகவே நகர்ந்தது.

ஒரு நாள் ஒரு பையன் மூத்தவன் சுதனைத்தேடி வந்திருந்தான். விசாரித்துப்பார்த்ததில் அவன் சுதனிடம் பாடம் கேட்டுப் படிக்க வேண்டுமென

விண்ணப்பித்தான். எடுத்த எடுப்பிலேயே லிங்கா அவனது கூற்றை ஆமோதித்து விட்டார்.

"மேசையில இருந்து படிக்கேக் எல்லாரும் படிப்பிலையே கவனத்தைச் செலுத்த வேணும் அதை விட்டிட்டு இடையிடையே கிசுகிசுக்கக்கூடாது. என்ன நான் சொல்லுறது விளங்கிச்சுதோ?"

வந்திருந்த புதுப்பையன் கிரி உட்பட அனைவரும் தலையாட்டினர்.

பொழுது கவிழ்ந்தால் வாணி மேசைவிளக்கை கொளுத்தி நடுமேசை யில் வைத்துவிடுவாள். பிள்ளைகள் மூவரும் கிரியுமாக நான்கு பேரும் நாலு பக்கத்திலும் இருந்து படிப்பார்கள். இடையிடையே விளங்காத பாடங்களை கிரி சுதனிடம் கேட்டுக் கொள்ளுவான்.

லிங்காவின் குட்டிப்பாப்பா ஊரில் அம்மம்மாவுடன் இருந்து கொண்டு அங்குள்ள பாடசாலைக்கு போகத் தொடங்கியிருந்தான். லிங்காவுக்கு மகனைப் பார்க்க வேண்டும் என்ற தவனம் வரும்போது யாழ்ப்பாணத்துக்குப் போய் தனது வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்துகளையும் வாங்கிக் கொண்டு மகனுடனும் அளவளாவி விட்டு வருவார்.

காலப்போக்கில் கிரி அந்த வீட்டுக்காரர்களில் ஒருவுனாக ஒன்றி விட்டான். லிங்காவும் வாணியும் அவனையும் தங்களது பிள்ளையாகவே கணிக்கத் தொடங்கினர். அதுமட்டுமல்ல. கிரியின் பெற்றோரும், சகோதரர்களும் கூட அடிக்கடி வந்துபொய் உறவைபலப்படுத்திக் கொண்டு விட்டனர்.

அதே சமயம் அவர்களுக்கு வீட்டை வாடகைக்கு கொடுத்த அம்மாவும் அவரது பிள்ளைகளும் நெருக்கமாகி விட்டனர். பிறப்பிலிருந்து தொடர்வது தான் சொந்தம் என்பதல்ல. இப்படியாக மற்றவர்களது சுக துக்கங்களையும் நலன் களையும் பகிர்ந்து கொள்ளும் நெஞ்சங்களும் நெருக்கமான உறவுகளே என லிங்காவ் வாணியும் கருதினார்கள். அப்படியான உறவுகள் காலமெல்லாம் நிலைத்திருக்கக் கூடியது. இது தான் நிதர்சனமான நிலைப்பாடும் கூட.

***

லிங்காவின் தொழில் நாளொரு வண்ணமாக வளர்ந்து கொண்டே யிருந்தது. அவருக்கு நேரகாலத்துக்கு உணவு உண்ணவோ, உறங்கவோ நேர் கிடைப்பது அரிதாகி விட்டது. சிலவேளைகளில் மதியம் வைத்தியசாலையை மூடுவதற்குக் கூட நேரமில்லால் போய்விடும். களைத்துப்போனவராய் லிங்கா வந்து உணவில் கைவைத்ததும் "ஐயா!" என்ற குரல் கேட்க வேண்டியது தான் தாமத். உடனே அவர் கையை உதறிவிட்டு நோயாளரைக் கவனிக்க எழுந்து போய் விடுவார். வாணிக்கு இது எரிச்சலை ஏற்படுத்தும்.

"ஏன் இப்படி சாப்பாட்டையும் கவனிக்கால் உழைப்பு என்று அலையிறியள். எங்களுக்ககோ இருக்கிறது நாலும் ஆம்பிளைப்பிள்ளையள். யாருக்குத் தேவை பணம்"

வாணி இப்போது சற்று துணிவாகக் கதைக்கப் பழகிவிட்டாள்.

“நான் இப்ப ஒன்றும் பணத்ததிற்காக அலையவில்லை. நோயாளரைக் கவனிக்க வேணுமென்ற அக்கறை தான் எனக்கு. அங்கால நோயாளர் இருந்து அனுங்க இஞ்சால இருந்து சாப்பிட எனக்குத் தொண்டையால போனாத்தானே”

சிறிது நேரத்தில் மனம் பொறுக்காதவளாய் வாணி நிறையப்பாலுக்குள் சிறிது சாயம் விட்டு தேநீர் தயாரித்து வந்து கொடுப்பாள். அவரை உள்ளே கூப்பிட்டு அந்தத் தேநீரைக் கொடுப்பதற்குள் அவளுக்கு போதும் போது மென்றாகி விடும்.

இரவு வேளைகளிலும் நோயாளர் வந்து கூப்பிடுவார்கள்இ கூடுதலாக முட்டு மூச்சிழுப்பு என்று தான் வருவார்கள். சற்றும் சலிக்காமல் எழுந்து போய் அவர்களுக்கு அனுசரணையாகக் கதைத்து சிகிச்சையளித்து விட்டு வருவார். சரியான ஓய்வு இல்லாமல் கணவனுடைய உடல் பாதிக்கப்படுமோ என்ற கவலை வாணியை அரிக்கும்.

அந்தக் காலத்தில் போக்குவரத்துச் சாதனங்கள் குறைவு. சைக்கிள், உழவு இயந்திரங்கள் தான் கூடுதலாக போக்குவரத்துக்குப் பயன்பட்டது. சில வேளைகளில் நோயாளர்களை அவர்களது வீட்டிலேயே போய்ப்பார்க்க வேண்டிய சந்தர்ப்பமும் வரும். நடுச் சாமானாலும் லிங்கா புறப்பட்டுப் போய் விடுவார். அவர் திரும்பி வரும் வரை வாணி வாசலையே பார்த்துக் கொண்டு விழித்திருப்பாள். லிங்கா வந்தவுடன் மனைவியைக் கடிந்து கொள்ளுவார்.

“ஏன் இப்ப பனிக்குள்ள வந்து இருக்கிறீர். போன நான் வருவன் தானே?”

“நேரத்தோடயே வந்து மருந்தெடுக்கால் இருந்திட்டு இப்பிடி ஏமசாமத்தில் வந்து உங்களைக் கூட்டிக் கொண்டு போகினம். இனிமேல் வந்து இரவில கூப்பிட்டால் நீங்கள் போகாதையுங்கோ”

“இதென்ன உம்முடை கதை. காலநேரம் பார்த்து நோய் வாறதில்லை. எந்த நேரமானாலும் மன் கோணால் சிகிச்சை செய்ய வேண்டியது ஒரு வைத்தியனின் கடமை”

“உற்களோட கதைக்கேலாது. இப்ப போய் கால் முகத்தை கழுவிப் போட்டு வந்து படுங்கோ”

“செய்யும் தொழிலே தெய்வம்  எண்டது தான் என்னுடைய பொலிசி. அதுக்குக் குறுக்காய் யார் வந்தாலும் அது எனக்குப் பிடிக்காது”

ஒரே வார்த்தையில் விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பார், லிங்கா. ஆற்றாமையினால் வாணியின் நெஞ்சு வலிப்பது அவருக்கு எங்கே தெரியப் போகிறது.

அன்று வெள்ளிக்கிழமை. திய நேர இடையேளைக்குள் வைத்திய சாலையை பூட்டிவிட்டு காயிலுக்குப்போய் வரலாமா என வாணி கணவனிடம் கேட்டாள். லிங்கா அதற்கு ஒப்புக் கொண்டது வாணிக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இருவரும் கே ாயிலுக்குப் போய் மதியநேரப் பூசையைப் பார்த்துக் கொண்டு வீடு திரும்பினர். அன்றை நாள் வாணிக்கு மனம் குளிர்ந்த நாளாகத்

தோன்றியது. திரும்பி வந்து பார்த்தால் வீட்டு வாசலில் ஒரு கூட்டமே நின்றிருந்தது. நல்ல வேளையாக மதிய உணவிற்காக வீட்டுக்குக் சென்றிருந்த உதவியாளரான பிள்ளையும் வந்து சேரவே, லிங்கா தனது கடமையில் இறங்கி விட்டார். வாணியின் மனதில் மட்டும் இனம் புரியாத ஒரு குற்ற உணர்வு தோன்றி அவளை வருத்தியது. காரணம் கைக்குழந்தையுடன் ஒரு தாய் வெய்யிலில் நின்று தன் அழுகையைச் சமாளிக்க முடியாமல் திண்டாடியது தான்.

அதன் பிறகு வாணி கணவனை எங்கேயும் வெளியிடங்களுக்குப் போய்வர அழைப்பதில்லை. தேவை ஏற்படும் போது தான் தனியாகவே போய் வருவாள். லிங்காவும் அதை மனநிறைவுடன் ஏற்றுக் கொள்வார்.

அன்று சனிக்கிழமை. சனி ஞாயிறு தினங்களில் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது வழக்கம். எனவே லிங்கா வழமைக்கு மாறாக ஏழரை மணிக்கே வைத்தியசாலைக்கு வந்து விட்டார். வாணி அவரை வற்புறுத்தி காலை உணவை உட்கொள்ள வைத்து விட்டாள். காரணம் நேரம் தாழ்த்தினால் அவர் அன்று சிவபட்டினியாக இருக்க வேண்டியிருக்க். அவருடைய உதவியாளர் கூட இன்னும் வந்து சேரவில்லை.

“ஐயா!”

குரல் கேட்டு மேசையின் முன் அமர்ந்திருந்து ஏதோ மருத்துவக் குறிப்பொன்றில் மூழ்கியிருந்த லிங்கா எட்டிப்பார்த்தார். பொன்னையா அண்ணை கையில் ஒரு பொதியுடன் நின்றிருந்தார்.

“பொன்னையா அண்ணை! நான் இஞ்சை தான் இருக்கிறன். உள்ளுக்கு வாங்கோ”

“ஐயா! முதல்ல இதை வாங்கிக் கொள்ளுங்கோ.”

“என்ன அண்ணை இது?”

“அது வந்:து... என்ரை தோட்டத்தில முதன் முதலாய் அறுவடை செய்தது. அதை ஐயாவுக்குத் தான் குடுக்க வேணுமெண்டது என்ரை விருப்பம்.”

சிறிது தயக்கத்துடன் கூறிவரைப் பார்த்து நகைத்தவாறே கூறினார், லிங்கா.

“இதென்னண்ணை விசர்க்கூத்து. நீங்கள் பாடுபட்டுச் செய்தது. பிரயோசனத்தைக் கொண்டு போய் சந்தையில தானே குடுக்க வேணும்”

“அதில்ல ஐயா. என்ரை வோட்டர் பம்ப் ஒரேயடியாய் கையைய விட்டு நான் தோட்ட் செய்ய முடியாம அந்தரிச்சுப் போய் நிக்கேக்குள்ள... நீங்கள் தான் பெரிய மனசு பண்ணி ஒரு ஐயாயிரத்தைத் தூக்கித் தந்தியள். நானும் புதுசா ஒன்றை வாங்கி பயிர் கொடியை வைச்சன். எல்லாம் உங்களால தான். அதைத மறந்தா நான் மனுசனா இருக்க முடியாது”

“சரி சரி. இப்ப அதையெல்லாம் என்னத்துக்கு. அண்ணா நான் உங்களுக்கு ஒன்றும் சும்மா தரயில்ல. கடனாய்த்தான் தந்த நான்.”

“கடனாய் என்றாலும் பொறுப்பில்லாமல் ஆரும் தருவினமே?”

எதையோ நினைத்துக் கொண்டவராய் லிங்கா மேசை லாச்சியிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து பொன்னையா அண்ணரிடம் நீட்ட, அவரும் அதை இரு கைகளாலும் வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டார்.

"இனிமேல் இப்பிடியான வேலைகளை வைச்சுக் கொள்ளக்கூடாது"

கண்டிப்புடன் வந்தது குரல்.

"ஐயாவுக்கு சந்தோசமாத்தான் குடுக்க வேணும் என்று கொண்டு வந்தநான். ஆனா… நீங்கள் காசைத் தந்து போட்டியள். உங்கட ராசியான கையால காசு வேண்டினது எனக்கும் சந்தோசம் தான்"

பொன்னையா அண்ணை போய் விட்டார்.

வறுமைமயில் உழலும் ஏழை விவசாயிகளுக்கு லிங்காவின் உதவும் கரங்கள் ஒரு வரப்பிரசாதாக அமைந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. எனினும் அதற்காக அவர் அள்ளிக் கொடுத்தார் என்று சொல்லி விட முடியாது. அவர்களது வறுமை நிலையிலிருந்து மீளுவதற்கு அறிவுரை வழங்கி, ஒரு உந்து சக்தியாக இருந்து வழி நடத்தினார்.

***

வழமைபோல ஜெகன் பாடசாலை விட்டு வந்ததும் அம்மா தந்த சிற்றுண்டியையும் சாப்பிட்டு தேநீரையும் குடித்துவிட்டு ரியூசனுக்குக் கிளம்பினான். வைத்தியசாலையிலிருந்தவாறே அவனை அவதானித்துக் கொண்டிருந்த லிங்கா, அவனைக் கூப்பிட்டார்.

"தினமும் வந்து உன்னை ரியூசனுக்கு கூட்டிக் கொண்டுபோற அந்த துணுக்காய்ப் பெடியனை இரண்டு மூன்று நாளாய்க் காணயில்ல, என்ன சங்கதி. ஏதும் சுகயீனமோ?"

கரிசனையுடன் அப்பா கேட்ட கேள்விக்கு ஜெகன் பதில் சொன்னான்.

"அவன் ரவியைக் கேக்கிறியளோ. அவன் கஷ்டப்பட்ட குடுகம்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய அப்பா கமம் செய்யிறவர். அவனுக்கு படிக்கவேணுமெண்ட ஆசையில இஞ்சை வந்து ஒரு வீட்டில தங்கியிருந்து படிக்கிறான். இரண்டு மாசமா ரியூசன் காசு குடுக்க முடியாமல் போயிட்டுது. அது தான் அவன்ன ரியூசனுக்கு வாறதில்லை"

மகன் மீது சீறி விழுந்தார் லிங்கா.

"உந்த விசயத்தை ஏன் என்னட்டை நீ சொல்லயில்ல. நல்லாய்ப் படிக்கக் கூடிய பிள்ளை. உடன போய் நீ அவனை ரியூசனுக்கு கூட்டிக் கொண்டு போ. எவ்வளவு காசு கட்ட வேணுமோ அதை நான் குடுக்கிறன். மாதாமாதம் நீ அவனுக்கும் சேர்த்துக் கட்டிவிடு. விளங்கிச்சுதா?"

"சரியப்பா"

ஜெகன் போவதையே லிங்கா வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது அடிமனதில் ஒரு சிறு வேதனைத் துளி ஊசலாடியது. மறுகணமே அது தணிந்து போனது. அந்தச் சமயத்தில் அவருக்கு மற்றுமொரு சம்பவம் நினைவில்

வந்து போனது.

மூத்தவன் சுதனோடு படித்துக் கொண்டிருந்த குமளமுனையைச் சேர்ந்த பையனொருவன் வசதியின்மையால் ரியூசனுக்குப் போவதில்லை என அறிந்து கொண்டவுடன் அவனுக்கு மாதாதம் பணம் செலுத்தி படிக்க வைத்தார். அவனும் முதல் முறையிலேயே பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி பொறியியல் பீடத்தில் இப்போது இரண்டாவது ஆண்டில் கற்றுக் கொண்டிருக்கிறான். அவன் விடுமுறையில் வரும் போது அவரை வந்து சந்திக்கத் தவறுவதில்லை. நினைவு தந்த இதமான சுகத்தில் நிம்மதிப் பெருமூச்சு ஒன்று வெளியேறியது.

கல்விக்கு உரமூட்டுவது தனது கடமை என நினைப்பவர், லிங்கா.

ஒரு சமயம் திடீரென நோய்வாய்ப்பட்டாள், வாணி. லிங்காவின் வைத்தியம் கைகொடுக்காமல் போகவே அவர் அவளை யாழ்ப்பாணத்திற்குப் போய் ஒரு சேர்ஜனிடம் காட்டுமாறு அனுப்பி வைத்தார். பெற்றோர், சகோதரர் களின் உதவியுடன் அவள் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரை அணுகினாள். அவளைப் பரிசோதித்த வைத்திய நிபுணர், உடனேயே சத்திர சிகிச்சை செய்யவேண்டுமென அறிவுறுத்தினார். எதுவும் செய்து கொள்ள முடியாத நிலையில் வாணி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மறுநாட் காலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களும் நடை பெற்றன. தொடர்பு சாதனங்கள் எதுவுமற்ற நிலையில் கணவனுக்கு தகவல் அனுப்ப முடியாத நிலையில் வாணி சத்திர சிகிச்சைக்காக தயார்ப்படுத் தப்பட்டாள். கணவகைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் அவளது மனதைத நிறைத்திருந்தது. யாவும் தயாராகிக இரண்டாவது சத்திரசிகிச்சைக்குரிய நோயாளியாக அவளது பெயரும் அறிவிக்கப்பட்டு விட்டது. இனி அவளை அழைத்துச் செல்ல வேண்டியது தான் பாக்கி.

மனக்கிலேசத்துடன் வாணி வார்ட்டின் வாசலைத் திரும்பிப் பார்த்தாள். என்ன ஆச்சரியம் லிங்கா அங்கே நின்றிருந்தார். சட்டென அவளது அருகில் வந்து தலையைத் தடவி விட்டார். வாணிக்கு அந்த இறைவனே இறங்கி வந்து தன்னை ஆசீர்வதித்து விட்டது போன்றதோர் பிரமையில் மனம் மகிழ்ந்தாள்.

மதியம் பன்னிரண்டு மணிபோல் சத்திரசிகிச்சை முடிந்து அவள் வார்ட்டுக்கு கொண்டு வரப்பட்டாள். நினைவு திரும்பியும் திரும்பாமலும் இருந்த அந்தக் கணத்தில் கணவனது கை தன்னை ஆதரவுடன் தடவிக் கொடுப்பதை அவளால் உணர முடிந்தது.

“வாணி! பிள்ளைகள் வீட்டில தனிய. நான் போட்டு வாறன்”

காதுக்குக் குரல் கேட்டதே தவிர அவரை நிமிர்ந்து பார்க்க விடால் இமைகள் கனத்தன. ஒரு குடும்பப் பொறுப்புள்ள தலைவனாய் தனது கணவனை எண்ணி இறுமாப்படைந்தாள், வாணி. வாணிக்கு ஏற்றுவதற்கு ஒரு பைந்து இரத்தம் தேவைப்பட்டதாகவும் அதையும் அவரே இரத்த வங்கியில் கொடுத்து

விட்டுப் போனதாகவும் வாணி பின்னர் அறிந்து கொண்டாள். அவரைக் கவனித்து தேற்றுவதற்கு தான் அருகில் இல்லையே என்ற ஏக்கத்தில் துடித்துப் போனாள், அவள்.

ஒருவாறு வாணி உடம்பு தேறி மீண்டும் குடும்பத்தினருடன் வந்து இணைந்து கொண்டாள். வாணியினால் முன்ரைப் போல் வேலைகளைச் செய்ய முடியாவிட்டாலும் பிள்ளைகளின் உதவியினால் குடும்பத்தை ஒரு குறையுமில்லாமல் கவனிக்க முடிந்தது.

காலம் தன் கடமையைச் செவ்வனே செய்ய அவர்களது குடும்பமெனும் வண்டியும் மெதுமெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு. லிங்கா ஓய்வாக இருந்து குடும்பத்தினருடன் அளவளாவிக் கொண்டிருந்தார். திடீரென அவர், "எனக்கு ஒரு ஆசை இருக்குது" என்று சொல்லவும் அனைவரும் அவர் என்ன சொல்லப் போகிறார் என ஆவலுடன் காத்திருந்தனர்.

"மாங்குளத்தில் ஒரு வீடு கட்ட வேணும்"

ஜெகனும் பரதனும் ஏக குரல் கூறினர்.

"அப்பா! அது நல்ல ஐடியாதான்"

லிங்கா புசல்லாவவில் வேலை செய்த போது பத்திரிகையில் வந்த விள்பரமொன்றைப் பாபர்த்துவிட்டு நேராக மாங்குளத்திற்குப் போய் விலை பேசி வாங்கியது தான் அந்தக் காணி A9 வீதியில் அமைந்துள்ள அந்தக் காணியின் விஸ்தீரணம் ஐந்து ஏக்கநாகும். கால போகத்திற்கு அதில் உழுந்தும் நெல்லும் விதைப்பது வழக்கம். அந்தக் காணியை பராமரிப்பதற்காக ஒருவரை குடியிருத்தியிருந்தார். அதற்குள் ஒரு சிறு வீடு கட்டி அவர் இருப்பதற்கு ஏதுவாக வசதியும் செய்து கொடுத்திருந்தார், லிங்கா.

"கடவுளே! அவரது ஆசை எதுவித தடங்கலுமன்றி நிறைவேற வேண்டும்"

வாணி மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டாள். அவர் கார் வாங்கப் புறப்பட்டு அவரது ஆசை நிறைவுறாமல் போனதையிட்டு அவளுடைய மனத்தில் ஒரு வருத்தம் இருந்து கொண்டேயிருந்தது.

அவர்கள் கட்டப் போகும் வீட்டைப்பற்றிய அபைப்பை எல்லோருமாகக் கூடி முடிவெடுத்துக் கொண்டனர். ஒரு நல்லநாள் பார்த்து அத்ததிவாரம் போட்டாயிற்று. அதே நாளில் அவர்கள் வசிக்கும் வீட்டுக்கு சொந்தக்காரியான அம்மாவின் மகன் ஜெயசீலன் அண்ணாவும் தன்னுடை வீட்டிற்கு அத்திவாரம் போட்டார். லிங்கா வேலைகளை பொருத்தம் பேசிக் கொடுத்து செய்வித்தார். காரணம் அவரால் போய் நின்று செய்விக்க நேரம் கிடைக்கவில்லை. வாணியும் ஜெகனும் அடிக்கடி பஸ்ஸில் போய்ப்பார்த்து வருவார்கள். லிங்கா இடையிடையே ரோட்டார் சைக்கிளில் போய் ற்பார்வை செய்வார். மெது மெதுவாக அவர்களது விருப்பப்படியே வீடு உருவாகிவிட்டது.

நாள் நட்சத்திரம் பார்த்து லிங்கா குடும்பத்தினர் புது வீட்டிற்கு குடி போயினர். யாழப்பாணத்திலிருந்து குட்டித்தம்பியும் அம்மம்மாவும் வந்திருந்தனர். மூத்தவன் சுதன் மட்டும் வரவில்லை. அவன் மருத்துவ பீடத்துக்கு தெரிவாகியிருந்தபடியால் யாழ்ப்பாணத்தில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதில் தங்கியிருந்து படித்துக் கொண்டிருந்தான்.

வீடு கட்டி குடியும் புகந்தாயிற்று. அப்போது தான் புதிதாக ஒரு கேள்வி முளைத்தது. வீட்டில் குடியிருப்பது யார் என்பது தான் கேள்வியாகியது. வாணி யின் அப்பா தான் வந்து சில கால் அங்கே இருக்கப் போவதாக விரும்பினார். கிழமைக்கு ஒரு தரம் வாணி வீட்டிற்குப் போய் வருவாள். அப்பாவுக்குத் தேவையானதைக் கொண்டு போய்க் கொடுப்பாள். மாதங்கள் சில கழிந்தன. குறிப்பிட்ட அட்டவணைப்படி ஏ.எல். பரீட்சையும் நடந்து முடிந்தது.

ஜெகன் அப்பப்பாவுடன் போய்த் தங்கப் போவதாக மாங்குளத்திற்கு புறப்பட்டான். கூடவே பரீட்சையை எழுதி முடித்த கிரியும் போனான். வாணியின் கடைசித்தம்பியும் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு வந்து சேர அவர்களுக்கு சில மாதப் பொழுதுகள் இனிமையாகக் கழிந்தன.

இதற்கிடையில் கிரிக்குதான் வெளிநாட்டிற்குப் போய் உழைக்க வேணுமென்ற ஆசை குளிர் விட்டது. எனவே அவன் லிங்காவை அணுகினான்.

“அப்பா! நான் வெளிநாட்டுக்கு போகலாமென்று யோசிக்கிறன்”

பிடரரியைத் தடவியவாறே விண்ணப்பத்தை முன் வைத்தான். லிங்காவுக்கோ வெளிநாட்டுக்கு பிள்ளைகளை அனுப்புவதில் இஷ்டமில்லை. எனவே அவனுக்கு ஆலோசனை வழங்க முற்பட்டார்.

“இஞ்சை பார் கிரி. நீ நல்லாய் படிக்கக்கூடிய பிள்ளை. வடிவாய் கம்பஸ்க்கு என்ரர் பண்ணி ஒரு பட்டதாரியாக வரலாம். ஆர் உனக்கு வெளிநாட்டு ஆசையை தூண்டி விட்டது”

“இல்லையப்பா. எனக்கு வீட்டில நிறைப் பொறுப்பிருக்குது. தம்பியவை தங்கச்சிமாரை எல்லாம் ஆளாக்க வேணும். படிப்பில் மினக்கட்டுக் கொண்டிருந்தால் சரிவராது என்று நினைக்கிறன்”

லிங்காவுக்கு அவனது கூற்றில் ஏதோ நியாயம் இருப்பதாகத் தோன்றியது. “சரி. உன்ரை இஷ்டம். உனக்குதக் தேவையான உதவியைக் கேள். நான் செய்யிறன்”

உதவி செய்வதன் மூலம் மற்றவரை முன்னேற்றுவது அவரது குணவியல்பு.

கிரி முதலில் இந்தியாவிற்குப் போய் சிலகால் தங்கியிருக்க வேண்டி யிருந்தது. பின்னர் லண்டனுக்குப் போய் தன் சுயமுயற்சியினால் முன்னேறி இன்று ஒரு தொழிலதிபராக இருக்கிறான். சகோதரர்கள் எல்லோருமே நல்ல நிலைக்கு வந்து விட்டார்கள். சொந்த மண்ணுக்குக வரும் போது கிரி, லிங்கா குடும்பத்தினரை வந்து பார்க்கத் தவறுவதில்லை. அவனது முன்னேற்றத்தைக்

கண்டு அவரது னம் மகிழ்ச்சியால் நிறைந்து போகும்.

***

நாட்டில் அசாதாரண சூழல் நிலவிய காலம் அது. இருந்தாற்போல் குண்டுச்சத்தங்களும் வெடிச்சத்தங்களும் கேட்பது சகஜமாகிவிட்டது. இரவு வேளைகளில் பொது மக்கள் மனக்கிலேசத்துடன் பூட்டிய வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கத் தொடங்கினர். அந்தச் சூழநிலையில் தெருக்கரையிலுள்ள வீட்டில் பிள்ளைகளையும் வைத்துக் கொண்டிருப்பது வாணியின் வயிற்றில் புளியைக் கரைக்கும். ஜெகனும் பரதனும் பெரியவர்களாகி விட்டனர். குட்டித்தம்பியும் இப்போது அவர்களுடன் தான் இருந்தான். ஐந்தாம் ஆண்டு சித்தியடைந்ததும் லிங்கா அவனை அழைத்துவந்டடது இங்கு வித்தியானந்தாக் கல்லூரியில் சேர்த்து விட்டிருந்தார். லிங்காவின் வைத்தியசாலைக்கு பகலில் நோயாளர் வந்து போவார்கள். இரவு வேளைகளில் வருவது பெரும்பாலும் குறைந்து விட்டது.

ஒருநாள். நடுநிசி வேளையில் வீட்டுவாசலில் ஒரு வாகனம் வந்து நிற்குஞ் சத்தம் கேட்டதும் வாணணியின் இதயம் பட்! பட்! என வேகமாக அடிக்கத் தொடங்கியது. சற்றும் கிறுங்காது லிங்கா எழுந்து வீட்டு வாசலுக்குப் போனார். வாணியின் இதயப்படபடப்பு குறையுமுன்னரே அவர் திரும்பி வந்து சட்டையை மாட்டிக் கொண்டு மருந்துப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார். வாணி மலைத்துப் போய் நின்றாள்.

பொழுது புலரும் நேரம் காலை ஐந்து மணி போல் வாகனம் வந்து நின்றது. லிங்கா எதுவித சலனமுமின்றி இறங்கி வந்தார். வந்ததும் அவர் நேராகப் போய் குளித்துவிட்டு வரவும் வாணி சுடச்சுட கோப்பியை நீட்டவும் சரியாக இருந்தது. ஒரு புன்னகையுடன் அதை வாங்கிக் குடித்துவிட்டு சற்று நேரம் நீட்டி நிமிர்ந்து படுத்து ஓய்வெடுத்துக் கொண்டார்.

வாணி பிள்ளைகளையும் நித்திரையிலிருந்து எழுப்பிவிட்டு, காலை உணவு தயாரிப்பதற்காக சமையலறைக்குக் போனாள். உணவைத் தயாரித்து முடித்தவுடன் தான் அவளுக்கு கணவனின் நினைவு வந்தது. அவரை எழுப்பிவிட ணே்டும் என்ற துடிப்போடு அவள் படுக்கையறையை நோக்கி விரைந்தாள். அங்கே படுக்கை காலியாகக இருந்தது. அங்கிருந்து விரைந்து வந்தவள், வைத்தியசாலையை எட்டிப்பார்த்தாள். லிங்கா மேசைக்கு முன் இருந்து ஏதோ மருந்துப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

“அப்பா! சாப்பாடு செய்திட்டன். வந்து சாப்பிட்டிட்டுப் போங்கோ. பிறகு உங்களுக்கு சாப்பிடவும் நேரநமிருக்காது”

வாணி கணவனை உணவருந்த அழைத்தாள். வாணியைத் திரும்பிப் பார்த்த லிங்கா, எதையோ நினைத்துக் கொண்டவராய் சோம்பல் முறித்தவாறே எழுந்து வந்தார். உணவைப் பரிாறியவாறே, வாணி அவரிட் பேச்சுக் கொடுத்தாள்.

“ஏனப்பா ராத்திரி அவ்வளவு நேரமும் எங்கை போனநீங்கள். நான்

சரியாப் பயந்து போனன்"

"அது வந்து... காயப்பட்ட பிள்ளையளைப் பாக்கப் போனநான். வாணி! உமக்கு வரவர எதுக்கெடுத்தாலும் பதட்டம் தான். கொஞ்சம் ரிலாக்ஸா நடந்து கொள்ளப்பாரும்"

வாணிக்கு நெஞ்சு பகீரென்றது. லிங்காவுக்கும் வாய் தடுமாறிச் சொல்லிவிட்டதாக ஒரு உணர்வு தோன்றவே உதட்டைக் கடித்துக்கொண்டார்.

"உவர் சுந்தரண்ணை ராத்திரி எழும்பி வெளியில சலம் விடப்போயிருக்கிறார். நித்திரைச் சோம்பலில படிக்கட்டில தடக்கி விழுந்து போனார். சும்மா உரஞ்சல் காயங்கள் தான். ஆனால் முழங்காலுக்கை நோகுதென்று சொல்லி மனுசன் நடக்கேலாமல் இருக்குது. அதுக்குத்தான் என்னை வந்து கூட்டிக் கொண்டு போனவை."

ஒருவாறு சமாளித்துவிட்டு அவர் எழுந்து கையலம்பப் போனார்.

வாணிக்கு கணவன் தன்னிடம் எதையோ மறைப்பதாக ஒரு சந்தேகம் தோன்றியது. அதைப் பற்றிச் சிந்திக்க அவளுக்கு நேர அவகாசம் கிடைக்கவில்லை. தனது பிள்ளைகளுக்கு உணவைக் கொடுத்து பாடசாலைக்கு அனுப்பி வைத்தாள்.

இடையிடையே லிங்காவை வாகனத்தில் வந்து அழைத்துப் போவார்கள். இப்போதெல்லாம் வாணி பதட்டப்படுவதில்லை. எல்லாமே சகஜமாகப் போயிற்று. ஆனால் வைத்தியசாலைக்கு சில புது முகங்கள் வருகை தருவதும் அவர்கள் லிங்காவை அன்பொழுக அப்பா என அழைப்பதையும் வாணியினால் அவதானிக்க முடிந்தது. சில வேளைகளில் அவர்களை வீட்டினுள் அழைத்து வருவார் லிங்கா. அவர்களுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்குமாறு வாணியிடம் சொல்லுவார்.

ஆரம்பத்தில் அது வாணிக்குப் பிடிக்கவில்லை. அதனைப் புரிந்து கொண்டவராய் லிங்கா அவளுக்கு எடுத்துக் கூறினார்.

"வாணி! இதுகளும் எங்கட பிள்ளைகள் ாதிரித்தான். தங்களுடைய வசதியான வாழ்க்கையை கல்வியை, உறவுகளை விட்டிட்டு வந்திருக்குதுகள். ஏன்... யாருக்காக.... என்ன இலட்சியத்துக்காக என்று ஒருக்கா வடிவாய் யோசிச்சுப் பார்த்தீரெண்டால் உமக்கு விளங்கும்"

கணவனின் கூற்றைக் கேட்டதும் வாணியின் மன் இளகியது. அவர்கள் மீது அனுதாபம் மட்டுமல்ல. அபிமானமும் கொண்டது. வீட்டிற்கு வந்போது அவர்களை உபசரிக்கத் தொடங்கினாள். அவர்கள் "அம்மா!" என்று அழைக்கு் போது தாய்மையுணர்வு அவளை ஆட்கொள்ளும். அவள் இப்போது அடிக்கடி சிற்றுண்டி வகைகள் தயார்ப்பதில் ஆர்வம் காட்டினாள். பிள்ளைகள் வரும்போது அவர்களுக்கு பெறும் தேநீரை மட்டும் கொடுப்பதா என்ற உள்ளுணர்வு அவளை செயற்படத் தூண்டியது.

ஒருநாள் விடிகாலைப் பொழுதில் திடீரென்று அவர்களது அயலில்

வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. பீதியினால் வாணிக்கு தேகமெல்லாம் நடுங்கத் தொடங்கியது. லிங்காவின் கத்திலு் சிறிது கலவரம் தோன்றத்தான் செயங்தது. ஜெகன், பரதன் குட்த்தம்பி ஆகியோருக்கும் கலக்க்ம் ஏற்பட, லிங்கா அனைவரையும் படுத்திருக்குமாறு பணித்தார். கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்த அந்த வெடிச்சத்தங்கள் இடையிடையே குண்டுச் சத்தங்களுடன் இறுதியாக ஒரு பாரிய குண்டுச் சத்தத்துடன் ஓய்ந்தது.

சத்தங்கள் அனைத்தும் ஓய்ந்துவிட்ட சிறிது நேரத்தில் தெருவில் சனநடமாட்டம் இருப்பதை அவதானித்த பின்னர்தான் அவர்களும் வெளியே வந்தனர். விசாரித்ததில் ஜெயசீலுன் அஅண்ணாவின் வீட்டிற்றுத் தான் தாக்குதல் நடந்ததாம். வீடு தரை மட்டமாகிவிட்டது என தகவல் கிடைத்தது. "நான் ஒருக்கால் போய் விசாரிச்சுக் கொண்டு வாறன்" என்று சொல்லிவிட்டு லிங்கா புறப்பட்டுப் போனார். வாணியின் மனமோ கிடந்து பதகளித்தது.

"ஐயோ! நாங்களும் ஜெயசீலன் அண்ணாவும் ஒரே நாளில்த்தானே அத்திவாரம் போட்டோம். நாங்கள் ஒருவாறு கட்டி முடித்து குடிபோயும் விட்டோம். ஆனால்... அவர் ஒருவாறு வீட்டைக்கட்டி கூரையைப் போட்டாலும் இன்னும் நிறைய வேலைகள் பாக்கியிருந்தனவே. அந்த வீட்டை ஏன் அழித்தார்கள். பாவம் அவர் நேர்மையாக உழைத்து வாழ்பவர். அவரால் எப்படி இந்த இழப்பைத் தாங்க முடியும்"

வாணி மனம் வெதும்பி நின்றபோது லிங்கா திரும்பி வந்தார்.

"என்னப்பா நடந்தது?"

அந்த வீட்டில எல்.ரீ.ரி. இருந்தவையாம். காரணம் காட்டியாச்சு. பேந்தென்ன"

விரக்தியுடன் வந்தது லிங்காவின் பதில்.

"இதென்னப்பா புதுக்கதையாயிருக்குது"

வாணி அங்கலாய்த்தாள்.

"அரை குறையாய்க் கட்டியிருந்த வீட்டில எப்பிடி எல்.ரீ.ரி குடியிருந்திருக்கும்"

லிங்காவும் வாணியும் கவலையில் தோய்ந்திருந்த வேளை, வாசலில் ஏதோ சலசலப்பு கேட்டது.

"ஐயா!"

நோயாளரின் வருகை லிங்காவின் மனதுக்கு உத்வேகத்தைத் தர அவர் வைத்தியசாலையைத் திறப்பதற்காகப் போனார். அவருடைய உதவியாள் இன்று வேலைக்கு வரவில்லை. அந்தப்பிள்ளையினனுது வீடும் ஜெயசீலன் அண்ணாவின் வீட்டிற்குப் பக்கத்தில்தான் அமைந்துள்ளது. ஒரு ஏக்கப் பெருமூச்சினை விட்டவாறு வாணியும் தனது அன்றாடப் பணிகளைக் கவனிப்பதற்காக விரைந்தாள்.

டிரிங்க்! டிரிங்க்!!

வீட்டு வாசலில் கணீரென சைக்கிள் ணி கேட்கவும், வாணிதான் வாசலுக்கு ஓடவேண்டியதாயிற்று. ஏனெனில் அச்சமயம் வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை. கடிதத்தை கையில் வாங்கிப் பிரித்த வாணியின் முகம் பிரகாசமடைந்தது. அந்தக் கடிதம் யாழ்.பல்கலைக் கழகத்திலிருந்து வந்திருந்தது. அவர்களுடைய இரண்டாவது மகன் ஜெகனுக்கு பௌதிக விஞ்ஞாகப்பிரிவில் அனுமதி கிடைத்திருப்பதாகவும் நேரில் வந்து அதற்குரிய பதிவுகளை மேற்கொள்ளும்படியும் அறிவித்திருந்தார்கள். மகிழ்ச்சிப் பிரவாகத்தில் வாணிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"அப்பா! அப்பா!!"

என்று உரக்கக் குரல் கொடுத்தாள். மனைவியின் அவசர அழைப்பைக் கேட்டு லிங்கா வைத்தியசாலையிலிருந்து ஓடி வந்தார்.

"இஞ்சாருங்கோப்பா. ஜெகனுக்கு பிசிக்கல் சயன்ஸ் கிடைச்சிருக்குது."

"அவனுக்கு வருமென்று எனக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அது சரி எங்கை வந்திருக்குது?"

"யாழ்ப்பாணம் தான்"

"நல்லதாய்ப் போச்சுது"

சொல்லிக் கொண்டே லிங்கா திரும்பிவிட்டார். நோயாளரைப் பார்த்துக் கொண்டிருந்தவர் அரைகுறையில் விட்டுவிட்டு வந்த அவசர் அவருக்கு.

மாங்குளம் வீட்டிற்கு போயிருந்த ஜெகன் அன்று மாலைதான் திரும்பி வந்தான். உடனுக்குடன் தகவல் சொல்லும் வசதி அந்தக் காலத்தில் இருக்கவில்லை. அன்று இரவு வீட்டில் அனைவரும் கூடியிருந்தபோது லிங்கா ஒரு யோசனையை முன் வைத்தார்.

"இரண்டு பிள்ளைகளையும் ரூமில விட்டு படிப்பிக்கிதெண்டால் நிறையச் செலவு போகும். நான் நினைக்கிறன். அங்கினை கம்பஸ்க்கு கிட்டவாய் ஒரு வீட்டை எடுத்து நீரும் போய் கூட இருந்து படிப்பிக்கிறது தான் நல்லது."

வாணிக்கு நெஞ்சு பகீரென்றது.

"அப்ப... நீங்கள் இஞ்சை தனியவே இருக்கிறது"

"அதெல்லாம் நான் சமாளிப்பன். நீர் பிள்ளையளின்ரை படிப்பைப் பார்த்துக் கொண்டால் சரி. நான் இண்டைக்கே மச்சானுக்கு ஒரு லெற்றர் எழுதுறன். அவர் உங்களுக்கு வசதியாய் ஒரு வீடு பார்த்துத் தருவார்"

லிங்காவினது மூத்த தங்கையின் கணவன் ஒரு பாடசாலையில் அதிபராக கஇருகட்கிறார். அவர்களும் நல்லூரில் ஒரு வாடகை வீட்டில்த்தான் குடியிருக்கிறார்கள். அடுத்த வாரமே மூத்த மைத்துனரின் பதில் வந்தது. திருநெல்வேலியில் ஒரு வீட்டை வாடகைக்கு பேசியிருப்பதாகவும் உடன் வந்து குடியேறுமாறும் அவர் எழுதியிருந்தார். வாணியும் பிள்ளைகளுமாக புறப்பட்டுப்போய் அந்தத வீட்டில் தங்கி விட்டனர்.

லிங்காவுக்கு பொன்னம்மா அக்காவிடிருந்து மூன்று வேளையும் உணவு

வந்து கொண்டிருந்தது. அவருக்கு தனிமை என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போயிற்று. தனது குடும்பத்தில் ஒருவராக வாழ்ந்து கொண்டிருந்த லிங்கா இப்போது ஊருக்குள் ஒருவராக வாழத் தொடங்கினார். மாலை வேளைகளில் ஊரிலுள்ள நண்பர்கள் அடிக்கடி வந்து அவருடன் அளவளாவிப் போயினர். சிலர் தமது கஷ்டநஷ்டங்களை அவருடன் பகிர்ந்து கொள்வதுமுண்டு. தேவையேற்படும்போது அவர்களுக்கு பணத்தைக் கடனாகக் கொடுத்து உதவவும் அவர் தவறுவதில்லை. இப்படியாக பலத்த உறவுகளுடன் அவரது வாழ்க்கை அங்கு போய்க் கொண்டிருந்தது. மாதம் ஒரு தடவை அவர் குடும்பத்தினரையும் போய்ப் பார்த்துவிட்டு மருந்துகளையும் கொள்வனவு செய்து கொண்டு வருவார்.

பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொண்ட ஜெகன், விரிவுரைகளுக்கு போய்வரத் தொடங்கினான். வாணி மற்றவர்கள் இருவரையும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள முன்னணிப் பாடசாலைகளான சென்.ஜோன்ஸ், சென் பற்றிக்ஸ் கல்லூரிகளில் சேர்த்து விட்டிருந்தாள். இவர்களுடன் தான் தங்கியிருந்த அறையைக் காலி பண்ணிவிட்டு மூத்தவன் சுதனும் இணைந்து கொண்டான். அந்தக் காலகட்டத்தில் தான் லிங்காவின் சின்னண்ணாவின் மகன் குகன் ஓ.எல்.பரீட்சையில் சித்தியடைந்து விட்டு, ஏ.எல் வகுப்பில் சேருவதற்கு கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்காக அலைந்து கொண்டிருந்தான். நல்ல வேளையாக அவனுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் இணைந்து படிப்பதற்கு அனுமதி கிடைத்தது. வாணி, அவனையும் தங்களுடன் தங்க வைத்துக் கொண்டாள். வீட்டிலிருந்து பாடசாலை சிறிது தூரத்தில் அமைந்திருந்தால் அவனுக்கு சைக்கிளில் போய்வர ஏதுவாக அமைந்து விட்டது.

எப்போது ஜெகன் படிப்பில் கவனம் செலுத்துவது குறைவு. எனவே வாணி அவனுடன் பயிலும் மாணவன் ஒருவனை தங்களது வீட்டின் முன் அறையில் தங்க வைத்தாள். அவனுடன் இணைந்தாவது ஜெகன் தனது பாடங்களைப் படிக்கட்டும் என அவள் கருதினாள். ஆனால் ஜெகனுடைய நாட்டமோ வேறாக இருந்தது. பல்கலைக்கழக விரிவுரைகள் முடிந்ததும் மாலை வேளைகளில் கராஜ்களுக்குப் போய் அங்குள்ள பழைய மோட்டார் சைக்கிள்களை விலைபேசி வாங்கி வீட்டிற்குக் கொண்டு வந்து திருத்துவது தான் அவனது பொழுது போக்காகி விட்டது. மகனது செய்கையினால் வாணிக்கு கோபம் கொந்தளிக்கும். லிங்கா வரும் சமசயங்களில் அவரிடம் முறையிடுவாள். அவரோ மிகுந்த நிதானத்துடன் பதில் சொல்லுவார்.

“இஞ்சாரும் வாணி! நீர் அவன் மேல் தேவையில்லால் கோபப்படாதையும். அவன் என்ன வகுப்புகளை கட் பண்ணுறானோ... இல்லைத்தானே. அவன் வகுப்புகளுக்குப் போனாலே காணும் எல்லாத்தையும் கிரகிச்சுக் கொள்ளுவான். மற்றும்படி அவன் சந்திகளில நின்று சிகரட் குடிச்சு, வம்பளந்து ஏதும் கூடாத பழக்கங்களில ஈடுடபட்டால் நாங்கள் கண்டிக்கலாம். நீர்

தேவையில்லாமல் ரென்சன் படுறதை நிறுத்திக் கொள்ளும். உம்டைய உடம்புக்குத்தான் அது கேடு.”

கணவனின் வார்த்தைகள் நாராசமாய் வந்து காதில் விழும். செய்வதறியாது அவளது மனம் தத்தளிக்கும்.

அத்துடன் நின்று விடாது அவர் புறப்படும் சமயத்தில் அவனை அழைத்து பணமும் கொடுத்து விட்டுப போவார்.

“இந்தா இதில காசு இருக்கு. நீ பார்த்து சைக்கிளை வாங்கு”

அப்பாவின் அனுசரனை அவனுக்கு மென்மேலும் உற்சாகமளிக்கும். வாணிக்கோ தனது உச்சியில் யாரோ ஓங்கி குட்டிவிட்டாற்போல் வலியெடுக்கும். அத்துடன் அவர் நின்று விடாமல் வாணிக்கும் அறிவுரை கூறுவார்.

“பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடாய் செநய்து குடும். அதோட பின்னேரங்களில் ரீயோட ஏதும் பலகாரங்கள் செய்து குடும். களைச்சுப் போய் வாற பிள்ளையளுக்கு தென்பாய் இருக்க வேணும்”

“அதெல்லாம் எனக்குத் தெரியும். சொல்லத் தேவையில்லை”

இப்போதெல்லாம் வாணி திருப்பிக் கதைக்குமளவிற்கு துணிவடைந்து விட்டாள். மனைவியின் கோபத்தைப் பார்த்து லிங்கா உதட்டுக்குள் சிரித்துக் கொள்ளுவார்.

பிள்ளைகளில் யாராவது ஒருவர் அவரை அழைத்துப் போய் பஸ் ஏற்றிவிட்டு வருவார்கள். இப்படியாக அவர் அங்கேயும் இவர் இங்குமாக வாழ்க்கை அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது.

***

குடா நாட்டில் ஆங்காங்கே தாக்குதல் ச்பவங்கள் அதனைத் தொடர்ந்து சுற்றி வளைப்பு என நிலைமை ரேசமாகிக் கொண்டே போனது. பிள்ளைகள் வெளியில் புறப்பட்டுப் போனால் அவர்கள் வீடு வந்து சேருமட்டும் வாணியின் மனம் பதட்டத்தினால் துடித்துக் கொண்டேயிருக்கும். எங்கேயாவது அசம்பாவிதம் நடந்தால் மறுநிமிடமே குகன் அந்த இடத்தில் நிற்பான். அவனைக் கட்டுப்படுத்த முடியாதல் வாணி திணறிப்போவாள்.

அந்தச் சமயத்தில்த்தான் அமைதி காக்கவென அயல்நாட்டுப் படை எமது நிலப்பரப்புக்குள் கால் பதித்தது. லிங்காவும் அந்த மாதத்திற்குரிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக அன்று காலையில்த்தான் வந்திருந்தார். கிசு கிசுவென வாந்தி ஊரெல்லாம் பரவத் தொடங்கியது. பலாலியிலிருந்து புறப்பட்டு காங்கேசன் துறை வீதியூடாக அமைதிப்படை முன்னேறி வருகிறதாம். இடையிடையே விடுதலைப்புலிகளுக்கும் அவர்களுக்குடையில் மோதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் பேசிக் கொண்டார்கள். எங்கும் பதற்ற நிலை உருவாகியிருந்தது. மக்களெல்லோரும் பாதுகாப்பான இடம் தேடி ஓடத் தொடங்கினர்.

இப்படியான நெருக்கடி நிலையில் கணவன் அருகில் இருந்து வாணிக்கு

தென்பாயிருந்தது. நல்ல வேளையாக குகன் முதல்நாளே ஊருக்குப் போயிருந்தான். லிங்கா பிள்ளைகளை அழைத்து ஆலோசனை கேட்டார். ஜெகன் சொன்னான்.

"அப்பா! அயலில் ஒருத்தரும் இல்லை. நாங்கள் மட்டும் என்னென்றும் தனிய இருக்கிறது அதுவும் தெருக்கரையாயிற்றே?"

"நீ சொல்லுறதும் சரிதான் ராசா. நாங்கள் போய்க் கொஞ்ச நாளைக்கு சண்டிலிப்பாயில இருப்பம். இஞ்சை நிலைமை சீரானவுடன திரும்பி வரலாம்"

வாணிக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

"என்னெண்டப்பா போறது?"

"ஜெகன் திருத்தி வைச்சிருக்கிற சைக்கிளில நானும் நீரும் போவம். பிள்ளையள் சைக்கிளில வரட்டும்"

அந்த இக்கட்டான நேரத்திலும் ஜெகனுக்கு ஒரு சந்தோசம். அப்பா தன்னுடைய சைக்கிளை ஓடப் போகிறார் என்பது தான் அது. மனம் குழம்பிய நிலையில் வாணி கையை பிசைந்து நிற்க, லிங்கா எல்லோரையும் உசார்ப்படுத்தினார்.

"மறக்காமல் எல்லாரும் ஐ.சி யை எடுத்து வையுங்கோ. மற்றது மாற்றுடுப்பு மட்டும் எடுத்துக் கொண்டால் காணும், சாப்பாட்டுச் சாமான்கள் அங்கையும் கிடைக்குதோ தெரியேல்ல. முடிஞ்ச அளவுக்கு எதையாவது எடுத்து வையும் வாணி."

வாணியும் அரிசி, பருப்பு, சீனி என உணவுப் பொருட்களையே தேடியெடுத்து பொதியாக்கினாள். பிள்ளைகள் தங்களது பாடப்புத்தகங்களையும் எடுத்துக் கொண்டனர். முன்னால் பிள்ளைகள் சைக்கிளில் போக, பின்னால் லிங்காவும் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு விட்டார். பலாலி றோட்டைத் தாண்டும் வரை எல்லோருக்கும் நெஞ்சிடி தான். காரணம் குண்டுச் சத்தங்களும் வேட்டுச் சத்தங்களும் அண்மையில் கேட்கத் துவங்கியிருந்தது தான்.

சண்டிலிப்பாயில் அவர்களது வீட்டுக்கு வந்நது சேர்ந்ததும் எல்லோருக்கும் ஒரு உற்சாகம் ஏற்பட்டது. என்னதான் இருந்தாலும் தனது சொந்த வீட்டில் வசிப்பதென்பது எல்லோருக்குமே ஒரு மனச்சந்தோசத்தைத் தரும் ஒரு விடயம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அது குடிசையாயிருந்தாலும் கோபுரமாயிருந்தாலும் தன்னது என்பது தான் லோனதாகும். லிங்கா குடும்பத்தினர் மட்டும் அதற்கு விதிவிலக்கா... என்ன...

வீடு பிரதான தெருவிலிருந்து சற்று உள்ளுக்டகுத்தான் இருந்தது. ஆயினும் அமைதிப்படை தெருவில் சகரும்போது குண்டுச் சத்தங்களும் வேட்டுச்சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன. பதற்றம் எதுவுமில்லாமல் சில பொழுதுகள் கரைந்தன. சந்திகள் தோறும் காலவரண்கள் அமைக்கப்பட்டு விட்டன. வீணாக வெற்றுப்பொழுதுகளைக் கழிக்கிறோமே என்ற ஆதங்கம் லிங்காவுக்கு ஏற்பட்டது. திடீரென ஒருநாள் சுதனது சைக்கிளை எடுத்துக்

கொண்டு வீட்டைப் பார்த்துக் கொண்டு வரப்போவதாகச் சொல்லிவிட்டு புறப்பட்டு விட்டார்.

வாணி கதிகலங்கிப் போய் திகைத்து நின்ற போது மாலையில் சோர்ந்து போன முகத்துடன் திரும்பி வந்தார், லிங்கா. அவரது தோற்றத்தைக் கண்டு துணுக்குற்றவளாய் வாணி விசாரித்தாள்.

“என்னப்பா! என்ன நடந்தது?”

“ஒன்றுமில்லை” என்று மழுப்பியவரிடம் சந்தேகத்துடன் வினவினாள்.

“ஏனப்பா… அவங்கள் அடிச்சவங்களே?”

“சீச்சீ… அடிக்கவுமில்லை. ஒண்டுமில்லை. வீடெல்லாம் கொளுத்திப் போட்டாங்கள்”

“உதுக்கேன் கவலைப்படுறீங்கள். அழிஞ்சுது பொருள் தானே. தேடினாப் போச்சு.”

“வீட்டில் ஒரு சாமானும் இல்லை. அலுமாரியில் உள்ளதெல்லாம் இழுத்துப்போட்டு, கட்டிலிலிருந்த மெத்தை, தலையணியெல்லாம் ஒன்றும் மிச்சமில்லால் கொளுத்திப் போட்டாங்கள். உது தான் உங்கள் அமைதி காக்கிற இலட்சணம்.”

வயிற்றுப்புகைச்சல் வார்த்தைகலாக வெளிவந்தன.

“அது போனாப் போகுது. நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. நான் பாத்துக் கொள்ளுறன்”

மனைவியின் தென்பான வார்த்தைகள் அவருக்கு சற்று ஆறுதலைத் தந்தது. வாணி பிள்ளைகளைக் கூப்பிட்டாள்.

“பிள்ளைகள் அப்பா களைச்சுப்போய் வந்திருக்கிறார். கூட்டிக் கொண்டு போய் குளிக்கிறதுக்கு தண்ணீர் அள்ளிக் குடுங்கோ.”

வாணி கொடுத்த தேநீரைப் பருகிவிட்டு லிங்கா குளிக்கப் போனார்

தேகத்தில் வார்த்த குளிர்ந்த நீர் அவரது உடற்சோர்வைப் போக்கியது. கூடவே வாணியின் தென்பான வார்த்தைகள் மனச்சோர்வை ஓரளவு போக்கின.

வாணி சங்கானைக்குப் போய் பாடசாலைச் சீருடை தேவையான இரு பிள்ளைகளுக்கும் ஆளுக்கொரு சோடி உடுப்பை வாங்கினாள். அத்தியாவசி யமானவற்றை மட்டும் தான் இத்தனை நாளும் சிக்கனமாய் செயற்பட்டு சேமித்த சேமிப்பில் வாங்கிக் கொண்டாள். “இவ்வளவு காலமும் நிறைய உடுப்புகளை வைச்சுப் பாவிச்சவை இனி அளவோடு சீவிச்சுப் பழகட்டும்.“ மனதுள் நினைத்துக் கொண்டாள். அடுத்து வந்த சில தினங்களில் அவர்களது குடும்பம் மீண்டும் திருநெல்வேலியை நோக்கி பயணமாயிற்று. போகும் பாதையெங்கிலும் கடும் சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாக வேண்டியிருந்தது. இவர்களுக்கு மத்தியில் ஆண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு எப்படி வாழப்போகிறோம் என்ற ஏக்கமே வாணியின் மனதை நிறைத்திருந்தது.

***

லிங்கா மிகுந்த மனச்சோர்வுடன் காணப்பட்டார். அவரது கண்ணெதிரே குட்டித்தம்பி வீட்டு வாசற்படியில் அமர்ந்திருந்து படித்துக் கொண்டிருந்தான். ஜெகனையும் பரதனையும் காணவில்லை. வீட்டின் பின்புறத்தில் எதுவோ சலசலப்பு கேட்டது. அங்கு போய்ப் பார்த்தார். ஜெகனும் பரதனுமாக எரிந்த கதிரைகளைத் தட்டிக் கழற்றி இருப்பதற்கு ஏற்றவாறு திருத்திக் கொண்டிருந் தார்கள். அதைப்பார்த்ததும் அவரது மனத்திலும் தென்பு பிறந்தது. வாணியைத் தேடி வந்தார்.

“நாளைக்கு காலையில நான் தண்ணீரூற்றுக்கு வெளிக்கிடுறன்”

வாணியின் உடலில் கருந்தேள் ஒன்று கொட்டிவிட்டதாக ஓர் உணர்வு.

“என்னப்பா சொல்லுறியள். பஸ் ஒன்றும் போக்கு வரத்தில்லை. என்னத்தில போறது?”

அவளது பதற்ற நிலையை சாந்தப்படுத்த முயன்றார், லிங்கா.

“இஞ்சாரும் வாணி! நீர் ஒன்றுக்கும் யோசிக்காதையும். அங்கையும் வீடு, டிஸ்பென்சரி என்ன நிலைமையில இருக்குதோ. ஒருக்கா போய்ப்பார்த்தாத் தான் எனக்கு மன நிம்மதியாயிருக்கும். அதோட நான் இப்பிடியே இஞ்சை இருந்தா... எங்கட சீவியம் எப்பிடிப் போறது. வடிவாய் ஒருக்கா யோசியும்”

வாணிக்கு ஒரே மனக்குழப்பமாயிருந்தது. என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

மறுநாள் காலை நான்கு மணிக்கே எல்லோரும் எழும்பி விட்டார்கள். வாணி கணவனுக்கு உணவு தயார்த்து கொடுத்து விடுவதற்காக சமையலில் ஈடுபட்டாள். ஜெகன் சொன்னான்.

“அம்மா! புளிசாதமாய் செய்துவிடுங்கோ. அது தான் பழுதாகாது.”

மகனது புத்திக்கூர்மையை வியந்தவாறு வாணி புளிசாதத்திற்கு தாளிக்கத் தொடங்க, சுதன் அதற்கு வெங்காயத்தை உரித்து வெட்டியும் கொடுத் தான். சுதனுக்கு சமையல் பதியில் தெரிந்த வேலை அது ஒன்று தான். கண்மூடி முளிக்குமுன் ஒரு கிண்ணம் வெங்காயத்தை உரிப்பது மட்டுமல்லாமல், அத்தனை கச்சிதமாய் ஒரு சிறு தோலும் இல்லாதவாறு நீக்கியிருப்பான். ஒரு வேளை அந்தப் பக்குவம் தான் அவனை பிற்காலத்தில் ஒரு சிறந்த சத்திர சிகிச்சையாளனாக்கி பல உயிர்களைக் காப்பாற்ற ஏதுவாய் அமைந்திருக்கக் கூடும்.

ஜெகன் தேங்காய் துருவ, குட்டித்தம்பி மரக்கறி வெட்ட, பரதன் அம்மாவுக்கு அடுப்பு எரிவதற்கு உதவி செய்து கொண்டிருந்தான். பட்டென சமையல் முடிந்ததும் எல்லாவற்றையும் ஆறவைத்து இரண்டு பொதிகளாகக் கட்டி வைத்தனர். காலை உணவுக்கு பிட்டு, மதியத்திற்கு புளிசாதம், அத்துடன் பரதன் இரண்டு போத்தல்களில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு வந்தான். எல்லாவற்றையும் ஒரு பிளாஸ்ரிக் கூடையில் வைத்து சைக்கிள் ஹாண்டிலில் கொழுவி விட்ட ஜெகன் கேட்டான்.

“அப்பா! ஒருக்கா பாருங்கோ. பலன்ஸ்ஸா இருக்குதோ என்று”

“சரி சரி. அதெல்லாம் சரியாய் இருக்குது. பிள்ளையள்! நான் வரட்டே. கண்டபடி வெளிக்கிட வேண்டாம். என்ன!”... என்று சொன்னவர் வாணியைத் திரும்பிப் பார்த்து, “வாணி! நான் வாறன்” சொல்லிக் கொண்டே சைக்கிளில் ஏறி மிதிக்கத் தொடங்கினார்.

வாசலில் நின்றிருந்த அத்தனை பேருடைய கண்களிலும் நீர் நிறைந்திருந்தது. அதன் மௌனத்தைக் கலைத்தான்.

“அம்மா! எனக்குத் தெரிய அப்பா சைக்கிள் ஓடினதை நான் கண்டதேயில்ல. அண்டைக்கு சண்டிலிப்பாயில இருந்து வீட்டைப் பார்க்கிறதுக்கு வெளிக்கிடுற போது தான் அப்பா சைக்கிள் ஓடினதைக் கண்ட நான்”

மகனது ஆதங்கம் வாணிக்குப் புரிந்தது.

“அவளும் உங்களைப் போல படிக்கிற காலங்களில சைக்கிள் ஓடியிருப்பார் தானே”

“இருந்தாலும் அப்பா இங்கையிருந்து தண்ணீரூற்று வரைக்கும் சைக்கிள் ஓடுறதெண்டால் கஸ்டம் தானே”

“ஓடா அண்ணா. அப்பாக்கு காலெல்லாம் வலிக்கப்போகுது”

சிணுங்கும் குரலில் குட்டித்தம்பி சொன்னான். வாணி அவர்களை உள்ளே வரும்படி அழைக்க, அனைவரும் முகத்தைத் தொங்கப் போட்டவாறு உள்ளே நடந்தனர். வாணியின் மனமோ கணவனுக்குப் பின்னாலேயே போய்க் கொண்டிருந்தது. அலைக்கழிந்தத மனத்தை ஒரு நிலைப்படுத்தி எதிர்வரும் நாட்களைப் பற்றி தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினாள், வாணி. எக்காரணம் கொண்டும் பிள்ளைகளை வெளியே போக அனுமதிக்கக் கூடாது. கல்வி பயில மட்டும் போய் வரட்டும். மற்றும் சமையலுக்குத் தேவையான பொருட்களை நானே போய் வாங்கி வரலாம். திடமானதொரு முடிவின் மூலம் மனம் சாதானமடைந்தது.

லிங்காவின் சைக்கிள் உருண்டு கொண்டேயிருந்தது. தெருக்களில் பெரிதாக மனித நடமாட்டம் இருக்கவில்லை. அப்படி அத்தியாவசிய தேவையை முன்னிட்டு நடமாடியவர் கண்களிலும் பீதியைத்தான் அவதானிக்கத் முடிந்தது. லிங்காவின் கால்கள் சோர்ந்து வலுவிழந்து போவதை அவரது உள்ளுணர்வு உணர்த்தியபோது அவர் சைக்கிளை நிறுத்தி அருகில் தென்பட்ட பஸ்தரிப்பு சாவடியில் உள்ள இருப்பிடத்தில் காலை நீட்டியவாறு அர்நது கொண்டார். கூடையிலிருந்த தண்ணீர்ப்போத்தலை எடுத்து இரண்டு வாய் குடித்தார். மூச்சின் வேகம் சீராவதற்கு இரண்டு நிமிடங்கள் பிடிதடித்தன. சற்று ஓய்வு எடுத்ததும் வயிற்றுக்குள் ஏதோ புரளுமாற்போல் ஓர் உணர்வு தோன்றவே, பிட்டுப் பார்சலை எடுத்து பிரித்து சாப்பிடதத் தொடங்கினார். அன்றுபொல் அவருக்கு உணவு என்றுமே ருசித்ததில்லை. பிட்டும் ஒருளைக்கிழங்குப் பிரட்டலும் தேவாமிர்தமாக இருநுத்து. இடையிடையே தண்ணீரையும் குடித்துக் கொண்டார். சாப்பிட்டு

முடித்ததும் பெரிதாக ஒரு ஏவறை வெளிப்பட்டது. அதற்கு மேல் வாணி கூடைக்குள் வைத்துவிட்டிருந்த வாழைப்பழம் ஒன்றையும் வயிற்றுக்குள் தள்ளிக் கொண்டார்.

உடல் அசதியினால் கண்கள் சோர்ந்து துவண்டன. சிறிது நேரம் அந்த இருப்பிடத்தில் நீட்டி நிமிர்நது எடுத்து ஓய்வு எடுத்தார். இப்பதானே பளைக்கு வந்திருக்கிறேன். இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டியிருக்குத. மன் நினைத்ததும் உடல் துள்ளி எழும்பியது. மீண்டும் சைக்கிள் சவாரி தொடங்கி விட்டது. வியர்க்க விறுவிறுக்க அவரது பயணம் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

தெருவில் இந்தியப்படையினரின் நடமாட்டத்தைத் தவிர வீதிவெறிச் சோடிக்கிடந்தது. ஒரு நாயைக் கூட காண முடியவில்லை. அதுகள் வெடிச்சத்தங் களுக்குப் பயந்து எங்கோ ஓடி ஒளிந்து கொண்டு விட்டன போலும். சைக்கிள் ஹாண்டிலில் வெள்ளைக் கொடி கட்டியிருந்த போதிலும் சிலர் அவரை மறித்து கேள்வி கேட்டனர். தமிழில் கேட்டவர்களுக்கு தமிழிலும், ஹிந்தியில் கேட்டவர் களுக்கு ஆங்கிலத்திலும் அவர் பதில் சொல்ல வேுண்டியிருநுதது. ஊரியான் பாதையூடாகப் பயணித்து கண்டாவளை சாதி வரை வர மதியமாயிற்று. ஒரு மூடியிருந்த கடைத்தொகுதியின் முன் சைக்கிளை நிறுத்திவிட்டு அந்தத் திண்ணையில் விழுந்து படுத்து விட்டார். கெஞ்சத் தொடங்கிய கால்களை கை களால் உருவி விட்டுக் கொண்டார். நல்ல வேளையாக சுதன் அவரது சட்டைப் பையில் ஒரு பனடோல் காட்டை வைத்துவிட்டிருந்தான். அதில் இரண்டு வில்லை களை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு தண்ணீரையும் மடமடவென்று குடித்தார்.

சிறிது நேர இளைப்பாறலின் பின் அவரது மேனியில் புதுத்தென்பு பிறந்தது. அவருக்கு சாப்பிடப்பிடிக்கவில்லை. வயிறு வெறுமையாயிருந்த போது கால்கள் இயங்கியது போல் வயிறு நிறைந்திருக்கும் போது இயங்க முடிய வில்லை. ஒரு வாழைப்பத்தை எடுத்துச் சாப்பிடலாம் என நினைத்தவராய் கூடைக்குள் கைவிட்டபோது அதற்குள்ளிருந்து கொய்யாப்பழம் அகப்பட்டது. பிள்ளைகளின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்தவராய் அதை எடுத்து கடிக்கத் தொடங்கினார். வாய்க்கு அது இதமாய் இருப்பதாகத் தோன்றியது. சாப்பிட்டு முடிந்ததும் மீண்டும் சைக்கிள் உருளத் தொடங்கியது.

புதுக்குடியிருப்பு சந்தியை அண்மித்தபோது உடலின் தென்பு குறைந்து விட்டதாக ஒரு உணர்வு ஏற்படவே சைக்கிளை ஒரு கடைத் தொகுதியின் முன் நிறுத்திவிட்டு அந்தத் திண்ணையில் ஓய்வெடுத்துக்கொண்டார். சாயந்தரம் மூன்று மணியாகி விட்டது. உணவை உட்கொண்டால்த்தான் உடம்பு இயங்கும் என்ற நிலையில் பார்சலை எடுத்துப் பிரித்தார். புளிசாதத்துடன் உருளைக்கிழங்கு பிரட்டலும், கத்தரிக்காய் பொரித்த குழம்பும் சாப்பிடு வேட்கையைத் தூண்டின. மளமளவென்று சாப்பிட்டு முடித்தார். தண்ணீரைக் குடித்து சிறிது ஆறிய பின் பயணம் தொடர்ந்தது.

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை சந்தியில் நின்றவர்களின் விசாரணை பலமாகவிருந்தது. லிங்கா அவற்றிற்கு சார்த்தியமாகப் பதிலளித்து விட்டு வெளியேறி முள்ளியவளையை நோக்கி முன்னேறத் தொடங்கினார். கற்சிலை மடுச் சந்தி தாண்டியதும் ஒரு கோயில் இருந்து. அதில் சிறிது நேரம் இளைப்பாறினார். கொய்யாப்பழம் அவரது நாக்கு வரட்சிக்கு கை கொடுத்தது. மீண்டும் புறப்பட்டார். வெள்ளை மலை ஏற்றத்தைத் தாண்டுவது சற்று சிரமமாக இருந்தது. கால்கள் ஓய்ந்து போயின. கெஞ்சிய கால்களை மிஞ:சியது அவரது நெஞ்சுரம்.

அப்பாடா... ஒருவாறு முள்ளியவளை தாண்டி தண்ணீரூற்று ஆலடிச் சந்திவரை வந்துவிட்டார். வீட்டு வளவிற்குள் வந்து சேருவதற்குள் போதும் போது மென்றாகிவிட்டது. சந்தியில் முகரிட்டிருந்தவர்களின் கெடுபிடி அந்தளவிற்கு அதிகமாயிருந்தது. லிங்கா வசிக்குமக் வீட்டையோ, வைத்தியசாலையையோ திறப்பதற்கு திறவு கோல் தேவைப்படவில்லை. ஏற்கனெவே எதெல்லாம் உடைபட்டு, பொருட்களெல்லாம் கிளறுப்பட்டு சிதறிக்கிடந்தன. களைத்துப்போய் வந்திருந்த லிங்கா, செயலற்று நின்றிருந்தார்.

***

பழையபடி எல்லாவற்றையும் சீரமைத்து ஒருவாறு நிலைகொண்டு விட்டார், லிங்கா. பொருட்கள் சீரழிக்கப்பட்டிருந்தனவே தவவிர, அவ்வளவு சேதமில்லை. முன்னர் அவருடன் இரவுப் பொழுதுகளில் தங்கியிருந்த கிரியின் தம்பி சுரேன் அவரது வளர்ப்பு நாயான ரெக்ஸ்ஸையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தான். அவர்களது குடும்பமும் ஊரைவிட்டு குடிபெயர்ந்து போய் பூதன் வயலில் இருந்த அவர்களது தோட்டத்தில் குடிகொண்டுவிட்டதால் சுரேனும் அவர்களுடன் சேர்ந்து இடம் பெயர வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. விசுவாசியான அவன் அப்பாவின் வளர்ப்பு நாயையும் தன்னுடன் கொண்டு போய் விட்டிருந்தான்.

“அ... சரி... சரி...”

அப்பா நாயின் முதகில் தட்டிக் கொடுக்க அது அவரது காலடியிலேயே படுத்துக் கொண்டது.

“அப்பா! உங்களைத்தேடி இந்த நாய் என்னைச் சரியாய் அலைக்கழிச்சுப் போட்டுது. அதனால தான் நான் இதைக் கட்டியே வைச்சிருந்த நான்”

சுரேன் கூறியதும் நாயின் விசுவாசத்தை எண்ணி லிங்கா நெகிழ்ந்து போனார்.

“அப்பா! உங்களுக்கு நான் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறன். சாப்பிடுங்கோ”

“ஐயோ... நான் எத்தினை வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிடுறது. காலையில எங்கட வீட்டுக்கார அம்மாவின்ரை மகள் ராணியக்கா சாப்பாடு

அனுப்பி விட்டவ. நான் சாப்பிட்டிட்டன். நீ சாப்பாட்டை வை ராசா. நான் பிறகு சாப்பிடுறன்"

அந்த ஊரவர்களின் செல்லப் பிள்ளையான லிங்காவுக்கு எல்லோரும் சாப்பாட்டுத்தொல்லை கொடுத்ததில் வியப்பொன்றுமில்லை. இத்தனை நாட்களும் அவர் இல்லாததால் அவர்களுக்கு மறந்து கிடைக்காத பிரச்சனை மட்டுமல்ல. அவசர தேவை ஏற்படும் பொழுது கைமாற்றாக பணத்தை மாறிக் கொள்ளும் வசதியுமல்லவா அற்றுப் போய்விட்டது. அதுதவிர அவரிடம் அறிவுரை கேட்டு நடப்படவர்களுக்கும் அவரது தேவை இருந்தது.

ஒருவாறு ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டு நிலைமை வழமைக்குத் திரும்பியது. முன்னரைப் போலில்லாவிட்டாலும் ஓரிரு பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. அந்தத் தருணத்தில் லிங்காவின் நண்பர் ஒருவர் அவசர தேவை ஒன்றுக்காக யாழ்ப்பாணம் புறப்பட்டார். லிங்கா அவரிடம் வீட்டாருக்கு ஒரு கடிதத்தையும் சிறு பணத் தொகையையும் கொடுத்து தனது வீட்டில் சேர்ப்பித்து விடுமாறு கேட்டிருந்தார்.

பாடசாலைகள் ஆர்பித்து விட்டிருந்ததால் பிள்ளைகள அனுப்பிவிட்டு வாணி பீதியுடன் வீட்டில் காத்திருந்தாள். எங்கே எப்போது என்ன நடக்குமோ என்ற கிலேசம் அவளை ஆட்டிப்படைத்தது. வீட்டு வாசலில் நின்று யாரோ அழைப்பதுபோல் ஒரு பிரக்ஞை தோன்றவே மெமதுவாக வாசலை எட்டிப் பார்த்தாள்.

தண்ணீரூற்றைச் சேர்ந்த பாலா அண்ணை அங்கு நின்றிருந்தார். குதூகலத்துடன் வாணி ஓடோடி வந்து "கேற்"றைத் திறந்தாள்.

"வாங்கோ பாலாண்ணை. எப்ப வந்தநீஞ்கள்? இவர் சுகாய் இருக்கிறாரே?"

கேள்விக் கணைகளால் திணறடித்தவளுக்கு பாலா ஒரே வார்த்தையில் பதிலளித்தார்.

"டொக்டர் கடித் தந்து விட்டவர்"

வாணியின் கைகள் கடிதத்தை வாங்குவதற்காகக் குறுகுறுத்தன. தனது அவசரத்தை வெளியே காட்டிக் கொள்ளாது நாசூக்காக நடந்து கொண்டாள், வாணி. அவரை வீட்டுக்குள் அழைத்து வந்து கதிரையில் அமரச் செய்ததும், அவராகவே லிங்கா கொடுத்துவிட்ட கடிதத்தையும் பணத்தையும் கொடுத்தார்.

"இருங்கோ அண்ணை வாறன்"

சொல்லிவிட்டு சமையலறைக்கு ஓடினாள், வாணி. மளமளவென்று கடிதத்தைப் பிரித்து படித்தவளின் முகம் மலர்ந்தது. அவசரமாக அடுப்பை மூட்டி தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து பாலாவிடம் நீட்டினாள்.

அவர் குடித்துக் கொண்டிருக்கும் போதே அங்குள்ள புதினத்தை விசார்த்து தெரிந்து கொண்டாள்.

பிள்ளைகள் பாடசாலை விட்டு வீடு வந்ததும் அவர்களிடம் அப்பாவின்

கடிதத்தை நீட்டினாள். குட்டித் தம்பியும் பரதனும் ஆவலுடன் அதை வாங்கி வாசித்தனர். குட்டித்தம்பியின் உதட்டில் ஒரு சிரிப்பு மலர்ந்தது.

"இதென்னம்மா. அப்பா எழுத்துப்பிழை நிறைய விட்டிருக்கிறார்."

"அதையேன் நீ பார்க்கிறாய். கடிதத்தை வாசிச்சிட்டால் இஞ்சை தா"

வாணிக்கு கணவனின் பலவீனுத்தை விட்டுக் கொடுக்க இஷ்டமில்லை. பிள்ளைகளுக்கு ஆளுக்கொரு சோடி உடுப்புகளை வாங்கிக் கொடுக்குமாறு லிங்கா எழுதியிந்தார். உண்மையிலேயே அவர்களுக்கு மாற்றுடுப்பு தேவைப்பட்டது. மறுநாள் அவர்கள் புறப்பட்டதும் தான் வீட்டு வாசலால் யாழ்ப்பாணம் போகும் பஸ்ஸில் போய் தேவையயானவற்றை பொள்வனவு செய்து கொண்டு வந்துவிட வேண்டு என எண்ணிக் கொண்டான்.

யாழ்ப்பாணம் போய்விட்டுத் திரும்பிய பாலா, லிங்காவிடம் வசாக மாாட்டிக் கொண்டார். கேள்விகளால் தன்னைத் துளைத்தெடுத்த லிங்காவுக்கு பதில் சொல்ல முடியால் திணறிப் போனார், பாலா.

"பாலாண்ணை! வீட்டில இருக்கிறதுக்கு கததிரை எல்லாம் இருந்ததே?"

"ஓம் டொக்டர். எல்லாம் புதுசா வாணி அடிச்சபடி இருந்தது. மேசையும் புதுசாத்தான் தெரிஞ்சது."

லிங்காவுக்கு புரிந்து விட்டது. எல்லா் ஜெகன், பரதனுடைய வேலையாய்த்தான் இருக்க். எரிஞ்ச கதிரைகளைத் திருத்தி வாணிஷ் அடிச்சிருக்கிறாங்கள் போல. "என்ரை பிள்ளையள் தலையெடுத்திட்டாங்கள். இனி எனக்கு பிரச்சினையில்லை." னதுக்குள் ஒரு பூரிப்பு.

பொழுதுகள் நகர்ந்தன. லிங்காவுக்கு பகலில் ஓரளவு நோயாளர்கள் வந்து போனார்கள். இரவில் நோயாளர்களின் வருகை அற்றுப் போய்விட்டது என்றே கூறலா். எனவே லிங்கா பொழுது சாய்ந்ததும் வீட்டுக்கார அம்மா வீட்டிற்கு பின்பாதையால் போயிருந்து ராணி அக்காவின் கணவனான ரட்ணம் மாஸ்டரோடு சிலமணி நேரம் கதைதத்துவிட்டு வருவார். அன்றும் அப்படித்தான். புறப்படும் போது நாயைக் கூப்பிட்டு

றெக்ஸ்! நான் எங்கட வீட்டுக்காற அம்மாவீட்டை போயிற்றுவாறன் நீ இதிலையே படுத்திருக்க வேணும்"

என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். இரவு எட்டு மணி இருக்கும். யாரோ நேநாயாளர்கள் அவசர சிகிச்சைக்காக வந்தவர்கள் பேொலும் ஐயா! ஐயா!! என்று குரல் கொடுத்தார்கள். றெக்ஸ் உரக்கக் குரலெடுத்து குரைக்கத் தொடங்கியது. சுவராஸ்யமாகக் கதையில் மூழ்கியிருந்த லிங்காவுக்கு நாயின் குரல் கேட்கவில்லை. சிகிச்சைக்கு வந்த பிள்ளைக்கு முட்டு இழுக்க இ ழுக்க அது அவலமாகக் குரலெழுப்பத் தொடங்கியது. சட்டென றெக்ஸ் பின் பாதையால் ஓட்டமெடுதத்து அம்மாவின் வீட்டு வாசலில் நின்று குரைத்தது. லிங்காவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"உன்னை வீட்டில் காவல் இருக்கச் சொன்னால் இங்கை ஏன் வந்த நீ"

அதட்டிய லிங்காவின் உடுத்தியிருந்த சாறத்தைப் பற்றி இழுத்தது றெக்ஸ். உடனேயே லிங்கா அவர்களிடமிருந்து விடைபெற்று புறப்பட்டு விட்டார். வீட்டில் வந்து பார்த்தால் மிகவும் அவலமான நிலையில் ஒரு குழந்தை மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது. சட்டென லிங்கா சிகிச்சை மேற்கொண்டதனால் அந்தக் குழந்தையின் உயிர் காப்பாற்றப்பட்டுவிட்டது. றெக்ஸ் அவருக்கு ஒரு காப்பரணாக இருந்தது என்பது தான் நிதர்சனமான உண்மை.

ஒரு நாள் திடீரென்று இந்திய அமைதிப்படை கொமண்டரிடிருந்து அழைப்பு வந்தது. அவர் மீது விசாரனை இருப்பதாக அழைத்துப்போக வந்த சிப்பாய் கூறினான். சற்றும் கிறுங்காது உடனேயே லிங்கா புறப்பட்டுப் போனார். சிகிச்சைக்காக வந்திருந்தவர்கள் கலக்கத்திற்குள்ளானவர்களாய் காத்திருந் தனர். கொமாண்டரின் கேள்வி இது தான்.

“நீ எல். ரி.ரி. டொக்டர்தானே?”

“இல்லை. நான் நோயாளர்களுக்குத் தான் வைத்தியம் செய்கிறேன்”

“எல்.ரி.ரி. உங்களுடைய டிஸ்பென்சரிக்கு வந்து போறதாக எங்களுக்கு தகவல் கிடைச்சிருக்கு”

“அப்படி வந்தால் அவர்களை இனங்கான வேண்டியது உங்களுடைய பொறுப்பு. என்னிடம் நோய் என்று வருபவர்களுக்கு நான் வைத்தியம் செய்கிறேன். அது என்னுடை கடமை.”

“வோர்ன் பண்ணத்தான் உம்மைக் கூப்பிட்டது”

“என்னை வோர்ன் பண்ணி எதுவித பிரயோசனமுமில்லை. முடிஞ்சா... நீங்கள் என்னுடைய டிஸ்பென்சரியில வைச்சு எல்.ரி.ரியை பிடியுங்ஙகோ. பிறகு என்னை அரெஸ்ற் பண்ணுங்கோ”

துணிவுடன் சொல்விட்டு திரும்பி நடந்தார், லிங்கா. வைத்தியசாலையில் காத்திருந்த நோயாளர்கள் முகத்தில் ஈயாடவில்லை. கலங்கிப் போயிருந்தனர்.

“சும்மா இவங்கட வெருட்டலுக்கெல்லாமம் நாங்கள் பயப்பட வேணுமா” சொல்லிக் கொண்டே வந்து சேர்ந்தவர் தனது கடமையில் இறங்கிவிட்டார்.

“ஆள் சரியான துணிச்சல்க்காரன் தான்”

ஒருவர் மற்றவரது காதுக்குள் கிசுகிசுக்க, அவர் தலையை மட்டும் அசைதத்துவிட்டு இருந்தார்.

நோயாளிகளுடன் போராளிகளும் வைத்திய தேவைக்காக அவரிடம் வருவார்கள். சில வேளைகளில் அமைதிப்படையினரும் வருவதுண்டு. அத்தருணங்களில் அவர்களுடன் வசமாகக் கதைகொடுத்துக் கொண்டே போராளிகளைத் தந்திரமாக பின்புறப்பாதையால் வெளியேற்றி விடுவார், லிங்கா. இதனால் அவர் அவர்களுடைய நம்பிக்கைக்குரிய அப்பா வாகி விட்டார்.

***

மாசி மாதத்துப்பனி மூசிப்பெய்யும் என்று சொல்லுவார்கள். அதனை மெய்ப்பிப்பது போல் தண்ணீரூற்று கிராமமே பனிப்போர்வைக்குள்

மூழ்கிக்கிடந்தது. மலைப்பிரதேசங்களில் கடும் குளிருக்குள் வாழந்து பழக்கப்பட்ட லிங்கா, இங்கே போர்வைக்குள் தன்னை முற்றாகப் புதைத்தவாறு நடுநடுங்கிக் கொண்டிருந்தார். எழுந்து மற்றுமொரு போர்வையை எடுத்து அதற்கு மேலே போர்த்திக் கொள்ளலாம் என்ற உந்துதல் மனதளவில் தோன்றியதே தவிர, அவரால் இம்மியளவும் நகர முடியவில்லை.

ம்!... ம்!!... ம்!!!...

அவனுக்கம் மட்டும் வெளிப்பட அவர் மெய்மறந்து கிடந்தார்.

பொழுது விடிந்து ஆறு மணி ஆகிவிட்ட போதிலும் அப்பா படுக்கையிலிருந்து எழும்பவில்லையே என்ற ஆதங்கம் சுரேனை உலுப்பவும் அவன் மெதுவாக அவரண்டை சென்று அவரது நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். அனலாகக் கொதித்த நெற்றி அவனைத் திடுக்கிட வைத்தது.

“அப்பா! காய்ச்சல் காயுது. பனடோல் கொண்டு வரட்டே?”

சுரேனது அன்பினால் நெகிழ்ந்து போனவராய் அவர் முனகினார்.

“கொண்டு வா ராசா.”

சுரேன் தேநீர் தயாரித்து வந்து பனடோலையும் கொடுத்தான். வாங்கிக் குடித்தவர் சுரேனிடம் சொன்னார்.

“நீ போ ராசா. பள்ளிக்கு நேரம் போயிடும். நான் கொஞ்ச நேரம் படுத்திருந்திட்டு எழும்புறன்” புறப்பட்டுப் போனான். ஆனால்... லிங்காவிற்கு காய்ச்சல் குணமாகவில்லை. எப்படியோ இரண்டு நாட்களாக வைத்திய சாலைக்கும் போகாமல் காலத்தைக்கடத்தி விட்டார். இடியப்பம், புளிக்கஞ்சி, கஞ்சி என அயலவர்கள் செய்து கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆனால்... அவருக்குத்தான் வாய்க்குள் வைக்க முடியதாவாறு ஒரே ஓங்காலமும் கசப்புமாக இருந்தது.

இரண்டு நாட்களுக்குள் உடல் சேர்ந்து துவண்டு போய்விட்டது. அப்போது தான் லிங்காவுக்கு தனது குடும்பத்தினரின் அரவணைப்பு தேவைப்பட்டது. அருமையும் தெரிந்தது. வாடகைக்கு ஒரு வாகனத்தைப்பிடித்து அதில் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டார்.

அங்கே... வீட்டில் வாணி சமையலை முடித்துவிட்டு குட்டித்தம்பிக்கு ஒரு சேட் தைப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். குட்டித் தம்பிக்கு ஒரு பழக்கம். எந்த றெடிமேட் சட்டைகளும் பிடிக்காது. அம்ா தைப்பதுதான் தனக்கு சரியான அளவாயிருக்கும் என்ற கொள்கையிலிருந்து இம்மியளவும் பிசகமாட்டான். ஜெகனுக்கு அன்று வகுப்ப இருக்கவில்லை. எனவே அவனும் வீட்டிலிருந்தான். திடீரென அவன் குரல் கொடுத்தான்.

“அம்மா! அப்பா நடக்கேலாமல் வாறார்”

ஓடிப்போய் ஜெகன் அவரைக் கைத்தாங்கலாக அழைத்து வர, வாணியும் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள்.

“என்னப்பா... என்ன நடந்தது?”

“ஒன்றுமில்லை. ரெண்டு மூன்று நாளாய் காய்ச்சல்”

இருவருமாக அவரை அழைத்துச் சென்று படுக்கையில் படுக்க வைத்தனர். வாணி ஓடோடிப்போய் தேசிக்காய் உப்பும் சீனியும் போட்டு கரைத்து வந்தாள். ஜெகன் அதைக் கையில் வாங்கி அப்பாவுக்கு பருக்கி விட்டான்.

“அம்மா! நல்ல காய்ச்சல் தான் காய்ஞ்சிருக்குது போல. உதடெல்லாம் வெடிச்சுக்கிடக்குது”

தண்ணீரைப் பருகியதும் லிங்காவுக்கு உயிரே மீண்டு வந்தது போலவொரு உணர்வு தோன்றியது. மீண்டும் அவரை நீட்டி நிமிர்ந்து படுக்க வைத்தான், ஜெகன். இதற்கிடையில் ஒரு பாத்திரத்தில் வெந்நீர் கொண்டு வந்து அவரது முகத்தைத் துடைத்து பவுடர் போட்டு விட்டாள், வாணி. இதமான சுகம் ஒன்று அவரது மேனியைத் தழுவ கண்ணயர்ந்து உறங்கத் உறங்கத் தொடங்கினார், லிங்கா. குடும்பத்தினரின் அரவணைப்பில் தான் இருக்கிறேன் என்ற சிந்தனையே அவருக்குத் தாலாட்டாக அமைந்தது.

மதிய இடைவேளைக்கு வீடு திரும்பிய பிள்ளைகள் அப்பாவின் நிலை கண்டு பதறிப்போயினர். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அப்பா ஒரு கம்பீரமான மனிதர். எதற்கும் நிலை குலையாதவர் என்பது ட்டும் தான். தன்நிலை தளர்ந்து கிடக்கும் அப்பாவை அவர்கள் கற்பனையில் கூட பார்த்ததில்லை.

மாலையானதுமம் காய்ச்சல் வேகரம் கொள்ளத் தொடங்கியது. பனடோலுக்கும் குறையவில்லை. இரவு முழுவதும் சுதன் அருகிலிருந்து ஈரத்துணியினால் அவரது உடலை துடைத்து விட்டுக் கொண்டேயிருந்தான். விடிந்ததும் வாணி, பிள்ளைகளை கல்விக்கூடங்களுக்கு அனுப்பிவிட்டு, வாடகைக்கார் ஒன்றில் கணவனை யாழ்.போதான வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றாள். அவரது உடல் நிலையைப் பரிசோதித்த வெளிநோயாளர் பிரிவிலுள்ள வைத்தியர் அவரை வார்ட்டில் அனுமதிக்குமாறு கூறினார்.

வாணி அவரை வார்ட்க்கு அழைத்துப் போய் அவருக்கென ஒதுக்கப்பட்ட கட்டிலில் படுக்க வைத்ததும் அவளை அங்கு நிற்கவிடால் வாரட்டிலுள்ள பணியாளர்கள் விரட்டத் தொடங்கி விட்டனர். எதுவுமே செய்ய முடியாத நிலையில் வாணி வீட்டுக்கு புறப்பட்டாள். லிங்காவின் கெஞ்சும் பார்வையோ அவளைப் போக வேண்டாம் எனத் தடுக்க முற்பட வாணியோ அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பபட்டாள்.

“அப்பா! உங்களுக்கு மத்தியானம் கஞ்சி குடுக்கச் சொன்னவை. நான் வீட்டை போய் கஞ்சி வைச்சுக் கொண்டு ஓடி வாறன். என்ன!...”

லிங்கா இப்போது ஒரு குழந்தையாக மாறி தலையை மட்டும் அசைத்தார். பஸ் பிடித்து வீட்டுக்கு வந்த வாணி, பிள்ளைகளுக்கு ஒரு சாம்பாரும் சோறும் வைத்துவிட்டு, கணவருக்கம் கஞ்சி தயாரித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

வாணி வார்த்துக் கொடுத்த கஞ்சியை குடிக்க மறுத்த லிங்கா,

எதிர்க்கட்டிலில் படுத்திருக்கு் முதியவருக்குக் கொடுக்குமாறு அடம் பிடித்தார்.

“அப்பா! நான் நிறையத்தான் கொண்டு வந்திருக்கிறன். நீங்கள் இதை மட்டும் குடியுங்கோ. மீதியை நான் அந்த அப்புவுக்கு குடுக்கிறன்”

“நான் ஏன் சொல்லுறன் தெரியுமா? அந்த அப்பு வல்வெட்டித்துறை யிலையிருந்துவந்திருக்குத். அதுக்கு சாப்பாடு கொண்டு வந்நது குடுக்க ஆளில்ல.”

“சரி யப்பா. நீங்கள் வார்ட்டிலை இருக்கு மட்டும் நான் அவருக்கும் சாப்பாடு கொண்டு வந்து குடுக்கிறன். சரிதானே.”

ஒருவாறு ஒரு டம்ளரர் கஞ்சியை அவருக்குப் பருக்கியாகிவிட்டது. மிகுதியை வார்த்து அந்த வயோதிபரிட் கொடுத்தாள். திடீரென உணவின் நறுமணம் அந்த வார்ட்டுக்குள் வீசியது. பின்னால் மதிய உணவுடன் உணவு வண்டி வந்தது. அந்த முதியவர் தனது தட்டை எடுத்து நீட்டி உணவ வாங்கிக் கொள்வதை அவதானித்து வாணி, கணவனைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

அன்று மாலை நோயாளரைப் பார்வையிடும் நேரத்தில் நிறைய உறவினர்கள் லிங்காவைப் பார்வையிட வந்திருந்தார்கள். லிங்கா நோயுற்று “வார்ட்“டிலிருக்கும் செய்தி மளமளவென்று பரவிவிட்டது தான் காரணம்.

மூன்றாம் நாள் அவருக்கு பூரண சுகமாகிவிட்டதனால் அவரை வீட்டிற்குப் போக அனுமதித்து விட்டார்ககள். இரத்தம் சோதித்ததில் எதுவித பிரச்சனையும் இருக்கவில்லை. சலத்திலும் எதுவித பாதிப்புமில்லை. அது ஒரு வைரஸ் காய்ச்சலாம். நோயாளர்களிடமிருந்து தொற்றியிருக்கக் கூடும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

எது எப்படியோ. அவருக்கு குணமாகி வீட்டிற்குத் கூட்டி வந்தாலே போதும் என்ற நிலைதான் வாணிக்கு. வாணியைக் கண்டது தான் தாமதம். லிற்கா துள்ளிக் குதித்தார்.

“வாணி! டிஸ்சார்ஜ் பண்ணீட்டீனம். ஓட்டோ ஒன்று பிடிச்சுக் கொண்டு வாரும். வீட்டுக்குப் போகலாம்”

“அது சரியப்பா. முதல்ல சாமான்களை “பாக்“ பண்ணி வைச்சிட்டுப் போறன். அப்ப தான் ஓட்டோ வந்த உடன போய் ஏற வசதியாயிருக்கும்.

சொல்லிக் கொண்டே வாணி அவருக்குரிய அலுமாரியைத் திறந்தாள். அதற்குள் சுடுதண்ணீர்ப் போத்தலும் சில குவளைகளும் மட்டுமேயிருந்தன. அந்த அலுமாரியைப் போலவே அவளது மனமும் வெறிச்சோடிப் போனது.

“எங்கையப்பா இதுக்கை கிடந்த சாமான்களெல்லாம்?”

“அ... அதை விடும். அதையெல்லாம் தரம் பிரிச்சு இந்த வாரட்டிலை கிடக்கிற கஷ்டப்பட்ட சனங்களுக்குக் குடுத்திட்டன். எங்களால என்ன வாங்க முடியாதே.”

வாணிக்கு தலை விறைத்தது.

“நேற்றைக்கு பக்கத்துவீட்டு தேவி அக்கா கொண்டு வந்த ஹார்லிக்ஸ்.

அதையும் குடுத்திட்டியளோ?”

“அது அந்த மூலைக்கட்டிலில கடக்கிற ஓமக்குச்சி கிழவனுக்கு குடுத்தநான். பாவம் கிழவனுக்கு கிட்னி வருத்தம். இன்னும் எத்தினை நாளைக்கு இருக்கப்ப போகுதோ. சாகப் போகேக்க தென்பாய் இருந்திட்டு சாகட்டும்”

வாணி மௌனத்தைத் தழுவிக் கொண்டாள். பேசுவதற்கு வார்த்தைகள் இருந்தால்த்தானே.

***

நோயிலிருந்து குணாகி வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய லிங்கா, இரண்டு நாட்கள் ஓய்வாக இருந்தார். மூன்றாம் நாள் பொழுது விடிந்ததும் தான் வேலைக்குப் போக வேண்டுமென அடம் பிடிக்கத் தொடங்கினார்.

சும்மா சொல்லக்கூடாது. பிடிவாதத்துக்குப் பெயர் போனவர, லிங்கா. ஒரு கருமத்தை மனதில் நினைத்து விட்டால் போதும். அதை நிறைவேற்றி முடிக்குமட்டும் ஓயவே மாட்டார்.

“அப்பா! நான் சொல்லுறதைக் கேளுங்கோ. இப்பதான் இரண்டு நாளாய் காய்ச்சல் விட்டிருக்கு. இன்னும் வடிவாய்ச் சாப்பிடக்கூட துவங்கயில்ல. இந்தப் பலயீனத்தோட அங்கை போய் உங்களால சமாளிக்க முடியாது.”

“ஆர் சொன்னது என்னால சாளிக்க முடியாது என்று.”

மனைவியின் மீது பாய்ந்தார் லிங்கா. முல்லைத்தீவுக்குப் புறப்பட்டு விட்டார். மன் கேக்காமல் வாணி அவரது பொதிக்குள் சஸ்டஜன் மாவை வைத்து விட்டாள்.

“தினமும் ஒரு வேளையாவது இந்த மாவைக் கரைச்சுக் குடியுங்கோ.. என்ன!.. நான் சொல்லுறது விளங்குதோ… அல்லது ஆரும் கிழடு கட்டைகள் வந்தால் அதுகளிட்டைத் தூக்கிக் குடுத்து விட்டிட்டு நீங்கள் நிம்மதியாய் இருக்கிற எண்ணமோ?”

வாணியின் மன் ஆதங்கம் வார்த்தைகளாய் ெ வளிப்பட்டது. லிங்காவின் முகத்தில் ஒரு புன்முறவல் மலர்ந்தது.

“இல்லை வாணி. இந்த ஒரு கிழமையாய் சனங்கள் சரரியாய் கஷ்டப்பட்டிருக்கும். நானும் எல்லாதைய் போட்டது போட்டபடி விட்டிட்டு வந்திட்டன்”

“ஏன் அங்கை அரசாங்க ஆஸ்பத்திரி இல்லையே?”

வாணி கோபத்தின் விளிபில் இருப்பது லிங்காவுக்குப் புரிந்தது.

“சொன்னக்கேளும் வாணி. றெக்ஸ் வேற என்னைக் காணயில்ல என்று தேடப்போகுது”

“முந்தி நீங்கள் இஞ்சை வந்து நிக்கேக்க மாதக் கணக்கில் றெக்ஸை வைச்சுப் பார்த்தவன் சுரேன். இப்ப பார்க்க மாட்டானே?”

“முன்பெல்லாம் வாயே திறக்காத வாணி, இப்ப வார்த்தைக்கு வார்த்தை

பதில் சொல்ல பழகி விட்டாள்“

மனதுக்குள் நினைத்துச் கொண்டவர் வாய்விட்டுச் சிரித்தார். ஜெகன் அவரை அந்த இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றினான்.

“அப்பா வெளிக்கிடுவமே? பஸ்ஸுக்கு நேரமாச்சுது”

“வாறன் வாணி!”

லிங்காவை ஏற்றிக் கொண்டு ஜெகனது மோட்டார் சைக்கிள் புறப்பட்டுவிட்டது. வாணியின் கண்களை நீரர் மறைத்தது. கணவன் மீது அனுதாபமா அல்லது அவளது ஆற்றாமையின் வெளிப்பாடா என்பதை அவளாலேயே கிரகிக்க முடியவில்லை.

எது எப்படியோ. லிங்கா வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார். லிங்கா வந்திறங்கியதைக் கண்டதும் மக்கள் படையணி ஒன்று அவரது வீட்டை நோக்கி படையெடுத்து விட்டது என்றே கூறலாம். அவர்களது அன்பாக விசாரனையைத் தாள முடியாமல் லிங்கா கிறுகிறுத்துப் போய்விட்டார்.

எல்லாவற்றையும் விட “றெக்ஸ்“ஸின் அன்புத் தொல்லையை அவரால் சகிக்க முடியவில்லை. தனது இரு முன்னங்கால்களையும் அவரது மடியில் போட்டு முகத்தினருகே வந்து முனகத் தொடங்கி விட்டது.

“அ… சரி சரி… இனி போதும்”

என்று சொல்லி லிங்கா அதன் முதுகுில் தடவி விட்டார். அப்படியும் அது சமாதானமடைய மறுத்து வீம்பு செய்தது. இதைக் கவனித்த சுரென் ஓடி வந்து “ரெக்ஸ்“ஜைப் பிடித்து கட்டிப் போட்டான். வந்தவர்கள் லிங்காவிட் நலன் விசாரித்துப் போயினர். இதற்கிடையில் செய்தியறிந்த பொன்னம்மாக்கா ஊதுாக்கூழ் தயாரித்துக் கொண்டு வந்து விட்டாள்.

“ஐயா! மிளகு சீரகம் போட்டு உளுத்தம் மாவில கூழ் செய்து கொண்டு வந்ததிருக்கிறன். இளஞ்சூட்டோட குடியுங்கோ. உடம்பு வலியெல்லாம் ஒரு நொடியில பறந்து போயிடும்”

“அட வீட்டில தான் அன்புத் தொல்லை என்று பார்த்தால் இஞ்சையும் அதே நிலை தானா?“

மனதுக்குள் நினைத்துக் கொண்டவராய் கூழைக் குடிக்கத் தொடங்கினான். அந்தச் சமயம் பார்த்து வீட்டுக்கார அம்மாவின் மகளான ராணி அக்கா இடியப்பமும் மீன் சொதியும் கொண்டு வந்தா.

“டொக்டர்! இப்ப எப்பிடி இருக்குது. காய்ச்சலெல்லாம் மாறிவிட்டுதே?”

“இப்ப பறவாயில்ல அக்கா” என்று சொன்னவர்,

“அக்கா! இப்பதான் பொன்னம்மாக்கா கொண்டுவந்த ஊதுமாக்கூழ் குடிச்சநான் இரவைக்கு உங்கட இடியப்பத்தைச் சாப்பிடுறன்”

என்று கூறி அவவையும் சாளித்துக் கொண்டார். கையில் இரு தோடம்பழங்களுடன் சுரேன் அவரது அருகில் வந்து அமர்ந்து கொண்டவன், தோலை உரித்து சுளைகளாக்கி அவரிடம் நீட்டினான்.

“அப்பா! சாப்பிடுங்கோ. காய்ச்சல் வாய்க்கு நல்லாயிருக்கும்”

அவனது அன்பான செய்கை அவரை நெகிழ வைத்தது. “பெற்றால்த்தான் பிள்ளையா? அணைப்பில் வளரும் அத்தனை பேரும் பிள்ளைகள் தானே“ இதமான மனநெருடலுடன் அவர் சுரேன் நீட்டிய தோடம்பழச் சுளைகளை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

மறுநாட்காலை வைத்தியசாலை திறக்கப்பட்டு வழமையான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நோயாளர்களின் உடல் நலம் தவிர குடும்பம், தொழில் பற்றிய அலசல் எதுவுமின்றி லிங்கா, நோயாளரைப் பரிசோதிப்பதும் மருந்தை எழுதி உதவியாளரிடம் கொகடுப்பதுமாக இருந்தார். அவரது அமைததியான போக்கைப் பார்த்து நோயாளரே அதிசயித்தனர். உள்ளத்தில்த்தான் உரம் இருந்ததே தவிர, உடல் சோர்ந்து போவதை அவரால் நன்கு உணர முடிந்தது. எழுந்து மெதுவாக வீட்டுக்குப் போனார். வாணி தந்து விட்ட சஸ்டஜன் மாவை எடுத்து கரைத்துக் குடித்தார். குடித்து முடித்ததும் மேனியெல்லாம் வியர்த்து களை களையாக வந்தது. சிறிது நேரம் சாய்மனையில் சரிந்திருந்ததும் உடம்பில் தென்பு வந்துவிட்டது. வாணி சமயோசிதமாக தந்து விட்டதை நான் குடிக்காமல் விட்டது எனது தவறுதான் என மனம் முன்முதலாக ஒத்துக் கொண்டது. எப்போதுமே லிங்காவின் மனம் தனது தவறுகளை ஒத்துக் கொள்வதில்லை. அது அவருடைய இயல்பு.

லிங்காவின் உடல்நிலை மெதுமெதுவாகத்தேறி சகஜ நிலைக்கு வர கிட்டத்தட்ட ஒரு மாதம் எடுத்தது. ஒருவாறு நாட்டின் அமைதியைக் காக்கவென்று வந்த அயலவனின் படையும் நாட்டை விட்டு வெளியேறியதால் மக்களது மனங்களில் சிறிது அமைதி தோன்றியது. அந்த அமைதியும் நெடுநாள் நீடிக்க வில்லை. குண்டு வெடிப்புச் சம்பவங்கள், கண்ணி வெடித்தாக்குதல் போன்ற சம்பவங்கள் அமைதியை ஊடறுத்துக் கொண்டிருந்தன. பெதுக்கள் எப்போதும் மடியில் நெரும்பைக் கட்டியிருக்க வேண்டிய அவலநிலையில் வாழ வேண்டியிருந்தது.

லிங்காவின் வைத்தியசாலையில் அடிக்கடி சுற்றி வளைப்பு, தேடுதல் வேட்டை போன்ற சம்பவங்களுக்கு இலக்காவதனால் பணியைத் தொடர முடியவில்லை. அதே சமயம் ஆனையிறவுப் பாதையும் மூடப்பட்டு விட்டது. போக்குவரத்துப் பிரச்சனையுடன் சோதனைச் சாவடிகளைத் தாண்டி மருந்து வகைகளை எஏடுத்து வருவதும் பெரும் சிரமமாகி விட்டது. எங்கே என்ன நடக்குமோ என்ற அவல நிலையில் மக்கள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம். என்ன செய்யலாம் என லிங்கா மனதில் குழம்பியிருந்த வேளையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் மருத்துவ அதிகாரிக்கு ஒரு வெற்றிடம் இருப்பதாகவும் அதற்கான விண்ணபங்கள் கோரப்படுவதாகவும் ஒரு அறிவித்தல் கிடைத்தது. லிங்கா, உடனேயே ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார். நேர்கத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவருக்கு

நியனக் கடிதம் கையில் கிடைத்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரனையின் கீழ் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் மருத்துவ சேவையில் மத்துவ அதிகாரியாகக் கடமையாற்றும் பேறு கிடைத்தபோது அவர் அடைந்த கிழ்ச்சிக்கு எல்லையில்லை. ஏழை மக்களுக்கு இலவசமாக சேவை செய்யப் போகிறோம் என்ற எண்ணமே அவரது மகிழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

வெள்ளை இனத்தவர் ஒருவர் தான் இவர்களது நடமாடும் மருத்துவ சேவைக்கு தலைமை வகித்தார் அவர்களுக்குக் கீழ் வேை செய்வது லிங்காவுக்கு ஒன்றும் புததிய அனுபவமல்ல. அவர்களது தலைமைச் செயலகம் புதுக்குடி யிருப்பில் இயங்கிக் கொண்டிருக்க, இவர்கள் வன்னிப்பிரதேசம் முழவதற்கும் செஞ்சிலுவை வாகனத்தில் பயணித்து வைத்திய சேவையை நடத்த வேண்டும். தலைச் செயலகம் புதுக்குடியிருப்பில் இயங்குவதால் லிங்காவுக்கும் இடம் மாறற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இடம் மாறுவதற்குள் வளர்ப்ப நாயாகிய “றெக்ஸ்“ஸை எப்படியாவது கொண்டு போய் தனது குடும்பத்தினருடன் சேர்த்து விட முயற்சித்து அதில் வெற்றியும் கண்டார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனம் யாழ்ப்பாணத்திற்குப் போகும் போது, தலைமைச் செயலகத்தில் அனுமதி பெற்று அதில் நாயைய்் ஏற்றி வந்து வீட்டில் சேர்த்த பிறகுதான் அவரால் நிம்மதியாக வேலை செய்ய முடிந்தது. புதுக்குடியிருப்பில் ஒரு வாடகை வீட்டில் மற்றும் சில இளைஞர்களுடன் அவர் தங்கியிருந்தார். அந்த இளைஞர்களும் அவருடைய பிள்ளைகளாகவே பழகி வந்தனர். அத்துடன் அவர்களது வாகனத்தைச் செலுத்தும் சாரதி குடும்பத் தினரும் கூட அவருடன் ஒன்றி விட்டனர். மனம் நிறைந்த தொழில், அன்பினால் கட்டுண்ட பிள்ளைகள் என பொழுதுகள் இனிதாகக் கழிந்தன.

மக்கள் நெருக்கமாகக் கூடும் இடங்களுக்கெல்லாம் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் சேவை தேவைப்படுவது வழக்கம். அவர்களுக்கு அவசர உதவி களைச் செய்யும் பொருட்டு இரண்டு மூன்று வாகனங்களில் அத்தியாவசிய உதவிப் பொருட்களுடன் அவ்விடத்துக்கு விரைவார்கள். லிங்காவும் அவரது மருத்துவக் குழுவினரும் உடல் நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சைகளை மேற்கொள்ளுவர்.

ஒரு சமயம் சுண்டிக்குளத்திற்கு யாழ்.குடாவிலிருந்து நிறைய அகதிகள் வருவதாக அறிந்து அவர்களுக்கு உதவ்் முகமாக செஞ்சிலுவைச் சங்கத்தினரை அவ்விடத்திற்கு போதுமாறு பணிக்கப்பட்டது. லிங்கா குழவினரும் அங்கு போயிருந்தார்கள். சதுப்பு நிலங்களில் கால் புதையப் பு தைய நடந்து களைத்து விழுந்து வந்தவர்களுக்கு தேநீரும் பிஸ்கட்டுகளும் வழங்கப்பட்டன. வயிற்றுப் பசி ஓரளவு தீர்ந்தால் களையாறிய முகங்களில் தோன்றும் மலர்ச்சியை ஒரு புன்சிரிப்புடன் அவதானித்துக் கொண்டிருந்தார், லிங்கா.

திடீரென ஒரு வயோதிப மாது மயக்கமுற்றுவிட்டதாக அவருடைய உதவியாளர்கள் வந்து தகவல் தர அவ்விடத்துக்கு விரைந்தார் லிங்கா.

“முதல்ல ஆச்சியை ஒழுங்கா படுக்க வையுங்கோ”

அவருடைய உதவியாளர்கள் தறப்பாளை விரித்து அதன் மேல் அவரைப் படுக்க வைத்தனர். அதற்கிடையில் அவரைச் சுற்றி வளைத்து சனங்கள் வேடிக்கை பார்க்க முனைந்ததனர். வந்ததே லிங்காவுக்கு கோபம்.

“எல்லாரும் அங்கால போகலாம். ஒருத்தரும் இஞ்சை நிற்கக்கூடாது”

அவர் போட்ட கூச்சலில் கூட்டம் கலைந்தது. அந்த ஆச்சியைப் பரிசோதித்த லிங்கா, உதவியாளரை அழைத்து அவரது முகத்தில் நீர் தெளிக்கு மாறு கட்டளையிட்டார். நீர் பட்டதும் ஆச்சியின் உடலில்ல அசைவு தெரிந்தது.

“பசிக்களையும் உடல் அசதியும் தான்”

சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்த ஆச்சி, பிஸ்கட் தேநீரை உட்கொண்டவுடன் எழுந்து நடந்து போவதை வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்தார், லிங்கா. அதே சமயம் அல்லல்பட்டு அகதியாய்க் கிளம்பி விட்டோமே… அடுத்த நேரம் எங்கே போய் ஆறப்போகிறோம் என்ற அவல நிலையை மறந்து வேடிக்கை பார்க்கக் கூடும் மக்களை நினைக்க வெறுப்பாய் இருந்தது. அத்துடன் அவரது சிந்தையில் மற்றுமொரு காட்சியும் புரண்டது. தான் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருநுந்த காலத்தில் கொழும்பிலிருந்து அகதி அந்தஸ்த்துடன் கப்பலில் மூன்று நாட்கள் பனியும் வெய்யிலும் காய்ந்து இறுதியாக காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தபோது கிடைத்த வரவேற்புடன் அவரையுமறியாமல் மனம் ஒப்பு நோக்கியது. இதற்குக் காரணன்ன? விடை தேடியது மனம். இப்படியாக அலை பாய்ந்து கொண்டிருந்த எண்ணங்களை முடிவுக்குக் கொண்டு வந்தது ஒரு குரல்.

“டொக்டர்! ஒரு இன்ஜரி கேஸ்”

“எப்பிடிக் காயப்பட்டதாம்?”

கேட்டுக் கொண்டே காயக்காரரைப் பார்க்க எழுந்து போனார், லிங்கா.

“சுரிக்குள்ள சறுக்கி விழுந்து முழங்காலில கல் உறஞ்சிப் போட்டுது”

காயத்தைக் கூர்ந்து பாபர்த்துவிட்டு லிங்கா சொன்னார்.

“வடிவாய் கிளீன் பண்ணிப்போட்டு மருந்தைக் கட்டி விடுங்கோ”

அவருடைய உதவியாளர் தனது பணியில் கவனத்தைச் செலுத்தினார். மற்றுமொரு கேஸ் லிங்காகவுக்காக காத்திருந்தது. முட்டுடன் மூச்சிளைத்தவாறு ஒரு அப்பு அனுங்கிக் கொண்டிருந்தார். அவரைப் பரிசோதிப்பதற்காக நெருஞ்கிய லிங்கா கேட்டார்.

“என்னப்பு. சுரட்டிக்கிற நீங்களோ. ஒரே சுரட்டு மணமாய்க்கிடக்குது.”

“இல்லை ஐயா. இரண்டு தரம் புகை இழுத்தாத்தான் என்னால இந்த கொடும் குளிரை சமாளிக்க முடியுது”

“அடப்பாவி! இந்தளவு முட்டு இழுக்கேக்கயும் உமக்கு புகை தேடுதோ”

சொல்லிவிட்டு அவரவது வாயைத் திறக்கச் சொல்லி பம்மை வைத்து அடிடித்து விட்டார். வாயை மூடியவாறு அப்பு சிறிது நேரம் மருந்தை உள்ளிழுக்க

அவரது முட்டும் ஓரளவு தணிந்தது. சுடச்சுட தேநீரை வாங்கி குடிக்கத் தொடங்கினார்.

மக்களின் வருகை குறைந்ததும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் தத்தமது நிலைகளுக்குதத் திரும்ப லிங்காவின் மருத்துவக் குழுவினரும் புதுக குடியிருப்பை நோக்கி புறப்பட்டுப்போயினர். இரண்டு நாட்களாக இரவு நித்திரை யைத் தொலைத்து விட்ட லிங்காவும் உடல் அசதியைப்போக்க ஓய்வை நாடினார்.

அன்று வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு பொங்கல் வருடந்தோறும் வைகாசி மாதத்தில் காட்டு விநாயகர் ஆலயத்திலருந்து தீர்த்தம் எடுத்து வந்து அதில் நெய்விளக்கேற்றி வெகு சிறப்பாக பொங்கல் விழாவை மக்கள் கொண்டாடுவர். சரித்திரப் பிரசித்தி பெற்ற கண்ணகி அம்மனின் பொங்கல் விழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து கூடுவதால், பெருந்திரளான மக்கள் வெள்ளத்தை சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அளவுக்கதிமான மக்கள் கூடுவதால் சனநெரிசலில் சில விபத்துக்களும் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் சேவை அங்கு அத்தியாவசியமாகிறது. அன்று அதிகாலையிலேயே லிங்காவும் குழுவினரும் வற்றாப்பளை நோக்கி புறப்பட்டு விட்டனர். நாட்டில் என்ன பிரச்சனை நடந்தாலும் எமது மக்கள் தெய்வ வழிபாட்டுக்கு பின் வாங்குவதில்லைத்தானே. பல்வேறு பகுதிகளிலிருந்தும் வாகனங்களில் வகை தொகையின்றி மக்கள் வந்து குவிந்த வண்ணமிருந்தனர்.

அம்மனுக்கு அபிஷேகம், பூசை புனஸ்காரங்கள் ஒரு புறம். பாற்செம்பு, காவடி போன்ற நேர்த்திக்கடன்கள் மறுபுறமுமாய் பரந்து விரிந்து கிடந்த கோயில் வீதி அர்க்களப்பட்டது. தனியார் வாகனங்கள் கோயிலின் அமைவிடத்திற்கு சற்றுத் தள்ளியே நிறுத்தப்பட்டிருந்தன. மக்கள் சேவைக்காக வந்திருந்த செஞ்சிலுவைச்சங்க வாகனங்கள் வீதியின் எல்லையில் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. செஞ்சிலுவைச் சங்க ஊழியர்களும் மக்களோடு மக்களாக கோயில் வீதியை வலம் வந்து அம்மனது ஆசிவேண்டி வழிபாட்டில் ஈடுபட்டனர். வழிபாடு முடிவுற்றதும் தத்தமது வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டனர்.

முன்னையய காலங்களைப் போலில்லாவிட்டாலும் வருகை தந்திருந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு கடைகள் போடப்பட்டிருந்தன. அநேகமான குழந்தைகளின் கைகளில் ஊதுகுழல். அவை எழுப்பிய ஒலி காதுகளைக் குடைய மற்றும் சில குழந்தைகள் பொம்மைகளுடன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தன. லிங்கா, தனது வாகனத்தில் சாய்ந்தவாறு நின்று கண்முன்னால் ஓடித்திரியும் குழந்தைகளின் சாககசங்களில் தனது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

திடீரென்று பாரிய குண்டுச்சத்தங்கள் காதில் அறைந்தாற்போல்

கேட்கவும் தன்னையறியாமலே நிலத்தில் விழுந்து படுத்துக் கொண்டார். தொடர்ந்தும் அருகருகே முழக்கம் கேட்டதும் அவரால் நிலைமையை ஓரளவு ஊகிக்க முடிந்தது. அதே சமயம் முல்லைத்தீவு முகாமிலிருந்து தீப்பிழம்புகள் எகிறி வருவதையும் கண்ணால் கண்டவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இதற்கிடையில் மக்களின் அவலக்குரல்களும் ஆரவாரங்களும் காதைப் பிளந்தது. கண்மூடி முளிப்பதற்குள் அருகில் ஒரு பாரிய வெடியோசை முழங்கிய போது அவரது நெஞ்சத் துடிப்பு நின்று போனது போல் ஒரு அதிர்வு ஏற்பட்டது.

"ஐயோ! என்ரை பிள்ளையைக் காப்பாத்துங்கோ"

ஒரு தாயின் அவலக்குரல் வந்து காதில் மோதத, சட்டென மின்சாரத்தினால் முடுக்கிவிட்ட பொம்மை போல லிங்கா எழுந்தார். தனது வாகனத்தில் கிடந்த முதலுதவிப் பெட்டியைக் கையிலெடுத்தார். இரு கைகளாலும் பெட்டியை ஏந்தியவாறு தரையில் விழுந்து புரளத் தொடங்கினார். ஒரு வேளை கண்ணகியம்மனுக்கு அங்கப் பிரதட்சணம் செய்ய வேண்டிய பலன் அவருக்கு இருந்ததோ... என்னவோ உருண்டுண்டு குரல் வந்த திசையை நோக்கி முன்னேறினார். காயத்திற்குள்ளான பிள்ளையை இனங்கண்டு முதலுதவி அளித்தபின் அந்தச் சுற்றாடலில் மற்றும் சிலர் காயப்பட்டிருந்ததை அவதானித்தார். நிதானமாக அவரவ்களுக்கும் சிகிச்சை செய்தார். மற்றும் உயிரிழந்தவர்களைக் காப்பாற்ற யாரால்த்தான் முடியும்.

ஒருவாறு எறிகணை வீச்சும் ஓய்ந்தது. காயப்பட்டவர்களை வாகனங்களில் ஏற்றி அனுப்பிவிட்டு லிங்கா தனது இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்த போது குழந்தைகள் இரண்டிலும் சுலீர்! சுலீர்! என வலித்தது. பார்த்தால் மண்ணில் உராய்ந்ததில் உரசல் காங்கள் ஏற்பட்டிருந்தன. உதவியாளர்கள் அவரைக் கவனித்துக் கொண்டனர். எல்லோருக்கும் அவரது செய்கைக வியப்பையளித்தது.

அங்கே... காலை புதினப்பத்திரிகையைப் பார்த்த அதன் திடுக்கிட்டான்.

"முல்லைத்தீவு முகாமிலிருந்து ஷெல் வீச்சு. செஞ்சிலுவைச் சங்க சாரதி உட்பட முப்பத்தைந்து பேர் மரணம். இருபத்தைந்துக்கு மேற்பட்டோர் படுகாயம் வற்றாப்பளை பொங்கலில் நடந்த அனர்த்தம்"

செய்தியை வாசித்த சுதனுக்கு நெஞ்சு பகீரென்றது. வீட்டில் செய்தியறிந்தால் பதறுவார்களே என ஒருதரம் சிந்தித்தவன் நேராக யாழ்.செஞ்சிலுவைக் கிளைக்கு போய் விசாரித்த பின்னர்தான் நிதான மடைந்தான். வழிபாட்டுக்கென வந்தவர்கள் பிணமாக விழுவதென்றால்... நினைக்க மனம் பதகளித்தது. இதற்கிடையில் அம்மா செய்தியை வாசித்திருப்பாளோ... தினமும் காலைச் செய்தியை வாசிப்பது அவளது பழக்கமல்லவா? ஏக்கத்துடன் வீட்டைநோக்கி அவனது உந்துரளி உருண்டது.

***

இப்பொழுதெல்லாம் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை தான் லிங்காவால் குடும்பத்தினரிடம் வந்து போக முடிந்தது. மக்களுக்கு சேவை செய்வதே தன் கடன் எனக் கருதியவராய் லிங்கா முற்று முழதாககதன் தொழிலியே லயித்திருந்தது தான் காரணம். மூத்தவன் சுதன் மருத்துவ பீடத்தில் இறுதியாண்டு மாணவனாக கல்வியைத் தொடர ஜெகனும் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் இறுதியாண்டில் பயின்று கொண்டிருந்தான். சின்னண்ணாவின் மகனும் பரதனும் ஏ.எல் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காகக் காத்திருந்த அதே வேளை குட்டித்தம்பி ஏ.எல் வகுப்பில் முன்னணி மாணவனாகத் திகழ்ந்து கொண்டிருந்தான்.

பாரிய பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் சிக்கன விளக்குகளைப் பாவித்து, பிள்ளைகளின் கல்வி தொடர்ந்து கொண்டிந்தது. வாணி கணவனிடம் சொல்லி அங்கலாய்த்தாள்.

“இஞ்சாருங்கோப்பா. மற்றவை ஒரு மாதிரி பரீட்சை எழுதிப்போட்டின். எங்கட குட்டித்தம்பி தான் பாவம். இரவெல்லாம் உந்த சிக்கன விளக்கில இருந்து படிச்சுப்போட்டு விடிய எழும்பேக்க தலையிடிக்குது என்று சொல்லிக்கொண்டு தலையில அள்ளித் தோயுறான்”

“இதென்ன வாணி உம்முடைய கதை. ஊரோடு ஒத்தது தானே எல்லாருக்கும். எங்களுக்கு அவங்கள் என்ன நெருக்கடியைத் தந்தாலும் அதிலையிருந்து நாங்கள் மீண்டெழ வேண்டும் என்றுதான் யோசிக்க வேணும். அதை விவட்டிட்டு....”

வாணி குறுக்கறுத்தாள்.

“சரிசரி. வாங்கோ. போய்ச்சாப்பிடுவ். வீணாய் விளக்கெரியுது.”

லிங்கா எழுந்து மனைவியைப் பின் தொடர்ந்தார். அவருடைய மனத்திலும் ஆதங்கம் இருக்கத்தான் செய்தது. பொருளாதாரத் தடை என்ற போர்வையில் எமது மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். மக்களை இந்த நிலையிலிருந்து எப்படி ஈடேற்றலாம என மனம் சிந்திக்கத் தொடங்கியது.

மறுநாட்காலை அவர் எதேச்சையாக வளவுப்பக்கம் போனபோது அவருக்கு விடை கிடைத்தது. வாணியும் பிள்ளைகளும் கிணற்றடியை அண்டிய பகுதிகளை ஒரு பசுஞ்சோலையாகவே ஆக்கி வைத்திருந்தார்கள். மரவள்ளி, வற்றாளை, மரக்கறி வகைகள் என நாட்டியிருந்ததுடன் வாய்க்கால் கரைகளில் கங்கூன், பசலி போன்ற கீரை வகைகள் மதாளித்து வளர்ந்திருந்தன. இப்படியே ஒவ்வொருவரும் தத்தமது தேவைகளுக்கேற்ப பயனுள்ள பயிர்களை நட்டு வளர்த்தால் ஓரளவு சுயதேவை பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என லிங்காவின் மனம் தேறுதலடைந்தது.

பரதனும் குட்டித்தம்பியும் தான் இந்த வீட்தோட்ட செய்கையில் ஈடுபடுவதாகவும், கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டிருக்கும் பொருண்மிய

மேம்பாட்டு நிறுவனங்களிடமிருந்து தரமான விதைகளைப் பெற்று வந்து பயிரிட்டிருப்பதாகவும் வாணி கூறினாள். மக்களது இச் செய்கை லிங்காவுக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சுதந்திரம் எவ்வளவு முக்கியமோ அதேபோல் பொருண்மிய மேம்பாடு தன்டனிறைவு அவசியமே என அவரது னன் கருத்தில் கொண்டது.

வாணியின் பெற்றோர் இருவரும் முதுமைநிலையை அடைந்து விட்டனர். அவர்கள் சண்டிலிப்பாயில் தனித்திருந்து வாழ்வை லிங்கா விரும்பவில்லை. அவர்களைத் தங்களுடன் வந்து தங்குமாறு கேட்டுக் கொண்டார். அ வர்களும் வந்து இவர்களது குடும்பத்துடன் இணைந்து கொண்டனர்.

குடா நாட்டில் பதற்ற நிலை தீவிரமடைந்தது. திடீர் திடீரென குண்டு வீச்சு விமானங்கள் வான் பரப்பை முற்றுகையிடுவதும் குடியிருப்புகள் மீது குண்டுகளைப் பொழிவதுமாக காலங்கள் கடந்து கொண்டிருந்தன. அதே சமயம் கோட்டைக்குள்ளிருந்தும் குண்டுகள் ஏவப்பட்டு அவை சுற்றாடலை நோக்கி சீறிப்பாயத் தொடங்கின. கல்விக்கூடங்கள் அனைத்தும் காலவரையின்றி மூடப்பட்டன. குண்டு வீச்சுக்குப் பயந்து ஓடி ஒதுங்குவதும், வயிற்றுப் பசியை போக்குவதற்காக உணவுப் பொருட்களை வாங்க வரிசையில் நின்று தூங்குவதுமாக பொதுமக்களின் பொழுதுகள் கரைந்து கொண்டிருந்தன.

காலையில் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த குட்டித்தம்பியை மாலையில் காணவில்லை. வீட்டிலிருந்த அத்தனை பேருமே ஆளுக்கொரு பக்கமாகத் தேடி அலைந்தனர். அவனது புத்தக அடுக்கின் கீழ் ஒரு கடிதம் இருந்ததாக பரதன் கொண்டு வந்தான். அதன் சாராம்சம் இதுதான்.

“எங்களுடைய நாட்டில் எப்போது தடங்கலின்றி படிக்கக் கூடிய சூழல் உருவாகிறதோ... அச்சமயம் நான் வந்து படிப்பைத் தொடருவேன்.“

வாசகங்களைப் படிக்க முடியாதவாறு வாணியின் கண்களை நீர் மறைத்தது. வாழ்க்கையில் முதன் முதலாக சோகம் என்ற சொல்லின் பதத்தை அவளால் உய்த்துணர முடிந்தது. மனம் துவண்டு சோர்ந்து போனவரன ஆற்றுப்படுத்தும் நிலையில் அங்கு எவரும் இருக்கவில்லை. லிங்கா வாயே திறக்காமல், பிரமை பிடித்தவர் போல் அமர்ந்திருந்தார். அவருடைய நெஞ்சத்திலுள்ள அத்தனை பாசத்தையும் திட்டி உருட்டி வளர்த்த குட்டிப் பிள்ளையாயிற்றே.

அவர்களது உறக்கத்தைத் தொலைத்துவிட்டு பொழுது விடிந்தது. வாணி தனது நெஞ்சத்தை முற்றாக ஆக்கிரமித்திருந்த கவலையையெல்லாம் மூட்டை கட்டி மனத்துக்குள் புதைத்து வைத்துவிட்டு உணவு தயார்த்தாள். அங்கு ஒருவருக்கும் உணவு இறங்கவில்லை. இப்பொழுது அவர்களைத் தேற்றி உணவளிக்கும் பொறுப்பு விரும்பியோ, விரும்பாமலோ வாணியிடமே வந்து சேர்ந்தது. அவர்கள் எல்லோரையும் வற்புறுத்தி இரண்டு வாய் சாப்பிட

வைத்தாள்.

இரண்டொரு நாட்களில் லீவு முடிந்து லிங்கா வேலைக்குப்ப புறப்பட்டு விட்டார். பிரிவுத்துயரினால் வாட்டமுற்றிருக்கும் குடும்பத்தினரின் முகங்களைப் பார்க்காமலிருப்பது அவருக்கு சிறிது ஆறுதலைத் தந்தது. தொழில் ரீதியாக பல்வேறுபட்ட மக்களுடன் தொடர்பு, மாலை வேளைகளில் கூடவே தங்கி யிருக்கும் பிள்ளைகளின் கலகலப்பான செயற்பாடு என அவர் அவர்களுடன் ஒன்றிப் பழகினாலும் மனதுக்குள் கறையான் அரிப்பது போன்றதொரு நமைச்சல் தோன்றி அவரை அரித்துக் கொண்டேயிருந்தது. இரவில் சற்று கண்ணயரலாம் என கண்களை மூடினால், அவர் வீட்டை விட்டுப புறப்படும்போது வாணி ஒரு ஏக்கப்பார்வையுடன் அவருக்கு விடையளித்த நினைவுகள் கண்முன்னே தோன்றி அவரைக் கொல்லும். மானசீகமாக அவர் வாணியிடம் மன்னிப்புக் கேட்பார்.

"வாணி! என்ன மன்னிச்சுக் கொள்ளும். உமக்கு ஆறுதல் சொல்ல எனக்கு வார்த்தைய கிடைக்கவில்லை"

இப்படியே சஞ்சத்துடன் பொழுகள் கரைந்து கொண்டிருந்தன. ஒரு நாள் அவரைச் சந்தித்த ஒரு போராளி அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான். பிரித்துப் படித்தார், லிங்கா. குட்டித்தம்பி தான் மணலாற்றுப் பகுதியில் பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகவும் பயிற்சி முடிந்தவுடன் வந்து சந்திப்பதாகவும் எழுதியிருந்தான். அப்பா! நீங்கள் எத்தனையோ போராளிகளைப் பார்த்திருப்பீர்கள். பழகியிருப்பீர்கள். ஆனால் அம்மாவுக்கு குடும்பம்தான் உலகம். நீங்கள் இனியும் வேலை என்று அலையால் வீட்டோடு போய் இருக்க வேணும். இது தான் என்னுடை விருப்பமாகும்.

குட்டித்தம்பியினுடைய கோரிக்கை நியாயமானதாகவே பட்டாலும் அவரால் அதனை முழுமனதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தான் வாழும் ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ளதாகக் கழிக்க வேண்டுமென விரும்புபவர் அவர். அவரால் எப்படி குடும்பத்தினருடன் போயிருந்து பொழுதுகளை வெட்டியாகக் கழிக்க முடியும்.

"ம்!..."

நீண்ட பெருமூச்சொன்று வெளியேறி அவரது உள்ளத்தை ஆசுவாசப்படுத்தியது.

"எப்படியாவது இந்தக்கடிதத்தை வாணியிடம் சேர்ப்பித்துவிட வேண்டும். இதைப் படித்தால் அவளது கொந்தளித்துக்கிடக்கும் உள்ள் சிறிதளவாவது சமாதானமடையும்" என நினைத்தவர் அதற்கான முயற்சிகளைச் செய்து அதனை அவளிடம் சேர்ப்பித்து விட்டுத்தான் ஓய்ந்தார்.

கண்களை நீர் மறைக்க, குடும்பத்தவர் ஒவ்வொருவராக கடிதத்தைப் படித்து ஓய்ந்தனர். முதலில் சுதன் வாய் திறந்தான்.

"டேய்! அவனுடைய தோட்டத்தை நல்லவாய்ப் பராமரிச்சு பாத்துக் கொள்ளுங்கோ. றெயினில் முடிஞ்சு அவன் வந்தானெண்டால்... தன்ரை

தோட்டத்தைத் தான் முதல்ல போய்ப் பாப்பான். அதில ஏது பிசகினால் போதும். நாக்கைப் பிடுங்கிற மாதிரி நாலு கேள்வி கேட்பான்"

அண்ணாவின் வார்த்தைகளைக் கேட்டுவிட்டு ஜெகன் கூறினான்.

"அண்ணா! உந்த விசயத்தில் நீங்கள் தப்பிவிடுவியள். ஏன் தெரியுமோ? அவனுக்கு வடிவாய்த் தெரியும். வீட்டில் நாங்கள் செய்யிற எந்த விசயத்திலயும் நீங்கள் தலையிடுதில்ல. பற்றற்ற சீவனாய் நீங்கள் படிப்போடு காலத்தைக் கழிப்பியள் என்று"

"என்னை நிம்மதியாய் இருந்து படிக்கவிடாமல் குழப்பினதுக்கு அவன் வந்த உடன வண்டியில ஒரு குத்து விடாமல் இருக்கமாட்டன்"

கையைப் பொத்தி பரதனின் வயிற்றில் ஒரு குத்து விட்டான், சுதன் வயிற்றைப் பொத்திப் பிடித்தவாறே பரதன் கூறினான்.

"அண்ண! கவனம். அவன் முந்தின குட்டித்தம்பி இல்லை. "றெயினிங்" எடுத்திட்டு வாறவன். திருப்பி ஒரு குத்து விட்டா... உங்கட கதி என்ன."

நீண்ட காலத்திற்குப் பிறகு அந்த வீட்டில் சிப்பலைகள் ஒலித்தன. வாணியின் நெஞ்சு ஒரு தரம் விம்மித் தணிந்தது. எண்ணமோ எங்கெல்லாமோ தாவித் திரிந்து குட்டித்தம்பிக்கு விருப்பமான உணவு வகைகளைத்தேடி பட்டியலித் தொடங்கின.

***

அன்று ஞாயிற்றுக்கிழமை. எல்லோருக்கும் ஒய்வு நாள். தொழிலின் நிமித்தம் புதுக்குடியிருப்பில் வந்து தங்கியிருந்த பிள்ளைகள் அனைவரும் முதல்நாள் மதியமே தத்தமது சொந்த இருப்பிடங்களுக்குப் போய் விட்டிருந்தனர். இனி அவர்கள் நாளை காலைதான் வேலைக்குத் திரும்புவர். லிங்கா அதிகாலையில் எழுந்து விட்டார். அன்று அவர் குட்டித் தம்பியைப் போய் பார்த்து விட்டு வரலாமென முடிவெடுத்திருந்தார். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து வாகனங்களின் பாவனை அருகியிருந்த காலமது. காலை ஆறு மணிக்கே லிங்கா, தனது சைக்கிளில் கிளிநொச்சியை நோக்கி புறப்பட்டுவிட்டார். மெது மெதுவாக சில்லு உருண்டு கொண்டிருந்தது. வழியில் ஒரு கோயிலில் பூசை நடந்து கொண்டிருந்தது. எதையோ நினைத்துக் கொண்டவராய் லிங்கா தனது சைக்கிளை உருட்டிப் போய் ஒரு மரநிழில் நிறுத்தினார். அருகிலிருந்த கிணற்றில் போய் கால்முகம் கழுவி விட்டு வந்து வழிபாட்டில் கலந்து கொண்டார்.

என்றுமில்லாத அதிசயமாக அவரது மனம் ஒருநிலைப்பட்டு கண்முன் காட்சியளித்த அந்த அபிராரியின் திருக்கோலத்தை இரம்மியத்துடன் தரிசிக்க மெய்மறந்து நின்றார். தனது குலதெய்வமாகிய நாகபூசணி அ்மாளே தன்னை ஆட்கொண்டு இரட்சித்து விட்டதான ஓர் உணர்வில் திளைத்துப் போனவரது கண்களோ அந்த திருவுவத்தின் மீதே நிலை கொண்டு விட்டன. எத்தனை நேரம்தான் அப்படி நின்றிருந்தாரோ ஒரு குரல் அவரை உலுப்பிற்று.

"ஐயா! பிரசாதம் வாங்கிக் கொள்ளுங்கோ"

சுயநினைவு வரப் பெற்றவராய் அவர் இருகைகளையும் நீநட்டி பயபக்தியுடன் பூசகரிடமிருந்து பிரசாதத்தைப் பெற்று நெற்றியில் அணிந்து கொண்டார். கால்கள் கடுத்தன. சற்று இளைப்பாறலாம் என எண்ணியவராய் வாசற்படிக்கட்டின் ஓரத்ததில் அமர்ந்து கொண்டார். பூசகர் கோயிலைப் பூட்டிவிட்டுப் போனதும் தான் கொண்டு வந்த பானையும் வாழைப்பழத்தையும் சாப்பிட்டு பசியாறி விட்டுப் புறப்படலாம் என மனம் ஏவியது. எனவே சிறிது நேரம் காத்திருந்தார். காத்திருந்தார். காத்திருந்தவரைர நோக்கி ஒரு திய உருவம் வந்து கொண்டிருந்தது.

"ஐயா றெட் குறொஸ் டொக்டர் தானே?"

வந்தவர் சந்தேகத்துடன் வினவினார்.

ஆனெதத் தலையசைத்தார், லிங்கா.

"ஐயாவுக்கு என்னைத் தெரியேல்லையே. உங்களிட்டத்தான் நாங்கள் மருந்தெடுக்கிற நாங்கள்"

"எத்தினையோ பேர் வருகின். மருந்தெடுக்கினம். எல்லாரையும் ஞாபகம் வைச்சுக் கொள்ளுறது கஷ்டம் தானே"

இப்பொழுது வந்தவர் அவருக்கு சற்றுத் தூரத்தில் அமர்ந்து கொண்டார்.

"எங்கட பூர்வீகம் மட்டுவில் மூன்று தலைமுறைக்கு முந்தி நாங்களும் இஞ்சை வந்தேனு குடிகள் தான். இப்ப நாங்கள் காணி பூமியளோட நல்ல வசதியாய் இருக்கிறம்."

"முயற்சி இருந்தால் எவரும் முன்னேறலாம். என்ன.... நான் சொல்லுறது சரிதானே?"

"சரியாய்ச் சொன்னியள் ஐயா. உதில கூப்பிடு தூரத்திலதான் எங்கட வீடு இருக்குது. ஐயா ஒருக்கா எங்கட வீட்டை வந்திட்டுப் போக வேணும்."

"சரியாய்ப் போச்சு. நான் ஒரு அலுவலாய் கிளிநொச்சிக்குப் போய்க் கொண்டிருக்கிறன். இன்னுமொரு நாளைக்கு கட்டாயம் வாறன்."

"இல்லை ஐயா. அங்கை என்ரை மனுசி வாசலில நிண்டு காத்துக் கொண்டிருக்குது. ஒருக்கா வந்திட்டுப் போங்கோ"

அன்புத் தொல்லையைத் தாங்க முடியால் வேறு வழியின்றி லிங்கா அந்த முதியவரின் பின்னால் சைக்கிளை உருட்டிக்கொண்டு நடக்க வேண்டியதாயிற்று. வீட்டு வாசலில் அவரிடம் அடிக்கடி மருந்துக்கு வரும் பொக்கட்டி ஆச்சி நின்றிருந்தான். லிங்காவைக் கண்ட மாத்திரத்தில் ஆச்சியின் அதிகாரம் தூள் பறக்கத் தொடங்கியது.

"எடி பிள்ளையள்! டாக்குத்தர் ஐயா வந்திருக்கிறார். கதிரையை எடுத்துப் போடுங்கோ"

இதற்கிடையில் ஆச்சியை அடையாளங்கண்டு கொண்ட லிங்கா அவளை கலாய்க்கதத் தொடங்கினார்.

"என்னென ஆச்சி! வாய் அவியலுக்கெண்டு மருந்தெடுக்கிறாய்.

இஞ்சை என்னடா எண்டால் வாய் நிறைய வெத்திலையைப் போட்டு குதப்பி வைச்சிருக்கிறாய். நல்லாய்ச் சுண்ணாம்பும் போட்டிருக்கிறாய் போல. வாய் செக்கச் செவேலென்று சிவந்து போய்க்கிடக்குது. இனி நீ மருந்து கேட்டு அந்தப் பக்கம் வா பாப்பம்.”

“ஐயோ அதில்ல ஐயா காலமை சாப்பிட்டது. வாய் ஒரு மாதிரி சளவளவென்று கிடர்துது. எப்பன் வெத்திலையைக்கிள்ளி ரெண்டு சீவலையும் வைச்சு கையால கசக்கிப்போட்டு வாய்க்கை போட்டநான். எனக்கென்ன சப்புறுத்துக்கு பல்லுக் கிடக்குதோ. அப்பிடியே கொஞ்சநேரம் வைச்சிருந்திட்டு துப்ப வேண்டியது தான்”

“டொக்டர் கேட்டியளே மனுசியின்ரை கதையை”

மனைவியைப் பார்த்து கண்ணைச்சிமிட்டினார் அந்த முதியவர்.

“ஐயாவின்ரை முக் காய்ஞ்சு போய்க்கிடக்குது. பசி போல சாப்பாட்டைக் கொண்டு வந்து குடு பிள்ளை”

ஆச்சி செம்புன் தண்ணீரைக் கொண்டு வந்து லிங்காவிடம் நீட்டினான். அவர்களது உபசரிப்பை மீற முடியாதவராய் லிங்கா பசியாறினார். அதற்கு மேலே நுரை பொங்கப் பொங்க சூடான பசும்பால் கலந்த தேநீர் அவரது உடற் களையை ஒட்டுமொத்தாக நீக்கி விட்டது.

பொக்கட்டி ஆச்சியின் குடும்பத்தினரிடமிருநந்து விடை பெற்றார், லிங்கா.

“யா திரும்பிப் போகேக்கையும் இந்தப் பாதையால தானே போவிய. அப்பவும் ஒருக்கா இதில நிண்டு களையாறிப் போக வேணும்”

ஆச்சியின் அன்புக் கட்டளையை உதாசீனம் செய்ய முடியாதவராய் லிங்கா சைக்கிளை ிதிக்கத் தொடங்கினார். பரந்தன் சந்தியை அண்மித்ததும் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. லிங்கா எதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் தனது இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார். அவரது எண்ண் முழவதிலும் குட்டித் தம்பியின் நினைவுகளே நிறைந்திருந்தன.

ஒரு ஒற்றையடிப்பாதையூடாகப் பயணித்தவர் சட்டென “பிறுக்“ கைப் பிடித்து சைக்கிளை நிறுத்தினார் “இதுதான் இடமாயிருக்க வேணும்“ நினைத்துக் கொண்டவராய் நின்று ஒரு தரம் சுற்று வட்டாரத்தை நோட்டம் விட்டார். அப்போது தான் அவரை நோக்கி ஒரு பையன் கையில் ஆயுதத்துடன் விரைந்து வருவது தெரிந்தது.

“ஐயா! எங்கை போக வேணும். இதுக்கங்கால ஒருத்தரும் போக முடியாது”

“அதெல்லாம் தெரிஞ்சுதான் வந்திருக்கிறன்”

லிங்கா ஒரு போடு போட்டதும் பையன் இறங்கி வந்தான்.

“ஐயா யாரையாவது சந்திக்க வந்த நீங்களா?”

“என்னுடைய மகன் லியோவைப் பார்க்க வந்தநான்”

லியோ என்ற பெயரைக் கேட்டதும் அவருக்கு மரியாதை அதிகமாயிற்று.

“ஐயா இதில இருந்து கொள்ளுங்கோ. லியோ அண்ணையைப் பார்க்கிறதுக்கு நான் ஒழுங்கு செய்யிறன்”

லிங்கா அவன் காட்டிய கதிரையில் இருந்து கொண்டார். அவனோ சற்றுத் தூரத்துக்கு அப்பால் நகர்ந்து சென்று வோக்கியில் தொடர்பு எடுத்து என்னவோ உரையாடி விட்டு வந்தான்.

“ஐயா உங“களைக் கூட்டிக் கொண்டு போக இப்ப ஆள்வரும்“

லிங்காவும் சிறிது நேரம் காத்திருந்தார். போராளி ஒருவன் வந்து அவரை உள்ளே அழைத்தான்.

“ஐயா! சைக்கிள் இஞ்சையே நிக்கட்டும். நீங்கள் மட்டும் உள்ளுக்கு வாங்கோ.”

லிங்காவுக்கு மனதுக்குள் ஒரு தயக்கம். பிள்ளைக் கென்று கொண்டு வந்த பொருட்களை எடுப்பதா... விடுவதா என்பது தான் அது. எதையோ நினைத்துக் கொண்டவராய் சைக்கிளில் வைத்திருந்த பொதிகளை எடுத்துக் கொண்டே நடந்தார். அவர்கள் நடந்து வந்த தூரம் ஒரு ஐந்நூறு மீற்றர் வரை இருக்கலாம். அவ்விடத்தில் ஒரு கொட்டகை இருந்தது. அந்தக் கொட்டகைக்குள் போட்டிருந்த மேசையில் பொதிகளை வைத்துவிட்டு கதிரையில் அமர்ந்து கொண்டார், அவர். நடந்து வந்ததால் அவருக்கு மூச்சு வாங்கியது. அதையும் பொருட்படுத்தாமல் மகனைச் சந்தித்துவிட வேண்டும் என்ற ஆவலில் மனம் துடித்தது.

அண்மையில் ஒரு குரல் கேட்டது. உன்னிப்பாக அவதானித்ததில் அது குட்டித்தம்பியின் குரல்தான் என ஊர்ஜிதப்படுத்திக் கொண்டவராய் களின் வரவுக்காகக் காத்திருந்தார், அவர்.

“ஆரடா அவன் சொன்னது அப்பா வந்திருக்கிறாரெண்டு. என்னை ஏாத்திப்போட்டு உங்கை ஒருத்தரும் என்னட்டைத் தப்பி இருக்கமாட்டியள். சொல்லிப்போட்டன்”

“லியோ அண்ணை அப்பாவை நாங்கள் உள்ளுக்கை இருத்தி வைச்சிருக்கிறம். எட்டிப் பாருங்கோ”

எட்டிப் பார்த்தவன் அப்பாவைக் கண்டதும் புஸ்ஸென அடங்கிப் போய் விட்டான்.

“டேய் லக்ஸ்மன்! அப்பா களைச்சுப் போய் வந்திருக்கிறார். தேசிக்காய் கரைச்சுக் கொண்டு வா”

அவனை அப்பால் அனுப்பி விட்டு அப்பாவிடம் வந்தான். இருவரும் வெகு சிரமப்பட்டு தத்தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. விரைந்து போய் குளிர் பானத்துடன் வந்த லக்ஸ்மன், குட்டித்தம்பியிடம் கேட்டான்.

“லியோண்ணை! இவர் உங்கட அப்பாவே. இவரை முந்தியே எனக்குத்

தெரியும்.”

“போடா பேயா. இவரை உனக்குத் தெரியுமோ. என்ன லூஸ்கதை கதைக்கிறாய்?”

“ஐயா! நீங்கள் டொக்டரெல்லே. கொக்கிளாயில க ாயப்பட்டு வந்த எனக்கு நீங்கள் தானே ருந்து கட்டின நீஞ்கள்?”

லிங்காவுக்கு எல்லாமே புரிந்து விட்டது. அவரைத் திரும்பிப் பார்த்த குட்டித்தம்பியை நோக்கி ஒரு புன்முறவலை உதிர்த்தார். இருவரும் அர்த்தமுள்ள பார்வையால் ஒருவரையொருவர் புரிந்து கொண்டனர். நீண்டநேரம் இருவரும் அளவளாவிக் கொண்ட போதிலும் இருவருக்கிடையே ஒரு திரை விழுந்திருப்பது போன்றதோர் நிலைமையே அங்கு தென்பட்டது. முற்றுமுழுதாக மனம் திறந்து தத்தமது உணர்வுகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. லிங்கா புறப்படுவதற்கு ஆயத்தமானார்.

“குட்டித்தம்பி! உனக்கு விருப்பமான கச்சான் அல்வாவும் கொய்யாப்பழங்களும் கிடக்குது. பிள்ளையளுக்கும் குடுத்து சாப்பிபடு. என்ன ராசா நான் வரட்டே?”

குரல் தளுதளுத்தது.

“ஏன் அப்பா இவ்வளவையும் காவிக் கொண்டு வந்தநீங்கள்?”

அவனால் அப்பாவை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை. ஒருவாறு இருவரும் விடை பெற்றுக் கொண்டனர். வாசல்வரை வந்து அப்பா சைக்கிளில் ஏறி போய் மறையும் வரை குட்டித்தம்பி பார்த்துக் கொண்டே நின்றான். பாசத்துக்கு திரையிட்டு விட்டாலும் உள்ளுணர்வுகளின் உந்துதல் பார்வைக்குத் திரையிட்டன. சிவந்தத கண்களுடன் முகாமுக்குத் திரும்பியவன் நேராக குளிப்பதற்குப் போனான். அவன் அள்ளி வார்த்த தண்ணீருடன் கண்ணீரும் சேர்ந்து சங்கமமாக இதயமும் கனதியை இழந்து இலேசாகியது.

***

என்றோ ஒருநாள் குட்டித்தம்பி தங்களைத் தேடி வருவான் என்ற எதிர்பார்ப்புடன் அம்மாவும் பிள்ளைகளும் காலத்தைக் கழித்தனர். சுதன் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவான்.

“அவன் வந்தானெண்டால் வயித்தில சடீர்! புடிர்! என்று குத்தாமல் விடமாட்டன்”

அவனுக்குத் தெரிந்ததெல்லாம் அது தான். குட்டித்தம்பியுடன் செல்லம் கொஞ்சுவதும் சரசமாடுவதும் தான் அவனுக்கு விருப்பமான பொழுது போக்கு.

ஜெகனும் பரதனும் அவன் விரும்பி உண்ணும் உணவு வகைகளை அவனுக்காக சேமித்து வைக்கத் தொடங்கினர். குட்டித்தம்பி தனது கையால் நட்டுவிட்டுப் போன கொய்யா மரத்தில் பிஞ்சுகள் பிடித்திருந்தன. அவற்றை அணில்கள் கொந்தாமலிருக்க மூடிக்கட்டி வைத்துவிட்டு தினமும் அதை அவதானிப்பதுதான் அவர்களது வேலை.

"அண்ணா! இந்தக்காய் நல்லாய் முத்தி வெளிறிப்போய்கிடக்குது. அவன் வரமுந்தி அழுகிப் போயிடுமோ என்று கவலையாயக் கிடக்குது"

சொல்லி அங்கலாய்ப்பான், பரதன். இவ்வளவைய் காதில் வாங்கியவளாய் மரத்துப்போன மனத்துடன் உலா வருவாள், வாணி. அவளும் தன் பங்குக்கு மகன் வந்தவுடன் கொடுப்பதற்கென சல தின் பண்டங்களை இரகசியமாகத் தயாரித்து வைத்திருந்தாள். லிங்காவுக்கு ஒரு பழக்கம். பிள்ளை களுக்கு போற இடங்களில் வைத்து நொட்டைத்தீன் எதுவும் வாங்கிக் கொடுக்கவே மாட்டார். ஆனால் வீட்டிற்கு வரும் போது தொகையாக கச்சான் பயறு எள்ளு என்று வாங்கி வந்து போடுவார்.

"வாணி! பிள்ளைகளுக்கு வேண்டியதைச் செய்து குடும். வழி தெருக்களில், பஸ்களில என்று எல்லாரும் பிள்ளைகளுக்கு நொருக்குத்தீன் வாங்கிக் குடுக்கிறதைப் பார்த்தால் எனக்குப் பிடிக்கிறதில்லை. பிள்ளைகளுக்கு வேண்டியதை வீட்டிலையே செய்துகுடும்."

அவரின் சொற்களுக்கமையவே வாணியும் தாராளமாகச் செய்து கொடுப்பது வழக்கம். குட்டித்தம்பிக்கு பொரித்த கச்சான் என்றால் பிடிக்கும். எனவே அவளும் அம்மாவுமாகச் சேர்ந்து லிங்கா கொண்டு வந்த கச்சானில் ஒரு பகுதியைய எடுத்து உடைத்து பருப்பாக்கி அவற்றைப் பொரித்து உப்பும் மிளகாய்ப் பொடியும் கலந்து போத்தல்களில் போட்டு மூடி வைத்திருந்தனர்.

ஊரெல்லாம் ஒரு செய்தி காட்டுத்தீ போல பரவத் தொடங்கியது.

"பெடியள் மாங்குள முகாமைத் தகர்த்துப் போட்டாங்களாம்"

மக்களது முகங்களெல்லாம் மகிழ்ச்சிக் களையில் பொங்கிப் பிரவகிக்க போராளிகளைப் பெற்றுவரது முகங்களோ கலவரத்துடன் வானொலிச் செய்தியையும் பத்திரிகைச் செய்தியைும் நாடி அங்கலாய்த்தன. வியர்க்க விறு விறுக்க வீரச்சாவடைடந்தோர் பெயர்பட்டியலை அவதானிப்பதற்குள் அவர்களது இதயத்துடிப்பு எகிறி அவர்களைப் பதற்றத்துக் குள்ளாக்கிவிடும். இதற்கு லிங்கா குடும்பத்தினர் ஒன்றும் விதிவிலக்கானவர்கள் அல்ல.

ஏதோ வீட்டிலுள்ளவர்கள் பசியாற வேண்டுமென்பதற்காக உணவைத் தயாரிப்பாள், வாணி. வயிற்றுப்பசியைச் சமாளிப்பதற்காக உணவை உட்கொள் வார்களே தவிர அதில் நாட்டமிருப்பதில்லை. அவர்களது மனநிலை விளக்கு வதற்கு அகராதியில்கூட வார்த்தைகள் கிடைக்குமோ என்பது கேள்விக்குறிதான்.

சற்றுமம் எதிர்பார்க்காத நிலையில் அவர்களது மனச்சோர்வும் ஒருநாள் நீங்கியது. ஆம். ஒரு மறக்கமுடியாத காலைப் பொழுதில் குட்டித் தம்பி வரிச் சீருடையில் அவர்கள் முன் வந்து நின்றான். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? என்ன! வீடே கலகலத்தது. அம்மா ஓடி வந்து மகனைக் கட்டிக் கொண்டு அழுது தீர்த்தான். அது ஆனந்தக் கண்ணீரா? கவலையின் வெளிப்பாடா என்பது தீர்க்க முடியாத சந்தேகமே.

ஒருவருடைய வாயும் ஓய்ந்ததாகத் தெரியவில்லை. குட்டித்தம்பி தனது

பசீலன் படைப்பிரிவின் சாகங்களை எடுத்துக்கூற மற்றவர்கள் வாய்மூட மறந்து அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அம்மம்மாவும் தாத்தாவும் தங்களுடனே தங்கியிருப்பதில் அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அப்போது தான் வீட்டுக்கு வந்து சேர்ந்த சுதன் குதூகலத்துடன் குட்டித்தம்பியைக் ககைலத்துக் கலைத்து கையைப் பொத்திக் கொண்டு வயிற்றில் குத்த, அவனும் ஓடியோடிக் களைத்து கடைசியில்ல அ்மாவின் பின் வந்து சரணடைந்தான்.

“அம்மா! இஞ்சை பாருங்கோ அண்ணாவை”

சுதன் அவனை இறுக கட்டித் தழுவிக் கொண்டான்.

இப்படியும் ஒரு காட்சியை நான் கண்ணால் காண்பேனா என எண்ணியிருந்த வாணியும் அகமகிழ்ந்து போனாலும் இது நிரந்தரமல்ல என உள்ளுணர்வு அவளுக்கு உணர்த்தியது. குட்டித்தம்பியுடன் கழித்த ஒரு கிழமைப் பொழுதுகளும் ஒரே நொடியாகச் சுருங்கி ஓடி மறைந்தன. புறப்படும் போது குட்டித்தம்பி அம்மாவைப் பார்த்துச் சொன்னான்.

“நான் உங்கினைக்க கிட்டவாய் நின்றால் வீட்டை வந்து போவன்”

வாணி எதுவ்வு பேசவில்லை. வார்த்தைகள் வர மறுத்து விட்டன.

மாதங்கள் சில ஓடி மறைந்தன. குட்டித் தம்பியைப் பற்றிய எதுவித தகவலும் கிடைக்கவில்லை. வெறுமைப் பொழுதுகள் விரயமாகக் கழிவதாக வாணியின் மனத்தில் ஓர் உறுத்தல் தோன்றி அரித்துக் கொண்டேயிருந்தது. சோகத்தின் விளிம்பில் துவண்டு கிடப்பதை விட அவளால் என்ன செய்ய முடியும்.

பொழுது விடியும் போது படுக்கையிலிருந்தவாறே வாணி இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு தான் எழும்புவாள். “கடவுளே! இன்று நல்ல பொழுதாக அமைய வேண்டும்”

இறைஞ்சும் மனத்தில் ஏக்கம்தான் நிறைந்திருக்கும். அந்த ஏக்கத்தைத் தனிப்பதற்காக தினமும் அவள் அயலிலுள்ள ஏதாவது ஒரு கோயிலுக்குப் போய் வருவாள். வாணியைப் பொறுத்த வரையில் தெய்வம் ஒன்றுதான் அது எந்த உருவத்தில் இருந்தாலென்ன... மாதாவாக இருந்தாலும் சரிதான் அந்தோனி யாராக இருந்தாலும் சரிதான். பிள்ளையாரோ, அம்மனோ... எல்லாமே அவளது மனத்திரையில் செ தய்வமாகத்தான் தோன்றும். மனம் விட்டு பிராத்திப்பார் லிங்காவும் அதே கொள்கையுடையவர் தான். எப்போதும் அவரது கையில் கொண்டு திரியும் பையில் பைபிள் இருக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது வாசிப்பார். எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்க வேண்டும என்பது அவரவது கொள்கை ஆனால்... நன்மையோ தீமையோ எதற்கெடுத்தாலும் “அம்மாளாச்சி தாயே!” இது தான் அவரது தாரக மந்திரம்.

“கா!... கா!...”

முற்றத்து மாவிலிருந்து காகம் குரலெழுப்பியது. இதனைக் கேட்டதும் வாணியின் மனத்தில் ஒரு சிறு மின்னலென நம்பிக்கையின் பிரதிபலிப்பு தெரிந்தது.

“இன்றைக்கு ஒரு வேளை பிள்ளை வருவனோ?”

மனம் ஏக்கத்துடன் அங்கலாய்த்தது. காகம் கரைந்தது ஒன்றும் வீண் போகவில்லை. அன்று முழுவதும் வாணி அடிக்கடி விரைந்து வந்து வாசலை எட்டிப்பார்ப்பதும், ஏமாற்றத்துடன் திரும்புவதுமாக காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

“ஸ்....”

தன்னை ஆசுவாசப் படுத்தியவராய் லிங்கா வீட்டின் படிகளில் ஏறிக் கொண்டிருந்தார். கணவனைக் கண்டது தான் தாமதம். வாணி ஓடோடி வந்து அவரது கையிலிருந்த பொதிகளை வாங்கிக் கொண்டாள்.

“என்னப்பா! களைச்சுப் போனீங்களே. இருங்கோ நான் தேத்தண்ணி கொண்டு வாறன்”

அவளது உடலில் மன்சாரம் பாய்ந்தது போன்தொரு தென்பு ஏற்பட இரண்டே வினாடிகளில் தேநீரும் கையுமாய் வந்து நின்றாள். கணவன் பருகு மட்டும் காத்திருந்தவள், அவரிடம் பேச்சு கொடுக்கத் தொடங்கினாள். அவரும் தான் போய் குட்டித்தம்பியைச் சந்தித்து விட்டு வந்த சேதியைக் கூறினார். வாணியும் அவன் வந்து வீட்டில் நிற்கும் போது நடந்த சம்பவங்களைக்கூற, நேரம் போவதே தெரியாமல் இருவரும் கதைத்துக் கொண்டிருந்தனர்.

“பிள்ளையள் எப்பிடி இருக்கினம்?”

“எல்லாரும் படிக்கப்போய் வருகினம்தான் இருந்தாலும் எல்லாருக்கும் குட்டித்தம்பியைப் பற்றிய கவலைதான்”

“கவலை இருக்கத்தானேசெய்யும். அவன் வீட்டில எல்லாருக்குமே செல்லப்பிள்ளை தானே”

உடைந்த குரலில் சொல்லிவிட்டு ஒரு ஏக்கப் பெருமூச்சினை வெளிப்படுத்தினார், லிங்கா.

“வாணி! களைச்சுப் போய் வந்தவருக்கு சாப்பாட்டைக் குடுக்காமல் என்ன செய்யிறாய்?”

அம்மாவின் குரல் கேட்டு வாணி விழிப்படைந்தாள்.

“அப்பா! சாப்பாட்டைப் போடட்டே?”

“இல்லை வாணி. நான் குளிக்க வேணும்.”

“சரியப்பா. நீங்கள் போய்க் குளிச்சிட்டு வாங்கோ”

சொல்லிக்கொண்டே, அவருக்கான மாற்றுடைகளை எடுப்பதற்காக வாணி அறையை நோக்கி நடந்தாள்.

***

குடும்பத்தினருடன் நான்கு பொழுதுகளைக் கழித்துவிட்டு லிங்கா வேலைக்குப் புறப்பட்டார். வாணிக்கோ கணவன் அருகில் இருந்தால் சிறிதளவு தென்பாய் இருக்கும். அவர் போய்விட்டால் கடலலைகளின் நடுவே தத்தளிப்பது போல் மனம் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டேயிருக்கும்.

“ஏனப்பா! நீங்கள் வேலையை விட்டிட்டு வீட்டோடையேய இருந்தால் என்ன?”

தயக்கத்துடன் கணவனிடம் வாய்விட்டு கேட்டே விட்டாள்.

“இதென்ன உம்டைய விசர்க்கதை. நான் இஞ்சை இருந்து என்ன செய்யிறது. அங்கை இருக்கிற வறுமைப்பட்ட சனங்கள் பாவம் அந்தரிச்சுப் போயிடுங்கள். இப்ப நாலு நாளாய் நான் இல்லாதது அதுகள் பாடு பெரிய கஷ்டமாயிருக்கும். சாப்பாட்டுக்கே வழி இல்லாததுகள். மருந்தெடுக்க எங்கை போறது? நீர் ஒருக்கா வடிவாய் யோசிச்சுப் பாரும்”

வாணிக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டாள். கடமையே கண் எனக்கருதும் லிங்கா புறப்பட்டு புதுக்குடியிருப்புக்குப் போய்விட்டார்.

நான்கு நாட்கள் இலேசாகியிருந்த மனம் மீண்டும் கற்பாறையாக கனக்கத் தொடங்கி விட்டடது, வாணிக்கு இருந்தாற்போல் ஒருநாள் சுதன் செய்தியொன்றுடன் வந்தான்.

“அம்மா! உங்கட மகனைக் கண்டநான். சின்னக் காயத்தோட வந்திருக்கிறான். சிலாவத்துறை அடிபாட்டுக்குப் போனவனாம்”

“மெய்யாத்தானே சொல்லுறாய் ராசா. பெரிய காயமே. உண்மையைச் சொல்லு”

பதற்றத்துடன் அம்மா கெஞ்சினாள்.

“அம்மா! நீங்கள் போய் பார்க்கிறதுக்கு ஒழுங்கு செய்து விடுறன். இப்ப பதட்டப்படாமல் இருங்கோ”

அன்று மதியமே வாணியும் அவளது அம்மாவுமாக குட்டித்தம்பியை அவர்களது மருத்துவ விடுதி ஒன்றில் போய்ப்பார்த்தார்கள். அவனுக்கு இடுப்புப் பகுதியில் ஒரு காயம். மருந்து போட்டு கட்டியிருந்தார்கள். பெற்ற மனதின் ஆதங்கத்தை விபரிக்க வார்த்தையில்லை. வீடு திரும்பிய வாணி ஒரு நடைப் பிணம் போல் நடந்து கொண்டாள். காயம் ஆறியவுடன் குட்டித் தம்பி போய் விட்டதாக சுதன் சொன்னான்.

காலம் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. ஆனையிறவு முகாம் மீது தாக்குதல் நடத்தப் போவதாகவும் அதில் பங்பற்றப் போகும் போராளிகளுக்கு உலர் உணவு தயார்த்துத் தருமாறும் கோரிக்கை விடப்பட்டி ருந்தது. வாணிக்கு மனம் துடித்துக் கொண்டிருந்தது. இத்தனை காலமும் மற்றவர்களுக்காக உணவு வகைகளைத் தயரரித்து கொடுத்து வந்தவள், இம்றை தனது பிள்ளைக்குமாகச் சேர்த்து தயாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

ஏதோ மகனுக்காகவே தயாரிப்பது போன்றதொரு உந்துதல் ஏற்படவே, மிக்ஸர் தயாரிப்பதென முடிவெடுத்தாள். லிங்கா கொண்டு வந்து போட்ட நிலக்கடலையை எடுத்து வறுத்துக் கொடுக்க, அவளது அப்பாவ், அம்மாவும், ஜெகனும் பரதனுமென அனைவரும் அதனை உடைத்துக் கொடுத்தனர்.

மிக்ஸருக்குத் தேவையான மிகுதிப் பொருட்களையும் வாங்கி, பக்கத்து வீட்டு தேவி அக்காவையுடம் உதவிக்கு அழைத்து பத்து கிலோ மிக்ஸரைத் தயாரித்துக் கொடுத்துவிட்ட பின் தான் அவளது கையும் மனமும் ஓய்ந்தது.

சுதனும், லிங்காவும் வெவ்வேறு களமுனைகளில் கள மருத்துவர்களாகச் செயற்பட்ட விடயம் அப்போது வாணிக்குத் தெரிந்திருக் கவில்லை. பின்னர்தான் அறிந்தாள். ஆனையிறவுச் சமர் களத்தில் நடக்க வில்லை. இங்கோ வாணியின் மனத்தில் தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எம் மண்ணில் ஒவ்வொரு போராளிகளையும் பெற்றவர்களது மனநிலை இது தான். இதற்கு விதிவிலக்கானவர்கள் எவருமில்லை.

இடை நடவே குட்டித்தம்பி காயமடைந்தடதாக செய்தி கிடைத்தது. எனினும் போய்ப் பார்க்க முடியவில்லை. களத்திலிருந்து திரும்பிய சுதன், குட்டித்தம்பிக்கு உள்ளங்கையில் காயம் என்று சொல்லியிருந்தான். அவனுக்கு கட்டாய ஓய்வு கொடுத்திருந்தார்கள். காயத்தினால் கையிலுள்ள நரம்புகள் செயலிழந்ததால், விரல்கள் இரண்டு பாதிக்கப்பட்டு விட்டன. ஓய்வு காலத்தில் இடையிடையே வீட்டிற்கு வந்து போனான், குட்டித்தம்பி. தான் நேரத்தை வீணடிக்காமல் எழுதிக் கொண்டிருப்பதாகச் சொன்னான். மாங்குளம் முகாம் தகர்ப்பு பற்றிய விபரங்களையும் அப்போது தான் எழுதினான். அதுவே போர் உலா என்ற நாவலாக இப்போதும் வலம் வருகிறது.

கை விரல்கள் செயலற்றுப போனதனால் களப்பணியை இடை நிறுத்தி விட்டு, யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக செயலாற்றுமாறு பணிக்கப்பட்டான். அல்லும் பகலும் அலைந்து திரிந்து செயலாற்றும் மைந்தனைக் கண்ணுற்ற அன்னையுள்ளம் அல்லல்பட்டது. ஆனால்... மைந்தனோ தனக்குத் தரப்பட்ட பொறுப்பை சிரமேற் கொண்டு செயற்பட்டான்.

இடையிடையே வீட்டிற்கு வந்து போவான். ஒரு சமயம் வந்த போது தனக்கு இப்போது புதிய பொறுப்பு ஒன்று ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கூறினான். கள அறிக்கை தயாரிக்கும் பணியில் தான் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லி விட்டுப் போனவன் சில நாட்களாக வீட்டிற்கு வரவில்லை. செய்தி மட்டும் வந்தது.

செய்தி கேட்டு அதிர்ச்சியினால் வீட்டிலுள்ளவர்களது இதயங்கள் சிதறிச் சின்னாபின்னமாக நொருங்கிப் போன அதே வேளை, லிங்காவுக்கும் தகவல் அறிவிக்கப்பட்டது. செய்தி கேட்டு துடிதுடித்துப் போனவராய் லிங்கா ஒரு குழந்தையைப்போல் விக்கி விக்கி அழத் தொடங்கினார். அவருடைய கம்பீரம், மற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றும் பண்பான இதயம் எல்லாமே எங்கேயோ போய்த் தொலைந்து விட்டது.

கண்ணீர் வற்றி ஓய்ந்தத பின்னர்தான் அவருக்கு மகனுடைய புகழுடலைப் பற்றிய சிந்தனை வந்தது. அவரை அழைத்துப் போவதற்கு வாகனம் தயாராக இருந்தது. நடை தளர்ந்து சோர்ந்து போனவராய் வந்து வாகனத்தில்

ஏறினார். கிளாலி நோக்கி போய்க் கொண்டிருந்த வாகனத்தில் பயணித்த லிங்காவின் மனமோ குமைந்து தவித்துக் கொண்டிருந்தது. ஓயாமல் பேசிக் கொண்டிருக்கும் அவரது வாய் மௌனத்தைத் தழுவ, பார்வை இலக்கின்றி இருளை நோக்கி வெறுமையைத் தழுவிக் கொள்ள, உயிரற்ற ஜடம் போல அவர் விறைத்துப் போயிருந்தார். இடையிடையே கேவல் ஒலி மட்டும் வந்து கொண்டிருந்தது.

கிளாலி கடல் நிரேரியை கடப்பதற்காக காவரி கரையை வந்தடைந்த போது அவருக்கு மற்றுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.

இன்று நேவியின் நடமாட்டம் அதிகம் இருப்பதால் கடலைக் கடப்பது சாத்தியமில்லையாம்.

மனமொடிந்து போனவராய் லிங்கா கடற்கரை மணலில் அமர்ந்து கொண்டார். கொட்டும் பனி அவரைத் தாக்கவில்லை. வலது கை மட்டும் விரலால் மண்ணைக் கோலி அளைத்தவாறு இருந்தது. மனமோ... கண்ணெதிரே பொங்கிப் பிரவகித்து மோதியெழும் கடலலைகள் போல் நிலையற்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. ஒருவாறு அன்றைய இரவுப்பொழுது கழிந்தது.

பகற்பொழுதை ஒருவாறு கழித்துவிட்டால் மறுநாள் இரவாவது கடலைக்கடந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தவருக்கு அன்றும் ஏமாற்றமே கிட்டியது. விரக்தியின் விளிம்பில் நின்று அனலிடைப்புழுவாக துடித்தார், லிங்கா. ஏன்தான் இறைவன் இப்படிச் சோதிக்கிறாரோ என மனம் புழுங்கிக் கொண்டிருக்க, அங்கே... குடும்பத்தவரோ அவரது வரவுக்கா ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தனர்.

குட்டித்தம்பி மட்டும் வாய் நிறைந்த சிரிப்புடன் நடுமாடத்தில் துயின்று கொண்டிருந்தான்.

ஒருவாறு மூன்றாம் நாள் காலை லிங்கா வீடு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் அரண்டு புரண்டு பெருஞ்குரலெடுத்து அலறிய குடும்பத்தவரின் சோக நிலையை வர்ணிக்க வார்த்தைகளேயில்லை. சோர்ந்து துவண்டவரும் மயங்கி விழுந்தவருமென அனைவரும் ஆங்காங்கே கிடந்தனர். அந்தச் சமயத்தில் அவர்களது துயரத்துக்கு அனைபோட எவருமே முன்வரவில்லை. அவர்களாகவே அழுது தீர்த்து ஓய்வதற்கு அது தான் சமயம் என விட்டு விட்டார்கள். ஓய்ந்து போனவராய் லிங்கா ஒரு கதிரையில் அமர்ந்திருந்தார்.

குட்டித்தம்பி சயனித்திருந்த வாங்கின் கீழ் படுத்திருந்த அவரது வளர்ப்பம் நாயான றெக்ஸ் அப்போது தான் லிங்காவை அவதானித்திருக்க வேண்டும். ஓடி வந்து அவரது மடியில் தனது கால்கள் இரண்டையும் போட்டு ஆரவாரித்தது. லிங்கா தனது கையினால் நாயைத் தடவிய போது தான் அதனுடையய கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருப்பதைக் கண்டார். கண்டதும் வெப்பியாரம் கொண்டவராய் தன்னையறியாமலே பெருங்குரலெடுத்து அழத்துவங்கிவிட்டார். பாசம் என்பது மனிதருக்கு மட்டுமல்ல. இந்த

மண்ணிலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் பொதுவானது தான். குட்டித்தம்பியின் அரவணைப்பில் வளர்ந்தது தான் றெக்ஸ்.

அன்று மாவீரர் நாள். குட்டித்தம்பியின் புகழுடல் ஊர்வலமாக மாவீரர் துயிலும் இல்லம் வரை கொண்டு செல்லப்பட்டு அங்கு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது. புகழுடல் தாங்கிய பேழையை எடுத்துச் சென்று குழிக்குள் விதைப்பதற்கான நேரமும் வந்து விட்டது. என்ன நினைத்தாரோ லிங்கா பேழைக்கருகில் சென்றவர் தான் ஒரு தரம் மகனைப் பாரக்க் வேண்டும் என கேட்டுக் கொண்டார். பேழைதிறக்கப்பட்டது. தன்னருமைச் செல்வத்தின் முகத்தை கடைசித் தடவையாகப் பார்த்த லிங்கவின் கண்களிலிருந்து வழிந்த நீர் அவனது முகத்தை நனைக்க, லிங்கா பின் வாங்கினார். பேழை மூடப்பட்டது. இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டு அருகில் நின்ற வாணி வெறித்த பார்வையுடன் விறைத்துப் போய் நின்றாள். அவளது மனதை குட்டித்தம்பியின் முகம் நிறைத்திருந்தது.

ஈற்றில் விதையாகிப் போன தமது மைந்தனுக்கு மண்போட வேண்டிய துர்பாக்கியநிலையில் அவர்கள் துடிதுடித்துப் பதறுவதைப் பார்த்தவர்கள் கூட தமது கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலித்த போது, வான்மகள் மட்டும் பார்த்திருப்பாளா? அவளும் தன்பங்குக்கு மழைத்துளிகளைத் தூவ, குட்டித்தம்பி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் அங்கமாகினான்.

***

பத்து நாட்பொழுதுகுள் கழிந்து விட்டன. வீட்டிலுள்ளவர்களது பரிதவிப்பு மட்டும் ஓயவில்லை. துக்கம் விசாரித்து வருபவர்களுடன் பகற்பொழுதுகள் ஒருவாறு கழிந்தாலும் இரவுப் பொழுதுகள் நீண்டதாய் அமைந்து அவர்களைக் குத்தி குதறும். திடீர் திடீரென்று வாணியின் ஓலம் கேட்கும். அடிக்கடி லிங்கா, மூக்கைச் சீறிக்கொண்டிருப்பார். தன்னை அந்த இறைவன் அதிகமாகவே தண்டித்து விட்டான் என நினைத்து கலக்கமடைவார். என்ன செய்வது. அவர்களது கவலையை எவராலுமே தீர்க்க முடியாது என்பது தான் நிதத்தியமம். காலம் தான் தன் போக்கில் அவர்களது கவலையை றக்க வைக்க வேண்டும்.

அன்று காலை லிங்கா வாணியை அழைத்தார். வாணியும் வந்து அருகில் அமர்ந்து கொண்டாள். மனதை கல்லாக்கிக் கொண்டு அவர் வாய் திறந்தார்.

“இஞ்சாரும் வாணி! நாங்கள் இரண்டுபெரும் முற்பிறப்பில ஏதோ பாவ் செய்திட்டம் போல. அது தான் கடவுள் எங்களுக்கு இப்படியான தண்டனையைத் தந்திருக்கிறார். அதுக்காக நாங்கள் எங்களையே உருக்கிக்கொண்டு வாழுறது சரியில்லை. எங்கட மற்றப்பிள்ளைகளையும் பார்க்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கிருக்குது. என்ன... நான் சொல்லுறது உமக்கு விளங்குதே?”

சொல்லி விட்டு அவளது முகத்தை நிமிர்ந்து பார்த்தார்.

“அதுக்காக என்ரை பிள்ளையை மறந்து என்னால வாழ முடியுமே?”

கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்து கொண்டிருந்தது. அவரையறியாமலே அவரது கண்களும்கலங்கத் தொடங்கியது. நிதானடைந்தவ ராய் மீண்டும் பேசத் தொடங்கினார்.

“எவராலுமே பெற்ற பிள்ளையை மறக்க முடியாது தான். இருந்தாலும் நாங்கள் எங்கட இருக்கிற பிள்ளைகளையும் கவனிக்கத்தானே வேணும். அது களைச் சீராட்டுறதில் உமது பொழுதைக் கழிச்சீரெண்டால்… உமது கவலை சிறிதளவாவது குறையும் என்று நினைக்கிறன். நானும் நாளைக்கு வேலைக்குப் போறதென்று முடிவெடுத்திட்டன. இப்பிடி இஞ்சை வீட்டில் சும்மா இருந்தால் எனக்கு விசரே பிடிச்சிடும் போலயிருக்கு”

அவரது வார்த்தைகள் முதலில் வாணிக்கு எரிச்சலை ஏற்படுத்திய போதிலும், பின்னர் ஆறு அமர இருந்து சிந்தித்துப் பார்த்ததில் சரியாக தோன்றியது.

“அவரும் இஞ்சை இருநுதுது யோசிச்சு கவலைப்பட்டுக் கொண்டிருப்பதிலும் அங்கு போய் நாலு பேருடன் பழகினால் கவலை சற்றுக் குறையும்“ என மனம் அறிவுறுத்தியது.

மறுநாள் லிங்கா புற்பட்டுப் போய்விட்டார். பிள்ளைகளும் வறண்ட முகத்துடன் தத்தமது கல்விக் கூடங்களுக்கு போகத் தொடங்கி விட்டனர். வாணியுடன் அம்மாவும் அப்பாவும் வீட்டில் தனித்து விடப்பட்டனர்.

சுதனுக்கு அது ருத்துவப் படிப்பின் இறுதி வருடடம். பரீட்சை கிட்டி விட்டதால் அவன் தனது னதை வலுக்கட்டாயப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்த முயன்று கொண்டிருந்தான். அது மதிய நேரமாதலால் ஒரு தரம் வீட்டிற்குப் போய் அம்மாவையும் பார்த்துக் கொண்டு சாப்பிட்டு விட்டு வரலாமென நினைத்தவன், புறப்பட்டு விட்டான். வீட்டு வாசலில் வந்து இறங்கியவன் கண்ட காட்சி அவனை கிறங்க வைத்து விட்டது.

வீட்டு வாசற்படியில் அம்மா அமர்ந்திருந்து தெருவையே வெறித்துக் கொண்டிருந்தான். அவளது கண்களில் இருந்து வழிந்து கொண்டிருந்த நீர் கன்னங்களில் கோடிட்டுக் கொண்டிருக்க அவளோ மெய்மறந்திருந்தாள். சுதன் தெருவைத் திரும்பிப் பார்த்தான். அங்கே… பாடசாலை விட்டு மாணவர்கள் சீருடையில் சைக்கிளிலும் நடந்தும் போய்க் கொண்டிருந்தார்கள். சுதனுக்கு உடனே விளங்கிவிட்டது. அம்மாவின் மனதைக் காயப்படுத்திய காட்சி இது தான் என்பது. அம்மாவை இப்படியே விட்டுவிட்டால் அஅவவுக்கு மனநோய் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதை அவனால் உணர டிந்தது. ஏனெனில் அவன் ஒரு ருத்துவபீட மாணவனாயிற்றே. சற்று சிந்தித்தவன் ஒரு முடிவுக்கு வந்தான். எப்படியாவது அம்மாவின் கவனதத்தை திசை திருப்பி அவரது வாழ்க்கைப் பாதையை மாற்றியமைக்க வேண்டும் என மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

மறுநாள். அவன் வீட்டிற்கு வரும்போது அவனது கையில் இரண்டு ககவிதைப் புத்தகங்கள் இருந்தது.

"அம்மா! எந்த நேரமும் இருந்து யோசிக்காமல் இந்தக் கவிதைகளை வாசித்துப் பாருங்கள். மனதுக்கு ஆறுதலாயிருக்கும்"

கவிதைப் புத்தகங்கள் கை மாறின. அவற்றை வாசித்தவுடன் தன் இளவலுக்காக எதையாவது எழுத வேண்டும் என்று தோன்றியது. எழுதினாள். அதை வாசித்துவிட்டு அப்பாவும், மைந்தன் சுதனும் அவளைப் பாராட்டினார்கள். அவர்கள் தந்த உத்வேகத்துடன் அவள் மெதுமெதுவாக கற்பனை உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினாள். அவளது கற்பபைனகளை உருவமைக்க சிறுகதை என்ற வடிவமே பொருத்தமானதாய் அமைந்தது. பத்திரிகைகளும் அவளது சிறுகதைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஆதரித்தன. பிறகென்ன. வாணியின் வாழ்க்கைப் பாதை திசை திரும்பியது. மடைதிறந்து பெருகிய அவளது துயரவெள்ளத்திற்கு அணை போட்ட மைந்ததன் சுதனது கருத்துக்களை ஆதரித்தே அவள் நடந்து கொண்டிருந்தாள்.

ஒருவாறு அவர்களது வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பி விட்டிருந்தது. சுதன் தனது மருத்துவப்படிப்பை முடித்துக் கொண்டு ஒருவருட உள்ளகப் பயிற்சியை யாழ்போதனா வைத்தியசாலையில் மேற் கொண்டிருக் கிறான். ஜெகனும் தனது பௌதிக விஞ்ஞான பட்டப்படிப்பை டித்துவிட்டு கோண்டாவில் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணி புரியத் தொடங்கி யிருந்தான். பரதன், கைதடி சித்த மருத்துவ பீடத்தில் தனது கல்வியைத் தொடர, வாணி ஓய்வில்லாமல் இலக்கியப் பணியில் ஈடுபட்டு தன் மனக்கவலைக்கு ஒத்தடமிட்டவாறு வாழ்ந்திருந்தான். புத்திரசோகம் அவளை உலுப்பும் போதெல்லாம் அவள் துயிலுமில்லத்துக்குப் போய் மகனது கல்லறையின் மீது கண்ணீர் வடித்து தன்னனை ஆசுவாசப்படுத்திக் கொள்ளுவான்.

திடீரென ஒருநாள் சுதன் காய்ச்சலோடு வீட்டுக்கு வந்திருந்தான். பதறிப்போனவளாய் வாணி, அவனைப்ப படுக்கையில் வைத்துப் பராரித்தாள். காய்ச்சலுடன் ஓங்காளம், வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகளுடன் சுதன் சோர்ந்து போய் நடக்கவும் திராணியற்றவனாய் இருப்பதை அவதானித்தவள், அவனை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு போனாள். அங்கே அவனை "வார்ட்"டில் அனுமதித்து வைத்தியத்தை மேற் கொண்டனர். வாணியும் சளைக்காது தினமும் மூன்று வேளையும் போய் மைந்தனைப் பார்த்துவிட்டு வருவாள். ஆயினும் அவனிடம் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை.

இருந்தாற்போல் ஒரு காலை வாணி சுதனைப் பார்க்கப் போனபோது அவனைத் தீவர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றியிருந்தார்கள். நொந்துபொய்க்கிடந்த வாணியின் இதயத்தில் மீண்டும் கிறல் ஏற்பட்டு ரணமாகி அது சொல்லொனரித் துயரத்தைத்தர துடி துடித்துப் போனாள், அவள். இப்படியான இக்கட்டான சமயங்களில் கணவன் அருகிலிருந்தாலாவது சிறிது தென்பாயிருக்கும் எனக் கருதியவள், செஞ்சிவைச் சங்கம் மூலம் அவருக்கு செய்தியனுப்பினாள்.

மறுநாட்காலை. வாணி வைத்தியசாலைக்குப் போன போது அங்கே

அழுத முகத்துடன் லிங்கா நின்றிருந்தார். மனைவியைக் கண்டதும் கவலையை மட்டுப்படுத்த முடியால் அழுது தீர்த்தார். கணவன் உடைந்து போவதைக் கண்ணுற்ற வாணியின் மனநிலையை விபரிக்க வார்த்தையில்லை. அவராவது ஆறுதல் கூறி தன்னைத் தேற்றுவார் எனக் கருதியவளுக்கு இந்த உலகமே இருண்டு போவதாக ஒரு தவிப்பு. கடவுள் மீது பழியைப் போட்டு விட்டுகாத்திருப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

இரண்டு நாட்கள் நின்று விட்டு லிங்கா போய்விட்டார். செய்தியறிந்ததும் வேலைக்கு லீவு போடாலே வந்துவிட்டதால், தான் அவசரம் போயாக வேண்டும் என்று வாணிக்கு சாதானம் சொல்லிவிட்டு புறப்பட்டு விட்டார். சுமார் ஒரு மாத் வரை அதிதீவிர சிகிச்கைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த சுதனது நிலைமையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டபோது இருண்டு போய்க்கிடந்த வாணியின் மனதிலும் ஒரு சிறு ஒளிக்கீற்று பளிச்சிட்டது. உடனுக்குடன் கணவனுக்கு செய்தியனுப்புவது அவளது வழக்கமாகி விட்டிருந்தது. இத்தனை காலமும் நீராகாரம் கூட அற்று இருந்தவனுக்கு வாயினால் பருகக் கொடுக்குமளவிற்கு முன்னேற்றம் காணப்பட்டதும் அவனை “வார்ட்“டுக்கு மாற்றிவிட்டார்கள். தான் மன்றாடிய தெய்வம் தன்னைக் கைவிடவில்லை என வாணி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

ஒருவாறு சுதனை வீட்டிற்கு அழைத்து வந்தாயிற்று. தலை மட்டும் அப்படியே இருக்க உடல் வெறும் தோலினர் போர்த்த எலும்புக் கூடாகக் காட்டசியளித்தது. சத்துள்ள உணவாகக் கொடுத்து அவனைத் தேற்ற வேண்டும் என வாணி முயன்றபோது, அப்பாவைப் போலவே மகனும் தான் வேலைக்குப் போகவேண்டும் என பிடிவாதம் பிடித்து கிளம்பிப் போய்விட்டான்.

வாணியின் நிலையோ தர்மசங்கடமாகப் போய்விட்டது. உள்ளகப் பயிற்சி என்பதால் சுதன் அங்கேயே தங்க வேண்டும் என்பது கட்டாயமாகி விட்டது. அவனுக்கு புரதம் நிறைந்த உணவையே கொடுக்க வேண்டுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியிருந்தனர். வாணி மூன்று வேளையும் உணவு தயாரித்து அவனுக்கு அனுப்பி வந்தாள். அவனது உடலும் சிறிது சிறிதாகத் தேறி வந்தது. ஒருவருட உள்ளகப் பயிற்சியையும் ஒருவாறு வெற்றிகரமாக முடித்துவிட்டு சுதன் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரு மருத்துவராக கடமையேற்றுக் கொண்டான். வாழ்க்கை சுகமாகப் போய்க் கொண்டிருந்தது.

***

1994ம் ஆண்டு. ஐப்பசிமாதம் முப்பதாம் திகதி பலாலி இராணுவ முகரிலிருந்து இராணுவம் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்துக்குள் ஊடுருவ முயன்ற காலப்பகுதி அது. தினமும் இரவு பகல் என்று பாராது ஏவகனைகள் யாழ் மண்ணில் வந்து விழுந்து அதிர்ந்து கொண்டிருந்தன. அது மட்டுமல்ல. வான் பரப்பை வட்டமிடும் குண்டு வீச்சு விமானங்கள் இலக்கின்றி மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசிபாரிய சேதங்களை ஏற்படுத்திக்

கொண்டிருந்தன.

பொழுது சாய் வேளை, மின்லென ஒரு செய்தி பரவியது. மக்கள் அனைவரையும் குடா நாட்டை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டிருப்பதாக பேசிக் கொண்டார்கள். பெரும் அவலத்துக்குள் தள்ளப்பட்ட மக்கள் மனப்பீதியுடன் செய்வதறியாது திகைத்து நின்ற வேளை. மாற்றுவழி எதுவுமே இல்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்டவர்களாய் மக்கள் தமது கைக்கு கிட்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு குடாவை விட்டு வெளியேத் தொடங்கினர். ஒருவர் பின் ஒருவராக எல்லோருமே புறப்பட்டுப் போகும் போது வாணி குடும்பத்தினர் மட்டும் அதற்கு விதிவிலக்கா... என்ன...

சன நெரிசலுக்குள் மக்களோடு மக்களாக முதியோர், இளையோர், குழந்தை குஞ்சுகள் என்ற பேதமின்றி அடிமேல் அடியெடுத்து வைத்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தனர், குடா நாட்டு வாசிகள். இடையிடையே வருண பகவான் நீர் தெளித்து அவர்களது வறட்சியைக் களைய, உயிர் தப்பினால் போதும் என்ற அவலநிலையில் அவர்கள் தத்தளிக்க, குண்டுவீச்சு விமானங்கள் வேறு தலைகளுக்கு மேல் வட்டமிட்ட, ஓடி ஒளிய இடமின்றி பேதலித்த மனங்களுடன் மக்கள் வெள்ளம் குடாநாட்டைக் கடந்து கொண்டிருந்தது.

இரண்டு இரவுப் பொழுதுகளையும், ஒரு பகற்பொழுதையும் கடந்து வாணி குடும்பத்தினர் தென்மராட்சி மண்ணில் கால்பதித்தனர். அவர்கள் தங்குவதற்கு இருப்பிடம் எதுவும் கிடைக்கவில்லையே என அந்தரித்து நின்றபோது, சுதனின் நண்பர் ஒருவர் தனது வீட்டில் ஒரு அறையைக் கொடுத்து உதவினார். நிச்சயம் இது லிங்காவின் பரோபகாரச் செயல்களுக்கு கிடைத்த மாற்றுதவிதான் என அனைவரும் கருதினர்.

ஒரு அறைக்குள்ளேயே அவர்களது வாழ்க்கை வட்டமடித்தது. சுதன் சாவகச்சேரி மருந்துவசாலையில் பணியாற்றத் தொடங்கினான். குட்டித் தம்பியின் பிரிவின் பின் அடிக்கடி போராளிகள் அவர்கள் வீட்டிற்கு வந்து போவது வழக்கம். அன்று புதிதாக ஒரு போராளி வந்திருந்தான். தான் மருத்துவப்பிரிவில் பணியாற்றுவதாகச் சொன்னவன், தான் காயப்பட்டிருந்த போது அப்பாதான் தன்னைக் காப்பாற்றியதாகவுச் சொன்னான். லிங்காவினது அர்ப்பணிப்புடனான சேவையை நினைத்து வாணியின் மனம் பெருமிதமடைந்தது. சிறிது நேரம் அளவளாவி விட்டு அவனும் போய் விட்டான். அப்பா அவனிடம் இரகசியமாக மருமகனைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிவட்டதை அவள் அறிந்தாளில்லை.

திடீரென்று ஒரு நாள் அதிகாலையில் லிங்கா வந்து நின்றதும் வாணி ஆச்சரியத்துடன் வினவினாள்.

“எப்படியப்பா வடு கண்டு பிடிச்ச நீங்கள்?”

“மாயா தான் சொன்னவன்” என்று லிங்கா சொல்லவும் வாணிக்கு புரிந்து போயிற்று. அன்று வந்த மருத்துவப் போராளிதான் சொல்லியிருக்க

வேண்டு மென்று. அவளது ஊகமும் சரிதான்.

சிறிது காலாக வாணியின் அப்பாவினது உடல்நிலை சீரில்லை. மிகவும் நலிந்து போயிருந்தார். லிங்கா அவரிடம் மிகவும் கரிசனையுடன் உடல் நலம் விசாரித்தார். அவருக்கு விற்றமின் மாத்திரைகளையும் கொடுத்தார். மருமகனைக் கண்டதில் மாமனார் சிறிது தென்புடன் காணப்படார்.

கதையோடு கதையாக லிங்கா வாணியிடம் கூறினார்.

“ஏன் வாணி! நீங்கள் அங்கால வந்தால் என்ன... மாங்குளம் வீடு சும்மாதானே கிடக்குது. அதில போய் இருக்கலாம் தானே. இஞ்சை ஒரு ரூமுக்குள்ள அடைபட்டுக் கிடக்கிறதைப் பார்க்க எனக்கு சகிக்கேல்ல”

“நீங்கள் சொல்லுறதும் சரிதானப்பா. சுதன் சாவச்சேரி ஹொஸ்பிற்றலில வேலை செய்யிறான். அவனைத் தனிய இஞ்சை விட்டிட்டு வரவேணுமே என்று தான் பாக்கிறன்”

“ஓ... நீர் சொல்லுறதும் நியாயம் தான். எதுக்கும் யோசிச்சுச் செய்யும்”

“சரியப்பா. அவனையும் கூட்டிக் கொண்டு வரஏலுமெண்டா வாறம். எங்களுக்கு மட்டும் இஞ்சை இருந்து கஷ்டப்பட விருப்பமே”

வழமைபோல இரண்டு நாட்களை குடும்பத்தினருடன் கழித்துவிட்டு லிங்கா புறப்பட்டுவிட்டார். வாணியும் வன்னிக்குப் போவதைப் பற்றி சிந்திதத்துக் கொண்டிருந்தாள்.

இருந்தாற்போல் ஒரு நாள் காலை வாணியின் அப்பா “நெஞ்சு வலிக்குது“ என்று சொன்னவர்தான். அப்படி கண்களை மூடிக் கொண்டு விட்டார். ஒருவாறு அவரது உடலை கண்ணாடிப்புட்டி மயானத்தில் தகனம் செய்துவிட்டு அந்தியேட்டிக் கிரியைகளுக்காக ஒரு மாதம் காத்திருக்க வேண்டியதாயிற்று. வீட்டுக் கிருத்தியம் முடிந்ததும் ஓரிரு நாட்களில் வாணி குடும்பம் வன்னிக்குப் பறப்பட்டுவிட்டது. எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்கள் ஒருவாறு கிளாலிக்கடலை கடந்து ஒருவாறு மாங்குளம் வீட்டிற்கு வந்து சேர இரண்டு நாட்கள் பிடித்தன.

சுதன் அவர்களோடு வரவில்லை. தான் பின்னால் வருவதாகச் சொல்லி அவர்களை மட்டும் அனுப்பி தைவ்தான். வாணிக்கு எந்நேரமும் சுதனைப் பற்றிய சிந்தனைதான் மேலோங்கியிருந்தது. மூன்றாம் நாட்காகலை சுதன் வந்து சேர்ந்ததும் அப்பாவுக்கு தான் தகவல் சொல்லி அனுப்பியிருப்பதாகக் கூறினான். லிங்காவின் வரவை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

வேலையை முடித்துக்கொண்டு சனிக்கிழமை பிற்பகல் லிங்கா வந்து சேர்ந்தார். தங்களுடைய சொந்த வீட்டில் குடும்பத்தினரைக் கண்டதும் அவரது உள்ளத்தில் மகிழ்ச்சி கரை புரண்டது. எனினும் அங்கே ஒரு வெற்றிடம் தோன்றி அந்த மகிழ்ச்சியை நிலைக்க விடாது ஊடறுத்துக் கொண்டிருந்தது. “அது நிரந்தரமான வெற்றிடம். எவராலும் நிரப்ப முடியாதது“ மனம் எண்ணிக் கொண்டது.

நீண்ட பெருமூச்சொன்றை விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். அப்பாவின் மனக்கலக்கத்தை அவதானித்துவிட்ட பரதன், அவரது கவனத்தை திசை திருப்ப முயன்றான்.

“அப்பா! வாங்கோ வளவைப் பார்த்துக் கொண்டு வரலாம்”

லிங்காவும் பரதனும் கிணற்றடியை நோக்டகி நடக்க, ஜெகனும் வந்து அவர்களுடன் இணைந்து கொண்டான். கிணற்றடிப் பக்கம் இருந்த தேசி மரங்களெல்லாம் நன்றாகக் காய்த்து பழங்களைச் சொரிந்து நின்றன. ஆவலுடன் லிங்கா, ஒரு குழந்தையாகவே மாறி பழங்களைப் பொறுக்கத் தொடங்கினார். அதற்கிடையில் ஜெகன் ஒரு பிளாஸ்டிக் வாளியை எடுத்து வந்து நீட்டினான்.

“இதுக்குள்ள போடுங்கோ அப்பா”

“ஏன் இதுகளைப் பார்த்து பொறுக்கிறதில்லையோ”

சிறிது கண்டிப்புடன் வந்தது குரல். பரதன் பதிலளித்தான்.

“ஒவ்வொரு நாளும் பின்னேரங்களில் பொறுக்கிக வைக்கிறநாங்கள். வெள்ளன பக்கத்து வீட்டு மாமா சந்தைக்குப் போகேக்க குடுத்து விடுறவ அம்மா. அவர் வித்துப்போட்டு காசு கொண்டு வந்து தாறவர்”

“பறவாயில்லையே. வாணியும் சமயோசிதமாய்த்தான் நடக்கிறாள்“

மனதில் தோன்றி எண்ணம் நிறைவைத் தந்தது. ஜெகனைப் பார்த்து கூறினார்.

“ஜெகன்! இந்தப் பழங்களை கவனமாக வைத்திருந்து நாளைக்கு நான் போகேக்குள்ள ஒரு உரபாக்கில போட்டுத்தந்து விடு என்ன!”

லிங்கா, தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

“அங்கை வாந்தி, வயிற்றோட்டம் என்று வாற சனங்களுக்கு தேசிக்காய் கரைச்சுக் குடியுங்கோ என்று சொன்னால்… அதுகள் தலையைச் சொறிஞ்சு கொண்டு நிக்குங்கள். அந்தளவுக்கு வறுமை. அதோட கடற்கரையை அண்டின பிபரதேங்கள் தானே. ஒரே வறட்சி. அப்பிடியானதுகளுன்னு ஆளுக்கு இரண்டு பழத்தைக் குடுத்து விட்டாலும் புண்ணியம்“

அப்பாவின் பரோபகாரச் சிந்தனை பிள்ளைகளுக்கு வியப்பைதத் தந்தது. கிணற்றடியில் நின்றவாறே பின்புறக் காணியை, அவதானித்தார். வெடவ்டை நிலமாகக் கிடந்தது.

“இந்த முறை ஒருக்கா உழுந்தும் நெல்லும் விதைச்சுப் பார்க்க வேணும்“

சொன்னவரைத் திரும்பிப் பார்த்த ஜெகன் சொன்னான்.

“நாட்டு நிலைமை இடம் கொடுக்குமோ என்று தெரியேல்ல அப்பா”

மகனது வார்த்தைகளில் இருந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவராய், வீட்டின் முன்புறக் காணியை நோக்கி நடந்தார். அங்கு அவர் நட்டு வைத்திருந்த கறுத்தக் கொழும்பான், விலாட்டு மாமரங்கள் நிறைய பிஞ்சு விட்டிருந்தன. முருங்கை மரங்களும் வஞ்சகமில்லாம் காய்த்திருந்தன. நிறைவடைந்த மனத்துடன் அவர் வீடு நோக்கி நடக்க, அங்கே வாணி அவருக்காக

சுடச்சுட தேநீரும், வாய்ப்பனும் தயாரித்து வைத்திருந்தாள்.

***

காலம் தான் மனக்காயங்களை ஆற்றும் என்ற கூற்றிலீக்கும் உண்மையை லிங்கா நன்கு புரிந்து கொண்டார். இதற்கு வாணியின் செயநுற்பாடுகளே ஒரு உதாரணமாக அமைந்து விட்டது. பற்றற்ற வாழ்க்கையிலிருந்து மீண்டு விட்ட வாணி இப்போது கச்சிதாக தனது அன்றாடட வீட்டு வேலைகளைச் செய்து முடித்துவிட்டு மிகுதி நேரமெல்லாம் மேசைமுன் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறாள். ஒவ்வொரு வார இறுதியிலும் வீட்டிற்கு வந்து போகும் லிங்காவுக்கு மனைவியின் இந்தப்போக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. லிங்காவுக்கு பொழுது போகவில்லை. கையில் கிடைத்த பழைய தினசரி ஒன்றை எடுத்து வந்து வீட்டுப்படிகளில் அமர்ந்திருந்து வாசித்துக் கொண்டிருந்தார். அவருக்கு மனைவி மீது கடும் சீற்றம் ஏற்பட்டது. தன்னுடைய மருத்துவப் புத்தகங்களை யாழ்ப்பாணத்திலேயே விட்டுவிட்டு வந்திருப்பது தான் அதற்குக் காரணம். அவருடைய பிரதான பொழுது போக்கே அந்தப் புத்தகங்களை வாசிப்பது தான். அவளுடைய சீற்றத்துக்கு வாணியும் பதிலடி கொடுத்தாள்.

“நாங்களே அவ்வளவு தூரமும் களைத்து விழுந்து நடந்து தான் வந்த நாங்கள். உங்களுடைய டிெக்கல் புக்ஸ் ஒன்றா இரண்டா... ஒரு அலுமாரி நிறையக் கிடக்கிற புத்தகத்தை எங்களால் காவிக் கொண்டு வர முடியுமா?”

“சும்மா வாயடிக்காதையும். எனக்கு கெட்ட கோவம் வருகுது”

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வாசற்படியில் அமர்ந்து விட்டார். வாணிக்கும் கணவனது போக்கை ஜீரணிக்க முடியவில்லை.

“மற்றவருடைய கஷ்டங்களைப் புரிந்து கொெள்ளுற மனப்பக்குவம் இல்லை. சுயநலம் மட்டும் தான்“

வாய்க்குள் புறு புறுத்துக் கொண்டவள், தனது வேலையைக் கவனின்ன போய்விட்டாள்.

அவர்களுடைய வீடு A9 வீதியில் அமைந்திருந்தது. வீட்டு வாசலில் ஒரு பேரூந்து நின்று போவதை அவதானித்த லிங்கா, தனது பார்வை பத்திரிகையிலிருந்து விலக்கி நிமிர்ந்து வாசலைப் பார்த்தார். அங்கே... வாணியின் தங்கையுடைய மகன் பேரூந்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான்.

“வா! ராசா வா!”

முக மலர்வுடன் அவனை வரவேற்றவர் ஒரு நொடிப் பொழுதில் தன் மனதிலுள்ள கோபத்தையெல்லாம் மறந்தவராய் உற்சாகக்க குரலில் மனைவியை அழைத்தார்.

“வாணி! இஞ்சை வாரும். யார் வந்திருக்கிறதென்று வந்து பாரும்”

வந்திருந்த மகனை வரவேற்று உபசரித்தாள்,, வாணி. லிங்கா, அவனது குடும்பத்தினரைப் பற்றி விசாரித்தபோது, தான் விடயம் வெளிவந்தது. அவனுடைய அம்மாவும், தங்கையும் வந்து சுண்டிக்குளத்தில் நின்று கொண்டு இருப்பதற்கு வீடு தேடுகிறார்களாம். லிங்காவுக்கு கோபம் வந்துவிட்டது.

“சல்லாயிருக்குது உன்ரை கதை. இஞ்சை இந்தப் பெரிய வீடு சும்மா கிடக்குது. அவைக்கு நீ வீடு தேடுறியோ. உடனபோ. போய் அவையை இஞ்சை கூட்டிக் கொண்டு வா.”

அடுத்து வந்த பேரூந்திலேயே அவனை ஏற்றி அனுப்பிவிட்டுத்தான் ஓய்ந்தார், லிங்கா. லிங்காவினது இந்தப் போக்கு வாணிக்கு அவர்மீது அபிமானத்தை ஏற்படுத்தும். உறவினராயிருந்தாலும் சரி வேற்று மனிதராய் இருந்தாலும் சரி அவரது கைகள் அரவணைக்கத் தவறுவதில்லை. சில சமயங்களில் வாணிக்கு அவரது இப்படியான போக்குகளால் நிறை சங்கடங்களும் ஏற்படுவதுண்டு.

அன்று மாலையே அம்மாவும் மகளும் வந்திறங்கி விட்டனர். லிங்காவின் பூரிப்புக்கு அளவேயில்லை.

“வேணி! இது உங்கட வீடு மாதிரி. நீங்கள் தாராளமாய் எங்களோடயே இருக்கலாம்”

பிறகென்ன. வீட்டில் ஒரே கலகலப்புதான். வேணியின் மகள் சுமியும் அவரை “அப்பா!“ என்று வாய் நிறை அழைக்கும் போது அவருடைய உள்ள் குளிர்ந்து போகும். அவரும் தான் போய் வரும் இடங்களில் அவளுக்குப் பிடித்தமான பழவகைகளை வாங்கி வந்து கொடுப்பார். ளவேணி வந்தபின் வாணிக்கும் வேலைப்பளு குறைந்து விட்டது. வேணியுடன் மனம் விட்டு பேசுவதால் மனக்கலையும் குறைந்தது.

அந்த காலகட்டத்தில்த்தான் லிங்காவுக்கும் வவுனியா வடக்குற்கரிய மருத்துவ அதிகாரியாக நியன மாற்றம் கிடைத்தது. எனவே அவர் புதுக்குடியிருப்பில் இருந்து விலகி வந்து வீட்டோடு இருந்து நடாடும் சேவையை கவனிக்கத் தொடங்கினார். அவரது மருத்துவக் குழுவினர் தினமும் வெவ்வேறு கிராமங்களுக்குப் போய் மருத்துவ சேவையை வழங்கி வந்தனர்.

அன்று அவருக்கு ஒரு செய்தி வந்திருந்தது. இராணுவம் A9 வீதியூடாக மாங்குளம் நோக்கி முன்னேறப் போகிறதாம். எனவே லிங்கா தனது மருத்துவ உபகரணங்களையும், தளபாடங்களையும் இடம் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. அவர் நீண்ட நேரம் அமர்ந்திருந்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். வன்னி விளாங்குளத்திலுள்ள வீடொன்றில் ஒரு அறையில் அவர்களது மருத்துவப் பொருட்களை வைத்து எடுப்பது வழக்கம். அங்கேயே கொண்டு போய் மிகுதிப்பொருட்களையும் வைக்கலாம் எனத் தீர்மானித்தார்.

வாணியின் தங்கை வேணி மல்லாவியில் தனக்கு வேண்டியர்கள் யாரோ இருப்பதாகக்கூறி அஅங்கே போய்த் தங்குவதற்கு பிள்ளைகளையும் அழைத்துக்

கொண்டு புறப்பட்டு விட்டாள். சுமார் ஒன்றரை வருடங்களாக தமது சொந்த வீடென உரிமை கொண்டாடி வாழ்ந்த வாழ்விற்கு முற்றுப்பள்ளி வந்து விட்டதை ஜீரணிக்க முடியாதவளாய் கதி கலங்கிப் போனாள். இத்தனை காலம் மாங்குளம் மகாவித்தியாலத்தில் கற்பித்தலைத் தொடர்ந்து கொண்டிருந்த ஜெகனும், பாதியில் படிப்பைத் தொடரமுடியாமல் தவித்துக் கொண்டிருந்த பரதனும் இணைந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தனர். விளைவு ஒரு டிராக்டரைப் பிடித்து வீட்டுத்தளபாடங்களை ஏற்றிக் கொண்டு போய் ஜெகனது நண்பன் ஒருவனது வீட்டில் பாதுகாப்பாக வைத்துவிட்டுத் திரும்பினர். அவசரமாக அவர்கள் தற்போது தங்குவதற்கு ஒரு இடம் தேவைப்பட்டது. வேறு வழியின்றி வன்னிவிளாங்குளத்திற்குப் போய் மீண்டும் ஒரு அறைக்குள்ளேயே தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். காலம் கிட்ட கட்டளையை மீறமுடியுமா?... என்ன…

அங்கு குடியிருந்துதவாறே லிங்கா தனது மருத்துவ சேவையைத் தொட்ரந்து கொண்டிருந்தார். ஜெகனோ… தாங்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு இடத்தைத் தேடி அலைந்து கொண்டிருந்தான். மாங்குளம் மகா வித்தியால யத்தில் கற்பிக்கும் போது அவனுக்கு ஒரு புது நண்பன் கிடைத்திருந்தான். ஈஸ்வரன் அவனது பெயர். அவர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தவர் கள் தான். அவனுக்கு அக்காமார் இருவர். அவர்கள் பாலி நகரில் வசிக்கும் ஒரு நண்பியின் வீட்டில் மாங்குளத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து தற்காலிகமாகத் தங்கியிருந்தனர். அவர்கள் தங்கியிருந்த வளவிற்குள்ளேயே ஒரு வெற்றிடம் இருந்தது. அந்த வெற்றிடத்தில் ஒரு கொட்டிலை அமைத்து அதில் போய் சிலகாலம் வசிக்கலாமென ஜெகனும் ஈஸ்வரனும் முடிவெடுத்து செயலிலும் இறங்கி விட்டனர்.

ஒருவாறு வாணி குடுப் பாலி நகருக்கு இடம் மாறியது. லிங்காவுக்கும் அவரது வானத்தை விடக்கூடியதாக இடம் அமைந்ததில் வ சதியாகப் போய் விட்டது. தண்ணீர்த் தேவைகளுக்கு மூன்றாவது வளவிற்குப் போக வேண்டும். அங்கிருப்பவர்கள் எல்லோரும் லிங்காவுக்குப் பரிசச்சயமானவர்கள் தான். இருந்தாலும் அடிப்படைட வசதிகள் குறைந்த வாழ்க்கை தான். அவர்களுடன் தங்கியிருந்த ஈஸ்வரனும் குடும்பத்தில் ஒருவனாக மாறிவிட்டான். பிள்ளை களுடன் சேர்ந்து வாணிக்கு தேவையான உதவிகளைச் செய்வதுடன் லிங்கா வுடனும் அப்பா! அப்பா! என வாய்க்கு வாய் அழைத்து ஒட்டிக் கொண்டான்.

மூத்தவன் சுதன் ஸ்கந்தபுர வைத்தியசாசலையில் பணியாற்றி வந்ததால் எப்போதாவது ஒரு நாள் வீட்டிற்கு வந்து போவான். கரடு முரடான பாதையில் வாழ்க்யெனும் வண்டி உருண்டு கொண்டிருந்தது.

திடீரென்று ஒருநாள் ஜெகனும் ஈஸ்வரனும் வந்தார்கள். நமணங்குளத்தில் ஒரு சிறு மண்வீட்டுடன் ஒரு காணி விலைப்படப் போவதாகக் கூறினார்கள். அதைக் கேட்டதும் உசாரடைந்நவளாய் வாணி அந்தக் காணியைப்

பார்க்க புறப்பட்டு விட்டாள். காணிக்குப் போகும் பாதைதான் குண்டு குழியுமாய் இருந்ததே தவிர காணி அவளுக்குப் பிடித்திருந்தது. கிணறு, மலசலகூடம் போன்ற வசதிகள் இருந்தன. உடனே அந்தக் காணியை வாங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டாள். லிங்காவுக்கும் அதற்கு சம்மதித்தார். யாருக்குத்தான் சுந்நதிரமான வாழ்வு பிடிக்கால் போகும்.

ஏற்கெனவே இருந்த மண் வீட்டுடன் இணைந்து மற்றுமொரு மண்வீட்டை வசதியாக அமைத்துக் கொண்டார்கள். லிங்காவினது செஞ்சிலுவைச்சங்க வாகனம் தினமும் போய்வருவதற்கு பாதைதான் சற்று சிரமமாயிருந்தது. அதற்கும் பள்ளமான இடங்களுக்கு மண்போட்டு நிரப்பி செப்பனிட்டுக் கொண்டார்கள்.

அதேெ சமயம் ஸ்வரனது அக்காமாரு் அவர்களுக்கு அருகிலேயேு ஒரு மண்வீட்டைப் போட்டுக் கொண்டு அங்கு குடி வந்து விட்டார்கள். அவர்கள் வாணிக்கு பேச்சு துணையாகவும் உதவியாகவும் இருந்ததால் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழக்கூடியதாக இருநு்தது. வாணிக்கு பெண் பிள்ளை இல்லாத குறையை அவர்களிருவரும் நீக்க, வாணியோ அவர்களுக்கு தாயில்லாக் குறையைப் போக்கினாள்.

வாழ்க்கை சுமுகமாகப் போய்க் கொண்டிருந்த அவ்வேளையில் சுதனுக்கும் ஜெகனுக்கும் திருணய வயது எட்டி விட்டதால் முதலில் சுதனுக்கும், அடுத்த வருடமே ஜெகனுக்கும் பெற்றோர் திருமணத்தைச் செய்து வைத்தனரன். இடை நடுவில் விட்ட கல்வியைத் தொடர முடியாமல் போன பரதனும், அப்பாவின் மருத்துவக் குழுவில் இணைந்து செயற்படத் தொடங்கினான்.

***

“ஜெயசுக்குறு“ நடவடிக்கை மூலம் மாங்குளத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தைத போராளிகள் விரட்டியடித்து விட்ட நிலையில் யாரோ ஒருவர் மன்னங்குள சந்திவரைக்கு் போக சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவரது கண்களுக்கு லிங்காவின் வீடு இருந்த இடம் வெறுயையாகக் கிடப்பது தெரிந் திருக்கிறது. இந்தச் செய்தியை அவர் வந்து ஜெகனிடம் சொல்லியிருக்கிறாறர். ஒரு நாள் வாணி சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த போது ஜெகன் வந்து இரகசியாக அம்மாவிடம் விடயத்தைச் சொன்னான். மனம் ஒடிந்து போன வாணி, ஜெகனிடம் கேட்டுக் கொண்டாள்.

“தம்பி ஜெகன்! இந்த விசயத்தை அப்பாவிடம் மட்டும் சொல்லிப் போடாதை. அவருக்கு பிறசரும் இருக்குது. அவர் ஆசையாய்க் கட்டிய வீடு. பிறகு மனம் உடைஞ்சு போயிடும் மனுசன்”

“எனக்குத் தெரியும் தானே. நான் அப்பாவிட்ட சொல்லமாட்டன். எப்பவோ ஒரு நாளைக்குத் தெரிய வரும் தானே. அப்ப அவர் அறிஞ்சு கொள்ளட்டும்”

மனம் நொந்து போனவளாய் வாணி அந்த விடயத்தை

மனதுக்குள்ளேயே வைத்து மறுகிக் கொண்டாள்.

சில மாதங்கள் கழிந்த பின்னர் ஒருநாள் லிங்காவே வாய் திறந்தார்.

“மாங்குளத்தில எங்கடக வீட்டை அத்திவாரமே இல்லாமல் கிளறிப்போட்டாங்களாம். என்ன முகூர்த்தத்தில நாங்களும் ஜெயசீலுன் அண்ணையும் அத்திவாரம் போட்டமோ தெரியேல்ல. இரண்டு பேருடைய வீடும் தரை மட்டமாப் போச்சுது.”

சொல்லிவிட்டு ஆழ்ந்த பெருமூச்சொன்றை அடிவயிற்றிலிருந்து இழுத்து வெளிவிட்டார்.

அவரது ஆதங்கத்தைப் புரிந்து கொண்டவளாய் வாணி கண் கலங்கினாள். அவர்களது உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பரதன் அப்பாவை வார்த்தைகளால் ஆசுவாசப்படுத்தினான்.

“கவலைப்படாதையுங்கோ அப்பா. நான் படிச்சு முடிச்சு உழைக்கத் தொடங்கியதும் அந்த இடத்திலேயே இன்னும் பெரிய வீடாகக் கட்டி அதுக்கு “லிங்கக பவனம்“ என்று பெயரும் வைப்பன். நீங்கள் இருந்து பாருங்கோ.”

சூளுரைத்தது போல் அவன் சொன்ன வார்த்தைகளை காப்பாற்றத் தவறவில்லை. இன்று “லிங்கபவனம்“ அதே இடத்தில் நிமிர்ந்து நிற்கிறது.

2002ம் ஆண்டு ஆனையிறவுப்பாதை திறக்கப்பட்டதும் வாணி அம்மாவையும் பரதனையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்டுவிட்டாள். லிங்கா, ஜெகன் அவனது மனைவி அனைவருக்கும் அங்கேயே வேலைக்குப் போய்வர வேண்டி இருப்பதால் அவர்கள் நமணங்குளத்திலேயே தங்கி விட்டனர்.

மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் தங்களது வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். பாதி அழிந்து போன நிலையில் வீடு காட்சியளித்தது. ஒருவாறு அந்த வீட்டிலேயே நிலையெடுத்து அவர்கள் சீவிக்கத் தொடங்கினர். பரதனும் கல்வியைத் தொடர்ந்தான். லிங்கா, தான் உழைக்கும் பணத்தை அப்படியே வாணியிடம் தந்துவிடுவார். அதனைச் சேமித்து வீட்டை சிறிது சிறிதாகத் திருத்தியமைத்தனர் வாணியும், பரதனும். குட்டித்தம்பியின் துயிலுமில்லத்திற்கு அண்மையில் அமைந்திருந்த அந்த வீட்டை அவர்கள் அடிக்கடி போய் வரவேண்டும என்ற ஒரே நோக்கத்திற்காகவே வாங்கியிருந்தனர்.

காலம் தெுவாக ஓடிக்கொண்டிருக்க லிங்காவு் தனது பணியிருந்து ஓய்வு பெற்று குடும்பத்தினருடன் வந்து இணைந்து கொண்டார். என்றுமே சுறுறுசுறுப்பாக தனது ருத்துவத் தொழிலுடன் இணைந்திருந்து பழக்கப்பட்ட லிங்காவினால் வீட்டிலிருந்து ஓய்வெடுக்க முடியவில்லை. பிள்ளைகளய் அவரைக் கட்டயாப் படுத்திய போதிலும் அவர் அவர்களது வார்த்தைகளை முற்றாக நிராகரித்து விட்டார்.

ஒரு நாள் தினசரிப் பத்திரிகையில் மூழ்கியிருந்தவர் அதில் போட்பட்டிருந்த விளம்பரம் ஒன்றை அவதானித்து விட்டார். வீட்டிலிருந்து ஒரு

கிலோமீற்றர் வரை தூரமுள்ள “சென்றல் நர்ஸிஸ் ஹோம்“ நிர்வாகிதான் உதவி மருத்து அதிகாரிக்கான விண்ணப்பத்தை கோரியிருந்தார். உடனேயே புறப்பட்டுப் போய் அவரை நேரில் சந்தித்து வேலைக்கான நியமனக் கடிதத்தையும் கையோடு வாங்கிக் கொண்டு வந்து விட்டார்.

மறுநாட்காலை ஏழரை ணிக்கு லிங்கா ததனது மோட்டார் சைக்கிளில் வேலைக்குப் புறப்பட்டு விட்டார். இத்தனை வருடங்களை மருத்துவ சேவையில் கழித்த போபதிலும் இப்போது தான் ஊரொடு இருந்து சேவை செய்யும் வாய்ப்பு கிட்டியிருந்தது. அதை லிங்கா தனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருதினார்.

முதலில் அவர் கடமையைப் பொறுப்பேற்ற போது அவரைத் தேடி வரும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. நாளடைவில் அவரை நாடி வருவோர் தொகை அதிகரித்ததால் அவர் திக்கு முக்காடிப் போனார். நீணட நேரம் ஓய்வின்றி உழைக்க வேண்டியதாயிற்று.

“அந்தாளோட கதைச்சாலே பாதி வருத்தம் குணமாகி விடும்“

சில முதியவர்கள் தங்களுக்குள் பரிமாறும் கருத்து இது.

லிங்காவின் குணவியல்பும் அது தான். நோயாளர் ஒருவரைப் பரிசோதிக்க முன் அவரது வசிப்பிடம், குடும்ப விபரம், தொழில் வாய்ப்பு பற்றிய விபரங்களை அறிந்து கொண்டுதான் நோய் பற்றிய அறிகுறிகளை விசாரிப்பார். அவரது இந்தச் செய்கை நோயாளர்களை உளரீதியில் ஆற்றுப்படுத்துவதால் அவர் மீது அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை அது ஏற்படுத்ததி விடுகிறது. அவரை நாடி அவரது உறவினர்கள், வன்னி பெருநிலப்பரப்பிலிருக்கும் அவரது அபிமானிகள் என பலரும் வந்து பிணி தீர்த்துப் போயினர்.

இத்தனை காலமும் வன்னியிலுள்ள மக்களுக்கு மருத்துவம் சய்ததவர். அவர்களுள் பெரும்பாலானோர் இடம்பெயர்வுக்கு ஆளான அகதிகளே. வறுயைின் கோரப் பிடிக்குள் சிக்கி அவலப்படுபவர்கள். ஆனால் இங்கு வருபவர்களில் பெருபாலானோர் வசதி படைத்தவர்களே. ஒரு நாள் ஒரு இளம் பெண் தனது பிள்ளையை அழைத்து வந்திருந்தாள். முதலில் அவர்களது குடும்ப நிலை பற்றி சாதாரணமாக விசாரித்து விட்டு நோய் பற்றிய விடயத்திற்கு வந்தார், லிங்கா.

“பிள்ளைக்கு இப்ப என்ன பிரச்சனை?”

“டொக்டர். இவன் சாப்பிடுறானே இல்லை. அது தான் பசிவரக்கூடியதாய் ஏதும் மருந்து தாங்கோ.” லிங்கா, பையனது கண் மடல்களை விரித்துப்பார்த்தவர், நாக்கை நீட்டச் சொல்லி அதையும் அவதானித்தார். பின்னர் இதயத்துடிப்பு, வயிற்றில் ஏதாவது அழற்சி இருக்கிறதா என பரிசோதித்து விட்டு நிமிர்ந்தார்.

“நிறையிலும் குறையில்லை. நிறைய சொக்லற் சாப்பிடுவனோ?”

“ஓம் டொக்டர். அது மட்டும் தான் சாப்பாடு. மற்றும்படி சாப்பாட்டுக்கு கிட்டவே வாறதில்லை.”

“இனிப்புகளைச் சாப்பிட்டால் பசிக்காது தானே. முதல்ல அதை

நிறுத்துங்கோ. பிள்ளை தன்னால சாப்பிடத் தொடங்குவான். அது சரி. பூச்சி மருந்து எப்ப குடுத்த நீங்கள்?"

சிறிது சிந்தித்துவிட்டு பதிலளித்தாள், அப்பெண்.

"பூச்சி மருந்து குடுத்ததாய் ஞாபகமில்லை டொக்டர்."

"பூச்சி மருந்துக்கு எழுதிவிடுறன். அவை சொல்லுறமாதிரி குடுங்கோ. மற்றப்படி பிள்ளைக்கு ஒரு பிரச்சனையுமில்லை. இனிப்புகளைக் குடுக்கிறதை தவிர்த்தால் போதும்"

மருந்துச் சிட்டையை வாங்கிக் கொண்டு அந்தப் பெண் அப்பால் நகர, லிங்காவின் மனமோ நட்டாய் கண்டலில் தான் சந்தித்த ஒரு நோயாளியை அசை போட்டது.

எலும்பும் தோலுமாக ஒரு இரண்டு வயதுப் பையனை அழைத்து வந்திருந்தாள், ஒரு தாய். சோதித்துப் பார்த்ததில் அந்தக் குழந்தைக்கு சுவாசப் பையில் கபம் கட்டியிருந்தது. மூச்செடுப்பதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்தான், குழந்தை. பணிப்பெண்ணை அ ழைத்து அவர் குறிப்பிட்ட பாணி மருந்தை பருக்கி விடுமாறு பணித்தார்.

கொஞ்ச நேரம் குழந்தையை காற்றோட்டமான இடத்தில் வைத்திருக்கச் சொல்லிவிட்டு, மற்றைய நோயாளர்களைக் கவனித்தார். சிறிது நேரத்தால் அந்தக் குழந்தையை அழைத்த போது, அதற்கு முட்டு சிறிது குறைந்திருந்தது. வயிறு எக்கிப் போய்க்கிடக்க குழந்தை அரைமயக்கத்தில் கிறங்கிக் கிடந்தது.

"பிள்ளைக்கு காலமை என்ன குடுத்தநீங்கள் சாப்பிட"

"வெறும் சாயத்தண்ணி தான் ஐயா. ஊரில ஓரளவு வசதியாய்த்தான் இருந்த நாங்கள். இஇஞ:சை அகதியாய் வந்து கிடந்து அல்லல்படுறம்"

"பிள்ளையின்ரை தகப்பன் எங்கை?"

"அந்தாளும் முகாமிலதான். எப்பவாலும் கூலி வேலை கிடக்கும். அப்பிடிப் போய் வந்தால்த்தான் கையில காசு புழங்கும். மற்றப்படி முகாமில கிடைக்கிற சாப்பாடுதான்."

லிங்கா இரத்தசோகையால் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தையை உற்றுப் பார்த்தார். மன் உருகியது. தனது சட்டைப் பையில் கையை விட்டு எடுத்தார். முந்நூறு ரூபாய் கிடந்தது. அதை அந்தத் தாயிடம் நீட்டினார்.

"நாங்கள் தாற மருநிதை ட்டும் கொடுத்தால் பிள்ளைக்கு நோய் மாறாது. அதுக்கு ஆதாரமும் வேணும். பிஸ்கட்டைட மாவை வாங்கி பிள்ளைக்குக் குடுங்கோ."

அந்தத் தாய் கண்களில் நீர்மல்க அவரைக் கையெடுத்துக் கும்பிட்டாள். லிங்கா மருந்தை எழுதிக் ெ காடுக்க பணிப்பெண் அதைக் கொண்டு வந்து மருந்து கொடுக்க வேுண்டிய முறையை அவளுக்கு விளக்கினாள். அவர்கள் அப்பால் போனதும் லிங்கா தனது கைக்குட்டையை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"டொக்டர்! அடுத்த பேஷன்டை அனுப்பலாமா?"

"நர்ஸ்"ஸின் குரல் அவரை நிவைுகளிலிருந்து மீட்க அவர் உஷாரடைந்தார். அடுத்த நோயாளியைப் பார்க்கத் தயாரானார்.

***

மறுநாள் வருடப்பிறப்பு. காலையிலேயே வாணி வீடு வாசலைக் கழுவி விட்டிருந்தாள். லிங்கா, குளித்து விட்டு வந்தவர், வேலைக்கு புறப்படுவதற்காக தன்னை தயார்ப்படுத்திக் கொண்டு வந்து வாசற் படியில் காலை ஊன்றி இறங்க முற்பட, ஈரமாயிருந்த தரை வழுக்க அப்படியே காலை மடக்கியவாறு விழுந்து விட்டார். விழுந்த சத்தம் கேட்டு வாசலுக்கு விரைந்து வந்த வாணி அவரை கைத்தாங்கலாக எழுப்பி கதிரையொன்றில் அமரவைத்தாள். நல்ல வேளையாக அவருக்கு கணுக்காலில் நோவைத்தவிர வேறெதுவும் பிசகில்லை. வாணி நோவை நீக்கும் தைலமொன்றைப் போட்டுத் தேய்த்து விட்டாள். எனினும் அவரால் காலை ஊன்றி நடடக்க முடியவில்லை. உடனே நர்ஸிங் ஹோமுக்கு அறிவிக்க அங்கிருந்து அம்புலன்ஸ் வந்து அவரை ஏற்றிச் சென்றது.

காலுக்கான சிகிச்சையைப் பெற்றுக் கொண்டு லிங்கா திரும்பி வருவார் என வாணி காத்திருக்க, அவரோ தனது கடமையைத் தொடர்ந்து கொண்டிருந்தார். சிறிது நொண்டியவாறு நடந்தவருக்கு மோட்டார் சைக்கிளை இயக்க முடியவில்லை. எனவே தினமும் அம்புலன்ஸ் வந்து அவரை வேலைக்கு கூட்டிச் செல்வதும், வேலை முடிந்த பின்னர் வீட்டிற்குக் கொண்டு வந்து விடுவதுமாய் நாட்கள் நகர்ந்தன. நிர்வாகியின் நம்பிக்கைக்குகந்த மருத்துவராய் அவர் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார்.

அங்கு "வார்ட்"டில்தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களை காலையிலும் மாலையிலும் போய்ப் பாரக்க வேண்டியது அவரது கடமையாகும். அன்று மாலை அவர் "வார்ட்" நோயாளர்களைக் கவனித்துக் கொண்டு வரும்போது அவரது தண்ணீரூற்று நண்பனான பாலா அண்ணையைக் கண்டார். சில வாரங்களுக்கு முன் அவர் லிங்காவிடம் வந்து தனக்கு சலம் கழிப்பதில் பிரச்சனை இருப்பதாகக் கூறிய போது அவரை சத்திர சிகிச்சை நிபுணரிடம் தான் அனுப்பி வைத்ததை நினைவு கூர்ந்தவர் அவரிடம் விசாரித்தார்.

"டொக்டர்! எனக்கு எல்லா "டெஸ்ற்"றும் செய்து பார்த்தவை. இப்ப "ஒப்பரேஷன்" ஒன்று செய்ய வேணுமென்று செ ால்லியிருக்கினம். ஒன்றும் பயமில்லைத்தானே"

"இதென்னண்ணை உங்கட கதை. நோயைக் குணப்படுத்தத்தானே இங்கை வைத்தியம் நடக்குது. நீங்கள் ஒண்டுக்கும் பயப்படத்தேவையில்லை. பி ஸ்ரெடி"

எப்பொழுதும் அவரது வார்த்தைகள் நோயாளர்களைத் தைரியப் படுத்திக் கொண்டே இருக்கும் தன்மை உடையன. பாலா அண்ணையின் முதுகில் தட்டிவிட்டு அவர் அப்பால் போக, நோயாளியின் மனதிலும் ஒரு தென்பு

பிறந்தது. இப்படியே அங்கு வரும் நோயாளர்களுக்கு அவருடன் சிறிது நேரம் கதைத்து விட்டால் போதும். மனப்பயம் நீங்கிவிடும்.

ஒரு மாலை நேரம். ஐந்து மணி இருக்கும். லிங்கா, நர்ஸிங் ஹோமில் தனது கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அம்புலன்ஸ் முடமாவடிச் சந்தியை தாண்டிக் கொண்டிருக்கும் போது மழை தூறுல் போட ஆரம்பித்தது. அம்புலன்ஸ் சாரதி கூறினான்.

“சேர்! மழை தூறுது. நான் வீட்டில கொண்டு வந்து இறக்கி விடுறன்”

மற்றவர்களைச் சிரமப்படுத்தக் கூடாது என்ற ஒரே நோக்கத்துடன் லிங்கா அதை மறுத்து விட்டார்.

“இல்லைத் தம்பி. வாசலிலேயே நான் இறங்கிக் கொள்ளுறன்”

வீட்டு வாசலில் இறங்கியவர் இரண்டு அடி எடுதத்து வைப்பதற்குள் “சோ“ என்ற இரைச்சலுடன் திடீரென்று மழை கொட்டத் தொடங்கி விட்டது. வேறு வழியின்றி லிங்கா மழையில் நடந்தவாறே வட்டுக்கு வந்து சேர்ந்தார். வாசலிலிருந்து வீடுவரை உள்ள தூரம் ஒரு நாற்பது மீற்றர் வரை இருக்கும்.

நீர் சொட்டச் சொட்ட வந்து நின்றவரைப்பார்த்து வாணி திடுக்கிட்டுப் போனாள். ஓடோடிப்போய் துவாலையை எடுத்து வந்து துவட்ட முனைந்த போது அவர் தடுத்துவிட்டு குளிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு குளியலறைக்குள் நுழைந்து கொண்டார்.

குளித்து விட்டு வந்தவருக்கு வாணி சுடச்சுட மல்லிக்கோப்பியை நீட்டினாள்.

“ஈரத்தை வடிவாய்த் துடைச்ச நீங்களே. தடிமல் வந்திடும்”

“நான் என்ன குழந்தைப் பிள்ளையே. ஏதோ குழந்தைப் பிள்ளையைக் கேக்கிற மாதிரி கேக்கிறீர்”

“எனக்கென்ன. தடிமல் வந்தால் உங்களுக்குத்தான் முட்டு இழுக்கிறது. அதுக்காகத் தான் சொன்னன்”

அவர் கோப்பியைப் பருதி விட்டுக் கொடுத்த காலி ட்ளரை வாங்கிக் கொண்டு வாணி உள்ளே போனாள். லிங்கா போய் கதிரையயில் அமர்ந்திருந்து அன்றைய பத்திரிகையை எடுத்து புரட்டத் தொடங்கினார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் லிங்கா சாய்மனைக் கதிரையில் அமருவதில்லை. அதற்கு நேர்மாறாக வாணி ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் சாய்மனையில்த்தான் கிடப்பாள். அதில் அவளுக்கு ஒரு இதம். லிங்கா அவளைச் சீண்டுவார்.

“சாய்மனையில் படுத்தால் முதுகு கூனிப் போயிடும். செல்லிப் போட்டன்”

எப்பொழுதுமே அவரது பேச்சைத் தட்டாத வாணி, அவர் சொல்வதை கணக்கில் எடுக்கவில்லை. அவரது வார்த்தைகள் நிஜமாகும் என நினைத்திருக்கவுமில்லை.

மறு நாட்காலை. லிங்கா படுக்கையை விட்டு எழும்பும் போது தலையை

வலிப்பதாகக் கூறி, தைலம் தேய்த்து விடுமாறு வாணியிடம் கேட்டுக் கொண்டார்.

"உடம்புக்கு முமடியாமமலிருந்தால் இன்றைக்கு லீவு போடுங்கோவன்"

ஆதங்கத்துடன் வாணி கூறினாள். லிங்கா அவள்மீது சீறினார்.

"உமக்கென்ன விசரே. எததள்தினை சனம் எவ்வளவு தூரத்திலை இருந்து என்னைத்தேடி வ ரும். அத்தனை பேரும் நான் இல்லாட்டி ஏமாந்து போறதே. என்ன உம்முடைய கதை."

"உங்களுக்கு ஏலாதென்றால் என்ன செய்யிறது. அங்கை யாராது மாறிப்பாப்பினம் தானே. ஏன் பெரியய ஐயா பாரக்க் மாட்டாரோ?"

பெரிய ஐயா என்பது நர்ஸிங் ஹோம் நிர்வாகி.

லிங்காவின் காதில் ஏதும் விழுந்ததாகத் தெரியவில்லை. சாப்பாட்டிற்கு மேல் இரண்டு பனடோல் வில்லைகளைப் போட்டுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

அன்று மாலை வேலையிலிருந்து திரும்பியபோது அவரது முகம் அதைத்துக் கிடப்பதை வாணி அவதானித்தாள். அவர் எதுவும் பேசாமல் வாணி கொடுத்த தேநீரை வாங்கிப் பருகிவிட்டுப்போய் தனது பருக்கையில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டார். வாணி அருகில் போய் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அனலாகத் தகித்ததும் அவள் பதறியவளாய் ஓடிப்போய் பனடோலும் வெந்நீரும் கொண்டு வந்து கொடுத்தாள். மறுபேச்சின்றி மனைவி கொடுத்ததை வாங்கிக் குடித்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டார், லிங்கா. வாணி போர்வையை எடுத்து போர்த்திவிட்டு அப்பால் நகர்ந்தாள்.

தொடர்ந்து நான்கு நாட்களாக அவரை வாட்டிய ஜரம் நீங்கியபோது அவர் வலுவிழந்தவராய் சோர்ந்து போயிருந்தார். பெறும் நீராகாரத்துடன் மட்டுமே இருந்தவருக்கு அன்று வெந்நீரில் குளிக்க வைதத்து புளிக்கஞ்சி தயார்த்துக் கொடுத்திருந்தாள், வாணி.

"வாணி! புளிக்கஞ்சி வாய்க்கு நல்லாய்த்தான் இருக்குது. ஆனால் குடிக்க முடியுதில்லை. வயிற்றைப் புரட்டுக் கொண்டு வருகுது"

"சரி சரி. நீங்கள் நிறைய குடிக்கத் தேவையில்லை. இரண்டு வாய் குடியுங்கோ. பிறகு கொஞ்சம் செல்ல இரண்டு வாய் என்று கொஞ்சம் கொஞ்சாய்க் குடிக்கலாம். குடலெல்லாம் காய்ஞ்சு சுருங்கிப் போயிருக்கும்."

வாணி கூறியதும் அவரது உதட்டில் ஒரு சிரிபு தோன்றி மறைந்தது.

"சிக்கின்குனியா" என்ற காய்ச்சலிலிருந்து லிங்கா சகஜ நிலைக்கு திரும்புவதற்கு சுமார் பத்து நாட்கள் சென்றன. "நர்ஸிங் ஹோம்" நிர்வாகி அவரை ஆறதலாக ஓய்வு எடுத்துவிட்டு வேலைக்குத் திரும்பினால் போதும் என்று சொல்லியிருந்தார்.

லிங்காவைப் பீடித்த காய்ச்சல் அவரை விட்டு விலகி விட்டது. ஆனால் அதனுடைய தாக்கம் அவரை வெகுவாகப் பாதித்து விட்டது. மூட்டுக்களி ளெல்லாம் வலி ஏற்பட்டு அவரை அவஸ்த்தைப்பட வைத்து விட்டது. வெந்நீர்க்குளிப்பு, உள் மருந்துகள் என உட்கொண்டு அதிலிருந்து விடுபட்ட

போதிலும், அவரது வலதுகை தோள்மூட்டில் ஏற்பட்ட பாதிப்பு நீங்கவில்லை. வலது கையை உயர்த்த முடியவில்லை. சிறிது சிறிதாக பயிற்சி மேற்கொண்டு சாப்பிடுவதற்கும் எழுதக் கூடிய அளவிற்கும் தான் செயற்படுத்த மும‌டிந்தது. அந்தப் பாதிப்பு அவருக்கு வாழ்நாள் வரை நீடிக்கும் என எவரும் நினைத்திருக்கவில்லை.

வாணியும், பிள்ளைகளும் அவரை வேலைக்குப் போக வேண்டாம் என வற்புறுத்தத் தொடங்கினர். அவர் ஒரேடியாக மறுத்துவிட்டார்.

"உழைக்க வேண்டும் என்ற அவசியம் எனக்கில்லை. ஆனால் என் மனதுக்கு அதில் ஒரு நிம்மதி கிடைக்கிறது. அதற்காக நான் வேலைக்கு போயே ஆக வேண்டும்"

மீண்டும் லிங்கா தனது பணியைத் தொடரத் தொடங்கி விட்டார். அவருக்கு எழுபத்தி ஐந்து வயதும் ஆகிவிட்டது. லிங்கா, தனது பிறந்த நாளை நர்ஸிங் ஹோமில் பணியாற்றும் அத்தனை பேருடனும் கொண்டாடி மகிழ்ந்தார்.

முதுமையெனும் பருவம் அவரை மெதுமெதுவாக ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டது. எவருமே முதுமையை விரும்பி ஏற்பதில்லை. ஆயினும் இயற்கையின் நியதியை மீற முடியுமா...

***

இப்பொழுதெல்லாம் லிங்காவின் வாசிப்பு பழக்கம் குறைந்து விட்டது. ஓய்வு கிடைக்கு் போதெல்லாம் படுக்கையிலேயே பொழுதைக் கழிப்பார். அவரது இச்செய்கையை அவதானித்த வாணி அவரை அணுகினாள்.

"ஏனப்பா உட்புக்கு ஏலாமல் இருக்குதே. எழுபத்தாறு வயது மட்டும் உழைச்சுத் தந்தியள். இனியாவது ஓய்வெடுக்கலாம் தானே. பிள்ளையளும் அதைத்தான் சொல்லுகினம்"

"வாணி! என்னால முடியேல்ல. உடம்பெல்லாம் சோர்ந்து போகுது. இனி வேலை செய்ய முடியாது என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வந்திட்டன்"

"அதைத்தானேயப்பா நானும் பிள்ளையளும் சொல்லிக் கொண்டிருகட்கிறம். நீங்கள் தானே விடாப்பிடியாய் நிண்ட நீங்கள்"

உடைந்த குரலில் லிங்கா சொன்னார்.

"எனக்கு பென்சனும் இல்லை. நான் வேலையை விட்டிட்டால் சீவயப்பாட்டுக்கு என்ன செய்யிறது?"

வாணி வாய்விட்டுச் சிரித்தாள்.

"இதென்னப்பா உங்கட கதை. இத்தனை காலமும் உழைச்ச காசை என்னட்டைத்தானே கொண்டு வந்து தந்த நீங்கள். அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவன். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ."

வார்த்தைகளால் கணவனைத் தடவிக் கொடுத்தாள், வாணி.

ஒரு குழந்தையைப் போல் திரு திருவென முளித்தார், லிங்கா.

"இஞ்சாரும் வாணி! நானும் நீரும் ஒருத்தருடைய தயவிலையும் வாழ

வேண்டி இருக்காதே?"

"அப்பிடி ஒரு நிலைலமை வரக்கூடா தென்பதற்காகத் தானே எங்கட சேமிப்புகளை பாங்க்கிலை போட்டு வச்சிருக்கிறம். நீங்கள் அதை மறந்திட்டியளே? அதோட எங்கட பிள்ளையள் எங்களைக் கைவிடமாட்டின்."

வாணி சொல்லி முடிப்பதற்குள் லிங்கா குறுக்கிட்டார்.

"சேச்சே பிள்ளைகளுக்கு நாங்கள் ஒரு கரைச்சலும் குடுக்கக் கூடாது"

"அப்பா!... இது பெற்றவர் பிள்ளைகளுக்கான உறவு. எங்கட பிள்ளைகளை நாங்கள் ஒன்றும் கேட்கத் தேவையில்லை. அவர்களாகவே தேவையானதைப் பார்த்துச் செய்வினம். இது புரியாமல் கதைக்கிறியள்"

"என்னவோ... நீர் சொல்லுறதும் சரிதான். எனக்கு இப்ப மனதில இருந்த உறுத்தல் இல்லாமல் போயிட்டுது. அப்பாடா.... இனி நிம்மதியாய் நான் வேலையை விட்டிடலாம்"

வாணி அத்துடன் அவரை விடவில்லை.

"நீங்கள் எடுத்த முடிவு சரிதான்: நானும் பிள்ளையளும் இதுக்காகத் தான் காத்திருந்து நாங்கள் இருந்தாலும் எங்களுக்கு ஒரு கடமை பாக்கி இருக்குது. அதை நீங்கள் மறந்திட்டியள்."

"வாணி! நீர் என்ன சொல்லுறீர்?"

"ஓமப்பா. எங்கட பரதனுக்கு திருமண வயது வந்திட்டுது. அவனுக்கும் ஒரு கலியாணத்தை செய்து வைச்சிட்டமென்றால்... எங்கட பொறுப்புகள் எல்லர் நீங்கிப்போயிடும்."

"நீர் சொல்லுறது தான் சரி."

ஒரு ஆசுவாசப் பெருமூச்சு அவரிடமிருந்து கிளம்பியது

லிங்கா, தீர்மானித்தவாறு வேலையிலிருந்தும் ஓய்வு பெற்று விட்டார். பரதனுக்கும் திருமணம் செய்து வைத்தாகி விட்டது. துமையின் தளர்வு அவரிடம் குடிகொள்ளத் தொடங்கியது. வீட்டிலிருந்து வெட்டியாகப் பொழுது போக்குவதை அவர் அறவே வெறுத்தார்.

"வேலை வெட்டி இல்லாம சும்மா வீட்டில குந்திக் கொண்டிருக்கிறன்"

அடிக்கடி சொல்லிக் கொள்ளுவார்.

"சும்மா வீட்டுக்குள்ளயே இருக்காமல் வளவுக்குள்ள போய் உலாவி வாருங்கோ"

வாணி சொல்லுவாள். வளவைப் போய் பார்த்து விட்டு வந்தவர் சிறிது உற்சாகத்தடன் செயற்பட்டார். வளவுக்குள் இருந்த முது தென்னைகளைத் தறித்து, இளங்கன்றுகளை வைத்து பராமரிக்க முற்பட்டவருக்கும் உதவிக்கு ஆட்கள் தேவைப்பட்டனர். ஜெகன் உதவிக்கு ஆட்களை ஒழுங்கு செய்து கொடுத்தான். லிங்கா அவர்களை வைத்து வேலைகளைச் செய்விப்பதில் பொழுதுகள் சமுகாகக் கழிந்தன. வளவும் தென்னம்பிள்ளைகளின் பசுமையான வளர்ச்சியினால் மெருகேறியது. இடையிடையே மாதுளை, தேசி என

கன்றுகளைப் பயிரிட்டார்.

அவருக்கு வேலையில் உதவி செய்ய வருபுவர்களுக்கு வேளை தப்பாமல் உணவோ, தேநீரோ வழங்க வேண்டும் என்பதில் சிரத்தையாக இருப்பார். பகல் உணவிற்குப் பின் அவருக்கு ஏதாவது பழங்களை உண்ணக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள், வாணி. அது அப்பிளாக இருந்தாலும் அவர்களுக்கும் கொடுத்தேயாக வேண்டும் என வாணியிடம் அடம் பிடித்து நிற்பார், லிங்கா.

லிங்காவுக்கு உணவை விட பழவகைகளில்த் தான் நாட்டம் அதிகம். எனவே அவரைப்பார்க்க வரும் உறவினர்கள் அவருக்கென பழவகைகளைத் தான் கொண்டு வருவார்கள். காலம், நேரம் பாரக்காமல் பழங்களைச் சாப்பிடுவார். சிறியதளவு உணவைத் தான் உட்கொள்ளுவார். சில சயங்களில் வாணி புலம்புவாள்.

“அப்பா! இரவில பலாப்பழத்தைச் சாப்பிடாதையுங்கோ. பேந்து முட்டு இழுக்கும்”

“அதெல்லாம் ஒண்டுஞ் செய்யாது”

சொல்லி விட்டு உணவைச் சாப்பிடாமல் பழத்தைத்தான் முதலில் சாப்பிடுவார்.

“பழத்தைச் சாப்பிட்டால் பசி அணைஞ்சு போயிடும். பிறகு சாப்பாட்டை எப்பிடிச் சாப்பிடுறது?”

வாணியின் கேள்விக்கு அவரிடம் பதில் தயாராக இருக்கும்.

“இப்பெல்லாம் சாப்பிட முந்தித்தான் பழத்தைச் சாப்பிட வேணுமென்று “மெடிக்கல் றிவ்யூ“ வில போட்டிருக்குது.”

கணவனைச் செல்லமாகக் கண்டித்தாலும், வாணி பழவகைகளை வாங்கி வைக்கத் தவறுவதில்லை. பிள்ளைகளும் கருந்தனத்துடன் அப்பாவுக்குப் பிடித்த பழங்களைக் கொண்டு வந்து விடுவார்கள்.

காலத்தின் நகர்வுடன் இணைந்து லிங்காவின் வாழ்க்கையும் போய்க் கொண்டிருந்தது.

வார இறுதி நாட்களில் சுதன் குடும்பத்தினருடன் வீட்டிற்கு வந்திருந் தான். அப்பாவுடன் பேசிக்கொண்டிருக்கும் போது அவரது வார்த்தைகளில் தொனித்த விரக்தியை அவதானித்தவன், அவருக்கு ஒத்தடமாக ஒரு விடயத்தைக் கூறினான்.

“அப்பா! உங்களுக்கு விருப்பமெண்டால் பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலையில கிழமைக்கு இரண்டுநாள் வேலை செய்யலாம்”

“சுதன், அந்த வைத்தியசாலையின் நிர்வாகி.

“சரி பாப்பம்”

லிங்காவின் மனமோ மண்டும் தனது பரிச்சயமான துறையை நாடியது. உடல் நலிவு அலைபாயும் மனதிடம் தோற்றுப் போனது. விளைவு...

திங்கட் கிழமை அதிகாலை ஐந்து மணி பஸ்ஸில் லிங்கா கிளிநொச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்.

திங்களும் செவ்வாயும் வெளிநோயாளர் பிரிவில் மருத்துவ அதிகாரியாக கடமையாற்றுவார். செவ்வாய்க்கிழமை மாலையில் வீடு திரும்பி விடுவார். அவருடைய மனத்திருப்தியில் வாணி குறுக்கிட விரும்பவில்லை. நாளுக்கு நாள் நோயாளர்களின் வருகை அதிகரிக்கவும் லிங்காவினால் சமாளிக்கக முடியவில்லை. அவரது உடல் நிலை மனஉறுதியைத் தோற்கடிக்க மெதுவாக ஒதுங்கிக் கொண்டார்.

மீண்டும் வீட்டுக்குள் முடங்கிய வாழ்க்கை. இப்போதெல்லாம் லிங்கா, மருத்துவப் புத்தகங்களைத் திரும்பியும் பார்ப்பதில்லை. புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அலுமாரியைப் பார்த்து ஒரு ஏக்கம் கலந்த பெருமூச்சை வெளிவிடுவார். அவ்வளவு தான். தினசரிப் பத்திரிகைகளை சிறிய நேரம் பார்வையிடுவார். எழுத்துக்கள் சீராகத் தெரிவதில்லை. அதை அப்படியே மடித்து வைத்துவிட்டு போய் படுக்கையில் சரிந்து கொள்ளுவார்.

ஒரு மனிதனுக்கு முதுமை எத்தனை விரக்தியுடன் கூடிய துன்பத்தைக் கொடுக்கும் என்பதனை அவரால் முதன் முதலான உணர முடிந்தது. தன்னிடம் வரும் நோயாள முதியவர்களைப் பார்த்து தான் கிண்டலடித்த நினைவுகளும் மனத்திரையில் வந்து மோதும். அவற்றை யெண்ணி தன்னைத் தானே நொந்து கொண்டார், அவர். இளமையும், முதுமையும் வாழ்க்கையின் நியதிதான். அதனைக் கடக்கும் போது இளமையில் இன்பத்தையும், முதுமையில் துன்பத்தை யும் நாம் கட்டாயமாக அனுபவித்தே தீர வேண்டும். ஞானம் பிறந்தபோது அவருக்கு வயது என்பதைத்தாண்டி விட்டிருந்தது.

மல்லாவியிலிருந்து பரதன் ஒரு தரம் வீட்டிற்கு வந்திருந்த போது ஒரு மருத்துவ சஞ்சிகையை கொண்டு வந்து அப்பாவிடம் வாசிக்குமாறு கொடுத்தான். அதனை வாங்க மறுத்தார், லிங்கா.

“என்னால ஒன்றும் வாசிக்க ஏலாது. பார்வை சரியா குறைவு”

உடனேயே அவரை கண் மருத்துவரிடம் அழைத்துப் போய்க் காட்டி சத்திரசிகிச்சை செய்வித்த பின் அவருக்கு பாபர்வையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. சில காலத்தின் பின் மறு கண்ணையும் சத்திர சிகிச்சைக்குட் படுத்திய பின் அவரால் பார்வைக் குறைவு எதுவுமின்றி வாசிக்க முடிந்தது. ஆனால் அவருக்கு வாசிக்கக் கூடிய மனப்பக்கவம் அருகிப் போய் விட்டது. என்னோ முதுமையின் கோலம்.

***

அன்று மார்கழி மாதத்து முப்பத்தியோரம் நாள். வருடத்தின் கடைசி நாள். ஆனால் லிங்காவுக்கோ அன்று எண்பத்தைந்தாவது பிறந்த நாள். வீடு ஒரே கலகலப்பாயிருந்தது. கோப்பாயிலிருந்து ஜெகன் குடும்பத்தினரும், மல்லாவியிலிருந்து பரதன் குடும்பத்தினரும் வருகைதந்திருந்ததால் லிங்காவுக்கு

உற்சாகம் கரைபுரண்டது. அப்பப்பா! என அழைத்தவாறு பேரப்பிள்ளைகள் அவரைச் சுற்றி வந்தனர். பிள்ளைகள் மட்டுமல்ல. அவர்களுக்கு இணையாக வந்தவர்களும் அப்பா! என அழைத்து அவருடன் அன்பாக உரையாடினர். மூத்தவன் சுதன் வெளிநாட்டில் வசிப்பதால் அவனது குடும்ப் அருகிலில்லையே என லிங்காவின் மனம் பேதலித்தது. ஒரே ஒரு கணம்தான். மமறுகணமே அலைபேசியிலிருந்து அழைப்புமணி ஒலிக்கத் தொடங்கியது. ஜெகன் போய் எடுத்தவன், "அண்ணா தான் கோல் பண்ணுறான்" என்று சொல்லிவிட்டு அப்பாவிடம் கொடுத்தான்.

"ஹலோ அப்பப்பா!"

அது அவருடை மூத்த பேத்தியின் குரல்.

"யேஸ். ஸ்பீக்கிங்"

லிங்காவின் குரலில் மகிழ்ச்சி கொப்பளித்தது.

"விஷ் யூ ஏ ஹப்பி பேத்டே அப்பப்பா, மே ஹோட் பிளெஸ் யூ"

"தாங்க் யூ. தாங்க் யூ வெரி மச்"

லிங்கா அவரவ்களுடன் ஆங்கிலத்தில்த் தான் கதைப்பது வழக்கம். தவிர அவர்களுக்கு தமமிழ்ப்பற்று அதிகம். எழுத... வாசிக்க எல்லாமே அத்து படி.

சுதனு், மனைவியும், பிள்ளைகளும் அப்பாவுக்கு வாழ்த்து தெரிவித்தனர். லிங்காவுக்கு அது மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமைந்தது. வாணியும் மருமக்களுமாக அறுசுவை உணவு தயாரித்திருந்தனர். மதிய போசனத்தின் பின் அப்பாவ்ு பிள்ளைகளும் அர்ந்திருநு்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

மாலையில் உறவினர் நண்பர் எனன பலருமம் வந்திருந்தனர். லிங்காவின் பிறந்த நாளை அநேகாக எல்லோரும் ஞாபகத்தில் வைத்திருப்பது வழக்கம். வருடத்தின் கடைசி நாளாயிற்றே. மருமக்கள் வந்திருந்த அனைவருக்கும் கேக், சிற்றுண்டிகளைப் பரிமாறி, தேநீரையும் வழங்கினர். பொதுவாக அந்த நாள் லிங்காவுக்கு இதமான, கலகலப்பு நிறைந்த நாளாகக் கழிந்தது. பேரப்பிள்ளைகள் தங்களது அலைபேசியில் அப்பப்பாவை விதம் விதமாக படம் பிடித்துக் கொண்டனர்.

இரண்டு விதமான பொருட்களைச் சேகரித்து வைவப்பது லிங்காவின் வழக்கம். ஒன்று பேனா. மற்றது டோர்ச் லைற். வெளிநாட்டில் வசிக்கும் இவரது பேரக்குழந்தைகளும், வளர்ப்புப் பிள்ளைகளும் அவருக்கு அன்பளிப்பாகத் தருவதும் இதே பொருட்களைத்தான். அன்றைய பிறந்தநாட் பரிசாகவும் சில டோர்ச் லைற்கள் வந்திருந்தன. லிங்கா, அவைகளை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டார். மற்றைய அன்பளிப்புப் பொருட்களை வாணி தான் எடுத்து அலுமாரிக்குள் வைத்தாள்.

மறுநாள். பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு வந்திருநு்தவர்கள் அனைவரும் போய்விட்டனர். மீண்டும் லிங்காவும் வாணியும் தான் வீட்டில் தனித்திருந்தனர். நீண்ட நேரமாக வாணி கணவனை அவதானித்தாள். லிங்கா

ஒருவித சோகத்துடன் அமர்ந்திருந்தார்.

“என்னப்பா! ஏன் கவலையாய் இருக்கிறீங்கள்?”

வாணி அவரை விசாரித்த போது, அவர் நலிந்த குரலில் கூறினார்.

“போன வருசம் என்னுடைய பேத்டேக்கு அம்மா இருந்தவ. எனக்கு ஒரு பெட்சீற்றும், டவலும் வாங்கித் தந்தவ. இந்த வருசம் அவ இல்லாதது எனக்கு ஒரு வெற்றிடமாகவே இருக்குது.”

அதனைக் கேட்ட வாணி சட்டெனெ உடைந்து போனாள். பெற்றவளின் நினைவு அவளது கண்களில் நீரை வரவழைத்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு கணவனை நிமிர்ந்து பார்த்தாள். அவரது கண்களிலும் கண்ணீர் பளபளத்தது. உறவுகளுக்காய் ஏங்கும் இந்நத உள்ளத்தை எனதாக்கிக் கொள்ள நான் என்ன புண்ணியம் செய்தேனோ... மனம் சிலகித்தது.

முன்னரெல்லாம் ஊரில் நடக்கும் விசேஷங்களுக்கும், அம்பாள் கோயில் திருழாக்கும் போய் வந்த லிங்கா, இப்போது தனித்து ஒரு இடமும் போவதில்லை. யாராவது ஒருவரின் துணையோடுதான் போக வேண்டியிருந்தது. திடீரென ஒரு நாள் சின்னண்ணன் இறந்து விட்டடதாக செய்தி வந்தது. ஜெகனும் பரதனும் அவருடன் கூடப் போனார்கள் சுமார் ஒரு கிழமை வரை அவர் ஊரில் தங்கியிருந்துவிட்டு வீடு திரும்பினார். அது தான் அவர் தனது குலதெய்வத்தை கடைசியாக தரிசித்விட்டு வந்த கடைசி நாளுமாகிக விட்டது. ஆயினும் இறுதி மூச்சு வரை அவரது மனத்திலும் வாயிலும் உச்சரித்தது அப்பாளைத்தான்.

ஒரு நாள் லிங்கா பத்திரிகை வாசித்து கொண்டிருக்கையில், அவரது கைகள் நடுங்கிக் கொண்டிருப்பதை வாணி அவதானித்தான்.

“ஏனப்பா உங்களுடைய கை நடுங்குது?

வாணி சிரத்தையுடன் கேட்டதற்கு அது சில காலமாகவே தனக்கு இருப்பதாகச் சொல்லி சமாளிக்க முற்பட்டவரை அவள் விடவில்லை. ஜெகன் அவரை அழைத்துப்போய் விசேட வைத்திய நிபுணரிடம் காட்டி வந்தான். அதற்குரிய மருந்துகளையும் வாங்கி வந்து வேளை தவறாமல் கொடுத்து வந்தார்கள். அஅவருக்கு சிக்கின குனியா காய்ச்சல் வந்த பின் அவரது வலது கையினது இயக்கம் குறைந்திருந்தது. இப்போது கையில் நடுக்கமும் ஏற்பட்டதால் அள்ளிச் சாப்பிடுவதற்குக் கூட அவருக்கு சிரமமாய் இருந்தது. எனினும் ஓர்மத்துடன் தானே அள்ளிச் சாப்பிட வேண்டும் என அடம் பிடிப்பார்.

நாளடைவில் அவரது உடல்வலு குறைந்து வருவதை அவரால் நன்கு உணர முடிந்தது. வாணி அவருக்கு உணவை ஊட்டிவிட முற்பட்டபோது எதுவித மறுப்புமின்ற அதனை ஏற்றுக் கொண்டார். வாணியும் உணவை பதமாகக் குழைத்து இதமாக ஊட்டிவிடுவது அவருக்குப்பிடித்திருந்தது. பழங்களை கையில் கொடுத்தால் அதை மட்டும் பக்குவமாக வாங்கிச் சாப்பிடுவார்.

ஒருநாள் காலை பத்துமணியிருக்கும். லிங்கா படுத்திருப்பதைப் பார்க்க வாணிக்குப் பொறுக்கவில்லை. அவரிடம் போய் கதை தொடுத்தாள்.

“அப்பா! ஏன் படுத்திருக்கிறயள். உடம்புக்கு ஏலாமல் இருக்குதோ?”

“இல்லை வாணி. நான் என்னுடைய இளமைக் காலத்தில நடந்ததையெல்லாம் நினைச்சுப் பார்த்துக் கொண்டிருக்கிறன். அதில எனக்கு ஒரு சுகம் தெரியுது”

வாணி, அவருடைய சுகத்தைக் குழப்ப விரும்பவில்லை. பிறிதொரு நாள் அவராகவே தனக்கு ஒரு விருப்பம் இருப்பதாகக் கூறினார்.

“மல்லாவியில பரதன் எப்பிடியிருக்கிறான் என்பதை ஒருக்கா போய் பார்த்திட்டு வரவேணும்”

“சரியப்பா. நான் உங்களைக் கூட்டிக் கொண்டு போறன். இன்னறைக்கு பின்னேரம் ஜெகன் வந்ததும் சொல்லி ஒழுங்கு பண்ணுறன். சரிதானே”

ஒரு குழந்தையைப் போல தலையை ஆட்டினார், லிங்கா. இப்போது அவர் வாணிக்கு ஒரு குழந்தையாகவே மாறியிருந்தார். அவரது செய்கைகள் அனைத்தும் குழந்தைத் தனமானதாக வாணிக்குத் தோற்றும். அவளும் அவரைத் தன்னுடைய குழந்தையாகவே கருதி பேணத் தொடங்கினாள்.

லிங்காவின் நடை தளர்ந்திருந்த வேளையில் அவரை மல்லாவிக்கு எப்படி அழைத்துச் செல்வது என வாணி சிந்தித்தருந்த வேளையில் ஜெயசீலன் அண்ணாவின் மகன் தனது கார் மல்லாவிக்குப் போக இருப்பதாகவும் எங்களையும் அழைத்துப் போவதாகவும் வலிந்து வந்து கூறினார். வாணியின் மனதில் அப்போது ஒரு சிந்தனை உதித்தது.

பிறர்க்குதவி செய்வதை பெரும் பேறாகக் கருதுபுவர், லிங்கா. அதன் பலன் தான் இன்று கிடைத்திருக்கிறது போலும் எனக் கருதினாள். ஒருவாறு லிங்காவை மல்லாவிக்கு அழைத்து வந்துவிட்டாள், வாணி. பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு அவரது வருகை மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. லிங்காவும் பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து ஒரு குழந்தையாகவே மாறி பொழுதுகளைக் கழித்தார். அவருக்கு விருப்பானவற்றை தெரிவு செய்து சமைத்துக் கொடுக்க, வாணி அவருக்கு ஊட்டி விட பொழுதுகள் இனிமையாக போய்க் கொண்டிருந்தன.

ஒரு வாரம் கழிந்தது. லிங்கா வாணியிடம் “இனி நாங்கள் வீட்டிற்குப் போவம்“ என சொல்லத் தொடங்கினார். அவரைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பிடிவாதம் அவரது பிறவிக்குனம் ஆயிற்றே. ஜெகன் காரில் வந்து அவரைப் பக்குவாக வீட்டிற்கு அழைத்து வந்தான்.

காலம் எவருக்காகவும் காத்திருப்பத்தில்லை. அது தன் போக்கில் நகர்ந்து கொண்டிருநுதது. இப்போது லிங்காவின் கால்கள் வலுவிழந்து விட்டன. தானாக எழுந்து நடமாட முடியவில்லை. அப்படி முற்பட்ட வேளைகளில் விழத் தொடங்கினார். அதன் பின் அவரை எழுந்து நடமாட விடுவதில்லை. கூடுதலான நேரம் நித்திரையிலேயே அவர் பொழுதைக் கழித்தார். விழித்ததும் அவரது கைகளைப் பிடித்து அழைத்து வந்தால் சிறிது தூரம் நடப்பார். முன்பெல்லாம் காணொளியல் திரையிடப்படும கிரிக்கட் போட்டிகளை ரசித்துப் பார்த்து வந்தவர்

இப்போது அதில் அக்கறை காட்டுவதில்லை. உறக்கத்தில்த்தான் அவரது நாட்டம் மேலோங்கியிருந்தது. இது தான் முதுமையின் கொடுமையோ…

***

லிங்கா அதிகளவு நேரத்தை படுக்கையிலேயே கழித்தார். ஏதாவது கேட்டால் மட்டும் சுருக்கமாகப் பதில் சொல்லுவார். அல்லது தலையை ஆட்டுவார். ஆனால் அவரது ஞாபக சக்தி மட்டும் குறையவில்லை. கூடுதலான நேரம் படுக்கையில் கிடப்பதால் படுக்கைப்புன் வந்து விடுமோ என வாணியும் பிள்ளைகளும் ஏங்கிருந்தனர். அவ்வேளையில் அவரது தங்கையின் மகள் ஒரு பின்னல் கட்டிலை அவருக்கு அன்பளிப்பாக வழங்கியது பெரும் சமயோசிதமான செயல் என்றே கருதினார். வாழும் வரை அந்தக் கட்டிலே அவருக்குத் தஞ்சமாகியது.

தினமும் ஜெகன் மாலை நேரங்களை அப்டபாவுடன் செலவிடுவான். கொய்யாப்பழம், பனங்கிழங்கு போன்ற அஅவருக்கு விருப்பமானவற்றை மெலிதாகச் சீவி வாயில் ஊட்டி விடுவான். அவரும் ஆர்வத்துடன் அதை வாங்கிச் சாப்பிடுவார். அவனுடைய மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் காதுகளில் விழுந்தது “ஜெகன்!” உற்சாகமாகக் குரல் கொடுப்பார்.

மாதத்தில் இரு தடவையாவது பரதன் வந்து அப்பாவைப் பார்ப்பான். அவருக்கு விருப்பமானவற்றை மனைவி செய்து கொடுத்து விடுவாள். அத்துடன் அவருக்குப் பிடித்தமான பழங்களையும் வரும் போது வாங்கி வருவான். வந்து நிற்கும் வேளையில் அப்பாவுக்கு உணவூட்டி விடுவான். மாதம் இருமறை அவருக்கு சத்தூசி போட்டு விடுவதும் வழக்கம்.

அவரது உடல் நிலையோ தளர்ந்து கொண்டே போனது. வாணியினால் தனியாக சமாளிக்க முடியவில்லை. எனவே ஒரு பராமரிப்பாளரை நியமித்தனர். அவரும் அக்கறையுடன் அன்பும் பாராட்டி அவரை கவனித்துக் கொண்டார். எல்லாவற்றுக்கும் ஒரு கொடுப்பனவு வேண்டும் என்று சொல்லுவாங்கள். அது லிங்காவுக்கு நிறையவே இருந்தது. எல்லாமே இப்பிறவியில் தேடியது தான்.

அவரது பெறாமக்கள், தங்கையின் மகள், வாணியின் தங்கை வேணியின் மகள், வாணியின் தம்பி என பலவித உறவினர்களும் அடிக்கடி வந்து அவரைப் பார்த்துப் போவார்கள். அத்துடன் அவருக்கு உகந்த உணவு வகைகளையும் செய்து கொண்டு வந்து கொடுப்பார்கள். வாணியோ விரக்தியின் விளிபில் நின்று அவரது நலன்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

இன்னும் அவரது உடல்நிலை பற்றி கேள்வியுற்ற வன்னிவாழ் மக்களில் அவருடன் நெருக்கமாகப் பழகிய நண்பர்கள் சிவரும் நலன் விசாரிக்க வந்து போயினர். அவர்களுள் சிலரை அவரால் அடையாளம் காண முடிந்தது. சிலரை அவரால் கிரகிக்க முடியவில்லை.

நாட்கள் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தன. லிங்கா இப்போது சக்கர நாற்காலியில் வீட்டுக்குள் வலம் வந்து கொண்டிருந்தார். அன்று அவருக்கு

என்பத்தியெட்டாவது பிறந்தநாள். அவரது பராமரிப்பாளர் அவருக்கு குளிப்பாட்டி புது உடைகளையும் அணிவித்து நாற்காலியில் உட்கார வைத்து விட்டார். முகத்தில் புன்சிரிப்பு தவழ லிங்கா எல்லோரையும் அவதானித்துக் கொண்டிருந்தார். எல்லோரும் அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். வெளிநாட்டிலிருந்து மூத்த மகன் சுதன் அவருக்கு அழைப்பு விடுத்து வாழ்த்து தெரிவித்தான். அலைபேசியில் தெரிந்த அவனது முகத்தையே அவர் உற்றுப் பார்த்த வண்ணமிருந்தார். வாணி அவரருகில் வந்து, "அப்பா! ஒருக்கா சுதன் என்று கூப்பிட்டு விடுங்கோ" என்று சொன்னாள்.

"சுதன்!"

லிங்காவின் குரல் பழைய கம்பீரத்துடன் ஒலித்தது.

உணர்ச்சி வசப்பட்டவனாய் சுதனும் "அப்பா! சுகமாய் இருங்கோப்பா" என்று சொல்லிவிட்டு அலைபேசி தொடர்பை துண்டித்துக் கொண்டான். அது தான் அப்பாவினது கடைசி அழைப்பு என அவன் நினைத்தானோ என்னவோ....

அன்று மாலை வழமைபோல் நிறையப்பேர் வந்திருந்தார்கள். அவர், தனது வளர்ப்பு மகன் என அடையாளப்படுதத்திச் சொல்லும் ஈஸ்வரன் வந்திருந்தான்.

"அப்பா! நான் யாரென்று சொல்லுங்கோ பாப்பம்."

"ஈசு"

"பாத்தீங்களே! அப்பா என்னை ஞாபகத்தில வைச்சிருக்கிறார்"

சொல்லிக் கொண்டே ஈஸ்வரன் போய் அப்பாவின் அருகில் இருந்து கொண்டான், அவரிடம் கதை கொடுத்துப் பார்த்தான். முகத்தில் எதுவிதமாற்றமு மின்றி அவர் மௌனமாக இருந்தார்.

"நமணங்குளத்தில் நாங்கள் இருக்கேக்க அப்பா வேலைக்குப்போக வெளிக்கிட்டு வருவார். றைவர் உடஉ்பட மற்றவை எல்லாரும் வாகனத்தில் ஏறி இருந்திடுவினம். அப்பா மட்டும் வாகனத்தின்ர முன் கதவைத்திறந்து விட்டிட்டு வீட்டைத் திரும்பி பார்த்துக் கொண்டு நிற்பார். அம்மா வந்து எட்டிப்பார்த்து "வாறன் வாணி" என்று சொல்லிப் போட்டு வாகனத்தில் ஏறுவார்"

அங்கிருந்த மற்றவர்களைப் பாரர்த்து ஈஸ்வரன் கூற, லிங்கா தலையைக் குனிந்தவாறு சிரித்துக் கொண்டிருப்பதை அவதானித்த ஈஸ்வரன் கூறினான்.

"பார்த்தீங்களே! அப்பாவுக்கு சிரிப்பு வருகுது"

இப்படியே அன்றை பொழுது கலகலப்பாக கழிந்தது.

லிங்காவின் வாழ்க்கைப் பயணத்தில் குட்டித்தம்பியின் இழப்புத்தான் பெரும் குறையாக அமைந்து விட்டது. அது அவரது ஆழ் மனத்தில் ஒரு வடுவாகவே பதிந்து விட்டது. அவர் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவார்.

"குட்டியன் போனப்பிறகு நான் மனம் விட்டு சிர்ததேயில்லை"

உண்மை நிலையும் அது தான். மற்றும்படி குறிப்பறிந்து நடக்கும் னைவி, அன்பு மழையில் அவரை மூழ்கடிக்கும் பிள்ளைகள் அப்பா என

வாஞ்சையுடன் அழைத்து அவரது நலனில் அக்கறை செலுத்தும் மருமக்கள், வாய் நிறைய அப்பப்பா எனக் கூப்பிட்டு உயிருக்குயிராய் நேசிக்கும் பேரப்பிள்ளைகள், அடிக்கடி சித்தப்பபா, மாமா என அழைத்தவாறு வந்து நலன் விசாரித்துப் போகும் சகோதரர்களின் பிள்ளைகள் என அனைவரதும் கவனிப்பில் அவர் நெருக்கிக் கொண்டிருந்தது.

இப்பொது லிங்கா முற்றிலும் ஒரு குழந்தையாகவே ாறிவிட்டார். சில வேளைகளில் உணவை ஊட்டு போது வாயைத் திறக்கால் அடம் பிடிப்பார். சில சயங்களில் வாய்க்குள் உணவை சேர்து வைத்துவிட்டு ஒரேயடியாகத் துப்பி விடுவார். ஆத்திரமடைந்த வாணி அவரைத் திட்டுவதும் உண்டு. சட்டென அவளது னம் உடைந்து போகும். உடனே அவளது கையை இறுக பற்றிக் கொள்ளுவார்.

லிங்காவினால் வாணி என்ற பெயரை உச்சரிக்க முடியவில்லையோ என்னவோ… அவரால் கூப்பிட முடியவில்லை. அடிக்கொருதரம் வாணி! வாணி! என அழைப்பவர் இப்பொழுது எந்நேரமும் அம்மா! அம்மா!! என அ ழைத்துக் கொண்டேயிருப்பார். சற்றுநெரம் வாணி அவரதுபார்வையில் இருந்து விலத்தினால் போதும். அம்மா! என தொடர்ந்து அழைத்துக் கொண்டேயிருப்பார். வாணி அருகில் வந்து அவரைக் கிண்டலாக வினவுவாள்.

“என்னப்பா! வாய்பாடு பாடமாக்கிறியளே?”

அவருக்கு எதுவும் புரியாது. அவளது கையைப் பிடித்துக் கொள்வார். தனிமையில் இருக்க அவருக்குப் பிடிக்கவில்லை என்பது தான் உண்மையான விடயம். அவர் உறக்கத்தில் இருக்கும் போது வாணி வீட்டு வேலைகளை முடித்து விடுவாள். மற்றும் வேளைகளில் அவருடன் கூடவே இருப்பாள்.

பாடசாலை விடுறை நாட்களில் அவரது குட்டிப் பேரன் வந்து அவர்களுடன் தங்குவான். அவனைக் கண்டதும் லிங்காவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. எந்நேரமும் தம்பி! தம்பி! என அழைத்தவாறு றஇருப்பார். அவனும் அருகில் போய் “என்ன அப்பப்பா வேணும்“ என கனிவுடன் விசாரிப்பான். அவரும் பேரப்பிள்ளைகளோடு மட்டும் இரண்டொரு வார்த்தைகள் கதைப்பார்.

வாணியின் கேள்விகளுக்கு அவர் பதிலேதும் சொல்வதில்லை. தலையை மட்டு அசைப்பார். ஆணால் அவரது குட்டிப்பேத்தி வந்து விட்டால் போது். அவரது மு கத்தில் புன் சிரிப்பு தாண்டவமாடு. அடிக்கடி அவளைப் பார்த்து, “பிள்ளை! இஞ்சை வா“ என்று கூப்பிடுவார். அவளும் சளைக்காமல் ஓடிப்போய் என்ன வென்று கேட்பாள், அவ் பதிலேதும் சொல்லமாட்டார். ளெனத்தைத் தழுவியவராய் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பார். அவளும் “அப்பப்பா பசிக்குதே“ என்று கேட்டுக் கொண்டே பிஸ்கற்றை எடுத்து வந்து ஊஉட்டி விடுவாள். பிறகு தண்ணீரையும் கொண்டு வந்து பருக்க விட்டு வாயைத் துடைத்து விடுவாள். அவளது செய்கை எல்லாவற்றையும் அவர் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளுவார்.

லிங்காவுக்கு பேரப்பிள்ளைகளைக் கண்டால் போது. உடலில் தென்பு கூடி விடும். அப்படித்தான் போன வருடம் மூத்தவன் சுதனின் பிள்ளைகள் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார்கள். அப்போது லிங்காவும் சற்றுதென்பாக இருந்தார். அவருடைய மூத்த பேத்தி மருத்துவப்படிப்பு படித்துக் கொண்டிருந் தாள். லிங்கா, அவளை தனது அறைக்கு அழைத்துப்போய் புத்தக அலுமாரியைத் திறந்தார்.

“இந்தா. இதிலை எல்லாமே மெடிக்கல் புக்ஸ் தான் இருக்குது. இதுகளை எடுத்துப்பார்த்து உனக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு போ”

அவளும் அதிலிருந்த புத்தகங்களை எடுத்து ஆராயத் தொடங்கினாள். லிங்கா, சில புத்தகங்களைத் தெரிவு செய்து கொடுத்த போது அவளது மனம் பூரித்துப் போனது. எல்லாமே பிரதானமான புத்தகங்கள்.

“தாங்கஸ். அப்பப்பா”

இப்படியான நினைவுகள் மனதை ஆக்கிரமித்த போது, கணவனது இன்றைய நிலையை எண்ணி ஏக்கத்துடனான பெருமூச்சு ஒன்றைத்தான் வாணியினால் வெளிவிட முடிந்தது. இயற்கையின் நியதியை எவராலும் வெல்ல முடியாது இதுவே நிதர்சனம்.

***

அன்று வருடப்பிறப்பு. வழமை போலவே பொழும் விடிந்தது. வாணி அதிகாலையில் எழுந்து ஆசாரபூர்வமாக எல்லாவிதமான காரியங்களையும் ஈடேற்றி சக்கரைப் பொங்கலும் செய்திருந்தாள். லிங்காவினது பராளிப்பாளர் அவருக்குரிய கருமங்களைக் கவனித்து குளிக்க வைத்து புத்தாடை அணிவித்து அவருக்குரிய கதிரையில் இருத்தி விட்டார். வாணி அவருக்கு சக்கரைப் பொங்கலை உட்டிவிட்டாள். இனிப்பு பதார்த்தங்களில் அவருக்கு விருப்பு அதிகம். எனவே பிகு பண்ணாமல் அவர் சாப்பிட்டார். சாப்பிட்டபின் அவருக்கு வழமையாகக் கொடுக்கும் மருந்துகளைக் கொடுத்து அவரைப் படுக்க வைத்ததும், அவர் நித்திரையில் ஆழந்து போனார்.

அவர் துயிலும் போதே வாணி சமையலை முடிப்பது வழக்கம். சமையல் முடிந்ததும் பராமரிப்பாளர் வந்து அவரைத் துயிலெழுப்பி சாப்பிடுவதற்காக கதிரையில் இருத்தினார். அப்போது தான் கணவனின் உடல்நிலையில் ஒருரு சோர்வு இருப்பதை வாணி அவதானித்தாள். உணவைப் பிசைந்து ஊட்டிய போது அவர் அதை வாங்க மறுத்தார். வாணி அவரை வற்றுத்தவில்லை. இரண்டு பனடோல் வில்லைகளையும் பாலையும் மட்டும் கொடுத்து அவரை மீண்டு படுக்க வைத்து விட்டனர். அவரும் நித்திரையாகி விட்டார்.

கணவனின் சோர்வு வாணியின் மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது. எனவே அவரை அடிக்கடி தொட்டுப் பார்த்தவாறு அருகிலேயே இருந்தாள். மாலையிலும் பராமரிப்பாளர் வந்து எழுப்பி இருத்தி விட்ட போது அவர் சோர்வாகவே காணப்பட்டார். ஏதோ ஒரு உந்துதலில் வாணி ஜெகனை உடனே

வருமாறு அலைபேசி மூலம் அழைப்பு விடுத்து விட்டு லிங்காவுக்கு பிஸ்கடட்டையும் ஊட்டி பாலையும் கொடுத்தாள்.

சக்கர நாற்காலியில் சிறிது நேரம் சாய்ந்திருந்தவர் கையை உயர்த்தி தானாகவே நிமிர்ந்திருக்க முற்பட்ட போது அருகிலிருந்த வாணி அவரது கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னப்பா நிமிர்ந்திருக்கப் போறீங்களோ?"

வாணி கேட்ட போது அவர் நிமிர்ந்து வாணியைப் பார்த்தார். அந்தக் கண்களில் அப்படியே சோக் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அதற்கிடையில் ஜெகனும் வந்து "அப்பா!" என்று கூப்பிட அந்தக் கணத்திலேயே லிங்கா தனது இறுதி மூச்சை விட்டு இவ்வுலக வாழ்க்கையிலிருந்து ஒரேயடியாக விடைபெற்றுக் கொண்டார்.

இறுதியாக லிங்கா என்ற மாமனிதர், எளிமையின் வடிவமாக தன்னை அடையாளப்படுத்தி வாழந்தவர், தனது பரோபகாரச் செயற்பாட்டினால் எண்ணற்ற நெஞ்சங்களைத் தன்பால் ஈர்த்தவர், ஏழ்மை நிலையிலுள்ள எத்தனையோ மாணவர்களின் கல்விக்கு உரமூட்டியவர், விழுப்புண் சுமந்த வீரர்களுக்கு ஒத்தடமிட்டவர், அன்பினால் உறவுகளை அரவணைத்தவர், அகிலத்தைத் துறந்து அவரு குலதெய்வமாகிய நயினைப்பதியில் எழுந்தருளியிருக்கு் நாகபூஷணித் தாயின் பாதாரவவிந்தங்களை சரணடைந்து விட்டார்.

ஓம் சாந்தி

“............அன்று மாவீரர் நாள். குட்டித்தம்பியின் புகழுடல் ஊர்வலமாக மாவீரர் துயிலும் இல்லம் வரை கொண்டு செல்லப்பட்டு அங்கு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது. புகழுடல் தாங்கிய பேழையை எடுத்துச் சென்று குழிக்குள் விதைப்பதற்கான நேரமும் வந்து விட்டது. என்ன நினைத்தாரோ லிங்கா பேழைக்கருகில் சென்றவர் தான் ஒரு தரம் மகனைப் பாரக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். பேழை திறக்கப்பட்டது. தன்னருமைச் செல்வத்தின் முகத்தை கடைசித் தடவையாகப் பார்த்த லிங்காவின் கண்களிலிருந்து வழிந்த நீர் அவனது முகத்தை நனைக்க, லிங்கா பின் வாங்கினார். பேழை மூடப்பட்டது. இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டு அருகில் நின்ற வாணி வெறித்த பார்வையுடன் விறைத்துப் போய் நின்றாள். அவளது மனதை குட்டித்தம்பியின் முகம் நிறைத்திருந்தது.

ஈற்றில் விதையாகிப் போன தமது மைந்தனுக்கு மண்போட வேண்டிய துர்பாக்கியநிலையில் அவர்கள் துடிதுடித்துப் பதறுவதைப் பார்த்தவர்கள் கூட தமது கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலித்த போது, வான்மகள் மட்டும் பார்த்திருப்பாளா? அவளும் தன்பங்குக்கு மழைத்துளிகளைத் தூவ, குட்டித்தம்பி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் சங்கமாகினான்.......”

ISBN 955524963-6